பொற்றாமரை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்
திருக்கோயில் - மதுரை

முனைவர் அம்பை மணிவண்ணன்





AR
Publications

5-3

பொற்றாமரை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் - மதுரை

முனைவர் அம்பை மணிவண்ணன்
M.A., (தமிழ்), M.A., (வரலாறு), M.Phil., Ph.D., B.Ed., D.G.T.,

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
அரசு கலைக் கல்லூரி, மேலூர்,
மதுரை மாவட்டம் - 625 106.





AR Publications
161, லேக் வியூ சாலை, கே.கே. நகர்,
மதுரை - 625 020.

நூற்பெயர்	:	பொற்றாமரை
நூலாசிரியர்	:	முனைவர் அம்பை லோ. மணிவண்ணன் அலைபேசி : 98941 43211 மின்னஞ்சல் : ambai_mani@yahoo.co.in
பதிப்பு	:	முதற் பதிப்பு ஏப்ரல் 2010
நூல் அளவு	:	A4
எழுத்தின் அளவு	:	12 புள்ளிகள்
தாள்	:	130 GSM ரியல் ஆர்ட் பேப்பர்
பக்கங்கள்	:	8 + 296 = 304
படிகள்	:	2000
உரிமை	:	A.R. பப்ளிகேஷன்ஸ்
விலை	:	ரூ. 955.00

பதிப்பகம்
A.R. பப்ளிகேஷன்ஸ்
161, லேக் வியூ சாலை, கே.கே. நகர், மதுரை – 625 020.
தொலைபேசி : +91 452 4210095 அலைபேசி : 92457 10743

அச்சிட்டோர்
ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ் (தி ஆப்செட் பிரிண்ட் ஹவுஸ்)
12ஏ, சுப்பிரமணிய பிள்ளை தெரு, எஸ்.எஸ். காலனி,
மதுரை – 625 010. போன் : +91 452 2600300, 2300011
மொபைல் : 999 444 6030 E-mail : vinayaga_offset@yahoo.co.in

நிழற்படங்கள் : ஜி. திருநாவுக்கரசு, எஸ். தென்னகக் கண்ணன்

சமர்ப்பணம்



திரு. ஏ.ஆர்.

வள்ளல் எழுவர் வழங்கி வாழ்ந்ததால்....
அல்லல் தீர்ந்ததா அவனியிலே

எள்ளல் போம் எழுமை வழி சேர
அள்ளி அளித்தல் மட்டுமன்றி...

இறந்தும் இரப்போர்க்கு இருந்து இரங்கும்...
பரந்த உளமாய்ப் பிறந்தவரை...

பணிகிறோம் வணங்கும் பகுதியென இதையே...!
பதிப்பதென்றும் உங்கள் விதையே...!

5-3

அணிந்துரை

டாக்டர் இராதா தியாகராசன்
மேனாள் துணைவேந்தர், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம்,
தியாகராசர் நூற்பாலை, கப்பலூர், மதுரை – 625 014.

தொன்மைப் புகழும், தொடர்ந்து வரும் வரலாற்றுச் சிறப்பும், தோன்றாத் துணையாக விளங்கும் அருள்மிகு அங்கயற்கண் அம்மையின் அருட்சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்றது மதுரை மாநகர். இந்நகரின் கண், தாமரை நடுவண் தண்ணறும் பொகுட்டுப் போல, நடு நாயகமாக, விண்ணளாவிய கோபுரங்களுடன், கல்லெல்லாம் கவிபாடும் கவினார்ந்த சிற்பங்களும், உயிர்பெற்று, எழுந்தனவோ எனத் தோன்றும் ஓவியங்களும், கட்டடக் கலையழகு மிக்க மண்டபங்களும் திகழத் தன்னிகரற்றுப் பொலிவது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்.

பாண்டிய மன்னர்களும் அவர்களைத் தொடந்து நாயக்க வேந்தர்களும் பல்வேறு காலங்களில், படிப்படியாகத் தெய்வ சந்நிதிகளும், திருமகள் இருக்கையனைய மண்டபங்களும், திருச்சுற்றுக்களும், இத்தொன்னகரத்திற்கே உரிய தனிச்சிறப்பாக, ஆலவாயண்ணல் நிகழ்த்திய திருவிளையாடல்களை நினைவு கூறும் பகுதிகளும், பக்தித் திறம் விளங்க நிறுவி, மாபெரும் கலையமைப்பு உடையதாக வளர்த்தமைத்தது இத் திருக்கோயில்.

இக்கோயிலின் வரலாற்றை முன்பு சில அறிஞர்கள் எழுதியுள்ளனராயினும், அந்நூல்களினும் மிக்க விரிவான வரலாற்றுக் குறிப்புகளோடு, திருக்கோயிலின் ஒவ்வொரு பகுதியையும் கலைக் கண்ணோடு நோக்கி, அதனுடன் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் விளக்கி, சுமார் 300–க்கும் மேற்பட்ட வண்ண நிழற்படங்களும், தேவையான வரைபடங்களும் கொண்டு ஒரு விரிவான வழிகாட்டு நூலினை, இஞ்ஞான்று, டாக்டர் அம்பை மணிவண்ணன் தமிழ் மக்களுக்குத் தருகின்றார்.

பொற்றாமரை எனப் பெயரிய இந்நூலினைப் படித்து இன்புற்றேன். இத் திருக்கோயிலை வழிபடும் மக்களுள், மரபறிந்தோர் அருள்மிகு அங்கயற்கண் அம்மையை வணங்கிய பின்னரே ஆலவாயண்ணலை வழிபடுவர். அம்மரபையொட்டியே, இந்நூலும், அம்மையின் கோயில் நுழைவு வாயிலில், அன்பரை அழைத்துக் கொண்டு அட்டசத்தி மண்டபத்தில் வணங்கி, அடுத்தடுத்து, ஒவ்வொரு மண்டபமாக நின்று, அதன் வரலாறு, கட்டப்பெற்ற ஆண்டு, அங்குள்ள சிற்பங்கள் ஆகியவற்றை விளக்கி, அம்மையின் கருவறை, விமானம், திருச்சுற்றுக்கள், பின்னர் சுவாமி திருக்கோயிலின் மாபெரும் மண்டபங்கள் எண்ணற்ற பரிவார தெய்வங்கள், சங்க காலம் முதல் ஆங்கில ஆட்சிக்காலம் வரை, எத்துணையோ வரலாறுகளை நினைவு கூறும் பகுதிகள், முதலியவற்றை விளக்கி, கோயிலின் முன்னர் அமைந்த புதுமண்டபத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறி நிறைவுறுகின்றது.

கோயிலின் பற்பல பகுதிகளோடு தொடர்புடைய திருவிளையாடல் கதைகளையும், பெரியபுராண நாயன்மார்கள் சிலரது வரலாறுகளையும், இந்நூலாசிரியர் ஆங்காங்கே சுருக்கமாகத் தந்துள்ளமை சிறப்புடையது.

சிற்பக் கலைச் செல்வம் பொதிந்திருக்கும் கலைக் கூடமாகவே திகழும் ஆயிரக்கால் மண்டபமும், வரலாறு, புராணம் தொடர்பான அழியாச் சிற்பங்களையுடைய வசந்த மண்டபம் என்னும் புதுமண்டபமும் ஆகிய இவ்விரண்டின்கண்ணும் உள்ள அனைத்துச் சிற்பங்களையும் அவற்றின் வரலாறு, பெயர், கலையழகு, கலைப்பாணி ஆகியவை தோன்ற விளக்கியுள்ளமை இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

மன்னர்கள் அன்றி, பிற மக்களும் கோயில் அலுவலர்களும் செய்த திருப்பணிகளையும் கூறிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

அங்கயற்கண் அம்மையின் கருவறை விமானம், சுவாமி கருவறை விமானம், அம்மையின் திருமேனிச் சிற்ப அமைப்பு, கம்பத்தடி மண்டபத்தில் உள்ள 25 சிவ வடிவங்கள், ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் திருவடி நிழலில், காரைக்கால் அம்மையார் நின்று, அத் திருத்தாண்டவத்தைத் தரிசித்தல், பிட்டுக்கு மண் சுமந்த பெருமானின் சிற்பம் முதலிய கலையழகுத் தெய்வீக வடிவங்களை, அவற்றின் வரலாற்று நோக்கில் விளக்கியுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கது.

சுருங்கக்கூறின் ஒரு வாரம் முழுதும் கண்டறிந்து வணங்கிப் போற்றத்தக்க இவ்வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாபெருந் திருக்கோயிலின் அனைத்துப் பகுதிகளையும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அறிந்து கொண்ட மன நிறைவு, இந்நூலினைப் படிப்பவர்களுக்கு உண்டாகும். இவ்வரலாற்றை, நுண்ணரிதின் நோக்கித் தெள்ளிதின் வரைந்த டாக்டர் அம்பை மணிவண்ணனை மனமாரப் பாராட்டுகின்றேன்.

இராதா தியாகராசன்

பொற்றாமரை மலரும் முன்

உலகப் புகழ் பெற்ற, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சிறப்புக்களை, நூல் வடிவில் உலக மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனும் பேரவா, பல காலமாகவே எனது இதயச் சிற்றறைகளில் இடம்பிடித்திருந்தது.

2001–ஆம் ஆண்டில் இச் சிந்தனைகள் நூல் வடிவில் இடம் பெற்றிருப்பினும், தற்பொழுது வண்ண ஒளிப் படங்களுடனும், கண் கவர் வனப்புடனும் தங்கள் கரங்களில் தவழ்கிறது.

இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பை உள்ளடக்கி சங்க காலம் முதல் இன்றைய கணிப் பொறிகாலம் வரை இக்கோயில் சிறப்பானபடி நிலை வளர்ச்சிகளைக் கொண்டுள்ளது.

கட்டடக்கலை, ஓவியம், சுதை, சிற்பம் மற்றும் திருமலை நாயக்கரால் உருவாக்கப்பட்ட புதுமண்டபம், தெப்பக்குளம், சைவ, வைணவ ஒருமைப்பாட்டு விழாக்கள் பற்றிய அரிய செய்திகள் இந்நூலில் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

இவ்வாலயத்துக்கு சொந்தமான, சுந்தரேசர் சுவாமி தேரில் இடம் பெற்றுள்ள திருவிளையாடற்புராண, சிவபுராண மரச் சிற்பங்கள் பற்றிய அரிய செய்திகள் இந்நூலில் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்டது வெளியாக வேண்டுமெனில் சரியான பதிப்பகத்தின், நெறியான உதவி தேவை. A.R. பதிப்பகம் அப்பணியை செவ்வனே இந்நூலில் செய்துள்ளது. அன்னை மீனாட்சியின் திருஉளக்கிடக்கையில் ஏற்றமிகு இடம் பெற்றுள்ள எமது இனிய சகோதரர் "பொற்றாமரை கொண்டான்" மருத்துவர் M. சீனிவாசன், M.D., D.Diab., அவர்களும், அவரது ஆற்றல்மிகு துணை திருமதி மல்லிகா சீனிவாசன் அவர்களும் இந்நூலுக்கு இரு கண்கள் போன்று செயல்பட்டு வெளிவர உதவியிருக்கிறார்கள். அவர்களது அன்புக்கு நான் பெரிதும் கடப்பாடு உடையவன்.

அணிந்துரை, அல்ல ஆசியுரை வழங்கிய அன்னை இராதா தியாகராசரின் பாத கமலங்களை எனது சிரம் வணங்குகிறது. மறைந்தும் பலர் மனங்களில் வாழ்ந்துவரும் திரு. ஏ.ஆர். அவர்களுக்கு இந்நூலினை பெருமையோடு சமர்ப்பிக்கின்றேன். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கருமுத்து தி. கண்ணன் அவர்களுக்கும், அறங்காவலர் குழுவினர், இணை ஆணையர் திரு. க. இராஜநாயகம் மற்றும் நிர்வாகத்தினருக்கும் பணிவான நன்றிகள்.

எனது சிந்தனைகளை, எண்ணங்களை நூலில் செதுக்கி வண்ணமாக்கிய சகோதரர் AR பதிப்பக மேலாளர் மா. இளங்கோ மற்றும் "பதிப்பகக் குழு ஆசிரியர்கள்" சண்முக திருக்குமரன், புலவர் வை. சங்கரலிங்கம், கவிதையாத்துள்ள இளவல் மா.இ. செந்தில் குமார், மு. கோபால், அழகான முறையில் அச்சாக்கம் செய்து கொடுத்த "ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ்" உரிமையாளர் திரு. ஆர்எம். லெட்சுமி நாராயணன், நூலினை வடிவமைத்து உருவம் கொடுத்த தம்பி ஜெ.எம். அரவிந்த் குமார், ஒளிப்படக் கலைஞர்கள் தென்னகக் கண்ணன், ஜி. திருநாவுக்கரசு, அனைத்திற்கும் மேலாக அன்னை மீனாட்சிக்கு அரும் பெரும் காணிக்கையாக பொற்றாமரை எனும் நூலை அவனிக்கு வழங்கிய AR பதிப்பகத்தார் ஆகியோருக்கு நன்றி சொல்ல, வார்த்தைகள் இல்லை. என் கண்களின் ஈரக் கசிவு அதை எடுத்தியம்பும்.

நூல், உங்கள் கைகளில், ஆம் அன்னை மீனாட்சியை ஆச்சரியமாகப் பார்க்கிறீர்கள்! இறைவியைப் போலவே இமைக்காமல்! நன்றாகப் பாருங்கள், நூலுக்குள் வருகை தாருங்கள், உங்களுக்கு அன்னையின் அருள் திண்ணம். காரணம் இந்நூல் அவளது எண்ணம்.

அன்னை மீனாட்சி சுந்தரேசுவரர் திருவடி நினைந்து


அம்பை மணிவண்ணன்



பொருளடக்கம்
























பொருளடக்கம்





1. முன்னுரை

உலகில் தோன்றிய நாகரிகங்கள் யாவும் பெரும்பாலும் ஆற்றங்கரை நாகரிகங்களே. ஆற்றங்கரைகளில் மனிதன் வாழத் தொடங்கிய பின்னரே அவனுக்கு ஓய்வு நேரம் கிடைத்தது. ஓய்வு நேரங்களில் அவனது சிந்தனையில் தோன்றி வளர்ந்தவையே கலைகள் என வரலாறு நமக்குச் சுட்டிச்செல்கிறது.

நைல் ஆற்று நன்கொடை என வழங்கப்படும் எகிப்து நாகரிகம், இந்தியாவில் தோன்றிய சிந்து சமவெளி நாகரிகம் ஆகிய நாகரிகங்கள் ஆற்றங்கரை நாகரிகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

தமிழகத்திலுள்ள பழமையும், பெருமையும் வாய்ந்த நகரங்களுள் சிறப்பிடம் பெறும் நகரங்கள் காஞ்சிபுரமும், மதுரையுமாகும். வடதமிழ் நாட்டில் சிறப்புமிக்க நகரமாகவும், பல்லவப் பெருவேந்தர்களின் தலைநகரமாகவும் திகழ்ந்தது காஞ்சி மாநகரமாகும். அதுபோலவே சங்ககாலம் முதல் இக்காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றை உடையதும், பாண்டியர், விசயநகர – நாயக்கர் போன்ற அரசவம்சத்தினரின் தலைநகராக விளங்கிய பெருநகரமே மதுரை மாநகர். இது வையை எனும் பொய்யாக் குலக் கொடியின் கரையில் அமைந்துள்ள நகரம் ஆகும்.

மதுரை சங்ககாலப் பாண்டியர், பல்லவரது சமகாலத்தவரான முற்காலப்பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், இசுலாமியர், விசயநகர–நாயக்கர், சேதுபதி அரசர்கள், ஐரோப்பியர் எனப் பல அரச வமிசத்தினரின் ஆட்சிக் காலத்திலெல்லாம் பல்வேறு விதமான வளர்ச்சியை அடைந்து வந்துள்ளது. குறிப்பாகக் கலை, இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கும் மாநகரமாக விளங்குகிறது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நகரம் என்ற பெருமையைப் பெற்றது இந்நகரமாகும். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மதுரை மாநகர் சிறப்புற்று விளங்கியதால்தான் இந்நகரில் வாழ்கின்றமக்கள் பரம்பரை பரம்பரையாகப் பிழைப்புத் தேடி வேறு ஊர்களுக்குச் சென்றறியாதவர்கள் என்றகருத்தை விளக்குவதாக "பதியெழுவறியா பழங்குடிமூதூர்" என சிலப்பதிகாரம் கூறுகின்றது. இக்கருத்தே பேச்சுவழக்கில் இன்று மாறி "மதுரையைச் சுற்றிய கழுதை வேறு எங்கும் போகாது" எனக் கூறப்படுகிறது. மதுரை மாநகர் பலவிதமான வணிகங்களுக்கு மையமாக விளங்குவதால் "தூங்கா நகரம்" என்றும், கோயிலை மையமாக வைத்து நகர் உண்டாக்கப்பட்டிருப்பதாலும், நகருக்குள்ளும் புறமும் கோயில்கள் நிறைந்து காணப்படுவதாலும் "கோயில் மாநகர்" என்றும் சிறப்புப் பெயர்களைக் கொண்டு திகழ்கிறது.


மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயில் நாயன்மார்களால் பாடப்பெற்றதலமாகும், அதேபோல் கூடலழகர் கோயில் வைணவ சமயக் கோயில்களில் முதன்மையான கோயிலாகவும், ஆழ்வார்களால் பாடல்பெற்றதலமாகவும் (மங்களாசாசனம்) விளங்குகிறது. இவை தவிர சைவ சமயம் சார்ந்த கோயில்களான இம்மையில் நன்மைதருவார் கோயில், முக்தீசுவரர் கோயில், வண்டியூர் மாரியம்மன் கோயில், ஆதி சொக்கநாதர் கோயில் தென்திரு ஆலவாய் கோயில் ஆகியவையும் வைணவ சமயம் சார்ந்த கோயில்களாக மதன கோபாலசுவாமி கோயில், தல்லாகுளம் பிரசன்ன வேங்கடாசலபதி கோயில், போன்ற சிறப்புப்பெற்ற கோயில்கள் மதுரை மாநகரத்திற்குள் இடம்பெற்றுள்ளன. மேலும் மதுரையை ஒட்டியோ அல்லது அருகிலோ அமைந்துள்ள பார்க்கத்தக்க பழமையும் சிறப்பும் வாய்ந்த கோயில்கள் எனத்



திருமாலிருஞ்சோலை மலை (ரிசப மலை) என்று அழைக்கப்படும் அழகர்கோயில், ஒத்தக்கடை அருகில் நரசிங்கம் என்ற ஊரில் அமைந்துள்ள யானைமலை நரசிங்கப்பெருமாள் கோயில். திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில், திருப்பரங்குன்றம் முருகன் கோயில் (இக்கோயில் கி.பி.8ஆம் நூற்றாண்டில் சிவபெருமானுக்காகக் கட்டப்பட்டு இன்று முருகன் கோயிலாக வழிபடப்படுகிறது). சைவ சமயக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் பிறந்த திருவாதவூர் சிவன்கோயில், திருப்பூவணம் பூவணநாதசுவாமி கோயில், செல்லூரில் உள்ள திருவாப்புடையார் கோயில் எனப் பல கோயில்களைக் கூறலாம். இதேபோல் நாட்டுப்புறத் தெய்வமாக விளங்கும் பாண்டிமுனீசுவரர் கோயில், மடப்புரம் காளிகோயில், செல்லத்தம்மன் கோயில் ஆகிய கோயில்களும் வழிபாட்டில் சிறப்பிடம் பெறும் கோயில்களாகும். இவ்வாறாகப் பல கோயில்கள் மதுரையிலும் மதுரையைச் சுற்றிலும் இடம்பெறுவதால் மதுரை "கோயில் நகரம்" என அழைக்கப்படுகிறது.

மதுரையைச் சுற்றிச் சமணர்கள் வாழ்ந்த மலைகள் பல உள்ளன. உதாரணமாக அழகர்கோயில், திருப்பரங்குன்றம், யானைமலை, சமணமலை, முத்துப்பட்டி, கொங்கர் புளியங்குளம், அரிட்டாபட்டி, கீழவளவு, செட்டிப்புடவு ஆகிய இடங்களைக் கூறலாம். இம்மலைகளில் சமணர்கள் வாழ்ந்த இடங்களில் காணப்படும் சமணச் சிற்பங்கள், கோயில்கள், கல்வெட்டுகள், கல்லினாலான சமணப்படுக்கைகள் காணத் தகுந்த இடங்களாகும்.





▲ கி.பி. 1757-இல் வரையப்பெற்ற படம்

2. இலக்கியங்களில் மதுரை



பாண்டியநாடு மற்றும் பாண்டியர்களைப் பற்றிய குறிப்புகளை கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகரது கல்வெட்டுகளிலிருந்து அறியமுடிகிறது. அதேபோல் இன்றைக்கு சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலும் மதுரையை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மதுரை மாநகரமானது திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் கூடல் என்றும், கலித்தொகையில் நான்மாடக் கூடல் என்றும், சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் மதுரை என்றும் அழைக்கப்படுகிறது.


மாங்குடி மருதனாரால் இயற்றப்பட்ட 752 வரிகளைக் கொண்ட, மதுரையைப் பற்றிய இலக்கியமான 'மதுரைக் காஞ்சி' மதுரையில் சிவன் கோயில், பௌத்தக் கோயில், சமணக்கோயில் எனப் பல கோயில்கள் இருந்தமையைக் கூறுகின்றது. ஆனால் மதுரைக் காஞ்சி உள்ளிட்ட சங்க இலக்கியங்களில் மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயில் பற்றிய குறிப்புகள் எதுவும் காணக் கிடைக்கவில்லை. சங்க இலக்கியங்களில் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படும் பரிபாடலில் கூட மதுரையைப் பற்றியும் திருப்பரங்குன்றத்து முருகன் கோயில் பற்றியும் செய்திகள் உள்ளனவேயன்றி சுந்தரேசுவரர் கோயில் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கவில்லை.

மணிமேகலையில் சைவக்கோயில் தொடர்பான செய்தி இடம் பெறுகின்றதேயன்றி மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயில் பற்றிய செய்தி


இடம் பெறவில்லை. அப்படியென்றால் இக்கோயில் தோன்றிய காலம் எது? என்றகேள்வி நம் மனதில் எழலாம். மதுரையில் கி.பி.6 ஆம் நூற்றாண்டு வரையில் தோன்றிய இலக்கியங்களோ, கல்வெட்டுச் செய்திகளோ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலைப் பற்றிய செய்திகளைக் கூறவில்லை என்பதால் கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னர் இங்கு கோயில் இல்லை என்று கூறிவிட இயலாது. ஏனெனில் அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் செல் அரித்தது போகக் கிடைத்தவையே இன்றைய இலக்கியங்கள். எனவே கோயில் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருந்த இலக்கியங்கள் நமக்குக் கிடைக்காமல் கூடப் போயிருக்கலாம். ஆகவே கோயில் இருந்திருக்கலாம், அக்கோயில் சிறிய அளவில் மரத்தினாலோ, செங்கல் மற்றும் சுதையாலோ அமைக்கப்பட்டிருக்கலாம் என ஒருவாறு யூகிக்கலாம்.

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் வாழ்கின்றநாம் எந்தக் கருத்தையும் சற்று ஆராய்ந்து அறிவியல் நோக்கில் அது உண்மையா? எனக் கண்டறிந்த பின்னரே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இறைவன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது உணர்வு தொடர்பான விசயம். ஆகையால் அக்கருத்தை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் அவரவர் விருப்பத்தைப் பொருத்தது. எனினும் அக்காலம் தொட்டு இன்றுவரை மனிதனது சக்திக்கு அப்பாற்பட்டுப் பல செயல்கள் நடந்து கொண்டிருப்பதால் அவையெல்லாம் நடைபெறுவதற்கும் இவ்வுலகம் இயங்குவதற்கும் மனிதனை விட உயர்ந்த சக்தி ஒன்று உண்டு என்றகருத்தை உலக மக்களில் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்கின்றனர். அக்கருத்தைத்தான் உலகில் தோன்றிய பல்வேறு சமயங்களும் வெவ்வேறு பெயர்களில் வேறுவேறு முறைகளில் கூறுவதோடு இறைவனையும், இறை வழிபாட்டைப் பற்றியும் கூறுகின்றன.

இவ்வுலகம் எப்படித் தோன்றியது, கடவுள் யார்? என்பதைத்தான் உபநிடதங்கள் அக்காலத்தில் ஆராய்ந்தன. வேதாந்தமும், உலகம், உயிர், இறைவன் பற்றிக் கூறிச் செல்கிறது.



૩. தமிழகத்தில் கோயில்களின் தோற்றம்




தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் கோயில்கள் நமக்குக் காணக் கிடைக்கின்றன. அதற்கு முன்னர் கோயில்கள் இருந்துள்ளன. ஆனால் அவை எத்தகைய அமைப்பில் இருந்தன என்பது பற்றித் தெரியவில்லை. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்த கோயில்கள் அனைத்தும் மரம், செங்கல், சுண்ணாம்பு முதலான அழிந்துபடக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டிருந்ததால் அவை நமக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் ஏன் கல்லை வைத்துக் கோயில்கள் எழுப்பப்படவில்லை எனில், ஒருவேளை கற்களை வைத்துக் கோயில் கட்டுகின்றவழக்கத்தை மக்கள் அறியாமல் இருந்திருக்கலாம். அடுத்ததாகத் தமிழரது பண்பாட்டில் இறந்தவர்களையே இறைவனாக வழிபடும் வழக்கம் இருந்து வந்ததால் அவர்களை நடுகல் வைத்து வழிபட்டனர். புதிதாக வந்த ஆரியக் கடவுளருக்கு அல்லது திராவிட – ஆரியக்கலப்பில் வந்த கடவுளருக்குக் கல்லில் உருவம் செய்யக்கூடாது என நினைத்திருக்கலாம். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தின் வடபகுதியை ஆண்ட பல்லவர்கள் சாளுக்கியரோடு கொண்டிருந்த தொடர்பினால் அவர்களது நாட்டிலிருந்த குடைவரைக் கோயில்களைப் பார்த்து, அதேபோல் இங்கும் குடைவரைக் கோயில்களை வெட்டுவித்தனர். இவர்களது சமகாலத்தவரான பாண்டியர்கள் சுமார் 60 குடைவரைகளை வெட்டியுள்ளனர். மதுரையை ஒட்டியுள்ள யானைமலையில் வைணவக் கடவுளான நரசிங்கப் பெருமாளுக்கும், திருப்பரங்குன்றத்தில் சைவக் கடவுளான சிவபெருமானுக்கும் குடைவரைக் கோயில்களைக் குடைவித்தனர். இன்றுவரை இக்குடைவரைகள் புதிய பல கட்டுமானங்களுடனும் பெரிய வளாகத்துடனும் கூடிய கோயில்களாகத் திகழ்கின்றனவேயன்றிக் குடைவரைகளில் எவ்வித மாற்றமோ, சிதைவோ இன்றிக் காணப்படுகின்றன.


அதேபோல் அருள்மிகு சுந்தரேசுவரருக்குக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கோயில் இருந்துள்ளது என்பதை இலக்கியச் சான்றுகள் கொண்டு அறிய முடிகிறது.

தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் சிவபெருமான் "ஆலமர் செல்வன்" எனச் சுட்டப்படுகிறார். அக்காலத்தில் நிலங்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலத்திற்கும் முறையே குறிஞ்சி–முருகன், முல்லை–மாயோன், மருதம் – இந்திரன், நெய்தல் – வருணன், பாலை–கொற்றவை என அந்தந்த நிலத்திற்கு உரிய தெய்வங்கள் அந்தந்த நிலத்தில் வழிபடப்பட்டன. ஆனால் சிவபெருமான் நிலங்களுக்கு உரிய தெய்வமாகயின்றி அனைத்து நிலத்தவருக்கும் தெய்வமாக விளங்கியுள்ளார்.

சங்கம் மருவிய காலத்தில் 'களப்பிரர்கள்' எனும் இனத்தவர் தமிழகத்தை ஆண்டதால் இவர்களது காலத்தில் தமிழகத்தில் சமணமும், பௌத்தமுமே சிறந்து விளங்கின. இக்காலத்திலும் சைவம் சிறப்பான இடத்தை பெறவில்லை.


கி.பி.6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சைவ, வைணவ சமயங்கள் வீறு கொண்டு எழுந்தன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தோன்றி முறையே வைணவ சமயத்தையும், சைவ சமயத்தையும் வளர்த்தனர். மக்கள் மத்தியில் சமணமும், பௌத்தமும் ஏற்கெனவே செல்வாக்குப் பெற்றிருந்ததனால் இவர்கள் ஊர் ஊராகச் சென்று தத்தமது சமயத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லி அதைப் பரப்ப வேண்டியதாயிற்று. அரசன் வழியே மக்கள் என்பதால் முதலில் இவர்கள் சமண சமயத்திலிருந்த அரசர்களை சைவ சமயத்திற்கு மாற்றினர். இதற்கு உதாரணமாக, பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கும், ஞானசம்பந்தரால் கூன்பாண்டியன் எனும் பாண்டிய மன்னன் சமணத்திலிருந்து சைவ சமயத்திற்கும் மாற்றப்பட்டதைக் கூறலாம். மேலும், பல சமணக் குடைவரைகள் கி.பி. 8, 9–ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சைவ வைணவக் குடைவரைகளாக மாற்றப்பட்டுள்ளன. சமணர் பலர் கழுவேற்றப்பட்டு கொல்லப்பட்டனர்.






மண்டகப்பட்டு குடைவரை ▲
மாமல்லபுரம் கடற்கரை கோயில் ▲
மாமல்லபுரம் பஞ்சபாண்டவ இரதங்கள் ▶










4. புராணங்களில் மதுரையும், கோயிலும்

நல்லவன் ஒருவன் தீயகுணம் படைத்த ஒருவனைக் கொன்றாலும் நல்லவனுக்குப் பிரம்மஹத்தி பாவம் (கொலைப்பாவம்) பிடிக்கும் எனவும் அப்பாவம் தொலைய வேண்டுமென்றால் அவர்கள் சிவபெருமானை வழிபட்டால்தான் நீங்கும் எனவும் பலபுராணக் கதைகள் கூறுகின்றன. இராமாயணத்தில் இராவண சம்ஹாரத்திற்குப் பின் அந்தப் பாவத்தைப் போக்குவதற்காக இராமபிரான் இராமேசுவரத்தில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டதாகக் கூறப்பட்டுள்ளது.




மதுரைக் கோயிலோடு தொடர்புடைய தல புராணமான திரு விளையாடற் புராணத்தில் மதுரை மற்றும் கோயிலின் தோற்றம் பற்றி இரண்டு கதைகளில் விளக்கப்பட்டுள்ளன. விருத்ராசுரன் எனும் அசுரன் ஒருவன் தேவர்களுக்கும் தேவர்களின் தலைவரான இந்திரனுக்கும் மிகவும் தொல்லைகள் தரவே இந்திரன் விருத்ராசுரனை அழிக்க முற்பட்டார். இந்திரனிடமிருந்து தப்பிய விருத்திராசுரன் ஒரு மலையில் சென்று மறைவான இடத்தில் தவம் செய்து வந்தான். அவனைத் தேடிப்பிடித்த இந்திரன், அவ்வசுரன் தவத்தில் இருந்ததையும் கருதிப் பார்க்காது அவனைக் கொன்றான். பகைவனேயானாலும் தவத்திலிருந்தவனைக் கொன்ற குற்றத்திற்காக இந்திரனைப் பிரம்மஹத்தி பாவம் பிடித்தது.

அப்பாவத்தினின்று விடுபட விண்ணுலகில் இயலாது எனக் கருதிய இந்திரன் மண்ணுலகிற்கு வந்து புண்ணிய தீர்த்தங்களில் நீராட எண்ணினான். அவ்வாறேஇமயமலையிலிருந்து தெற்கு நோக்கி ஒவ்வொரு புண்ணிய தீர்த்தமாக நீராடி, பாண்டியநாடு வந்து சேர்ந்தான். அப்பொழுது ஒருநாள் கடம்பவனம் ஒன்றின்

எல்லையோரமாகப் போய்க் கொண்டிருந்த போது தன் பாவம் முற்றிலுமாக விலகிவிட்டதை உணர்ந்தான். பின்னர் அவ்வாறு தன் பாவம் திடீரென நீங்கியதற்கும் அவ்விடத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது எனக் கருதிக் கடம்பவனத்தில் தேடிப்பார்த்த பொழுது அங்கு ஒரு சிவலிங்கம் இருந்ததைக் கண்டான். இச்சிவலிங்கமே தனது பாவத்தைப் போக்கியது என்பதை உணர்ந்து அச்சிவலிங்கத்தைப் பூசை செய்து சிவலிங்கம் இருந்த இடத்தில் எட்டுத் திசைகளுக்கும் எட்டு யானைகளை வைத்து இறைவனுக்கு விமானத்தை அமைத்தான். அந்த எட்டு யானைகளே சோமசுந்தரக்கடவுள் குடி கொண்டிருக்கும் விமானத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. இக்கதையை அடிப்படையாக வைத்தே கி.பி.16–ஆம் நூற்றாண்டில் கோயில் விமானம் எழுப்பப்பட்டுள்ளதால் எட்டு திசைகளிலும் எட்டு கல்யானைகளைக் கருவறையின் சுவர்ப் பகுதியில் இடம் பெறச் செய்துள்ளனர்.



◂ கி.பி. 1797-இல் திருமலை நாயக்கர் அரண்மனையின் தோற்றம்
▾ கி.பி. 1798-இல் திருமலை நாயக்கர் அரண்மனையின் தோற்றம்
▾ கி.பி. 1798-இல் திருமலை நாயக்கர் அரண்மனையின் தோற்றம்






தனஞ்சயன் எனும் வணிகன் முன்பு ஒரு காலத்தில் வணிகத்தின் பொருட்டு வெளியூர் சென்றுவிட்டு, ஊர் திரும்பினான். வரும் வழியில் கடம்பவனத்திற்குள் வந்து கொண்டிருந்த போது இருட்டி விடவே அங்கேயே தங்கிவிட்டுக் காலையில் ஊர் செல்லலாம் என எண்ணினான். அப்பொழுது கடம்பவனத்திற்குள் இந்திரன் கட்டிய விமானத்துடன் கூடிய சிவபெருமானது கோயிலைக் கண்டான். மிக மகிழ்ந்து இரவில் அக்கோயில் கருவறைக்குள்ளேயே பாதுகாப்புடன் தூங்கினான். காலையில் எழுந்து பார்த்த பொழுது இரவில் யாரோ வந்து இறைவனைப் பூசை செய்ததன் அடையாளங்களைக் கண்டான். உடனே பாண்டிய மன்னது அப்போதைய தலைநகரான மணலூரை அடைந்து மன்னன் குலசேகர பாண்டியனிடம் நடந்த நிகழ்வைக் கூறினான். இதனை அறிந்த மன்னன் உடனே தனது படை பரிவாரங்களுடன் கோயிலை அடைந்து இறைவனை வணங்கினான். அன்று இரவு இறைவன் குலசேகர பாண்டியனின் கனவில் தோன்றி, "கடம்பவனத்தை அழித்து நகருண்டாக்குக" எனக் கூறியருளினார். அவ்வண்ணமே கடம்பவனத்தை அழித்தான் குலசேகரபாண்டியன். நகரை எத்தகைய அமைப்பில் உருவாக்குவது? எப்படி உருவாக்குவது? எனத் தெரியாது இறைவனை வேண்டி நிற்க சிவபெருமான் சித்தர் வேடத்தில் வந்து நகரை அமைக்கும் விதத்தைக் கூறினார். அதன்படியே சிவலிங்கம் இருந்த இடத்தை மையமாக வைத்து நகரை உண்டாக்கினான்.


மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயில் தாமரை மலரின் மொட்டு போலவும் அதனைச் சுற்றி நான்குபுறமும் அமைந்துள்ள வீதிகள் மலரின் இதழ்கள் போலவும் அமைந்துள்ளன. இவ்வீதிகள் கோயிலில் நடைபெறும் மாத விழாக்களோடு தொடர்புடையவையாகும். உதாரணமாகக் கோயில் வளாகத்தில் உள்ள ஆடிவீதிகள், வளாகத்தின் வெளியே அமைந்துள்ள சித்திரை வீதிகள், அதனை அடுத்த ஆவணி மூல வீதிகள், அதற்கடுத்தாற்போல் உள்ள மாசி வீதிகள் என்பனவற்றைக் கூறலாம். இவ்வீதிகள் நான்கு திசைகளிலும் அந்தந்த திசையைச் சேர்த்துப் பெயர் பெறும். உதாரணமாக ஆடிவீதி கிழக்கு ஆடிவீதி, தெற்கு ஆடிவீதி, மேற்கு ஆடிவீதி, வடக்கு ஆடிவீதி என அமைந்திருக்கும். மதுரையின் தோற்றம் பற்றிய செய்திகளைப் புராணங்களில் பார்த்தோம். இனி இலக்கிய வரலாற்றின் வாயிலாக அவை கூறும் செய்திகளைக் காணலாம்.

▼ கி.பி. 1794-இல் மதுரையின் அமைப்பு



5. தமிழ்ச் சங்க வரலாற்றில் மதுரை

தமிழ் இலக்கியம் நீண்ட கால, தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டதாகும். இதில் காலத்தால் முந்தியது சங்க இலக்கியம் ஆகும். இதற்கு எப்படிச் சங்க இலக்கியம் எனப்பெயர் வந்தது? அக்காலத்தைச் சங்க காலம் என்று ஏன் அழைக்கிறார்கள்? 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழைப் போற்றி வளர்த்த சங்கங்கள் இருந்தன. அவை முறையே முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என அழைக்கப்பட்டன




இவற்றில் முதற்சங்கம் தென்மதுரையில் இருந்தது எனக் கூறுவர். இத்தென்மதுரை, இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கில் ஆப்பிரிக்கக் கண்டத்திற்கும், ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கும் இடையில் முன்னர் இருந்து கடல்கோளால் அழிந்துபட்ட இலெமூரியாக் கண்டத்தில் இருந்ததென்றும் கூறப்படுகிறது. இரண்டாவது தமிழ்ச்சங்கம் இலெமூரியா கண்டத்தில் கபாடபுரம் என்றஇடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கியது என்றும் கருதப்படுகிறது. இந்த இலெமூரியாக் கண்டம் அழிந்த பின்னர், (இன்றைய மதுரை) அழிந்து போன தென்மதுரையைப் போலத் திட்டமிட்டு அமைக்கப்பட்டதாக இலக்கிய வரலாற்று ஆசிரியர் கூறுவர். இவ்வாறு உருவாக்கப்பட்ட மதுரையில்தான் மூன்றாம் தமிழ்ச்சங்கம் இருந்ததாகக் கருதப்படுகிறது. இலக்கிய வரலாற்றாசிரியர்கள் ஒருபக்கம் இத்தகைய வரலாற்றைக் கூறினாலும், திறனாய்வாளர்கள் பலர் இக்கருத்தை மறுப்பர். ஏனெனில் மூன்று சங்கங்கள் பற்றிய வரலாற்றில் சிவபெருமானும், அவரது மகன் முருகப்பெருமானும் இருந்து தமிழ் ஆராய்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இது வரலாற்றுக்கு அடிப்படையில்லாத புராணச் செய்தியாகும். சங்ககாலம் என்று கூறப்படும் காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் ஒன்றில் கூட சங்கம் என்ற சொல்லே பயன்படுத்தப்படவில்லை; மேலும் சங்கம் என்பது தமிழ்ச்சொல் அல்ல; அது பௌத்த சமயத்திலிருந்து வந்த சொல்லாகும் என்றெல்லாம் பல காரணங்களைக் கூறிச் சங்கம் இருந்த கருத்தை மறுப்பர்.

தமிழ்ச்சங்க வரலாற்றில் கூறப்பட்டுள்ள மதுரை தோன்றிய செய்தியும், திருவிளையாடற்புராணம் கூறும் மதுரை தோன்றிய செய்தியும் சுவைபடக் கூறப்பட்டுள்ளதாகக் கொள்ளலாமே தவிர உண்மை என ஏற்றுக் கொள்ளும் அறிவியல் பூர்வமான செய்திகள் இதில் இடம் பெறவில்லை எனலாம். மதுரை மாநகரம் தோன்றியதற்கான வரலாற்று ஆதாரங்கள் இல்லை எனவே அதன் தோற்றம் பற்றிய வரலாற்றைக் கூறும்போது மேற்கண்டபடி கருத்துருவாக்கங்கள் எழுந்துள்ளன என்பர். எவ்வாறாயினும் திராவிடர்கள் சிந்துச்சமவெளி நாகரிக காலத்திலேயே சுட்ட செங்கலால் வீடுகட்டி வீதிகளை நேருக்கு நேராக அமைத்து நாகரிகமாக வாழ்ந்த மக்களாதலால் மதுரையை நிர்மாணிக்கும் திறனை அக்காலத்திலேயே பெற்று விளங்கியுள்ளனர் என்பது உண்மை. எனவே மூன்று தமிழ்ச்சங்கங்களில் முதலிரண்டு சங்கங்கள் இருந்திருக்கலாம். கடல்கோளால் அழிந்ததாலும் அவை பற்றிய செய்திகள் முழுமையாகக் கிடைக்காததாலும் மூன்றாம் தமிழ்ச் சங்கம் தோன்றிய காலத்தில் மதுரை மாநகர் முறையாக நிர்மாணிக்கப்பட்டது எனும் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

▼ கி.பி. 1792-ஆம் ஆண்டு வரைபடம். கிழக்கு மாசி வீதி





6. திருக்கோயிலின் தோற்றமும், வளர்ச்சியும்



எந்த ஒரு கோயிலும் ஒரே காலத்தில், ஒரே அரசரால் கட்டிமுடிக்கப்பட்டது என்று கூறமுடியாது. சில கோயில்கள் மட்டுமே குறிப்பிட்ட ஒரு அரசரால் கட்டப்பட்டவையாக இருக்கலாம். இத்தகைய கோயில்கள் பல நூறு ஆண்டுகளாகப் பல்வேறு அரசர்களால் காலங்காலமாகக் கட்டப்பட்டு இடையிடையே பழுது ஏற்பட்டோ, இடிந்தோ, புதுப்பிக்கப்பட்டோ வந்துள்ளன. எனவே பெரும்பாலான கோயில்களை இவற்றையார் கட்டியது? என்று கேட்டால் அதற்கு ஒரே வரியில் எப்படி விடையளிக்க முடியாதோ அது போலத்தான் மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயிலை யார் கட்டினார்? எனக் கேட்டால் இவர்தான் கட்டினார் என விடையளிக்க இயலாது. இக்கோயில் பல நூற்றாண்டுகளாகப் பல மன்னர்களால் கட்டப்பட்டு இன்றைய அமைப்பைப் பெற்றுத் திகழ்கின்றது.

மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயில் எப்படி இவ்வளவு விரிந்த பரப்புடையதாகவும். பல்வேறு மண்டபங்களைக் கொண்டும் திகழ்கிறது என வியக்கத் தோன்றும். அக்காலத்தில் கோயில் என்பது அரசனது வெற்றியின் நினைவாகக் கட்டப்பட்டது. இதற்கு உதாரணமாக இராசராசனின் வெற்றியின் நினைவாகக் கட்டப்பட்ட தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலைக் கூறலாம். அதுபோலவே மதுரை மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயிலும் அதன் பல பகுதிகளை அரசர்கள் பலர் தங்களது வெற்றிகளின் நினைவாகப் பல காலங்களில் சிறிது சிறிதாகத் தோற்றுவித்து மிகப் பெரிய வளாகமாக வளர்ச்சியுற்றது. அதுபோல் விழாக்களின் காரணமாகவும், மண்டபங்களின் தேவை அதிகமாகி அதன் காரணமாகவும், மண்டபங்கள் கட்டப்பட்டன. உதாரணமாக விசயநகர – நாயக்கரது ஆட்சிக் காலத்தில் புதிய விழாக்கள் பல அறிமுகம் செய்யப்பட்டு இன்று வரை




பொற்றாமரை

கொண்டாடப்படுகின்றன. தமிழகக் கோயில்களில் பெரும்பாலான மண்டபங்கள் இவர்களது காலத்தில் கட்டப்பட்டனவாக உள்ளன. எனவே மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலும் விசயநகர நாயக்கரது காலத்தில்தான் விரிவாக்கம் அடைந்துள்ளது. மன்னர் தவிர பிறவசதி படைத்த கொடையாளர்களும் கோயிலுக்குத் திருப்பணி செய்ய நினைத்ததன் காரணமாகவும் கோயில் விரிவாக்கம் அடைந்து இருக்கலாம்.


ஒரு கோயிலின் முக்கியமான பகுதி அக்கோயிலின் விமானமே ஆகும். ஏனெனில் விமானத்தில்தான் இறைவன் குடிகொண்டிருக்கும் கருவறைஇடம் பெற்றுள்ளது. இன்னும் பெரும்பாலோருக்கு விமானம் எது? கோபுரம் எது? எனத் தெரிவதில்லை.

விமானம் என்பது கருவறையின் அடித்தளம் முதல் கலசம் வரை உள்ள பகுதியாகும். கோபுரம் என்பது கோயிலின் நுழைவாயிலின் மேல் உயரமாக அமைக்கப்படுவதாகும். இறைவனது திருஉருவ அமைப்பிற்கு ஏற்ப விமானம் சதுரம், வட்டம், நீள்சதுரம், கஜ பிருஷ்டம் (யானையின் பின்பகுதி) என அமையும். ஆனால் கோபுரம் என்பது செவ்வகமாகவே அமைகின்றது. விமானம் ஓர் அடுக்கு முதல் 13 அடுக்கு வரை தமிழகத்தில் காணப்படுகிறது. கோபுரமும் அதே போல் பல அடுக்குகளைக் கொண்டதாகக் கட்டப்படும். விசயநகர–நாயக்கர்தான் தமிழகக் கோயில்கள் பெரும்பாலானவற்றில் வானளாவிய கோபுரங்களைக் கட்டினர். தமிழகத்தில் பல்லவர்காலம் முதல் சோழர் காலம் முடிய கட்டப்பட்ட கோயில்களின் விமானம் உயரமாகவும் கோபுரம் குட்டையாகவும் அமைந்திருக்கும். பிற்காலப் பாண்டியர் காலத்தின் இறுதியிலும் விசயநகர–நாயக்கர் காலத்திலும் கட்டப்பட்ட கோயில்களில் விமானம் உயரம் இன்றி கோபுரம் உயரமாக அமைந்திருக்கும்.

கோயிலைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் விமானத்திலிருந்து படிப்படியாகக் கோபுரம் வரை ஒவ்வொரு மண்டபமாக அறியலாம் அல்லது கோபுரத்தில் தொடங்கி கருவறைவரை படிப்படியாக அறியலாம். இந்நூலில் அம்மன் கோயிலின் நுழைவு வாயிலில் தொடங்கி கருவறைவரையிலும், பின் சுவாமி கோயிலைப் பற்றியும் விரிவாகக் காணலாம்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ▸






மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலைப் பொறுத்தவரை நான்கு திசைகளிலும், நான்கு கோபுரங்கள் அமைந்துள்ளன. கோயில் வளாகத்தில் சம அளவில் முக்கியத்துவம் பெற்றஇரண்டு கோயில்கள் ஒன்று மீனாட்சியம்மைக்கும், மற்றொன்று சுந்தரேசுவரப் பெருமானுக்கும் அமைந்துள்ளன. சக்தியின் அம்சமாக அம்மன் குடி கொண்டிருக்கும் சிறப்புமிக்க இடங்கள் மூன்று எனச் சொல்வதுண்டு. அதனை காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சி, மதுரையில் மீனாட்சி என்பர். மேலும் மதுரையைப் பொறுத்த அளவில் புராண அடிப்படையில் உமாதேவி மலையத்துவச பாண்டியனின் மகளாக அவதரித்து மதுரைக்கு அரசியாகப் பட்டம் சூட்டி ஆட்சி புரிந்து, திக்விஜயம் செய்து கைலாயமலைக்குச் சென்று சிவபெருமானைக் கண்டு பின் மதுரை வந்து மணம் புரிந்ததால் இங்கு மீனாட்சிக்கே வழிபாட்டில் முதலிடம் அளிக்கப்படுகிறது. மேலும் மதுரை என்றாலே இங்கு மீனாட்சியின் ஆட்சிதான். தில்லை என்றாலே அங்கு சிவபெருமானின் ஆட்சிதான் விளையாட்டாக ஒருவரிடம் வினவும் போது கூட உங்கள் வீட்டில் மதுரையா? சிதம்பரமா? எனக் கேட்பதுண்டு. எனவே வழிபாட்டில் மீனாட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் பக்தர்களும் முதலில் மீனாட்சி அம்மனை வழிபட்ட பிறகே சுந்தரேசுவரரை வழிபடுகின்றனர். நாமும் கோயிலைப் பற்றி அறிந்து கொள்ள இக்கோயிலின் கிழக்கே அமைந்துள்ள பிரதான இரண்டு நுழைவு வாயில்களில் அம்மன் கோயிலுக்கு நேரே உள்ள அட்டசக்தி மண்டபத்தில் அமைந்துள்ள நுழைவு வாயிலின் வழியாக இப்பொழுது உள்ளே செல்கிறோம்.

▼ மதுரை செயற்கைக்கோள் வரைபடம்

திருக்கோயில் வரைபடம் ▶





மேற்குக் கோபுரம்
தெற்குக் கோபுரம்
வடக்குக் கோபுரம்
கிழக்குக் கோபுரம்
சித்திரக் கோபுரம்
பொற்றாமரைக் குளம்
அம்மன் சந்நிதி
சுவாமி சந்நிதி
கல்யாண சுந்தரர் சந்நிதி
ஆயிரங்கால் மண்டபம்







7. நுழைவு வாயில்

கோயிலின் கிழக்குப்பக்கம் சுந்தரேசுவரர் கோயிலுக்கு நேரே சுந்தர பாண்டியன் கோபுரம் அமைந்திருப்பதுபோல் அம்மன் கோயிலுக்கு நேரே கோபுரம் கிடையாது. எனினும் முகப்புவாசல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாசல் 25 அடி உயரமும் 18 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இதில் மேல்பகுதியில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் காட்சி, வலதுபுறம் விநாயகர், நுழைவு வாயிலின் இடதுபுறம் சுப்ரமணியர் ஆகியோரது சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நுழைவு வாயில் 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டதாகும். இந்நுழைவு வாயில் வழியாக நுழைந்தவுடன் காணப்படுவது அட்டசக்தி மண்டபம் ஆகும்.

◀ அம்மன் சன்னதி நுழைவு வாயில்
▼ அட்டசக்தி மண்டபத்தின் நுழைவு வாயில்



8. அட்டசக்தி மண்டபம்



அட்டசக்தி மண்டபம் 46 அடி நீளமும், 18 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இம்மண்டபத்தின் மேற்கூரை அரைவட்ட வடிவ வளைவு முகடாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் இரு புறங்களிலும் உள்ள தூண்களில் இடதுபுறம் கௌமாரி, ரௌத்ரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, வலதுபுறம் யக்ஞரூபிணி, சியாமளா, மகேசுவரி, மனோன்மணி ஆகிய எட்டு சிற்பங்களும் அம்பிகையின் வடிவங்களாக இடம்பெற்றுள்ளன. இதனால்தான் இம்மண்டபத்திற்கு "அட்டசக்தி மண்டபம்" என்ற பெயர் உண்டாயிற்று.

இம்மண்டபத்தில் மேற்கண்ட சிற்பங்கள் தவிர முகப்பில் இது மீனாட்சியம்மன் கோயில் என்பதாலும், அட்டசக்தி மண்டபம் என்பதாலும், இரண்டு துவாரபாலகியரது சிற்பங்களும் இரண்டு சாமரதாரிகளது சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. மண்டபத்தின் உள்ளே நுழைவு வாயிலின் இருபுறமும் வல்லபகணபதியின் உருவமும், சண்முகரின் உருவமும் அமைந்துள்ளன. இவற்றோடு மீனாட்சி அம்மையின் கருவறையை நோக்கி சைவ சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் உருவங்களும், மீனாட்சியம்மையின் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன.

மண்டப விதானத்தின் பக்கவாட்டில் மலையத்துவச பாண்டியன் சக்தியை வணங்கிக் குழந்தை வரம் கேட்பது, மலையத்துவசன் செய்த யாகத்தீயிலிருந்து தடாதகை பிறப்பு, தடாதகை முடிசூட்டல், திக்விசயம், சிவபெருமானைக் கயிலாயத்தில் சந்தித்தல், இருவருக்கும் திருமணம் முடிந்து மீனாட்சி சமேதராக சுந்தரேசர் காட்சி தருதல், சிவபெருமான்

▼ அட்டசக்தி மண்டபம்



▶ கௌமாரி
▶ ரௌத்ரி
▼ வைஷ்ணவி







மகாலெட்சுமி


யக்ஞரூபிணி

சியாமளா










அட்டசக்தி மண்டப வரைபடம் (தோராயமான அளவுகளில்)

1. கௌமாரி
2. ரௌத்ரி
3. வைஷ்ணவி
4. மகாலெட்சுமி
5. யக்ஞரூபிணி
6. சியாமளா
7. மகேசுவரி
8. மனோன்மணி
9. நர்த்தனகணபதி
10. ஆறுமுகக் கடவுள்
11. அமைச்சர்கள்
12. துவார பாலகிகள்
13. சாமரதாரிகள்

▼ மகேசுவரி



▼ மனோன்மணி







▲ மலரும் கிளியும்

◀ தவத்தின் வலிமையை உணர்த்தும் தத்ரூபக் காட்சி

முடிசூட்டல், உக்கிரபாண்டியன் பிறப்பு, உக்கிர பாண்டியன் திருமணம், உக்கிரபாண்டியன் முடிசூட்டல் எனும் திருவிளையாடற் புராணம் தொடர்பான சுதைச் சிற்பங்களும், ஓவியங்களும் சமீபகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இந்த அட்டசக்தி மண்டபத்தைக் கட்டியவர்கள், இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்த மன்னர் திருமலை நாயக்கரின் பட்டத்து தேவியரான உருத்ரபதியம்மை, தோளியம்மை ஆகியோராவர். இம்மண்டபம் கட்டப்பட்ட காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு (1623-1659) ஆகும். இம்மண்டபம் நாள்தோறும் வெளியூர்களிலிருந்து வழிபாட்டிற்கு வரும் பக்தர்களுக்கு உணவு வழங்குவதற்காக கட்டப்பட்டதாகும். ஆனால் இன்று அவ்வழக்கம் இல்லை, மாறாக இம்மண்டபத்தின் இருபுறமும் தேங்காய், பழக்கடைகள் இடம்பெற்றுள்ளன. ராணி மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் பெரும் பஞ்சம் நிலவியபோது அரசின் சார்பாக தினமும் மக்களுக்கு இம்மண்டபத்தில் உணவு வழங்கப் பட்டதாகக் கூறுவர்.



௯. வேட மண்டபம்

அட்ட சக்தி மண்டபத்தை அடுத்துள்ள மண்டபம் வேட மண்டபமாகும். இம்மண்டபத்தின் இடதுபுறமும், வலதுபுறமும் 6 அடி உயரத்துடன் முறையே வேட்டுவச்சி மற்றும் வேடன் உருவங்கள் அழகாகவும், கம்பீரமாகவும் காட்சியளிக்கின்றன.

இவ்வேட்டுவச்சியும் வேடனும் உமையும் சிவனுமாகும். வேட்டுவச்சியின் கைகளில் சூலாயுதம் (சிதைந்துள்ளது) மற்றும் கபாலம் காணப்படுகின்றன. மார்பில் கச்சை காட்டப்பட்டுள்ளமை, இச்சிற்பம் இறைவிதான் என்பதை உணர்த்துவதாக உள்ளது. பெண் உருவங்களைச் சிற்பங்களில் காட்டும் பொழுது தேவலோகப் பெண்கள் எனில் அவர்களுக்கு மார்பில் கச்சை இடம் பெறும். உதாரணமாகச் சுப்பிரமணியருடன் இடம் பெறும் வள்ளி தெய்வானைச் சிற்பங்களில் தெய்வானைக்கும், திருமாலுடன் இடம்பெறும் ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்களில் ஸ்ரீதேவிக்கு மட்டும் மார்புக்கச்சை அமைக்கப்பட்டிருக்கும். அதுபோலவே இங்கு இச்சிற்பம் அம்மன் என்பதால் மார்புக்கச்சை இடம் பெற்றுள்ளது. பக்கவாட்டில் சக்திப்படைகள் காணப்படுகின்றன. தலைக்கு மேல் நாகம் காட்டப்பட்டுள்ளது. வேடனது உருவம் பறவை, குரங்கு முதலியவற்றைவைத்துக் கொண்டு நிற்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. வேடனது தோளில் நாகம் காட்டப்பட்டிருப்பது இச்சிற்பம் சிவபெருமான்தான் என்பதை உறுதி செய்கிறது. இம்மண்டபத்தில் இவ்வாறு வேட்டுவச்சி, வேடனாய்க் காட்சி தரும் சிற்பங்கள் மீனாட்சி - சுந்தரேசுவரரது சிற்பங்களே. இவை பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறும் 26-வது கதையான "மாபாதகந் தீர்த்தது" எனும் கதையை அடியொற்றி அமைக்கப்பட்டவையாகும்.

◂ வேட்டுவச்சி வடிவில் பார்வதி
▾ வேடன் வடிவில் சிவபெருமான்

அவந்தி நகரில் ஒரு மறையோன் இருந்தான். அவன் மனைவி பேரழகியாவாள். இத்தம்பதியருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வளர்ந்து வாலிபனான பொழுது நன்னடத்தை இல்லாதவனாய்த் திகழ்ந்தான். இப்படிப்பட்ட நல்லவர்களுக்கு இப்படியொரு பிள்ளையா? என அனைவரும் கூறும்படி இருந்தது அவனது செயற்பாடுகள். அவன் பெற்ற தாயின் மீது இச்சை கொண்டான். அதற்கு அந்தத் அத்தாயும் இசைந்தாள். இதனைத் தந்தை அறிந்ததால் அவரை மண்வெட்டியால் வெட்டிக் கொன்றான். மகன் பின்னர் தாயை அழைத்துக் கொண்டு, வீட்டிலிருந்த பொருளையும் எடுத்துக் கொண்டு அவ்வூரில் வாழப் பிடிக்காது வேறு ஊருக்கு ஒரு காட்டு வழியே புறப்பட்டான்.

செல்லும் வழியில் சில வேடர்கள் இவனைத் தடுத்துப் பொருளைப் பறித்துக் கொண்டு இவனது தாயையும் கவர்ந்து சென்றனர். அந்நிலையில் அந்தப்பாவியை இறந்த தந்தையின் ஆவி பற்றிக் கொண்டு அலைக்கழிக்க, அங்கும் இங்குமாக அவன் அலைந்து திரிந்து இறுதியில் மதுரை வந்து சேர்ந்தான். அப்பொழுது இறைவனான சோமசுந்தரப் பெருமான் மீனாட்சித்தாயிடம் அந்தப்பாவியின் கதையை எடுத்துக் கூறினார். எவ்வகையாலும் விமோசனமே இல்லாத இப்பாவிக்கு உய்யும் வழிதான் உண்டோ? என அம்மை வினவ, “காப்போர் எவருமின்றி அழிவடைபவனைக் காப்பதும் நம் கடமையாகும்” என்று கூறி இருவரும் வேடன், வேட்டுவச்சி உருவில் அவனுக்குக் காட்சி தந்து அருள் செய்ய அந்தபாவியும் தன் பாவம் தீர்ந்து இறைவனை வழிபட்டு செய்து ஈசன் திருவடியடைந்தான்.

இக்கதையை ஒட்டியே இம்மண்டபத்தில் வேடன், வேட்டுவச்சி சிலைகள் இடம் பெற்றுள்ளன. இதற்கு ஒரு நல்ல காரணமும் உண்டு. மாபாதகம் செய்த மாபாவிக்கே இறைவனும் இறைவியும் அருள்பாலித்துள்ளனர், எனவே எத்தகைய கொடிய பாவங்களைச் செய்தவரும் அதற்கு மனம் வருந்தி நம்பிக்கையுடன் இக்கோயிலுக்கு வருவார்களேயானால் மீனாட்சி–சுந்தரேசரது அருள்நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும் என்றகருத்தை உணர்த்தவே இச்சிலைகளை இங்கு அமைத்துள்ளனர் எனலாம்.




10. மீனாட்சி நாயக்கர் மண்டபம்

வேட மண்டபத்தை அடுத்துள்ள மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபமாகும். இது 160 அடி நீளமும், 110 அடி அகலமும் கொண்ட பெரிய மண்டபமாகும். இம்மண்டபத்தில் ஆறு வரிசைகளில் 110 தூண்கள் 22 அடி உயரத்துடன் இடம் பெற்றுள்ளன. இத்தூண்கள் அனைத்தும் நாயக்கரது கலைப்பாணியில் மேற்பகுதியில் சிம்மங்களுடன் விளங்குகின்றன.

இம்மண்டபம் கி.பி.1708–ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இதனைக் கட்டியவர் கி.பி.18–ஆம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னரான விசயரங்க சொக்கநாத நாயக்கரின் (கி.பி.1706–1732) பிரதானியாக இருந்த மீனாட்சி நாயக்கராவார்.

இவரது பெயராலேயே இம்மண்டபம் அழைக்கப்படுகிறது. இம்மண்டபம் கட்டியதன் பின் இதில் கோயில் யானைகள், ஒட்டகங்கள், காளைகள் முதலியன கட்டப்பட்டு வந்தனவாம். இப்பொழுது நடைபாதையின் இடப்பக்கம் விளையாட்டுப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளும், வலப்பக்கம் பூக்கடைகளும் உள்ளன. இம்மண்டபத்திலிருந்து இடப்பக்கம் சென்றால் ஆடிவீதியை அடையலாம். அங்குதான் வன்னி மரத்தடி விநாயகர் கோயில் அமைந்துள்ளது. மண்டபத்தின் வலதுபுறம் கோபுரத்தை, ஒட்டிய தூணில் இடம் பெறும் வணங்கிய நிலையிலான சிற்பம், மீனாட்சி நாயக்கர் சிற்பமாக இருக்கலாம். அடுத்து அமைந்திருப்பது சித்திர கோபுரமாகும். இக்கோபுரத்தை அடையும் வாயிலில் அமைந்திருப்பது திருவாட்சியாகும்.



திருவாட்சி

இத்திருவாட்சி 25 அடி உயரத்துடன் ஆயிரத்தெட்டு எண்ணெய் விளக்குகளைக் கொண்டு விளங்குகிறது. இத்திருவாட்சியைக் கோயிலுக்கு வழங்கியவர்கள் மருது சகோதரர்கள் ஆவர். இன்றளவும் சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களால் இவ்விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

சின்னமருது, பெரியமருது எனும் இவர்கள் துவக்கத்தில் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதர் படையில் போர்வீரர்களாக இருந்தனர். ஆர்க்காட்டு நவாபு என்பவன் ஆங்கிலேயரின் துணை கொண்டு சிவகங்கை மன்னருடன் செய்த போரில் மன்னர் வீரமரணம் அடைந்தார். அவரது மனைவி வேலுநாச்சியாரை மருதுபாண்டியர் காப்பாற்றி ஹைதரலியின் பாதுகாப்பில் திண்டுக்கல்லில் சில காலம் வைத்திருந்து, திரும்பி வந்து வேலுநாச்சியாரை மீண்டும் சிவகங்கைக்கு அரசியாக்கினர்.

1800–ஆம் ஆண்டில் வேலுநாச்சியார் இறக்கவே மருதுபாண்டியர் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். சிறிது காலம் ஆட்சி செய்து ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதந்திரப்போரில் கலந்து இறுதியில் ஆங்கிலேயரால் திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் காளையார் கோயில், திருப்பத்தூர் கோயில், குன்றக்குடி கோயில், திருமோகூர் கோயில், ஆகிய கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்தது போலவே மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலுக்கும் திருப்பணி செய்துள்ளனர். மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயிலின் திருக்கல்யாண மண்டபத்திற்கு எதிரிலுள்ள சேர்வைக்காரர் மண்டபமும் இவர்களால் கட்டப்பட்டதாகும். பெரிய மருதுவின் உருவச்சிலை இச்சேர்வைக்காரர் மண்டபத்தூணில் உள்ளது.



◀ மீனாட்சி நாயக்கர் மண்டபம்


▶ மருது சகோதரர்கள் வரைபடம்

11. சித்திர கோபுரம்

மீனாட்சி நாயக்கர் மண்டபத்தினின்று கோயிலுக்குள் நுழையும் வாயிலில் ஏழு நிலைகளையுடைய கோபுரம் இடம் பெறுகிறது. அம்மன் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள கோபுரங்களில் இதுவே உயர்ந்த கோபுரமாகும். இக்கோபுரமானது 117 அடி உயரமும், 38 அடி அகலமும், 78 அடி நீளமும் உடைய அடித்தளமும் கொண்டதாகும். இக்கோபுரத்தில் சுமார் 730 அழகுமிக்க சுதையினாலான சிற்பங்கள் இடம் பெற்றிருப்பதால் இது சித்திர கோபுரம் என அழைக்கப்படுகிறது.

இக்கோபுரத்தை அரியநாத முதலியாரின் திருக்குமாரர் காளத்தியப்ப முதலியார் கி.பி.1569-ஆம் ஆண்டில் கட்டினார். இக்கோபுரத்தை நன்றாகப் பார்க்க வேண்டும் எனில் பொற்றாமைக்குளத்தின் மேற்குக் கரையிலிருந்தோ, அல்லது ஆடி வீதியில் யானைக் கட்டுமிடத்திற்கு அருகிலிருந்தோ பார்க்கலாம்.


சித்திர கோபுரத்தின் மேற்குப்புறத் தோற்றம் ▸







முதலிப்பிள்ளை மண்டபம் (இருட்டு மண்டபம்)



12. முதலிப்பிள்ளை மண்டபம்

சித்திர கோபுரத்தை அடுத்துள்ள மண்டபம் 25 அடி அகலமும், 60 அடி நீளமும் கொண்டு விளங்குகிறது. இம்மண்டபம் முதலிப்பிள்ளை மண்டபம் என்றும், இருட்டு மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது.

கி.பி.1613–இல் கடந்தை முதலியார் என்பவரால் கட்டப்பட்டதால் முதலிப்பிள்ளை மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது. கி.பி.1960–63ஆம் ஆண்டுகளில் நடந்த திருப்பணியின் போது இம்மண்டபத்தின் வடப்பக்கச் சுவரை இடித்துச் சன்னல்கள் வைக்கப்படும் வரை இம்மண்டபம் வெளிச்சம் இன்றி இருட்டாகக் காணப்பட்டதால் இருட்டு மண்டபம் என அனைவராலும் வழங்கப்பட்டு, அதுவே பெயராகி இன்றளவும் நிலைத்துவிட்டது.


இம்மண்டபத்தில் இடம்பெறும் தூண் சிற்பங்கள் அழகானவை. சிவபெருமானது 25 வடிவங்களுள் பிச்சாடனர் வடிவமும் ஒன்றாகும். இப்பிச்சாடனர் கதையைச் சித்தரிக்கும் சிற்பங்களே இங்கு இடம் பெற்றுள்ளன.

பிச்சாடனர் பற்றிய இரண்டு கதைகள் உள்ளன. ஒன்று கூர்மபுராணத்தில் இடம் பெற்றுள்ளது. அதன்படி பிரம்மனது தலையைக் கொய்ததால் சிவ பெருமானைப் பிரம்மகத்தி தோசம் பற்றிக் கொண்டது. இதனால் பிரம்மனது கபாலம் பிச்சைப் பாத்திரமாக மாறி சிவபெருமானது கையில் ஒட்டிக்கொண்டது. 12 வருடங்கள் சிவபெருமான் பிச்சையெடுத்தார். அப்பொழுது திருமாலைக் காண ஒருமுறை வைகுண்டம் சென்றார். ஆனால் திருமாலுக்குக் காவலாயிருந்த விஷ்வச்சேனர் சிவபெருமானை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. கோபம் கொண்ட சிவபெருமான் விஷ்வச்சேனரையும் கொன்றார். பிரம்மனது தலையைக் கொய்த பாவம், விஷ்வக் சேனரைக் கொன்றபாவம் ஆகிய இரண்டு பாவங்களும் இவரைப் பற்றிக் கொண்டன. பின்னர் திருமாலைச் சந்தித்தார் சிவன். "இப்பாவங்கள் தொலையக் காசிக்குச் செல்" எனத் திருமால் கூறியதாகக் கூர்மபுராணம் கூறும்.

தாருகாவனத்திலுள்ள ரிசிகள் அனைவரும் சிவபெருமானது சிறப்பினை மறந்து 'யாகமே சிறந்தது' என்றும் அதன் மூலம் எல்லா சக்திகளையும் பெறலாம் எனக் கருதி ஆணவமுற்று யாகங்கள் செய்வதிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் கோபம் அடைந்த சிவபெருமான் அம்முனிவர்களது ஆணவத்தை அழிக்கத் திருமாலை மோகினி அவதாரம் எடுக்கச் செய்தார். முனிவர்கள் யாகம் செய்வதை விட்டு மோகினியின் அழகில் மயங்கிக் கிடந்தனர். சிவபெருமான் ஆடையின்றிப் பிச்சை எடுக்கும் பிரானாகக் கையில் திருவோடு ஏந்தியபடி இனிமையாகப் பாடிக் கொண்டு ரிசிகளது வீட்டில் பிச்சை கேட்டார். பிச்சையிட வந்த ரிசிபத்தினிகள் அவரது அழகில் மயங்கினர். காமத்துயரில் பிடிபட்டு வருந்தினர். தமது ஆடை நெகிழ்ந்து தம்மை விட்டுச் செல்வதைக் கூட அறியாது அவர்களை மறந்து பிச்சாடனர் பின் சென்றனர். தாருகாவனத்து ரிசிகள் அபிச்சார வேள்வி செய்து அதில் தோன்றிய மிருகங்களை யெல்லாம் சிவபெருமான் மீது ஏவினர்.




▲ பிச்சாடனர்




முதலிப்பிள்ளை மண்டப வரைபடம்
(தோராயமான அளவுகளில்)


1. தாருகாவனத்து ரிசி
2. தாருகாவனத்து ரிசி
3. ரிசிபத்தினி
4. மோகினி
5. பிச்சாடனர்
6. முதலிப்பிள்ளை
7. நர்த்தன கணபதி
8. சுப்பிரமணியர்



▲ தாருகாவனத்து ரிசி




▲ ரிசி பத்தினி



1



2



3



4



▲ கடந்தை முதலியார்

தன்னை நோக்கி வந்த மிருகங்களில் சிலவற்றைக் கொன்று அவற்றின் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டார். சில மிருகங்களை அணிகலன்களாக அணிந்து கொண்டார். இக்கதையில் அவர் பிச்சாடனர் கோலத்தில் வந்த உருவம் பற்றிய காட்சியே இங்கு இடம் பெற்றுள்ளது. இப் பிச்சாடனர் சிற்பம் தொடர்பாகத் திருவிளையாடற்புராணத்தில் 32-ஆவது கதை ஒன்று உள்ளது. அதன்படி முனிவர்கள் பிச்சாடனர் அழகில் மயங்கிய தம் மனைவியரை, "நீங்கள் மதுரையில் வணிகர் மகளிராகப் பிறப்பீர்களாக" என்று சாபமிட்டனர். சாபம் நீங்கும் வகை என்ன எனக் கேட்டனர் மனைவியர். அம்முனிவர்கள் "மதுரை சொக்கநாதர் வளையல் விற்பவராக வந்து உங்களுக்கு வளையல் அணிவிக்கும் போது இச்சாபம் நீங்குவீர்" எனச் சாப விமோசனமும் கூறினர். அதன்படி முனிவரது மனைவியர் வணிக மகளிராகப் பிறந்தனர். சிவபெருமான் வளையல் விற்பவராக வந்து அவர்களுக்கு வளையலிட கைகளைத் தொட்டார். அதனால் அவர்கள் சாபம் நீங்கினர்.

இம்மண்டபத்தில் நான்கு யாளிகளும் இரண்டு தாருகாவனத்து ரிசிகளும், ஒரு தூணில் சிவபெருமானுக்குப் பிச்சை அளித்த ரிசிபத்தினி அன்னக் கரண்டியுடனும் அதற்கு எதிரே உள்ள தூணில் மோகினியின் சிற்பமும் அடுத்ததாகப் பிச்சாடனர் உருவமும் இடம் பெற்றுள்ளன. மோகினியின் அழகில் மயங்கிய ரிசிகள் அருகே காட்டப்பட்டுள்ளனர்.

மேலும் இம்மண்டபத்தில் நர்த்தன கணபதி மற்றும் சுப்ரமணியர் சிற்பங்களும் மண்டபத்தைக் கட்டிய கடந்தை முதலியாரின் சிற்பமும் இடம்பெற்றுள்ளன.

இடது பக்கம்

▲ 1 தாருகாவனத்து ரிசி

▲ 2 மோகினி

▼ 3 நர்த்தன கணபதி

▼ 4 சுப்பிரமணியர்

13. பொற்றாமரைக் குளம்




முதலிப்பிள்ளை மண்டபத்தை அடுத்து அமைந்திருப்பது பொற்றாமரைக்குளமாகும். இது 165 அடி நீளமும், 120 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. நான்கு புறமும் பக்தர்கள் குளத்தினுள் இறங்கி குளிக்க, கை, கால்களைச் சுத்தம் செய்ய ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இதில் மழைநீர் மட்டும் நிறையத் தேங்கியிருந்தது. ஆனால் தற்போது தெப்பக்குளத்தினுள் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் வழி தண்ணீர் நிரப்பி குறைந்த அளவிலான தண்ணீர் மட்டுமே குளத்தில் இருக்கும்படியாக கோயில் நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

இக்குளத்தின் நான்குபுறமும் தூண்களுடன் கூடிய பிரகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்குள்ளேயே இவ்வளவு பெரியதும், அழகு வாய்ந்ததுமான இப்பொற்றாமரைக்குளம் கோயிலின் அழகுக்கு அழகு சேர்ப்பதாக அமைந்துள்ளது. மதுரைக் கோயில் தொடர்புடைய பெரும்பாலான புகைப்படங்களில் இப்பொற்றாமரைக் குளமும் இதனை ஒட்டித் தெற்கே அமைந்துள்ள மிகப்பெரிய தெற்குக் கோபுரமும் இடம் பெறத் தவறுவதில்லை.



◀ பொற்றாமரைக் குளம்

▼ தெற்குப் பிரகார வாயில்



பொற்றாமரைக் குளத்தின் எழில்மிகு தோற்றம்






இக்குளத்தின் வடக்குப்புறம் அம்மன் சன்னதியை நோக்கியுள்ள பிரகாரத்தையும், படிக்கட்டுகளையும் விசுவநாத நாயக்கர் ஆட்சியில், கி.பி.1562-ஆம் ஆண்டில் பெருமாள் என்பவர் கட்டுவித்தார். கிழக்குப்பக்கம் உள்ள பிரகாரமும் படிக்கட்டுகளும் வீரப்பநாயக்கரது ஆட்சிக்காலத்தில் கி.பி.1573-ஆம் ஆண்டில் குப்பையாண்டி என்பவரால் கட்டப்பட்டது.

கிழக்குப் பிரகாரத்திலிருந்து பார்த்தால் மீனாட்சி மற்றும் சுந்தரேசுவரரது கருவறைவிமானங்களின் தங்கத்தாலான தகடுகள் பதிக்கப்பட்ட மேற்பகுதி தெரியும். தெற்குப்பக்கம் உள்ள பிரகாரமும், படிக்கட்டுகளும் வீரப்பநாயக்கரது ஆட்சியில் 1578-ஆம் ஆண்டு அப்பன்பிள்ளை என்பவரால் அமைக்கப்பட்டதாகும். இப்பக்கப் பிரகாரச் சுவரில் திருவள்ளுவரது 1330 குறட்பாக்களும், சிவஞானபோதம், அபிராமி அந்தாதி, மதுரைக் கோயிலைப் பற்றிய தேவாரப் பதிகங்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன. இப்பணியைத் திருப்பனந்தாள் திருமடத்தார் செய்துள்ளனர்.

பொற்றாமரைக் குளம் சிவபெருமானால் நடத்தப்பட்ட 64 திருவிளையாடல்களில் பல திருவிளையாடல்களுடன் தொடர்புடையதாகும். இந்திரன் பழி தீர்த்தது, வெள்ளை யானை சாபம் தீர்த்தது. நாரைக்கு முக்தி கொடுத்தது, தருமிக்குப் பொற்கிழியளித்தது, கீரனைக் கரை ஏற்றியது. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது ஆகிய கதைகள் இதனுடன் தொடர்புடையனவாகும்.

▼ மின்னொளியில் பொற்றாமரைக் குளம்





இந்திரன் சாபந்தீர்த்தது

இந்திரன் விருத்திராசுரன் என்பவனைக் கொன்றான். அப்பாவம் நீங்குவதற்காக மண்ணுலகில் உள்ள பல கோயில்களுக்கு சென்றான். ஆனால் எங்கும் அப்பாவம் நீங்காத நிலையில் தென் தமிழகத்தை நோக்கி வந்தான். இறுதியில் அவன் ஒரு கடம்பவனத்திற்கு வந்தான். வனத்திற்குள் வந்த உடன் தனது பாவம் நீங்கியதை உணர்ந்தான். எனவே அங்கு ஏதோ ஒரு சக்தி இருப்பதை உணர்ந்த இந்திரன் கடம்பவனத்தில் தானாகவே தோன்றியிருந்த இலிங்கத்தைக் கண்டான். தனது பாவத்தைத் தீர்த்த இலிங்கம் இதுதான் என்பதை உணர்ந்து அந்த இலிங்கத்தை நறுமணம் மிக்க மலர்களால் வணங்க விரும்பினான். உடனே அங்கே பொன்னாலாகிய தாமரை மலர்களைக் கொண்ட குளம் ஒன்று தோன்றியது. அம்மலர்களைக் கொண்டு இறைவனை வழிபட்டான். அன்று முதல் இக்குளம் பொற்றாமரைக் (பொன் + தாமரை) குளம் என அழைக்கப்படுகிறது.



வெள்ளையானை சாபந்தீர்த்தது

துருவாச முனிவரின் இறையன்பிற்கு மகிழ்ந்து ஒருநாள் இறைவன் அவருக்குத் தாமரை மலர் ஒன்றைஅளித்தார். முனிவர் அதனை அசுரரை வென்றஇந்திரனுக்கு வெற்றிப் பரிசாக வழங்கினார். இந்திரன் அதனைத் தன் ஐராவதம் எனும் யானைக்கு அளித்தான். அம்மலரின் சிறப்பினை அறியாத யானை அதனைக் கீழே போட்டுக் காலால் மிதித்தது. அதனைக் கண்ட துருவாசர் கோபம் கொண்டு இந்த யானை "தன் பெருமை இழந்து காட்டு யானையாகட்டும்" என சபித்தார். மேலும் "100 ஆண்டுகள் யானை காட்டில் திரிந்து பின் சாபம் நீங்கும்" என சாபவிமோசனமும் தந்தார்.

அந்த வெள்ளை யானை கரிய யானையாகி 100 ஆண்டுகள் காட்டில் திரிந்து இறுதியில் கடம்பவனம் அடைந்து பொற்றாமரைக்குளத்தில் குளித்து இறைவனை வணங்கித் தனது பழைய வெள்ளை நிறம் பெற்று சாபம் நீங்கித் தேவலோகம் சென்றது.

▲ இந்திரன் சாபம் தீர்த்த காட்சி (சுவாமி சன்னதி - மஹா மண்டப சுதைச் சிற்பம்)

▲ வெள்ளை யானை சாபம் தீர்த்த காட்சி (சுவாமி சன்னதி - மஹா மண்டப சுதைச் சிற்பம்)

நாரைக்கு முக்தி கொடுத்தது



வைகை நதிக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு நகரத்தின் புறத்தே இருந்த பொய்கையில் நாரை ஒன்று வாழ்ந்து வந்தது. மழையின்றிக் குளம் வறண்டு போகவே வேறு ஓரிடத்தில் உள்ள குளத்தை அடைந்தது. அங்கே ஒரு முனிவர் அடியார் கூட்டத்தோடு தங்கி இருந்தார். அவர்கள் தினமும் அந்நீர்நிலையில் குளித்து வந்தனர். அவர்கள் குளிக்கும் பொழுது குளத்தில் இருந்த மீன்கள் அவர்களது சடைமேல் துள்ளி விளையாடின. அத்தகைய மீன்களைத் தின்னலாகாது என எண்ணிய நாரை நோன்பு கொண்டது. முனிவர்கள் வழிபாட்டில் “கூடற்புராணம்” எனப்படும் “திருவாலவாய் மான்மியம்” படித்தனர். அதனைக் கேட்ட நாரை மதுரையையும், அங்கு குடிகொண்டுள்ள இறைவனின் சிறப்பையும் அறிந்து சிவபெருமானை வழிபட எண்ணம் கொண்டு மதுரை வந்தது. மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் நீராடி 15 நாட்கள் அங்கேயே தங்கி இறைவனை வழிபட்டு வந்தது. அப்பொழுது பசிதாங்க முடியாமல், பொற்றாமரைக்குளத்தில் உள்ள மீன்களை உண்ணலாம் என்றஎண்ணம் அதற்கு உண்டாகவே, ஐயோ இப்படி ஒரு எண்ணம் வந்ததே என்று வருந்தியது. இறைவன் நாரையின் பக்திக்கு இரங்கி அந்நாரைக்கு மோட்சம் அளித்தார். பிறபறவைகளும் இத்தாமரைக் குளத்து மீனைத் தின்று பாவமுறா வண்ணம் இதில் மீன்களே இல்லாத வண்ணம் செய்தருள வேண்டும் என்று நாரை கேட்டுக் கொண்டதற்கிணங்க, இறைவன் குளத்தில் மீன்கள் இல்லாதவாறு அருள் செய்தார். எனவேதான் இன்றுவரை இப்பொற்றாமரைக் குளத்தில் மீன்கள் இருப்பதில்லை.



தருமிக்குப் பொற்கிழியளித்தது

பாண்டிய மன்னன் ஒருவனுக்குப் பெண்களின் கூந்தலில் இயற்கையிலேயே மணம் உண்டா? அல்லது அது செயற்கையானதா? என ஐயம் ஏற்பட்டது. மன்னனது ஐயத்தை அறிந்து அதைப் போக்கும் வண்ணம் பாடலியற்றுபவருக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாக அறிவித்தான். (ஏழையான) 'தருமி' எனும் புலவர் இவ்வறிவிப்பைக் கேட்டு அப்பாடல் இருப்பின் தனது ஏழ்மை நீங்குமே என எண்ணி இறைவனை வழிபட்டார். இறைவனும் அரசனது ஐயத்தைப் போக்கும் வண்ணம் “கொங்குதேர் வாழ்க்கை” எனத் தொடங்கும் பாடலைத் தருமிக்கு அளித்தார்.

▲ நாரைக்கு முக்தியளித்த காட்சி

▲ தருமிக்கு பொற்கிழியளித்த காட்சி



பாண்டியனது தமிழ்ச்சங்கத்தில் தருமி, பாடலை சொல்லக் கேட்ட. அரசன் மகிழ்ந்தான். ஆனால் அரசவைப்புலவர் நக்கீரர் பாட்டில் பொருட்குற்றம் இருப்பதாகச் சொல்ல தருமிக்குப் பரிசு கிடைக்காமல் செய்தார். இதனால் இறைவன் ஒரு புலவன் உருவில் வந்து பாடலுக்குப் பொருள் உரைத்தார். நக்கீரனுக்கும், புலவர் வடிவில் வந்த இறைவனுக்கும் வாக்குவாதம் தொடர இறுதியில் இறைவன் நக்கீரரை நெற்றிக் கண்ணால் சுட்டெரித்து விடுகிறார். வெப்பம் தாங்காத நக்கீரன் பொற்றாமரைக்குளத்தில் வீழ்ந்தார்.

கீரனைக் கரையேற்றியது

குளத்தில் வீழ்ந்த கீரனைக் காணாத சங்கப்புலவர்கள் இறைவனது வெள்ளிமலையைத் தூக்க முயற்சித்த இராவணனுக்கே அருளிய இறைவன் நக்கீரனுக்கும் அருள்வான் என்று எண்ணி இறைவனை வணங்கினர். இறைவனும் நக்கீரன் மீண்டும் உயிர்பெற்று எழ அருளினார். அதன் பின்னர் ஆயிரம் பொன்னை அனைவரும் சேர்ந்து தருமிக்கு அருளினர்.

கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது

சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய பொறி நக்கீரனை எரித்தபோது உருவம் இன்றிப் போய்விடாது காப்பாற்றியது இப்பொற்றாமரைக் குளமே என எண்ணித் தினமும் அக்குளத்தில் குளித்து இறைவனை வணங்கினார். இறைவன் அகத்தியர் மூலம் நக்கீரனுக்கு இலக்கணம் உபதேசிக்கச் செய்தார். நக்கீரரும் தாம் கற்ற இலக்கணத்தை அனைவருக்கும் கூறினார்.



இக்குளத்தின் வடக்குப் பிரகாரத்துத் தூண்களில் சங்கப்புலவர்களது சிற்பங்கள் சிறிய அளவில் இடம் பெறுகின்றன. இவர்களது கைகளில் எழுத்தாணியும், ஏடும் காணப்படுகின்றன. இறைவனுடன் சேர்ந்து கடைச்சங்கப்புலவர்கள் 49 புலவர்களில் இங்கு சிலரது உருவங்களே செதுக்கப்பட்டுள்ளன. இவை “சங்கப்பலகை தந்தது” “சங்கத்தார் கலகம் தீர்த்தது” “இடைக்காடர் பிணக்கு தீர்த்தது”, எனும் திருவிளையாடற்புராணக் கதைகளை நினைவூட்டுவதாக அமைந்துள்ளன.


▲ கீரனைக் கரையேற்றிய காட்சி
▲ கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த காட்சி

சங்கப் பலகை தந்தது



பிரமன் வாணி, சாவித்திரி, காயத்திரி ஆகிய மூன்று மனைவியருடன் காசியில் உள்ள கங்கையில் நீராடச் சென்றான். செல்லும் வழியில் விஞ்சை மகள் ஒருவள் இசைத்த இசையைக் கேட்டு நின்ற வாணி பொழுது தாழ்த்தி வந்தாள். இதனால் கோபம் கொண்ட பிரமன் கலைவாணியைப் பூமியில் சென்று 48 புலவர்களாய்ப் பிறப்பாய் என்றும், இறைவனே அப்புலவர்களுக்குத் தலைவனாக அமர்வான் என்றும் சாபமிட்டார். அதே போல் கலைமகள் 48 புலவர்களாய்ப் பிறந்து மதுரை நோக்கி வந்து கொண்டிருக்க இறைவனும் புலவனாய் வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டார். அனைவரும் பாண்டிய மன்னனைச் சந்தித்து கோயிலின் வடமேற்கு மூலையில் சங்க மண்டபம் ஒன்று அமைத்து முன்னர் இருந்த புலவர்களோடும், வேற்று நாட்டிலிருந்து வந்த புலவர்களோடும் வாதஞ்செய்தனர். அதுகண்ட புலவர்கள் இறைவனிடம் "புலமையை அளவிடத்தக்க சங்கப்பலகை ஒன்று வேண்டும்" எனக் கேட்டு பலகையைப் பெற்றனர். அது சாண் நீளமுடையது. திறமைமிக்க புலவர் அதில் அமரும்போது அது இரண்டு சாண் நீளத்திற்கு நீண்டு இடந்தரும். அப்பொழுதும் புலவர்களிடையே சண்டை நிலவியதால் இறைவனே புலவர் தலைவனாக அமர்ந்து புலவர்களை வழி நடத்தினார்.

சங்கத்தார் கலகம் தீர்த்தது



நாற்பத்தி எட்டு சங்கப் புலவர்களும் தனித்தனியே நூல்களியற்றித் தத்தம் நூலின் பெருமை கூறிச் சண்டையிட்டு கொண்டனர். அனைவரும் கோயிலுக்குச் சென்று இறைவனை வேண்ட, இறைவன் புலவர் வடிவில் தோன்றி "இந்த நகருள் தனபதி என்னும் வணிகனுக்கு ஊமை மகன் ஒருவன் உள்ளான். உங்களது பாடல்களில் சிறந்தவற்றைக் கேட்டு, மயிர் சிலிர்த்தல், தலையசைத்தல் முதலிய செயல்களால் உணர்த்துவான்" எனக் கூறினார். அதன்படி அவன் முன் புலவர்கள் தம் பாடல்களைக் கூறினர். ஊமை மகனும் சரியாகப் பாடல்களின் தரத்தை வெளிப்படுத்தினான். இதனால் புலவர்கள் பகையை விட்டு நட்புடன் வாழ்ந்தனர்.

▲ சங்கப் பலகை தந்தருளிய காட்சி

▲ சங்கத்தார் கலகம் தீர்த்த காட்சி



இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது

குலசேகர பாண்டியன் என்பவன் சங்கப் புலவர்களுள் ஒருவன் ஆவான். அவனது புலமை நலம் அறிந்த இடைக்காடன் என்னும் புலவன் அவனைச் சந்தித்துப் பாடல் பாடினான். தகுந்த பரிசு அளிக்காமல் பொறாமைக் குணத்தால் மன்னன் பாடலைப் பாராட்டவில்லை. இதனால் வருந்திய இறைவன் சென்று வைகைக்குத் தெற்கே (இன்றைய வடக்குவெளி வீதியில் உள்ள ஆதிசொக்கநாதர் கோயில்) கோயில் கொண்டார். மறுநாள் காலை வழக்கமாக வழிபடச் சென்றபாண்டியன் இறைவனைக் காணாது புலம்ப அப்பொழுது சிலர் புதிய கோயில் கண்டதனை உரைத்தனர். பாண்டியனும் அங்கு சென்றுத் தான் செய்த பிழை யாது, என்று கேட்க அப்பொழுது, " இடைக்காடனை நீ இகழ்ந்தாய், அவன்மேல் உள்ள அன்பினால் யான் இங்கு வந்தேன்" என்று விண்ணொலி (அசரீரி) வாயிலாக இறைவன் கூற மன்னன் தன் தவறை உணர்ந்து இடைக்காடனுக்குப் பல பரிசுகள் வழங்கிப் பாராட்டினான். இறைவன் மீண்டும் கோயிலில் எழுந்தருளினார். இப்புலவர்களில் சிலரது சிற்பங்கள்தான் இங்கு இடம் பெற்றுள்ளது.



▲ இடைக்காடர் பிணக்கு தீர்த்த காட்சி

திருநகரங் கண்டது

பாண்டிய மன்னன் இறைவனது ஆணைக்கேற்ப மதுரையை நிறுவியதே இக்கதை. இதனை "மதுரை மற்றும் கோயில் தோற்றம் பற்றிய செய்திகள்" எனும் தலைப்பில் காண்க. பொற்றாமரைக் குளத்தின் வடக்குப்பிரகாரத் தூண்களில் முதன்முதலில் மதுரைக் கோயிலையும், நகரையும் அமைத்ததாகக் கருதப்படும் குலசேகர பாண்டியனின் சிற்பம் கிழக்கு முகமாகவும், அதற்கு எதிரில் கடம்பவனத்தில் சிவலிங்கத்தைக் கண்டு பாண்டிய மன்னனுக்குரைத்த தனஞ்சயனின் உருவம் மேற்கு முகமாகவும் இரண்டு தூண்களில் 6 அடி உயரத்துடன் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் பற்றிய வேறு ஒரு கருத்தும் நிலவுகின்றது. இவ்வடக்குப் பிரகாரத்தைக் கட்டிய பெருமாள் என்பவரது சிற்பம் என்றும் மற்றொன்று இப்பிரகாரம் கட்டப்பட்ட காலத்தில் மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கர் சிற்பம் என்றும் கூறுவர்.





▲ குலசேகர பாண்டியன்

◀ தனஞ்சயன்

▶ பொற்றாமரைக்குளமும், திருநகரம் கண்டோரும்



14. பிரகார ஓவியங்கள்



இக்குளத்தின் வடக்குப் பிரகாரச் சுவரிலும், கிழக்குப் பிரகாரச் சுவரிலும் திருவிளையாடற் புராணக் கதைகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் நாயக்கர் காலத்து ஓவியப் பாணியில் தீட்டப்பட்டிருந்தன. காலப்போக்கில் சரியான பாதுகாப்பு இன்மையாலும், பாதுகாக்க வேண்டியவர்களுக்கு வரலாற்று உணர்வும், அழகியல் உணர்வும் குறைந்ததாலும் அவைகளில் பெரும்பாலானவை அழிந்துவிட்டன.

எஞ்சியிருந்த சில ஓவியங்களும் 1990களின் போது நடைபெற்ற திருக்குட முழுக்கு விழாவில் அவசர கோலத்தில் வெள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன. இவ்வோவியங்களின் காலம் சரியாகத் தெரியவில்லை, என்றாலும் கூட மதுரையில் அழகர் கோவிலிலும், கூடலழகர் கோவிலிலும் கி.பி.17, 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் இடம் பெற்றிருப்பதால் இங்கு இடம் பெற்றுள்ள ஓவியங்களும் அதே நூற்றாண்டைச் சேர்ந்தவையாகவே இருக்கக்கூடும். மேலும் பொற்றாமரைக் குளத்தின் மேற்குப்பிரகார மண்டப விதானத்தில் அழிந்த ஓவியங்கள் போக எஞ்சிய ஒரே ஒரு ஓவியக்காட்சி இடம் பெற்றுள்ளது. அதில் மீனாட்சி–சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை இராணி மங்கம்மாள் கண்டு களிப்பதாகக் காட்சி அமைந்துள்ளது. அருகில் இருப்பவர் மங்கம்மாளின் படைத்தளபதி இராமப்பையர் என்பவர் ஆவார். எனவே இவ்வோவியத்தை இராணி மங்கம்மாளின் காலத்தைச் (கி.பி,1689–1706) சேர்ந்ததாகக் கருதலாம். தற்பொழுது பழைய ஓவியங்கள் இருந்த பிரகாரச் சுவர்களில் திருவிளையாடற் புராணக் கதைகளை மீண்டும் ஓவியமாகத் தீட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீனாட்சி திருக்கல்யாணத்தை இராணி மங்கம்மாளும் இராமப்பையனும் கண்டுகளிக்கும் காட்சி ▶





15. விபூதிப் பிள்ளையார்

பொற்றாமரைக்குளத்தின் தெற்குப்பக்கப் பிரகாரத்தின் மேற்கு முனையில் அமைந்துள்ள விபூதிப் பிள்ளையார் இக்கோயிலில் பிரசித்தம். கோயிலுக்கு வரும் பக்தர்கள் பெரும்பாலும் விபூதிப் பிள்ளையாரை வணங்கி விட்டுத்தான் மீனாட்சி சுந்தரேசுவரரை வணங்கிச் செல்கின்றனர். இப்பிள்ளையார் வழிபாடு சமீப காலத்தில் எழுந்ததாகும். வழிபாட்டில் முதலில் மீனாட்சியை வணங்கி பின்னர் சிவனை வணங்கும் வழக்கம் இங்கு உள்ளதால் குங்குமம் வைப்பதற்கு முன் திருநீறு வைக்க இந்த விபூதி பிள்ளையாரின் பிரசாத திருநீறு பயன்படுகிறது. அதனால் மக்கள் தாங்களே பிள்ளையார் மீது விபூதியை அபிசேகம் செய்து வழிபடுகின்றனர். பொற்றாமரைக் குளத்தின் மேற்குப்பக்கப் பிரகாரத்தில்தான் ஊஞ்சல் மண்டபமும், கிளிக்கூடு மண்டபமும் அமைந்துள்ளன. மேலும் இப்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் காசி விசுவநாதர் கோயில் அமைந்துள்ளது.

16. ஊஞ்சல் மண்டபம்

பொற்றாமரைக்குளத்தின் மேற்குப் பிரகாரத்தில் இரண்டு மண்டபங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று ஊஞ்சல் மண்டபம், மற்றொன்று கிளிக் கூடு மண்டபம். இப்பிரகாரத்திலிருந்து தெற்குப் பக்கம் சென்றால் தெற்குக் கோபுரத்தை அடையலாம். வடக்குப் பக்கம் சென்றால் முக்குறுணி விநாயகர் ஆலயம் செல்லலாம். ஊஞ்சல் மண்டபம் ஆறு தூண்களைக் கொண்ட சிறு மண்டபமாகும். இம் மண்டபத்தை விசுவநாத நாயக்கர் ஆட்சியில் கி.பி.1562–ஆம் ஆண்டு அம்பலச்செட்டி என்பவர் கட்டியதாகத் தெரிகிறது. இம்மண்டபத்தில் உள்ள ஊஞ்சலில் வெள்ளிக்கிழமை தோறும் மீனாட்சி–சுந்தரேசரது உற்சவத் திருஉருவங்களை அமர்த்தி ஊஞ்சலாட்டுவர். இம்மண்டபத்தில் சமீபத்தில் கண்ணாடி பதிக்கப்பட்டுள்ளதால் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பக்தர்கள் எத்திசையினின்றும் அவ்வழகைக் காணலாம். ஊஞ்சல் மண்டபத்தை ஒட்டி மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயில் மாதிரி அமைப்பு மிக அழகாக செதுக்கப்பட்டு மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஊஞ்சல் மண்டபத்தின் எதிரில் ஒரு மண்டபம் இடம் பெற்றுள்ளது. இம்மண்டபம் விசுவநாத நாயக்கர் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1529–1564) செட்டியப்ப நாயக்கர் என்பவர் கி.பி.1563–ஆம் ஆண்டு கட்டியதாகத் தெரிகிறது.

இம் மண்டபத்தின் விதானத்தில்தான் மீனாட்சியம்மை திருக்கல்யாணத்தைக் காணும் இராணி மங்கம்மாள் ஓவியம் காணப்படுகிறது. இவ்வோவியம் பற்றிப் பிரகார ஓவியங்கள் எனும் தலைப்பில் முன்னரே கண்டோம்.

17. கிளிக்கூடு மண்டபம்



ஊஞ்சல் மண்டபத்தின் வடக்கே அமைந்திருக்கும் மண்டபம் கிளிக்கூடு மண்டபம் ஆகும். மீனாட்சியம்மையின் திருக்கரத்தில் கிளி இடம் பெற்றிருப்பதால் கிளிகளை இம்மண்டபத்தில் ஒரு பெரிய கூண்டில் வளர்த்தனர். இதனால் இம்மண்டபத்திற்குக் கிளிக்கூடு மண்டபம் எனப் பெயர் வந்தது. இம்மண்டபத்தில் இருந்த கிளிக்கூடு சமீப காலத்தில் அகற்றப்பட்டு விட்டது. என்றாலும், கிளிக்கூடு மண்டபம் என்ற பெயர் இன்றளவும் நிலைத்து விட்டது.

இம்மண்டபத்தைச் சங்கிலி மண்டபம் என்றும் கூறுவர். முன்பெல்லாம் திருவிழாக் காலங்களில் இங்கு கோலாட்டம் நடைபெறும். அப்பொழுது கோலாட்டமாடும் சிறுமியர் வண்ணக்கயிறுகளைத் தொங்கவிட்டு அக்கயிறுகளை பிடித்துக் கொண்டு பின்னிப்பின்னி ஆடும் பொழுது அது பார்ப்பதற்குச் சங்கிலி போல் காணப்படும். அதனால்தான் இம்மண்டபத்திற்குச் சங்கிலி மண்டபம் என்று பெயர் வந்தது.

இன்று இத்தகைய விளையாட்டு இங்கு விளையாடப்படுவதாகத் தெரியவில்லை. திருச்சி–திருவரங்கம் கோயிலில் வருடாவருடம் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசித்திருநாளன்று இத்தகு கோலாட்டம் இன்றும் நடைபெற்று வருகிறது.

கிளிக்கூடு மண்டபத்தில் 28 தூண்கள் உள்ளன. இத்தூண்கள் அனைத்திலும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. சில தூண்களில் சுமார் 7 அடி உயரத்துடன் சிற்பங்கள் அமைந்துள்ளன. பஞ்ச பாண்டவர்களான தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரது உருவங்களும், வாலி, சுக்ரீவன் மற்றும் வேடன், அழகிய பெண் ஆகியோரது உருவங்களும் காணப்படுகின்றன.

▼ கிளிக்கூடு மண்டபம்



கிளிக்கூடு மண்டபச் சிற்பங்களின் அமைப்பு

இம்மண்டபத்தில் சிற்பங்கள் எதிரெதிர்த் தூண்களில் அமைந்துள்ளன. மேலும் சிற்பங்களுக்கு இடையிடையே யாளித் தூண்களும் காணப்படுகின்றன.

பஞ்ச பாண்டவர்களில் வீமனைத் தவிர்த்து மற்றவர்கள் கைகளில் வில்லுடன் காட்டப்பட்டுள்ளனர். சகாதேவன் மட்டும் வில்லுடன் வலது கையில் வாளை ஓங்கிய நிலையில் காணப்படுகிறான். அர்ச்சுனனது தோளில் அம்பறாத்தூளி இடம் பெற்றுள்ளது. தருமர் தாடியுடன் காட்டப்பட்டுள்ளார். இங்கு இடம்பெற்றுள்ள தருமர் மற்றும் அர்ச்சுனன் சிற்பங்களை வேறு விதமாகவும் கொள்ளலாம். பொதுவாக அர்ச்சுனனது சிற்பத்திற்கு நேர் எதிரே கர்ணனது சிற்பம் கோயில்களில் அமைக்கப்படுவது மரபு. மேலும் அர்ச்சுனன் பாசுபத அஸ்திரம் பெறுவதற்காகச் சிவனை நோக்கித் தவம் செய்ததாக ஒரு கதையுண்டு. அதனடிப்படையில் அர்ச்சுனன் தாடியுடன் காட்டப்படுவார். எனவே இங்கு தாடியுடன் காணப்படும் சிற்பம் தருமரல்ல அர்ச்சுனன் எனக் கொள்ளலாம்.



▲ கர்ணன்



▲ அர்ச்சுனன்

அர்ச்சுனனுக்கு எதிரே உள்ள சிற்பத்தின் கையில் நாகக்கணை இடம் பெற்றுள்ளது. பாரதப்போரில் அர்ச்சுனன் மீது நாகக்கணையை ஒருமுறைக்கு மேல் தொடுக்கக்கூடாது எனக் குந்திதேவி கேட்டுக் கொண்டதற்கேற்ப கர்ணன் நாகக்கணையுடன் காட்டப்படுகிறான். இங்கு அர்ச்சுனன் என்று கருதப்படும் சிற்பத்தின் கையில் நாகக்கணை இடம் பெற்றுள்ளதால் இச்சிற்பத்தைக் கர்ணன் சிற்பம் என்றும் கொள்ளலாம். மேலும் எதிரெதிராகக் கர்ணன் மற்றும் அர்ச்சுனன் சிற்பங்களை திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயில் ஆகிய இடங்களிலும் காணலாம். அண்ணன்–தம்பியரான வாலி, சுக்ரீவன் சிற்பங்களில் அண்ணன் வாலியின் உருவம் சுக்ரீவனது உருவத்தைவிடப் பெரியதாகக் காட்டப்பட்டுள்ளது. இருவரும் மற்போர் செய்வது போன்ற அமைப்பில் வாலி தன் நெஞ்சில் ஒரு கையால் தட்டுவது போலவும், சுக்ரீவன் மல்யுத்த வீரனைப் போல் தொடையில் கையால் தட்டி ஆர்ப்பரிப்பது போலவும் அமைந்துள்ளன. அவற்றிற்கு அடுத்தத் தூண்களில் வேடன் சிற்பமும், நடனமாதுவின் சிற்பமும் காணப்படுகின்றன.

அம்மன் சன்னதிக்கு நேர் எதிரில் பலி பீடத்தின் இருபக்கங்களிலும் உள்ள தூண்களில் வீமன் சிற்பமும் புருசாமிருகத்தின் (பாதி மனித உடல், பாதி மிருக உடல்) சிற்பமும் இடம் பெற்றுள்ளன. இச்சிற்ப அமைப்பு ஒரு புராணக் கதையை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது.



▲ சகாதேவன்



▲ நகுலன்

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர் வனவாசம் செய்யும்போது யாகம் ஒன்றைச் செய்ய நினைத்தனர். அந்த யாகம் செய்வதற்குப் புருசாமிருகத்தின் பால் தேவைப்பட்டது. இப்புருசாமிருகம் ஒரு சிவபக்தன் மட்டுமல்லாது விஷ்ணு மற்றும் விஷ்ணுபக்தர்களை வெறுப்பவரும் ஆவார். கிருஷ்ணனுடைய ஆலோசனைப்படி இம்மிருகத்தின் பாலைக் கொண்டுவர தருமர் வீமனை அனுப்பினார். அப்பொழுது கிருஷ்ணர் இம்மிருகத்தின் பலத்தை வீமனிடம் எடுத்துக் கூறித் தேவைப்படும் போது பயன்படுத்த சில ருத்ராட்சங்களையும் வழங்கினார். வீமன் சிவனுக்குரிய உருத்திராக்கங்களை (ருத்ராட்சம்) விருப்பமின்றி வாங்கிக்கொண்டு காட்டுக்குள் செல்லும் போது கோவிந்தா கோவிந்தா என்று கூறி செல்கிறார். இதைக் கேட்ட புருசா மிருகம் வீமனை விரட்டுகிறது. வீமன் கையிலிருந்த உருத்திராக்கங்களில் ஒன்றைக் கீழே போடுகிறார். அது சிவலிங்கமாக மாற புருசாமிருகம் பூசை செய்து விட்டு மீண்டும் வீமனைப் பின் தொடர்கிறது. வீமன் கையிலிருந்த உருத்திராக்கங்கள் தீர புருசாமிருகம் வீமனைப் பிடித்து விடுகிறது.

வீமன் புருசாமிருகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த எல்லையில் ஒருகாலும் வெளியில் ஒரு காலும் வைத்திருந்ததினால் நான் உனக்குச் சொந்தமில்லை எனப் புருசாமிருகத்துடன் வாதிட்டான். இறுதியில் இருவரும் தருமரிடம் நீதி கேட்டனர். தருமர் தன் தம்பி என்றும் பாராது வீமனது ஒரு கால் உனது எல்லைக்குள் இருந்ததினால் அவன்




▲ வீமன்



▲ புருசாமிருகம்

இனி உனக்குரியவனே எனத் தீர்ப்பளித்தார். தருமரின் நீதிக்குத் தலைவணங்கி புருஷாமிருகம் வீமனை விடுவித்தது. மேலும் அது தேவையான பாலையும் தந்து உதவியதோடு விஷ்ணுபக்தர்களிடமிருந்த வெறுப்பையும் விலக்கிக் கொண்டது.

இது போன்ற சிற்பங்கள் விசயநகர–நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் மண்டபங்களில் இடம்பெறுகின்றன. வீமன்–புருசாமிருக சிற்பங்கள் திருநெல்வேலிக்கருகில் உள்ள நாங்குனேரி–வானமாமலைக் கோயில், திருக்குறுங்குடி – நின்றநம்பிகோயில், கிருஷ்ணாபுரம்–வெங்கடாசலபதி கோயில் ஆகிய இடங்களிலும் இடம் பெற்றுள்ளன. இவை கண்டு இன்புறத்தக்கனவாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருமலை, திக்குறிச்சி, திருப்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்னிப்பாகம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கூர், திருப்பன்றிக்கோடு, திருநட்டலம் எனும் பனிரெண்டு இடங்கள் தான் வீமன் உருத்திராக்கத்தைப் போட்ட இடங்கள் எனக் கருதப்படுகிறது. மேலும் சிவராத்திரியன்று இப்பகுதியில் பக்தர்கள் ஒரே நாளில் சுமார் 73 கி.மீ தூரம் உள்ள இப்பனிரெண்டு சிவாலயங்களையும் சுற்றி வருகின்றனர். கடைசித்தலமான திருநட்டலத்தில் தவம் செய்த புருசாமிருகத்திற்கு அரியும் சிவனும் ஒன்று என்பதை உணர்த்தவே இறைவன் சங்கரநாராயணனாகத் தோன்றியதாகக் கருதப்படுகிறது.



▲ வாலி



▲ சுக்ரீவன்



திருநெல்வேலியை ஒட்டி மேற்கண்ட சிவாலய ஓட்டத்திற்கு இணையாக வைணவத்தில் ஒரு கருத்து உருவாகியுள்ளது. அதன்படி நவதிருப்பதிகள் என்று கூறப்படும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களை மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியன்று ஒரே நாளில் வைணவ பக்தர்கள் சுற்றி வருகின்றனர்.

கிளிக்கூடு மண்டபத்தின் மேலுள்ள நாடகச்சட்டத்தில் (விதானத்திற்குக் கீழ் இடம் பெறும் சுற்றுவிட்டம்) சிவனது அறுபத்திநான்கு திருவிளையாடல்களும் சிறு அளவில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவை அளவில் சிறியனவாக இருந்தாலும் மிகுந்த கலையம்சத்துடன் விளங்குகின்றன. இது போலவே சுவாமி சன்னதியின் மகாமண்டப வெளிப்புறச் சுவரில் சற்று பெரிய அளவில் இடம்பெற்றுள்ள திருவிளையாடற்புராண சிற்பங்களும், மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலுக்குரிய இரண்டு தேர்களில் சுவாமிக்குரிய தேரில் மரச்சிற்பங்களாக செதுக்கப்பட்டிருக்கும். திருவிளையாடற்புராண சிற்பங்களையும், திருக்கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றுள்ள ஓவியங்களையும் ஆயிரக்கால் மண்டபத்தில் தட்டிகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இவை ஒரு நல்ல கலை விருந்தாகும்.

◄ நடன மாது
▼ வேடன்



இக்கிளிக்கூடு மண்டபத்தில்தான் மடப்பள்ளிக்குச் செல்லும் நுழைவுவாயில் அமைந்துள்ளது. மடப்பள்ளி நுழைவு வாயிலுக்கருகில் மீனாட்சியம்மைக்கும், சுவாமிக்கும் பூக்கட்டும் இடம் உள்ளது. அதன் அருகில் 63 நாயன்மார்களில் ஒருவரான மூர்த்திநாயனார் அரைத்த சந்தனக் கல் இடம் பெற்றுள்ளது. மதுரையில் அவதாரம் செய்தவர் மூர்த்தி நாயனார். இவர் தினமும் சோமசுந்தரக்கடவுளுக்கு சந்தனக்காப்பு இடுவதற்கு சந்தனம் அரைத்துக் கொடுத்து வந்தார்.

▼ வாயிற் காவலன்



அந்நிலையில் கருநாடக தேசத்தைச் சேர்ந்த அரசன் பாண்டிய மன்னனை வென்று மதுரையைக் கைப்பற்றினான். சமண சமயத்தைச் சேர்ந்த அவ்வரசன் மக்கள் அனைவரையும் சமண சமயத்தைத் தழுவுமாறு கூறினான். மூர்த்தி நாயனாரையும் சமணமதத்திற்கு மாற்றும் வகையில் அவர் சந்தனக் கட்டைகள் வாங்கும் கடைகளில் சந்தனக் கட்டைகள் கொடுக்காதிருக்கக் கட்டளையிட்டான். இதனால் சந்தனக் கட்டை கிடைக்காத மூர்த்தி நாயனார் கவலையுற்றுக் கோயிலுக்குச் சென்று தம் முழங்கையையே சந்தனக் கட்டையாக எண்ணித் தேய்த்தார். அப்பொழுது இறைவன் தோன்றி மூர்த்தி நாயனாருக்கு அருள் செய்ததோடு. "அரசன் விரைவில் இறப்பான். நீரே நாட்டின் மன்னராவீர்" எனக் கூறி மறைந்தார். மறுநாள் அரசன் இறக்க பட்டத்துயானை மூர்த்திநாயனாரை அரசனாகத் தேர்வு செய்தது. இம்மூர்த்தி நாயனார் சந்தனம் அரைத்த கல்லே இங்கு இடம் பெற்றுள்ளதாக நம்பப்படுகிறது.

இக்கிளிக் கூடு மண்டபத்திலிருந்து அம்மன் சன்னதிக்குள் நுழையும் நுழைவு வாயிலின் அருகில் சித்தி வினாயகர் சன்னதியும் கூடல்குமரர் சன்னதியும் இடம் பெற்றுள்ளன.

கிளிக்கூடு மண்டபம் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் மூத்தமகனும் மன்னர் திருமலைநாயக்கரின் அண்ணனுமான முதலாம் முத்துவீரப்பர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1609–1623) அபிசேக பண்டாரம் என்பவரால் கி.பி.1623–ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. விசுவநாத நாயக்கர் (கி.பி.1529–1564) கோயில் நிர்வாகம் முழுவதையும் மேற்பார்வையிடுவதற்காக அபிசேக பண்டாரம் என்றஒரு பதவியைத் தோற்றுவித்து அதில் ஒருவரை நியமனம் செய்தார்.

அன்று முதல் அப்பதவியில் இருந்தவரும் பின்னர் அப்பதவியை வகித்தவர்களும் அபிசேக பண்டாரம் என்றே அழைக்கப்பட்டனர். மன்னர் திருமலை நாயக்கரது ஆட்சிக்காலத்தில் பொறுப்பில் இருந்த ஒரு அபிசேக பண்டாரம் சரியான முறையில் கோயில் நிர்வாகத்தை நடத்தாமல் ஊழல் நிறைந்ததாக நிர்வாகத்தை வைத்திருந்தார். எனவே அவரைத் திருமலைநாயக்கர் அப்பதவியினின்று விலக்கிவிட்டுத் தாமே கோயில் நிர்வாகம் முழுவதையும் மேற்பார்வையிட்டார். பதவியை விட்டு இவரை வெளியேற்றிய போது இவருக்கு மன்னர் பெரும் பொருள் கொடுத்து அனுப்பினார். அப்பொருளை வைத்தே சுவாமி கோயிலில் இரண்டாம் பிரகாரத்தை அபிசேக பண்டாரம் கட்டுவித்தார்.


கிளிக்கூடு மண்டபம் கட்டுவிப்பதற்கும் போதிய பொருள் இல்லாமையால் இத்திருப்பணிகள் செய்வதற்கு வீடுதோறும் புதிய மண்பானைகளைக் கொடுத்துத் தினமும் சமையல் செய்வதற்கு முன் அதில் ஒரு படி அரிசி போட வேண்டும் என ஏற்பாடு செய்தார். இதன்மூலம் சேகரித்த அரிசியை விற்று அப்பொருளை வைத்துத் திருப்பணியை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இவரது சிற்பம் சிறிய அளவில் சுவாமி சன்னதிக்கருகில் உள்ள அனுக்ஞை விநாயகரின் முன் உள்ள தூணில் உள்ளது.

▸ வாயிற் காவலர்

▾ மூர்த்தி நாயனார் சந்தனம் அரைத்த கல்








18. வேம்பத்தூரார் கோபுரம்

கிளிக்கூடு மண்டபத்திலிருந்து ஒரு சிறு கோபுரம் வழியாக நுழைந்து அம்மன் கோயிலுக்குச் செல்ல வேண்டும். இக்கோபுரம் பிற்காலப் பாண்டியரது காலத்தில் வேம்பத்தூர் ஆனந்தத்தாண்டவ நம்பி என்பவரால் கி.பி.1227–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே இக்கோபுரம் வேம்பத்தூரார் கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோபுரம் 40 அடி உயரத்துடன் மூன்று அடுக்குகளைக் கொண்டு விளங்குகிறது. இதன் அடிமட்டம் 27 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இக்கோபுரத்தில் 496 சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோபுரம் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோபுர வாயிலின் உட்புறம் இரண்டு அழகிய ஓவியங்கள் பலகையில் வரையப் பெற்றுப் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்றில் மீனாட்சி–சுந்தரேசுவரர் திருமணக்கோலமும், மற்றொன்றில் மீனாட்சியம்மன் முடி சூட்டும் கோலமும் இடம்பெற்றுள்ளன. இவை நாயக்கரது ஓவியப் பாணியில் அமைந்துள்ளன.

19. அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரம்

இக் கோபுரத்தின் வழியாக உள்ளே நுழைந்தால் அடுத்து இடம்பெறுவது அம்மன் கோயிலின் இரண்டாவது பிரகாரமாகும். இப்பிரகாரத்தில் திருமலை விநாயகர் சன்னதி, திருமலை சுப்ரமணியர் சன்னதி, கொடிமரம், திருமலை நாயக்கர் சிற்பம், கொலு மண்டபம், விநாயகர் சன்னதி, அம்மன் கோயில் மேற்கு கோபுரம், கூடற்குமாரர் சன்னதி, ஆறுகால் மண்டபம் ஆகியன இடம் பெற்றுள்ளன. இப்பிரகாரம் கி.பி.1563–ஆம் ஆண்டில் செட்டியப்ப நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டதாகும். இவரது சிற்பம் மண்டபத்தின் நுழைவாயிலில் இடம் பெற்றுள்ளது.



தோளில் கிளியுடன் அன்னை மீனாட்சியின் ▸
எழில்மிகு தோற்றம்

20. கொடிக்கம்பம்

அம்மன் சன்னதிக்கு நேர் எதிரே இரண்டாம் பிரகாரத்தில் இக்கொடிக்கம்பம் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலான கோயில்களில் கொடிக்கம்பமும், பலிபீடமும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு கொடிக்கம்பம் அம்மன் கோயிலின் இரண்டாம் பிரகாரத்திலும், பலிபீடம் கிளிக்கூடு மண்டபத்திலும் இடம் பெற்றுள்ளது. இக்கொடிக்கம்பம் முழுவதும் தங்கமுலாம் பூசப்பட்ட தகட்டினால் கவசமிடப்பட்டுள்ளது. இக்கொடிக்கம்பத்தை கி.பி.14–ஆம் நூற்றாண்டில் மல்லப்பன் என்பவர் கி.பி.1374–ஆம் ஆண்டில் நிறுவினார். இக்கொடிக் கம்பத்திற்கு கிருஷ்ணவீரப்ப நாயக்கர் (கி.பி.1564–1572) தங்கம் பூசினார். அடுத்ததாக திருமலை நாயக்கர் (கி.பி.1623–1659) கோயிலுக்குத் திருப்பணி செய்த போது, அம்மன் கோயில் கொடிக்கம்பம், மற்றும் சுவாமி கோயில் கொடிக்கம்பம் ஆகியவற்றுக்கு தங்கம் பூசினார்.



21. திருமலை நாயக்கர்



▲ மன்னர் திருமலை நாயக்கர்


மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் கோயில்களுக்கு அதிக அளவில் திருப்பணிகள் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் திருமலை நாயக்கர். இவரது சிற்பம் அவரது இரு பட்டத்து ராணிகளான உருத்திராபதியம்மை, தோளியம்மை ஆகியோரது சிற்பங்களுடன் வணங்கிய நிலையில் இப்பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் இடம் பெற்றுள்ளது. இன்றைய நிலையில் கோயில்களுக்கு உபயமாகக் குழல்விளக்கு (டியூப் லைட்) கொடுத்தால் கூட அவ்விளக்கிலிருந்து ஒளி வெளிவராத அளவுக்கு உபயம் செய்தவரது பெயர் மற்றும் முகவரியை அதில் எழுதிவிடுகிறார்கள். ஆனால் அக்காலத்தில் பெரும்பான்மையான கோயில்களைக் கட்டிய அரசர்கள் தங்களது பெயரைக் கூட கல்வெட்டில் இன்னாரால் கட்டப்பட்டது எனக் கூறிக் கொள்ள விரும்பவில்லை. வரலாற்று நோக்கில் இத்தகைய வழக்கம் கோயிலின் காலத்தைக் கண்டுபிடிக்க உதவவில்லை என்றாலும் அவர்களது பெருந்தன்மையான மனப்பான்மை போற்றுதற் குரியதாகும். இன்னும் சில கொடையாளர்கள் பக்தர்களது திருப்பாதங்கள் தம்மீது படும்படியாக கோயில் நுழைவுவாயிலின் படிகளில் தங்களது உருவத்தைச் சிறிய அளவில் வணங்கிய நிலையில் செதுக்குவதுமுண்டு.

குலசேகர ஆழ்வார்கூடத் தமது பெருமாள் திருமொழியில் ஒரு பாசுரத்தில் "திருவேங்கடமலையில் படியாய்ப் பிறக்கும் விதியுடையேன்" ஆவேனே எனப் பாடுவது இங்கு நோக்கத் தக்கது. அடுத்ததாகக் கோயிலுக்குத் திருப்பணி செய்தவர்கள் தங்களது உருவங்களைச் செதுக்கும் போது பக்தர்களுக்கு முன் இப்பணியைச் செய்தது தாம்தான் எனத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்குமாறு அமைக்காது இறைவனை நோக்கி வணங்கிய நிலையில் பெரும்பாலும் படைப்பர்.

அத்தகைய அமைப்பிலேயே இங்கு திருமலை நாயக்கரது சிற்பம் அமைந்துள்ளது. திருமலை நாயக்கரது சிற்பங்களைத் திருமலை நாயக்கரது அரண்மனை, புதுமண்டபம், திருப்பரங்குன்றம் சுப்ரமணியர் கோயில், அழகர் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆகிய இடங்களிலும் காணலாம்.

திருமலை நாயக்கர் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த பொழுது தீராத தலைவலியால் துன்பப்பட்டார். அப்பொழுது மதுரைக் கோயில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டு வந்தபொழுது இடையில் திண்டுக்கல்லில் தங்கியிருந்தாராம். நோயின் தாக்கம் அன்று மிகுதியடைந்தது. அன்று இரவு சிவபெருமான் நாயக்கரின் கனவில் தோன்றி மதுரையை இனித் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தால் நோய் நீங்கும் என ஒரு சித்தர் வடிவில் வந்து கூறினாராம். அன்று முதல் திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததாகக் கூறுவர்.

▼ திருமலை நாயக்கர் மகாலின் உட்புறத் தோற்றம்



22. விநாயகர் கோயில்

பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இரண்டு பிள்ளையார் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஒருவர் உச்சிஷ்ட பிள்ளையார், மற்றொருவர் கூத்தப் பிள்ளையார் ஆவர். இப்பிள்ளையார்களுக்கு முன்புள்ள இடமே கொலுமண்டபம் எனப்படுகிறது.





- விநாயகர் (கம்பத்தடி மண்டபம்)
- நவராத்திரி விழாவில் பிட்டுக்கு மண் சுமக்கும் அலங்காரத்தில் அன்னை மீனாள்
- நவராத்திரி விழாவில் நாகம் எய்த காட்சி


23. கொலு மண்டபம்

அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இக்கொலு மண்டபம் அமைந்துள்ளது. இந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப்புற மண்டபத்தைத் தீத்தியப்பசெட்டி என்பவர் கி.பி.1565–ஆம் ஆண்டில் கட்டியுள்ளார். மீனாட்சி–சுந்தரேசுவரரது கோயிலில் வருடாவருடம் புரட்டாசி மாதம் நடைபெறும் நவராத்திரி விழாவின் போது ஒன்பது நாட்களும் அம்மன் கொலுகாட்சி இங்குதான் நடைபெறும். இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த ஒன்பது நாட்களும் கோயிலில் பக்தர்களின் கூட்டம் அதிக அளவில் இருக்கும். இக்கோயிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் நவராத்திரி விழாவும் ஒன்றாகும். நவராத்திரி விழா பற்றிய செய்தியைத் திருவிழாக்கள் எனும் தலைப்பில் பார்த்து மகிழ்க.



24. அம்மன் கோயில் ஐந்து நிலைக் கோபுரம்

பிரகாரத்தின் மேற்குப்பக்கம் அமைந்திருப்பது ஐந்து நிலைக் கோபுரமாகும். இக்கோபுரம் 64 அடி உயரம் கொண்டு விளங்குகிறது. இதன் அடித்தளம் 50 அடி நீளமும், 28 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் 228 சுதையினாலான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோபுரத்தின் அழகை மேற்கு ஆடி வீதியில் இருந்து காணலாம். இக்கோபுரத்தின் வாயிலானது பாதுகாப்புக் கருதி கி.பி.1963 வரை சுவர் எழுப்பப்பெற்று மூடப்பட்டிருந்தது. 1960–63–இல் நடைபெற்ற திருப்பணியின்போதுதான் இச்சுவர் அகற்றப்பட்டு புதிதாகக் கதவுகளும் அமைக்கப்பட்டன. இக்கோபுரத்தைக் கி.பி. 1570–ஆம் ஆண்டு வீரத்தும்பிச்சி என்பவர் கட்டினார். இப்பிரகாரத்தின் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் கிருஷ்ண வீரப்ப நாயக்கரால் (முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் கி.பி. 1564–1572) கட்டப்பட்டதாகும்.



◂ அம்மன் கோயில் ஐந்து நிலைக் கோபுரம்

▸ முருகப் பெருமானின் எழில்மிகு தோற்றம் (ஆயிரங்கால் மண்டபம்)



25. கூடற்குமாரர் கோயில்

இரண்டாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் கிழக்குமுகமாகக் கூடற்குமாரரான முருகப்பெருமான் கோயில் உள்ளது. இக்கோயிலில் அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் பாக்கள் கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளன. இப்பிரகாரத்தில் கூடற்குமாரர் கோயிலை இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1595–1601) கட்டுவித்து அதில் குமரக் கடவுளையும் பிரதிட்டை செய்தார்.

இங்கு முருகன் ஆறுமுகங்களும் பனிரெண்டு கரங்களும் கொண்டு வள்ளி தேவயானையுடன் காட்சியளிக்கிறார். இச்சன்னதிக்கு முன் தூண்களில் இரண்டு துவாரபாலகியர் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை வைத்துப் பார்க்கின்றபொழுது கூடற்குமாரர் சன்னதியில் முன்பு பெண் தெய்வம் இருந்து பின்னர் கூடற்குமாரர் சன்னதியாக மாற்றம் பெற்றிருக்கலாம்.

அம்மன் சன்னதியிலிருந்து சுவாமி சன்னதிக்குச் செல்வதற்கு கிளிக்கூடு மண்டபத்திலிருந்து ஐந்துநிலைக் கோபுரத்தின் வழியாக மட்டுமே சுவாமி சன்னதியின் இரண்டாம் பிரகாரத்தை அடைய முடியும். ஆனால் கி.பி. 1956–ஆம் ஆண்டில் அம்மன் சன்னதி இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் புதிய வாயில் ஒன்றை அமைத்த பின்பு சுவாமி சன்னதிக்கு இரண்டு வழிகள் ஏற்பட்டுள்ளன.



26. முகமண்டபம் (என்ற) ஆறுகால் மண்டபம்

அம்மன் கோயிலின் இரண்டாம் பிரகாரத்தைச் சுற்றி வந்து இவ்வாறுகால் மண்டபம் என்று சொல்லப்படும் முகமண்டபத்தின் வாயிலாகத்தான் மகாமண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இத்தகைய முகமண்டபம் சுவாமி சன்னதிக்கு முன்பும் அமைந்துள்ளது. நாயக்கரது ஆட்சியில் பெரும்பாலான கோயில்களில் இத்தகு முகமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயில், அழகர்கோயில் சுந்தரராசப் பெருமாள் கோயில், மதுரை கூடலழகர் கோயில் ஆகிய கோயில்களில் காணப்படும் முகமண்டபங்களைக் கூறலாம்.

மீனாட்சியம்மன் கோயிலில் இடம்பெறும் இம்முக மண்டபம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றமண்டபமாகும். இம்மண்டபத்தில்தான் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் மன்னர் திருமலை நாயக்கரது முன்னிலையில் குமரகுருபரர் தாம் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றம் செய்தார். ஆண்டுதோறும் சித்திரை மாதம் மீனாட்சியம்மனுக்கு நிகழ்த்தப்படும் முடிசூட்டுவிழா நிகழ்ச்சி இம்மண்டபத்தில் தான் நடைபெறும். நாயக்க மன்னர்கள் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலத்திலும் இம்மண்டபத்தில்தான் செங்கோல் வாங்கி ஆட்சி செலுத்தினர் என்பர்.




இம்முக மண்டபத்திலிருந்து மகாமண்டபம் செல்லும் வாயிலின் இருபுறமும் இரண்டு துவாரபாலகியரது சிற்பங்கள் செம்பினால் செய்யப்பட்டு பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. இவ்விரண்டு சிற்பங்களும் திருமலை நாயக்கரால் அளிக்கப்பட்டவையாகும். நுழைவாயிலின் இருபுறச் சுவர்களிலும் குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் கல்லிலே பொறிக்கப்பட்டுள்ளன.

◂ (இடது) அன்னை மீனாட்சியின் பட்டாபிஷேகக் காட்சி


◂ (வலது) அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கருமுத்து தி. கண்ணன் அவர்கள் செங்கோல் பெறும் காட்சி

27. குமரகுருபரர்



குமரகுருபரர் பாண்டிய நாட்டில் திருநெல்வேலிக்கருகில் ஸ்ரீவைகுண்டம் எனும் ஊரில் பிறந்தவர். இவர் பிறவி ஊமை. பின்னர் தம் 5-ஆம் வயதில் திருச்செந்தூர் முருகப் பெருமானது அருளால் பேசும் திறன் கிடைக்கப் பெற்றார். அதன்பின் அம்முருகப் பெருமான் மீது கந்தர் கலிவெண்பா பாடினார்.

ஒருமுறை மதுரை வழியாக வட இந்தியா செல்லும் போது திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கு இணங்க "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" எனும் நூல் ஒன்றை இயற்றி அதனை மேலே சொன்ன ஆறுகால் மண்டபத்தில் வைத்துத் திருமலை நாயக்கரது முன்னிலையில் அரங்கேற்றினார். அப்பொழுது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் வருகைப்பருவத்தில் ஒன்பதாவது செய்யுளாகிய, "தொடுக்கும் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே" என்று தொடங்கும் பாடலுக்கு குமரகுருபரர் பொருள் சொல்லிக் கொண்டிருந்த போது இறைவியான மீனாட்சியம்மை அக்கோயில் அர்ச்சகரின் பெண்குழந்தை வடிவில் தோன்றி அங்கே வீற்றிருந்த மன்னன் திருமலை நாயக்கரின் கழுத்திலிருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்தில் இட்டு மறைந்தருளினார் என்று ஒரு கதை உண்டு. இக்குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் தவிர, மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.



▲ அன்னையின் எழில் உருவம்

28. மகாமண்டபம்

அம்மன் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றுப் பிரகாரத்திலிருந்து ஆறுகால் மண்டபத்தின் வழியாக உள்ளே நுழைந்தால் வருவது மகாமண்டபம் ஆகும். அம்மன்கோயில் முதல் பிரகாரம் இம்மகாமண்டபத்திலேயே தொடங்கி முடிகிறது. இம்மகாமண்டபத்தையும், முதல் பிரகாரத்தையும் கட்டியவர் மாவலிவாணாதிராயர் என்பவராவார். இவர் கி.பி.1452-ஆம் ஆண்டில் இதனைக் கட்டினார். மகாமண்டபத்திலிருந்துதான் பெரும்பாலான பக்தர்கள் அம்மனை வழிபடுகின்றனர். சிறப்புக் கட்டணம் கட்டும் வசதியுள்ள பக்தர்கள் தனிவரிசையில் அர்த்த மண்டபத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் கோயிலுக்கு நல்ல வருமானம் கிடைக்கலாம். ஆனால் இறைவனுக்கு முன் அனைவரும் சமம் என்பதை மறந்து இத்தகைய பிரிவினையை நாமே ஏற்படுத்தியிருப்பது வருந்தத்தக்கதாகும். இவ்வழக்கம் இன்றைய நிலையில் பெரும்பாலான கோயில்களில் உள்ளது. காலப்போக்கில் இத்தகு வழக்கம் மாற்றம் பெற்றிட எல்லாம்வல்ல அன்னை மீனாட்சியும், சுந்தரேசுவரரும்தான் அருள வேண்டும்.

மகாமண்டபத்தின் மேற்குப்புறம் அர்த்த மண்டபமும், அன்னை மீனாட்சியின் கருவறையும் அமைந்துள்ளன. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் போன்றவைகளில் காலத்தால் முதலில் தோன்றியது கருவறையும், அர்த்த மண்டபமும் தான். அதன்பின்னர் அமைக்கப்பட்டதே மகாமண்டபம். இதனை அமைக்கும் போதே கருவறைமற்றும் அர்த்தமண்டபத்தின் பக்கவாட்டிலும் பின்புறமும் இடம் விட்டு அதில் பிரகாரம் இடம் பெறுவதுபோல் கட்டப்பட்டுள்ளது.


இப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் சிறிய இரட்டை விநாயகர் கோயிலும், வடமேற்கு மூலையில் முருகன் கோயிலும் இருந்து வந்துள்ளன. காலப்போக்கில் அவை சிதைவடையவே 1960-63-இல் நடைபெற்ற திருப்பணியின் போது இக்கோயில்கள் இடிக்கப்பட்டு அங்கே கருங்கல்லினால் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.



29. பள்ளியறை

முதல் பிரகாரத்தின் வடக்குப் பக்கத்தில் பள்ளியறை அமைந்துள்ளது. கி.பி.15–ஆம் நூற்றாண்டில் மகாமண்டபம் மற்றும் முதற் பிரகாரம் அமைத்தபோது இருந்த பள்ளியறை 1960 – 63–இல் நடைபெற்ற திருப்பணியின் போது செப்பனிடப்பட்டு உட்புறம் சலவைக் கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியறையை ஒட்டி முதல் பிரகாரத்திலிருந்து இரண்டாம் பிரகாரம் செல்வதற்கு வசதியாக 1960–63–இல் நடந்த திருப்பணியில் ஒரு நுழைவு வாயில் ஏற்படுத்தப்பட்டது. இப்பள்ளியறையின் சுவர் பொன்னிறத் தகடால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இனி மகாமண்டபம் பள்ளியறை மற்றும் பிரகாரத்தைக் கட்டிய மாவலிவாணாதிராயனைப் பற்றி இங்கு அறிந்து கொள்வது அவசியமாகும்.



30. மாவலிவாணாதிராயன்

அம்மன் சன்னதியில் முதல்பிரகாரம், மகாமண்டபம், பள்ளியறை முதலிய பகுதிகளைத் தோற்றுவித்த மாவலிவாணாதிராயன் என்போன் வாணாதிராயர்களது பரம்பரையில் வந்த சிறந்த சிற்றரசன் ஆவான். வாணாதிராயர்கள் பாலாற்றங் கரையிலிருந்த வாணநாட்டில் சோழர்களுக்குச் சிற்றரசர்களாக இருந்தவர்கள். வாணநாட்டினர் என்பதால் வாணாதிராயர்கள் என்றழைக்கப்பட்டனர். கி.பி. 1261–1272–இல் மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியபோது அந்நாட்டைப் பாதுகாப்பதற்காக இவ்வாணாதி இராயர்கள் பாண்டிய நாட்டில் குடியேற்றப்பட்டவர்கள். இவர்களில் சிலர் மானாமதுரைப் பகுதியில் மாவலிவாணாதிராயர் என்ற பட்டத்துடன் சிற்றரசர்களாகவும் இருந்து வந்துள்ளனர். பெரும்பாலான வாணாதிராயர்களுக்கு அழகர் கோயிலே தலைமையிடமாக இருந்து வந்துள்ளது.

இவர்கள் அதிகமான அளவில் கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர். வாணாதிராயர் ஒருவர் அழகர் கோயிலிலுள்ள அழகரின் அழகில் மயங்கி அக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்ததுடன் தன் பெயரையே அக்கோயில் இறைவனது பெயருடன் இணைத்து சுந்தரத் தோளுடைய மாவலிவாணாதிராயன் என வைத்துக் கொண்டார். அழகர் கோயில் கல்வெட்டுகளில் இறைவன் சுந்தரத் தோளுடையான் என்றே குறிப்பிடப்படுகின்றார். அந்த வாணாதிராயர்தான் அம்மன் கோயிலில்பல திருப்பணிகள் செய்தவர் ஆகிறார்.

◂ சயனக் கோலத்தில் அன்னை மீனாட்சி


31. கருவறை விமானமும் அர்த்த மண்டபமும்

கி.பி.7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் ஆகியோரது தேவாரப் பதிகங்களிலோ, கி.பி.8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் தேவாரத்திலோ, மீனாட்சியம்மையைப் பற்றியோ, அம்மையின் கோயில் பற்றியோ குறிப்புகள் காணப்படவில்லை. கி.பி.9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகரது திருவாசகத்திலும், கி.பி.10–ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய கல்லாடத்திலும் மீனாட்சியம்மை சுந்தரேசர் திருமணம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. எனவே, மீனாட்சியம்மைக்கு கி.பி.9–ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கோயில் இருந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் தமிழகத்தில் கி.பி.10–ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இறைவிகளுக்குத் தனிக்கோயில் இருந்ததில்லை. இவ்வழக்கம் கி.பி.10–ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தோன்றியிருக்கிறது என முன்னரே கண்டோம். விசயநகர–நாயக்கரது காலத்தில்தான் சைவக் கோயில்களில் அம்மன் கோயிலும், வைணவக் கோயில்களில் தாயார் கோயிலும், ஆண்டாள் கோயிலும் தனித்தனியாக அதிக அளவில் கட்டப்பட்டன. மதுரைக்கோயில் வளாகத்தைப் பொறுத்த அளவில் கி.பி.12–ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அம்மனுக்குத் தனிக்கோயில் இருந்திருக்க வாய்ப்பில்லை. கி.பி.12–ஆம் நூற்றாண்டில்தான் குலசேகர பாண்டியன் (கி.பி.1168–1175) சுவாமிக்குக் கோயில் கட்டும் பொழுது அம்மனுக்கும் முதன் முதலாக கருவறை எழுப்பியிருக்க வேண்டும். ஆனால் இன்று அவனது காலத்தில் கட்டப்பட்ட கருவறைப்பகுதி கூட நமக்கு கிடைக்கவில்லை. இன்று நாம் காணும் கருவறையின் கட்டடக்கலை அமைப்பு நாயக்கரது கட்டடக்கலைப் பாணியைச் சேர்ந்ததாக உள்ளது. ஒருவேளை பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டிருந்த அமைப்பானது கி.பி.14–ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மாலிக்காபூரின் படையெடுப்பின் போது இடிக்கப்பட்டிருக்கலாம். அதன்பின்னர் கட்டப்பட்டதே இன்று நாம் காணும் கருவறையாகும்.




▲ அம்மன் தங்க விமானம் (2009 திருப்பணிக்குப்பின்)

32. அம்மன் விமானம்



மீனாட்சியம்மை எழுந்தருளியுள்ள கருவறைசதுரக் கருவறையாக அமைந்துள்ளது. இக்கருவறையைச் சுற்றி இடம் பெறும் பிரகாரத்தின் நடைமேடை நன்கு உயர்த்தப் பட்டுள்ளது. எனவே கருவறைக்கும் பிரகாரத்திற்கும் இடையே பள்ளம் காணப்படுகிறது இப்பள்ளம் நாயக்கர் காலத்து வசந்த மண்டபங்களில் இடம்பெறும் அமைப்பைப் போல் தோன்றுகிறது.

பிரகாரத்தின் சுவரில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அருகருகே மீனாட்சியம்மை வாழ்க்கை தொடர்பான சிற்பங்களைச் சிறிய அளவில் இடம்பெறச் செய்துள்ளனர். கருவறைப் பகுதியில் உபபீடத்துடன் கூடிய அதிட்டானம் இடம் பெற்றுள்ளது. உபபீடமானது உபானம் (மறைந்துள்ளது) அலங்கரிக்கப்படாத ஜகதி, கண்டம், கபோதம் எனும் உறுப்புக்களுடன் அமைந்துள்ளது. அதிட்டானம் பத்மஜகதி, சலங்கையால்





அலங்கரிக்கப்பட்ட விருத்த குமுதம், கண்டம், கபோதம், கண்டம், வேதி எனும் உறுப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சுவர்ப்பகுதியில் தூண்களின் சதுரப்பகுதி மாமல்லன் பாணியில் அமர்ந்த நிலையிலான சிம்மங்களுடன் அமைந்துள்ளன. தூண்களின் மேற்பகுதியில் இடம் பெற்றுள்ள இவ்விமானம் வாழைப்பூப் போதிகை நாயக்கர் காலத்துக் கலையமைப்பில் அமைந்து நாயக்கர் கட்டடக்கலையை உணர்த்தி நிற்கிறது. பக்கத்திற்கு ஒரு தேவகோட்டத்துடன் இரண்டு கோட்ட பஞ்சரங்கள் இடம்பெற்றுள்ளன. தேவகோட்டங்களில் மட்டும் அம்மனது திருஉருவம் மூன்று பக்கங்களிலும் இடம் பெற்றுள்ளது. இம்மூன்று அம்மனையும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்பர். பிரஸ்தரப்பகுதியில் அமைந்துள்ள கபோதம், கொடுங்கை அமைப்பில் அமையாது வளைந்த கட்டை அமைப்புடன் கூடிய தாழ்வார அமைப்பில் அமைந்துள்ளது. கருவறை பத்ரம், அகாரை, கர்ணம் எனும் அமைப்பில் காணப்படுகிறது. இவ்வம்மன் கோயில் விமானம் திரிதள விமானமாக அமைந்துள்ளது. இதன் சிகரப்பகுதி தங்கமுலாம் பூசிய தகடுகள் பதிக்கப்பட்டதாக காணப்படுகிறது.

▲ அம்மன் கோவில் தரைப்படம்

◄ முத்து மாம்பழக் கொண்டை அலங்காரத்தில் மீனாட்சி

மீனாட்சியம்மை சிற்ப அமைப்பு


பொதுவாக ஆண் இறையுருவங்களைக் கருவறையில் அமைக்கும் பொழுது அவ்விறைவனது திருக்கரங்கள் அபய, வரத முத்திரைகளில் அமைக்கப்படும். அவ்விறைவனுக்கு அருகே இடம் பெறும் இறைவியரது உருவங்கள் வலக்கையில் மலர்ச்செண்டினை ஏந்தியபடியும் இடது கையைத் தொங்கிய நிலையிலும் (லோல ஹஸ்தம்) அமைப்பர்.

சிவனது கோயில்களில் சிவன் லிங்க வடிவில் வணங்கப்படுவதால் வைணவக் கோயில்களில் திருமாலுக்கு இருபுறமும் இடம்பெறும் ஸ்ரீதேவி, பூதேவியரது சிற்பங்களில் இத்தகு காட்சியைக் காணலாம். தனியாக இடம்பெறும் அம்மன் கோயில்களிலும், தாயார் கோயிலிலும் இறைவியின் உருவம் நின்ற நிலையிலோ, அமர்ந்த நிலையிலோ அபய வரத முத்திரை காட்டி அமைக்கப்படுவதுண்டு.

மீனாட்சியம்மையின் திருவுரு நின்றகோலத்தில் இடம்பெறுகிறது. வலது திருக்கரத்தில் மலரை ஏந்தியபடியும் இடது திருக்கரம் தொங்கிய நிலையிலும் காணப்படுகின்றன. அம்மனது வலது தோளில் பச்சைக்கிளி



▲ புஷ்ப அங்கி அலங்காரத்தில் அன்னை மீனாட்சியின் கருவறைக் காட்சி



▲ ரோஸ்பீட்டர் வழங்கிய கல் பதித்த தங்கத்தாலான கால்போதுமை

இடம்பெற்றுள்ளது. அம்மனது முடி அல்லது கிரீட அலங்காரம் நாயக்கர் காலத்துச் சிற்ப அமைப்பை ஒட்டி இடது பக்கம் கொண்டையிட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. இதனை மாம்பழக் கொண்டை என அழைப்பர். அம்மனது திருவுருவம் வழக்கமான அளவை விடச் சற்று குறைந்த அளவில் குழந்தை முகத்தோடு காணப்படுகிறது. மேலும் அம்மனது உருவம் வலது காலை சற்று முன்னோக்கி வைத்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சி அம்மன் பக்தர்களது துன்பம் களைந்து அருள்பாலிக்க விரையும் காட்சியாய் அமைகிறது.


மீனாட்சியம்மன் கோவில் தென் தமிழ்நாட்டிலுள்ள தாய்த் தெய்வக் கோயில்களில் மிகச் சிறந்த இடத்தை வகிப்பதால் பக்தர்களது கூட்டம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. மீனாட்சியம்மை பக்தர்களுக்கு அருள்பாலித்த செய்திகள் நிறைய உண்டு. கி.பி.19–ஆம் நூற்றாண்டில் மதுரையில் ஆட்சியராக இருந்தவர் ஜேம்ஸ்ரோஸ் பீட்டர் எனும் ஆங்கிலேயராவார். இவர் மக்களிடம் நல்ல செல்வாக்கு பெற்றவராக இருந்ததால் இவர் “பீட்டர் பாண்டியன்” என்று பொதுமக்களால் அன்பாக அழைக்கப்பட்டார். இவர் தன் அலுவல் காரணமாக வெளியே செல்லும் போது கோயிலைச் சுற்றி விட்டுச் செல்வது வழக்கம்.

ஒருநாள் இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது இடி முழக்கத்துடன் பெருமழை பெய்தது. அப்பொழுது ஒரு சிறு பெண்குழந்தை பீட்டரை எழுப்பி வெளியே அழைத்துக்கொண்டு சென்றவுடன் இடியானது அவ்வறைமேல் விழுந்தது. குழந்தையும் காணாமல் போனது. பீட்டர் பாண்டியன் மீனாட்சியம்மையே குழந்தை வடிவில் வந்து தம்மைக் காத்தாள் என்பதை மனமார உணர்ந்து மீனாட்சியம்மனை அன்று முதல் வழிபட்டதோடு அம்மன் குதிரை வாகனத்தில் வீதியுலா வரும்போது குதிரையில் அமர்ந்து கால்களை வைத்துக் கொள்ள ஏதுவாக விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்கத்தால் ஆன கால்போதுமை (Golden Stirrups) இரண்டினைக் காணிக்கையாகச் செலுத்தினார். இன்றும் அவை கோயிலில் உள்ளன. மீனாட்சியம்மன் பிறப்பு மற்றும் திருமணம் பற்றிய செய்திகள் திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறுகின்றன.

மீனாட்சியம்மை திரு அவதாரம்

முன்னொரு காலத்தில் மதுரையை மலையத்துவச பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். அவனது மனைவி பெயர் காஞ்சனமாலை. இவர்களுக்கு நீண்ட நாட்களாகக் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. அதனால் மன்னன் குழந்தைப்பேற்றுக்கான யாகம் செய்தான். அவ்வேள்வித் தீயிலிருந்து மூன்று வயது அழகிய பெண்குழந்தை தோன்றிக் காஞ்சனமாலையின் மடியில் அமர்ந்தது. அக்குழந்தைக்கு மூன்று மார்பகங்கள் இருப்பதைக் கண்டு மலையத்துவசன் அதிர்ச்சியடைந்தான். ஆண் குழந்தை வேண்டி யாகம் செய்யப் பெண் குழந்தை பிறந்ததோடு இப்படி மூன்று மார்பகங்களுடன் பிறந்துள்ளதே என இறைவனிடம் வருந்தி மன்றாடினான்.


அப்பொழுது விண்ணொலி (அசரீரி) ஒன்று "இக்குழந்தையைப் பெண் என்று நினைக்காது ஆண்பிள்ளை போல் வளர்த்து அரசியாக்குக. அவளுக்கேற்றகணவனைக் காணும் பொழுது அவளது மார்பகங்களில் ஒன்று மறைந்துவிடும்" எனக் கூறியது. அதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து அக்குழந்தைக்கு "தடாதகை" எனப் பெயரிட்டு வளர்த்து உரிய பருவத்தில் முடிசூட்டுவிழா நடத்தினான். அன்று முதல் செங்கோல் ஏந்தி மதுரையை ஆட்சி செய்து வந்தாள் தடாதகைப் பிராட்டி. இதன் காரணமாகவே நாயக்க மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் பொழுது அம்மன் கோயிலில் உள்ள ஆறுகால் மண்டபத்தில் செங்கோலை ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்றளவும் சித்திரை மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் அம்மன் பட்டாபிஷேக நாளன்று கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் அம்மனிடமிருந்து செங்கோல் பெற்றுச் சகல மரியாதைகளுடன் சுவாமி சன்னதி இரண்டாம் பிரகாரம் சுற்றி வந்து மீண்டும் அம்மனிடம் செங்கோலை ஒப்படைப்பது வழக்கமாக உள்ளது.



- (இடது) மீனாட்சி அம்மையின் திருஅவதாரம்
- (வலது) தடாதகை சுந்தரேசுவரர் திருமணக் காட்சி

தடாதகைத் திருமணம்

மதுரையை ஆண்டு வந்த தடாதகை எல்லாத் திசைகளையும் வெல்ல வேண்டும் என்பதற்காகப் பெரும் படையுடன் புறப்பட்டாள். மண்ணுலகம், விண்ணுலகம் வென்று இறுதியில் சிவபெருமானுடன் போர் செய்யக் கைலாயம் சென்றாள். இச்செய்தியை நந்தி தேவர் சிவபெருமானிடம் கூற சிவபெருமான் போருக்குக் கிளம்பினார். சிவபெருமானை நேருக்கு நேராகச் சந்தித்த தடாதகை நாணமுற்றாள். அப்பொழுது அவளது மூன்று மார்பகங்களில் ஒன்று மறைந்தது. தடாதகையின் அமைச்சரான சுமதி என்பவள் பழஞ்செய்தியை எடுத்துக் கூறினாள். சிவபெருமான் பின்னர் மதுரை வந்து தடாதகையைத் திருமணம் புரிந்து கொண்டார். இத்திருமணத்தில் பிரமன் யாகம் வளர்த்து மந்திரம் சொல்ல மீனாட்சியின் அண்ணன் திருமால் தன் தங்கையைச் சிவபெருமானுக்குத் தாரை வார்க்க அனைவரும் வாழ்த்தினர்.






வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது

திருமண நாளில் அனைவரும் விருந்துக்கு அழைக்கப்பட்டனர். இதில் வியாக்ரபாதரும், பதஞ்சலி முனிவரும் இறைவனது திருநடனம் கண்டால்தான் விருந்துண்போம் என இறைவனிடம் கூறஅதை ஏற்று அவர் நடராசராக வெள்ளியம்பலத்தில் ஆடினார். அதன் பின்னர் இம்முனிவர்கள் இருவரும் நாங்கள் கண்ட இக்காட்சியை அனைவரும் என்றும் காணும் வண்ணம் இங்கு எழுந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க சிவபெருமான் நடராசராக வெள்ளியம்பலத்தில் எழுந்தருளியுள்ளார். இதன் காரணமாக வெள்ளியம்பலத்து இறைவனின் கருவறையில் வலமிடமாகப் பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களின் திருமேனிகள் கைகூப்பிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

குண்டோதரனுக்கு அன்னம் வழங்கியது

திருமண விருந்தில் அனைவரும் உண்டது போக அதிக அளவில் உணவு மிஞ்சிவிட கவலையுற்ற தடாதகை இறைவனிடம் கூற சிவபெருமான் கடும் பசியையுடைய குண்டோதரன் ஒருவனை வரவழைத்தார். அவன் அங்கு மிஞ்சியிருந்த உணவையெல்லாம் உண்டும் பசி தீரவில்லை மீண்டும் உணவு வேண்டும் என இறைவனிடம் வேண்டினான்.



▲ நடராசர் - கால் மாறி ஆடிய செப்புப் படிமம்

▶ (இடது) குண்டோதரன் உணவருந்தும் காட்சி (சுவாமி சன்னதி-மகா மண்டபம்)

▲ (வலது) வைகை நீரை பருகிய காட்சி (சுவாமி சன்னதி-மகா மண்டபம்)

▶ (வலது) உக்கிர பாண்டியனின் திருஅவதாரக் காட்சி



அன்னக்குழியையும், வையையும் அழைத்தது

குண்டோதரனது பசியைத் தீர்க்கும் பொருட்டு சிவபெருமான் அதிக அளவில் உணவைப் படைத்தார். அவற்றையெல்லாம் உண்ட குண்டோதரனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. இதனால் அவன் மதுரையிலுள்ள குளம், கிணறு, ஊற்று ஆகியவற்றில் இருந்த நீரையெல்லாம் பருகினாலும் அவனது தாகம் தணியவில்லை. பின்னர் அவனது தாகத்தைத் தணிப்பதற்காக இறைவன் கங்கையை நோக்க சிவபெருமானது தலையிலிருந்து கங்கை வையைஆறாகப் பெருக்கெடுத்தது. வையை வெள்ளத்தைப் பருகிய பின்னரே குண்டோதரனது தாகம் தணிந்தது.



உக்கிர பாண்டியன் பிறப்பு

பாண்டியர் மரபு அழியாமல் இருக்க வேண்டும் என விரும்பித் தடாதகை சிவபெருமானிடம் வேண்டினாள். இதன் காரணமாக தடாதகை சிவ பெருமான் தம்பதியருக்கு ஒரு அழகிய மகன் பிறந்தான். அவனுக்கு உக்கிரபாண்டியன் எனப் பெயரிட்டு வளர்த்தனர். முருகப்பெருமானே அத்தகு குழந்தையாக வந்து பிறந்ததாகக் கூறுவர். அக்குழந்தை உரிய பருவம் அடைந்த பின்னர் மணலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோமசேகரன் என்பவனது மகளான காந்திமதியை உக்கிரபாண்டியனுக்குத் திருமணம் செய்துவித்து அவனுக்கு முடிசூட்டு விழாவும் நடத்தி நல்லபடியாகப் பாண்டியர் குலம் தழைக்கவும் ஆட்சி சிறக்கவும் தங்கள் ஆசிகளைக் கூறித் தடாதகையும், சிவபெருமானும் கோயிலுக்குள் சென்று திருவுரு மறைந்தனர்.


33. சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம்

இதுவரை அம்மன் கோயில் பற்றிய செய்திகளை அறிந்தோம். இனி சுவாமி கோயிலைப் பற்றி அறியலாம். அம்மன் கோயில் கிளிக்கூட்டு மண்டபத்திலிருந்து சுவாமி சந்நிதி இரண்டாம் பிரகாரத்தை அடையலாம். இவ்வழியில் ஒரு கோபுரம் உண்டு. அதற்கருகில் உள்ள கோயில்தான் முக்குறுணிப் பிள்ளையார் கோயிலாகும். இதையடுத்து இவ்விரண்டாம் பிரகாரத்தில் மேற்குக் கோபுரம், சங்கப் புலவர்கள் கோயில், இடபக்குறிக் கோபுரம், மண்டப நாயகம் எனப்படும். நூற்றுக்கால் மண்டபம், ஞானசம்பந்தர் கோயில் ஆகியன அமைந்துள்ளன. இந்த இரண்டாம் பிரகாரத்தின் வெளிச் சுற்றுமதில் சுந்தரபாண்டியன் மதில் எனப்படும். இம்மதில் 420 அடி நீளமும் 310 அடி அகலமும் கொண்டது. இதனை கி.பி.13-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட பிற்காலப் பாண்டியருள் ஒருவனான மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1238) கட்டினான். இம்மதிலுக்கு உள்ளே ஒரு உள்சுற்று மதில் உண்டு. இது கபாலிமதில் என்று அழைக்கப்படும். இது 250 அடி நீளமும் 156 அடி அகலமும் கொண்டதாகும். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் “கபாலி நீள்கடிமதில் கூடல் ஆலவாயிலாய்” என்று பாடுகிறார். சுவாமி கோயில் வளாகமானது இன்றைய இரண்டாம் பிரகாரம் வரை திருஞான சம்பந்தர் காலத்தில் இருந்துள்ளது. எனவேதான் அவரது பாடலில் கபாலி நீள்கடி மதில் எனப் பாடியுள்ளார். இம்மதில் பிற்காலத்தில் சிதைவடைந்ததால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பாண்டியனது ஆட்சிக்காலத்தில் மீண்டும் மதிற்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் அம்மதிலும் சிதைவடைந்து நாயக்கரது ஆட்சிக்காலத்தில் புதிதாகக் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இன்று நாம் காணும் பிரகார மதிற்சுவர் நாயக்கர் காலத்ததாகும். எனவே கபாலிமதிலும், சுந்தரபாண்டியன் மதிலும் வேறுவேறு கால கட்டத்தில்



கட்டப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. இம்மதில்கள் இரண்டுக்கும் இடையிலான பிரகாரம் திறந்தவெளிப் பிரகாரமாக இருந்தது. கி.பி.16–ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணப்ப நாயக்கரும், அபிசேக பண்டாரமும் சேர்ந்து இப்பிரகாரத்திற்கு மேல் கற்கூரை வேய்ந்து மூடிய திருச்சுற்றாக மாற்றினர். திருமலை நாயக்கர் காலத்திலிருந்த ஒரு அபிசேக பண்டாரம் ஊழல் செய்து பதவியிழந்து மன்னர் கொடுத்த பணத்தைக் கொண்டு இவ்விரண்டு பிரகாரம் கட்டினார் என்று முன்னரே கண்டோம். இனி சுவாமி சன்னதி இரண்டாம் பிரகாரத்தில் இடம் பெற்றுள்ளவற்றையும் அதன்பின் அம்மன் சன்னதி நுழையும் கோபுரத்தைப் பற்றியும் காணலாம்.

▼ சுவாமி கோவில் இரண்டாம் பிரகாரம் (தென்புறத் தோற்றம்)



34. நடுக்கட்டுக் கோபுரம் என்ற ஐந்துநிலைக் கோபுரம்

இது நடுக்கட்டுக் கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோபுரம் 69 அடி உயரத்துடன் அமைந்துள்ளது. இதன் அடித்தளம் 33 அடி அகலமும், 44 அடி நீளமும் கொண்டுள்ளது. இக்கோபுரத்தில் 112 சுதை சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இக்கோபுரத்தை விசுவநாத நாயக்கர் காலத்தில் சிராமலை செவ்வந்திமூர்த்தி செட்டியார் என்பவர் கி.பி.1559–ஆம் ஆண்டில் கட்டினார். சிராமலை என்பது இன்றைய திருச்சியாகும். இவரும், இவரது மகன்களும் பல திருப்பணிகளைக் கோயிலுக்குச் செய்துள்ளனர். கோயிலின் சித்திரைவீதியில் அமைந்துள்ள தெற்குக் கோபுரம் கட்டியவரும் இவரே.



35. முக்குறுணிப் பிள்ளையார்


நடுக்கட்டுக் கோபுரத்தைக் கடந்ததும் தெற்குமுகமாகக் காட்சியளிப்பது முக்குறுணிப் பிள்ளையார் கோயிலாகும். இக்கோயிலில் இடம்பெறும் இச்சிற்பம் சுமார் 8 அடி உயரமுள்ளது. பிள்ளையார் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். கி.பி.17–ஆம் நூற்றாண்டில் மன்னர் திருமலை நாயக்கர் மதுரை நகரின் கிழக்கே அமைந்துள்ள வண்டியூர் மாரியம்மன் கோயிலருகே மிகப் பெரிய தெப்பக்குளம் ஒன்றை நிறுவினார். அக்குளத்தைத் தோண்டும் பொழுது இப் பிள்ளையார் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இன்றைய வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் இருக்கும் இடத்தில் குளம் வெட்டப்படுவதற்கு முன்னர் பிள்ளையார் கோயில் இருந்துள்ளது. இந்தக் கோயில் ஒருவேளை மாலிக்காபூரின் படையெடுப்பின் போதுகூட இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டிருக்கலாம்.



பின்னர் திருமலை நாயக்கர் தெப்பக்குளம் தோண்டும் பொழுது பிள்ளையார் சிலை கிடைத்திருக்கலாம். ஆனால் இவ்விநாயகர் சிலை பாண்டியர் காலச் சிற்பக்கலை போல் இன்றி நாயக்கர் கலைப்பாணியில் அமைந்துள்ளது. இவ்விநாயகரை இங்கே பிரதிட்டை செய்தவர் கந்தப்பொடிபெத்துசெட்டி என்பவராவார். வருடாவருடம் ஆவணி மாதம் நடைபெறும் விநாயகர் சதுர்த்தித் திருவிழாவின் போது முக்குறுணியரிசியால் ஒரே கொழுக்கட்டை செய்து இப்பிள்ளையாருக்குப் படைத்து வழிபடப்படுவதால் முக்குறுணிப் பிள்ளையார் என்று பெயர் ஏற்பட்டுவிட்டது. முக்குறுணி அரிசியைக் கொண்டு ஒரே கொழுக்கட்டை செய்து வழிபடுவது ஏன்? என்கிற கேள்விக்கு இன்று வரை விடை கிடைக்கவில்லை.

36. மேற்குப்புற ஐந்து நிலைக் கோபுரம்

சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தின் மேற்குப்பக்கம் ஐந்து நிலைகள் கொண்ட கோபுரம் அமைந்துள்ளது. இது 72 அடி உயரம் கொண்டது. இதன் அடித்தளம் 48 அடி நீளமும் 31 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் 340 சுதைச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கோபுரம் மேற்கு ஆடிவீதியில் உள்ள பெரிய கோபுரத்திற்கு நேர் கிழக்கே அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.



- மேற்குப்புற ஐந்து நிலைக் கோபுரம்
- (வலது) திருமணக்கோலத்தில் சுவாமி, அம்மன்

37. சங்கத்தார் மண்டபம்

இம்மண்டபம் மேற்குப்புறப் பிரகாரத்தின் வடக்குமூலையில் அமைந்துள்ளது. சிவபெருமானைச் சேர்த்து கடைச்சங்கப்புலவர்கள் 49 பேர் என்று திருவிளையாடற் புராணம் கூறும் செய்தியை அடிப்படையாகக் கொண்டு 49 சங்கப்புலவர்களது உருவங்கள் இங்குச் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. திருவிளையாடற் புராணத்தில் சங்கப்பலகை தந்தது, சங்கத்தார் கலகம் தீர்த்தது, இடைக்காடர் பிணக்குத் தீர்த்தது ஆகிய கதைகள் சங்கப்புலவர்கள் பற்றியதாக அமைகின்றன. இம்மண்டபத்திற்கு அருகில் காளத்தீசுவரர் சன்னதியும், ஆதிபராசக்தி சன்னதியும் இடம் பெற்றுள்ளன.

38. கல்யாண சுந்தரேசுவரர் கோயில்

இரண்டாம் பிரகாரத்தில் வடக்குப் பிரகாரத்தை ஒட்டிக் கல்யாண சுந்தரேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறைஅர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றோடு விளங்குகிறது. கருவறையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் கோலம் சிற்பமாக இடம் பெற்றுள்ளது.

மகா மண்டபத் தூண்களில் அட்டலெட்சுமி, நரசிம்மர், சரபர் முதலான உருவங்கள் சுதையினால் சமீப காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்யாண சுந்தரேசுவரரை வணங்கத் திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவி வருகிறது.



39. இடபக்குறி கோபுரம்


வடக்குப் பிரகாரத்தில் ஐந்துநிலைக் கோபுரம் ஒன்று இடம் பெறுகிறது. இக்கோபுரம் 71 அடி உயரம் கொண்டு விளங்குகிறது. இதன் அடித்தளம் 40 அடி நீளமும், 34 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் 184 சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன. இதனை கி.பி.1506–இல் செவ்வந்தி வேலப்பச் செட்டியார் என்பவர் கட்டினார். இவர் சிராமலை செவ்வந்தி மூர்த்தி செட்டியின் புதல்வர் ஆவார். செவ்வந்தி மூர்த்தி செட்டி 1559–இல் இதே இரண்டாம் பிரகாரத்தில் தெற்குப்பக்கம் கோபுரம் கட்ட, 1560–இல் வடக்குப்பக்கம் இவரது மகன் கோபுரம் கட்டியுள்ளார். இவ்விரண்டு திருப்பணிகளும் ஒரே காலத்தில் துவங்கப்பட்டதாக இருக்கலாம்.

இனி “இடபக்குறிக் கோபுரம்” எனப் பெயர் வந்ததற்கான காரணத்தைக் காணலாம். காஞ்சியில் காடு வெட்டிய சோழன் என்பவன் அரசனாக இருந்தான். அவன் மதுரையிலுள்ள சோமசுந்தரப் பெருமானை வணங்க வேண்டும் என்று விருப்பம் கொண்டான். ஆனால் சோழநாடும், பாண்டியநாடும் பகை கொண்டிருந்ததால் எப்படி இறைவனைக் காண்பது எனக் கவலையுற்றான். அவனது கனவில் தோன்றிய இறைவன் அவனை மட்டும் மதுரைக்கு வரக் கட்டளையிட்டார். மதுரைக்குப் பயணமாகி நள்ளிரவில் வந்து சேர்ந்த சோழன் வையை நதியில் வெள்ளப்பெருக்கு இருந்தமையால் நகருக்குள் செல்ல இயலாது தவித்தான். அப்பொழுது இறைவன் சித்தர் வேடத்தில் தோன்றி வையையை வற்றச் செய்து சோழனை அழைத்துக் கொண்டு வடக்குவாயில் வழியே கோயிலுக்குள் புகுந்தார்.

மீனாட்சி–சுந்தரேசுவரரைக் கண்ணாரக் கண்டு மனமார வழிபட்ட பின் சித்தராக வந்த இறைவன் மீண்டும் சோழனை வடக்குவாயில் வழியே அனுப்பி வைத்தார். அப்பொழுது வடக்குக் கோபுரத்திலிருந்த பாண்டியனது மீன் இலட்சினையை மாற்றித் தமது இலட்சினையான காளை இலட்சினையை இட்டுச் சென்றார். மறுநாள் இப்புதிய இலட்சினையைக் கண்டு பாண்டியன் கலங்கவே அவனது கனவில் வந்து நடந்ததைக் கூறினார் இறைவன். உண்மையறிந்த பாண்டியன் இறைவனது அருளை வியந்து வழிபட்டான். இக்கதை திருவிளையாடற்புராணத்தில் 34–வது கதையான “விடையிலச் சினையிட்டது” என்னும் பகுதியில் இடம் பெறுகிறது. இறைவன் சித்தராக வந்து சோழனை வடக்குக்கோபுரம் வழியாகக் கோயிலுக்குள் அழைத்துச் சென்றதாகக் கதை அமைந்திருப்பதால் வடக்குக் கோபுரமான இக்கோபுரத்தை விடை இலட்சினையுடன் கட்டியுள்ளனர்.

கி.பி.7–ஆம் நூற்றாண்டு முதல் 9–ஆம் நூற்றாண்டு வரையில் உள்ள காலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்ட தேவாரப் பாடல்களிலும், மாணிக்கவாசகரது திருவாசகத்திலும் கி.பி.10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லாடத்திலும் திருவிளையாடற் புராணக் கதைக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 14 கதைகளும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 14 கதைகளும் (சில கதைகள் மாறியுள்ளன) சுந்தரர் தேவாரத்தில் 7 கதைகள் மட்டும் இடம் பெற்றுள்ளன. மாணிக்கவாசகரது திருவாசகத்தில் 20 கதைகளும், கல்லாடத்தில் 31 கதைகளும் இடம் பெற்றுள்ளன. ஆனால் இவை ஒன்றில் கூட விடை இலச்சினை இட்ட கதை இடம் பெறவில்லை.

கி.பி.13–ஆம் நூற்றாண்டில் வடமொழியில் உள்ள "சாரசாமுக்ய" எனும் நூலில் இடம் பெறும் "ஹாலாஸ்ய மகாத்மியம்" எனும் புராணத்தைப் பெரும்பற்றப் புலியூர்நம்பி என்பவர் தமிழில் மொழிபெயர்த்தார். இக்கதைகளில் 'இலச்சினை இட்டகதை' இடம் பெறுகிறது. எனவே கி.பி.16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இடபக்குறிக் கோபுரத்தில் அதைக் கட்டியவர்கள் இக்கதையின் அடிப்படையில் இடபக் குறியுடன் கட்டியிருக்கின்றனர்.



இடபக்குறி கோபுரத்தின் வடதிசை காட்சி

40. நூற்றுக்கால் மண்டபம்

"மண்டப நாயகம்" எனும் நூற்றுக்கால் மண்டபம் இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இம்மண்டபம் சுமார் 6 அடி உயர மேடையுடன் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை கி.பி.1526-இல் சின்னப்ப நாயக்கர் கட்டுவித்தார். இம்மண்டபத்தின் மையத்தில் நடராசர் திருவுருவச் சிலை இடம் பெற்றுள்ளது.

நூறு தூண்களைக் கொண்டு விளங்கும் இம்மண்டபத்தை "நூற்றுக்கால் மண்டபம்" எனவும் அழைக்கலாம். விசயநகர-நாயக்கரது ஆட்சியில் அதிக அளவில் மண்டபங்கள் பல கோயில்களில் கட்டப்பட்டன. அவற்றுள் நூற்றுக்கால் மண்டபங்களும், ஆயிரக்கால் மண்டபங்களும் பிரசித்தமானவையாகும்.

41. நால்வர் கோயில்

இரண்டாம் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் நால்வர் கோயில் உள்ளது. இக்கோயிலைக் கட்டுவித்தவர் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் ஆவார். இவரது காலம் கி.பி.1564-1572 ஆகும். இந்த நால்வர் கோயிலில் தற்பொழுது மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கூன்பாண்டியன், ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரது திருவுருவச் சிலைகள் அமைந்துள்ளன.




▶ சைவ சமயக் குரவர் நால்வர்

42. கம்பத்தடி மண்டபம்

சுவாமி கோயிலின் இரண்டாம் பிரகாரம் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களில் மட்டுமே அமைகிறது. கிழக்கு பக்கத்தில் பிரகாரம் விரிவாக்கப்பட்டு பெரிய மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. இது கம்பத்தடி மண்டபம் என அழைக்கப்படுகிறது.

இக்கம்பத்தடி மண்டபத் தூண்களில் இடம்பெறும் சிவபெருமானது 25 முக்கிய வடிவங்களுடன் அக்னி வீரபத்ரர். அகோர வீரபத்ரர், ஊர்த்துவ தாண்டவர், காளி முதலான சிற்பங்களும் காணத்தக்கவை. இம்மண்டபத்தில்தான் நவக்கிரகக் கோயிலும் அமைந்துள்ளது. சுவாமி சன்னதிக்குள் நுழையுமிடத்தில் தென்புறம் அனுக்ஞை விநாயகரும் வடபுறத்தில் பழனியாண்டவரும் இடம் பெற்றுள்ளனர்.

▼ கம்பத்தடி மண்டபத்தின் பிரமாண்ட காட்சி






வியக்கர பாதர்
பதஞ்சலி மஹரிஷி

நந்தி மண்டபம்

இம்மண்டபம் கம்பத்தடி மண்டபத்தூண் சிற்பங்களுக்கு இடையே சுவாமி சந்நிதிக்கு நேர் எதிரே அமைந்துள்ளது. இந்த நந்தி மண்டபம் மிகுந்த கலை நுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இதன் விதானத்திற்கு மேல் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கி.பி.1564-இல் கிருஷ்ணவீரப்பநாயக்கர் இம் மண்டபத்தை அமைத்தார். இம்மண்டபத்தின் நடுவே கொடிக்கம்பமும், பலிபீடமும் உள்ளன. இம்மண்டபம் நாற்கால் மண்டபம் என்றும் கிருஷ்ணவீரப்ப நாயக்கர் கட்டியதால் வீரப்ப மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது.

கி.பி. 1877-ஆம் ஆண்டு நகரத்தார் செய்த கோயில் திருப்பணியில் மண்டபத்தைப் புதுப்பித்துப் புதிய தூண்களை நந்தி மண்டபத்தைச் சுற்றி அமைத்து அதில் கண்ணையும், கருத்தையும் கவரும் சிவபெருமானது வடிவங்களை வைத்துள்ளனர். சிவனது இருபத்தைந்து வடிவங்கள் பற்றி ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு விதமான கருத்து காணப்படுகிறது. இங்கு தூண்களில் உள்ள சிற்பங்களை அடிப்படையாக வைத்தே செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.




நந்தி மண்டபத்தின் நயமிகு காட்சி ▸


நந்தி
NANDHI


கம்பத்தடி மண்டபச் சிவ வடிவங்கள்

சிவபெருமானது வடிவங்களில் சிறப்பான வடிவங்கள் 64 ஆகும். அதனுள்ளும் மிகச்சிறந்த வடிவங்கள் 25 என்பர். சிவபெருமானது 25 வடிவங்களைப் பற்றி சிவபராக்கிரமம், சிவமகாபுராணம், லிங்கபுராணம் முதலான நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்த 25 வடிவங்கள் என்பது சதாசிவம் எனப்படும் ஐந்துமுக சிவபெருமானது முகங்களின் விரிவாகக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு முகமும் ஐந்தைந்து முகமாக விரிந்து 25 முகங்களாகின்றன. ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்பவையே அவ்வைந்து முகங்கள். இனி இவை ஒவ்வொன்றும் ஐந்தைந்து பிரிவுகளாகக் கூறப்படுவதனை அட்டவணையில் காணலாம்.

கம்பத்தடி மண்டபத்தில் மேற்கண்ட 25 சிற்பங்கள் இடம் பெற்றுள்ளது அங்குள்ள தூண்களில் இரண்டு தூண்களின் கீழ்ப்பகுதியில் விஷ்ணுவின் தசாவதார சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. சிவபெருமானது 25 வடிவங்கள் தூண்களில் இடம் பெற்றுள்ள அமைப்பை நிழல்படம் மற்றும் வரைபடத்தின் வாயிலாக காணலாம்.




▶ கம்பத்தடி மண்டபச் சிவ வடிவங்களின் சிறப்புக் காட்சி



கம்பத்தடி மண்டபச் சிற்பங்களின் அமைப்பு - வரைபடம்

(தோராயமான அளவுகளில்)



1. ஏகபாதமூர்த்தி
2. இடபாரூடர்
3. அர்த்தநாரீசுவரர்
4. அரிஹரன்
5. சக்கரதானர்
6. ஜலந்திரவதைமூர்த்தி
7. தட்சிணாமூர்த்தி
8. கஜசம்ஹாரமூர்த்தி
9. சண்டேச அனுக்கிரகமூர்த்தி
10. பிச்சாடனர்
11. வீரபத்ரமூர்த்தி
12. கிராதார்ச்சுனமூர்த்தி
13. ரிஷபாந்திகமூர்த்தி
14. சோமாஸ்கந்தர்
15. சுகாசனர்
16. கல்யாண சுந்தரேசுவரர்
17. திரிபுராந்தகமூர்த்தி
18. காலசம்ஹாரமூர்த்தி
19. பாசுபதமூர்த்தி
20. நடராசர்
21. காமதகனமூர்த்தி
22. சந்திரசேகரமூர்த்தி
23. உமாமகேசமூர்த்தி
24. லிங்கோத்பவர்
25. விநாயக, இராவண அனுக்கிரகமூர்த்தி
26. நந்தி மண்டபம்
27. பலிபீடம்
28. கொடிமரம்

	1. ஈசானம்	2. தத்புருஷம்	3. அகோரம்	4. வாமதேவம்	5. சத்யோஜாதம்
1.	சோமாஸ்கந்தர்	பிச்சாடனர்	கஜசம்காரர்	கங்காளர்	லிங்கோத்பவர்
2.	இடபாரூடர்	காமாரி	வீரபத்ரர்	சக்ரதானர்	சுகாசனர்
3.	சந்திரசேகரர்	காலாரி	தட்சிணாமூர்த்தி	கஜமுகானுக்கிரகர்	உமாமகேசுவரர்
4.	கல்யாணசுந்தரர்	ஜலந்திராரி	கிராதர்	சண்டேச அனுக்கிரகர்	அரிஅர்த்தர்
5.	நடராசர்	திரிபுராரி	நீலகண்டர்	ஏகபாதர்	அர்த்தநாரி

ஏகபாதமூர்த்தி

மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களை செய்து வருவதாக பல புராணக்கதைகள் உள்ளன. ஆனால் சைவ சமயத்தில் முழுமுதற்கடவுள் சிவபெருமானே. அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்பவர். ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களில் சிக்கித் தவிக்கின்றன. அத்தகைய ஆன்மாக்களை மலங்களினின்று விடுவிக்கவே சிவபெருமான் மேற்கண்ட ஐந்தொழில்களைச் செய்து வருகிறார்.

சிவபெருமான் ஒருவரே தனித்து நிற்பவர். அவர் அனாதியானவர். பிறதேவர்களுக்கெல்லாம் இவரே தலைவர். இந்த உலகம் மட்டுமல்ல அண்ட சராசரங்களும் சிவபெருமானின் திருவடியின் கீழ் உள்ளன என்றகருத்தை உணர்த்துவதே ஏகபாதமூர்த்தி சிற்பம் ஆகும். இச்சிற்பம் நான்கு கரங்களுடன் ஒரே பாதம் கொண்டு காணப்படுகிறது. அடியவர் இருவர் பாதத்தினருகே வணங்கிய கோலத்தில் இடம் பெற்றுள்ளனர். கைகள் மழு, மான் மற்றும் அபய, வரதத்தில் இடம் பெற்றுள்ளன.



▼ இடபாரூடர், ஏகபாதர்

இடபாரூடர்

ஏகபாதமூர்த்தி சிற்பத்திற்கு அடுத்ததாக இடம் பெற்றிருப்பது இடபாரூடர் சிற்பமாகும். இடபாரூடர் என்பது சிவபெருமான் பார்வதியுடன் தனது வாகனமான இடபம் எனும் எருதின் மேல ஒருகாலை மடக்கி ஒருகாலைத் தொங்கவிட்டு அபய வரத முத்திரை காட்டி அமர்ந்த கோலத்தில் அருள்பாலிப்பதாகும். இந்த இடபத்தை தர்மதேவதை என்றும் திருமால் என்றும் இருவிதமாக அழைப்பர். அது பற்றிய கதை ஒன்றும் வழங்கப்படுகிறது.

திரிபுர அசுரர்கள் தேவர்களுக்குத் துன்பம் கொடுத்தனர். அவர்களை அழித்துத் தங்களை காக்குமாறு தேவர்கள் அனைவரும் சிவபெருமானை வேண்டினர். சிவபெருமானும் அவர்களது வேண்டுதலை ஏற்று அசுரர்களை அழிக்க செல்வதற்குத் தேவர்களிடம் தேர் ஒன்று செய்யுமாறு கூறி தேர் தயார் ஆனதும் அசுரர்களை அழிக்க தேர் ஏறுகிறார். அப்பொழுது தேரின் அச்சு முறிந்துவிடவே திருமால் இடப உருவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினார். இதனால் சிவபெருமானுக்கு மால்விடை ஏறியவர் என்ற பெயரும் இடபாரூடமூர்த்தி எனும் பெயரும் வழங்கப்படுறது.

பின்னர் திருமாலுக்குத் தான்தானே சிவபெருமானையே தாங்குகிறோம் என்றஆணவம் உண்டாயிற்று. அந்த ஆணவத்தைச் சிவபெருமான் அழித்தார். தன் தவறை உணர்ந்த திருமால் என்றும் தங்களைத் தாங்கும் தரும விடை போல மால்விடை என்ற பெருமையைத் தமக்கு அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

இதனால் திருமாலுக்கு மால்விடை என்றபெயர் ஏற்பட்டதாகச் சைவ சமயத்தைச் சேர்ந்த சிவபராக்கிரமம் எனும் நூல் கூறுகிறது.

அர்த்தநாரீசுவரர்

இடபாரூடர் சிற்பத்திற்கு அடுத்து அமைந்திருக்கும் சிற்பம் அர்த்தநாரீசுவரர் சிற்பமாகும். அர்த்தநாரீசுவரர் என்பது சிவபெருமானும், பார்வதியும் இணைந்த உருவமாகும். எனவே இவ்வுருவத்தில் வலப்பக்கம் சிவபெருமானது பாதி உருவமும், சிவபெருமானுக்கு இடப்பக்கம் பார்வதி தேவியின் பாதி உருவமும் காட்டப்படும். இந்த அர்த்தநாரியின் தத்துவம் என்பது இவ்வுலகம் நிலைத்து இருக்க வேண்டும் எனில் உயிர்கள் உற்பத்தி அவசியம், அந்த உயிர்களின் உற்பத்திக்கு ஆண், பெண் இணைவு இன்றியமையாதது என்பதை உணர்த்துவதாகும். மேலும் சக்தி இன்றி சிவமில்லை, சிவம் இன்றி சக்தி இல்லை. எனவே ஆணின்றி பெண் இல்லை. பெண் இன்றி ஆண் இல்லை என்பதால் ஆண், பெண் பேதமற்று வாழ வேண்டும் என்ற கருத்தை உணர்த்துவதாக இது அமைகின்றது.

திருக்கயிலாய மலையில் உமையோடு எழுந்தருளியுள்ள சிவபெருமானை இந்திரன் உள்ளிட்ட அனைத்துத் தேவர்களும் சென்று வணங்கினர். அப்பொழுது முனிவர்களுள் ஒருவரான பிருங்கி என்பவர் பார்வதி தேவியை வணங்க விருப்பம் இன்றிச் சிவபெருமானை மட்டும் வணங்கினார். இதனால் வெறுப்புற்ற பார்வதி தேவி பிருங்கி முனிவரின் உடலில் சக்தி வடிவாக உள்ள தசைகளை சுவாசக்காற்றால் தன்னுள் இழுத்துக் கொண்டாள். பிருங்கி முனிவர் எலும்பையும், நரம்பையும் மட்டும் கொண்டுத் தள்ளாடி நிற்கவே சிவபெருமான் தன்னை மட்டும் வணங்கியதால்தானே இந்நிலை ஏற்பட்டது என எண்ணி முனிவருக்கு மேலும் ஒரு கால் கொடுத்தார். அதன் பின்பு முனிவர் சிவபெருமான் முன்பு ஆடிப்பாடி வணங்கினார். இதனால் வருத்தமுற்ற பார்வதிதேவி தவம் இயற்றச் சென்றாள். நீண்ட நாட்கள் தூணின் மீது நின்று தவம் செய்த பார்வதி தேவியின் தவத்தைப் பாராட்டி, பார்வதியின் வேண்டுகோளின்படி தனது உடம்பில் இடப்பாகத்தைத் தந்தார்.

சிற்பத்தில் அர்த்தநாரீசுவரர் உருவத்தைக் கூர்ந்து நோக்கினால் வேறுபாட்டைக் காணலாம். மகுடத்தில் பாதி ஜடாமகுடமாகவும், பாதி கரண்டமகுடமாகவும் அமைந்துள்ளது. காதுகளில் வலப்புறத்தில் மகர குண்டலமும் இடப்புறத்தில் பத்ரகுண்டமும்; இடம் பெற்றுள்ளது. கைகளில் ஆயுதங்களில் வேறுபாடு காணப்படுகிறது. வலப்பக்க மேல்கரத்தில் தமருகமும்; இடப்பக்க மேல்கரத்தில் மலரும் காட்டப்பட்டுள்ளது. கால்பகுதியில் வலப்புறம் புலித்தோல் போர்த்தியபடியும், இடப்புறம் கணுக்கால் வரையிலான உடை அமைப்புடனும் அமைந்துள்ளது.



◀ அர்த்தநாரீசுவரர்

அரிஹரன்

அர்த்தநாரீசுவரர் சிற்பத்திற்கு அடுத்து இடம் பெற்றிருப்பது அரிஹரன் சிற்பமாகும். அரிஹரன் என்பது சிவபெருமான் மற்றும் திருமால் ஆகிய இரு உருவங்களின் இணைந்த உருவமாகும். இவ்வுருவமானது அர்த்தநாரீசுவரர் உருவத்தில் பாதி உருவம் பார்வதி தேவிக்கு அளிக்கப்பட்டது போல் இதில் பார்வதி தேவிக்குப் பதிலாக திருமாலது உருவம் அமையும். தலைக்கு மேல் ஒரு பக்கம் ஜடாமுடியும், மறுபுறம் கிரீடமும், காதுகளில் ஒருபுறம் மகரகுண்டலமும், மறுபுறம் குழையும், கைகளில் வலதுபுறம் தமருகமும் இடதுபுறம் சங்கும், கால்பகுதியில் வலதுபுறம் புலித்தோலும் இடதுபுறம் கணுக்கால் வரை ஆடையும் காணப்படுகிறது.

தமிழகத்தில் பக்தி இலக்கிய காலமான கி.பி.6–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9–ஆம் நூற்றாண்டு வரையில் சைவ சமயமும், வைணவ சமயமும் தோன்றி பிறசமயங்களான சமணம், பௌத்தத்தை விரட்டிக் காலூன்றின. அதேபோல் சைவ சமயத்திற்கும், வைணவ சமயத்திற்குமிடையே போட்டிகள் தொடங்கி பலவிதமான புராணங்கள் சைவ சார்புடையதாகவும், வைணவ சார்புடையதாகவும் எழுந்தன. இதன் காரணமாக இரண்டு சமயங்களையும் இணைத்து பார்க்க வேண்டும் என்றநோக்கில் சிவபெருமானையும், திருமாலையும் இணைத்து முன்னரே தோற்றுவிக்கப்பட்ட அரிஹரன் எனும் சிற்பத்தைக் கோயில்களில் அதிக அளவில் இடம் பெற செய்தனர். கம்பத்தடி மண்டபத்தில் அமைந்துள்ள இத்தூணில் அர்த்தநாரீசுவரர் அருகில் அரிஹரன் தொடர்புடைய சிற்பங்களை அருகருகே அமைத்திருப்பது அருமையான காட்சியாக அமைகிறது.



அரிஹரன் ▸

சக்கரதான மூர்த்தி

இத்தூணின் உள்பக்கத்தில் இடம் பெற்றிருப்பது சக்கரதானமூர்த்தி சிற்பமாகும். இதில் சிவபெருமான் திருமாலுக்கு சக்ராயுதத்தைத் தானம் கொடுப்பதாக செதுக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை திருமால் குபன் என்னும் மன்னன் காரணமாகத் ததீசி முனிவருடன் போர்புரிய வேண்டியதாயிற்று. ததீசி முனிவர் மிகவும் தவவலிமை மிக்கவராதலால் அவரை எதிர்க்க பலம் பொருந்திய ஆயுதம் தேவை என்பதை உணர்ந்தார். அதனைப் பெற சிவபெருமானை வழிபாடு செய்தார். தினமும் ஆயிரம் தாமரை மலர்களால் சிவலிங்கத்தைப் பூசை செய்தார். ஒருநாள் சிவபெருமான் திருமாலின் பக்தியை உலகறிய செய்ய தாமரை மலர்களில் ஒன்றைக் காணாமல் செய்தார். பூசை முடிவில் 1000–ஆயிரமாவது மந்திரத்தைச் சொல்லும் போது அதற்குரிய தாமரை மலரைக் காணாத திருமால் தனது தாமரை போன்றகண்களில் ஒன்றைப் பிடுங்கி பூசையை நிறைவு செய்தார். இதனால் மகிழ்ச்சியுற்ற சிவபெருமான் திருமாலுக்கு மீண்டும் கண் கொடுத்து, இனி உனக்கு "கமலக்கண்ணன்" என்ற பெயர் நிலைக்கும் என்று கூறி வரமருளினார். மேலும் பலம் பொருந்திய சக்கரப்படையைத் திருமாலுக்கு கொடுத்து இதனால் யாரையும் வெல்லலாம் என்று கூறியருளினார். இதுபோலவே சிவமகா புராணத்தில் பல கதைகள் சிவனது சிறப்பினை உயர்த்தியும், அவரே முழுமுதற் கடவுள் என்றும், பிறகடவுளர் அவரை வணங்குவது போன்றும், அவரை வணங்கி ஏதேனும் பெற்று கொள்வது போன்றும் இடம் பெறுகின்றன. வைணவத்தில் விஷ்ணுவே முழுமுதற் கடவுளாகவும், பிறகடவுளர் அவரை வணங்குவது போன்றும் கதைகள் பல இயற்றப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



◂ சக்கரதான மூர்த்தி

ஜலந்திரவதை மூர்த்தி

இரண்டாம் தூணின் வடக்குப்பக்கம் ஜலந்திரவதை மூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ளது. இச்சிற்பத்தில் சிவபெருமான் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளார். அவரது வலக்கை கீழே எதையோ காட்டி நிற்கிறது. அக்கை காட்டுமிடத்தில் தூணின் பக்கவாட்டில் ஜலந்திரன் கையில் சக்கரம் போன்ற ஒன்றை ஏந்தியது போல் செதுக்கப்பட்டுள்ளான். ஜலந்திரனது தலைக்குப்பின் அக்னிகேசம் காட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் ஒருசமயம் இந்திரனுடன் போரிடும்படியான சூழலில் உருத்திர உருவம் கொண்டார். அதனால் அடைந்த கோபத்தில் உண்டான வியர்வையைத் துடைத்து எறிந்தார். அது மேல்திசையில் உள்ள கடலில் விழுந்து ஒரு மகவு வடிவம் பெற்றது. அச்சிறுவனைக் கடல் அரசன் தன் மகனாகக் கருதி வளர்த்து வந்தான். ஜலமாகிய நீரில் பிறந்ததினால் ஜலந்திரன் எனப்பெயர் பெற்றான்.

ஜலந்திரன் மயன் எனும் தேவதட்சனை வைத்து அழகிய நகர் ஒன்றைநிறுவி காலநேமியனின் மகளான பிருந்தை என்பவளை மணந்து சுகவாழ்வு வாழ்ந்திருந்தான். பின்னர் தேவர்களோடு போர்புரிய ஆயத்தமானான். தேவர்கள் அவனைக் கண்டு பயந்தனர். இந்திரனும், திருமாலும் ஜலந்திரனோடு போர்புரிய இயலாது தவித்தனர். இந்திரன் ஜலந்திரனுக்குப் பயந்து கைலாயமலையில் சென்று ஒளிந்து கொண்டான். ஜலந்திரன் தன் மனைவி தடுத்தும் கேட்காது இந்திரனை அழிக்கக் கைலாயம் சென்றான். இந்திரனோ தன்னைக் காக்குமாறு சிவபெருமானை வேண்டினான்.

சிவபெருமான் கிழவேடம் கொண்டு இந்திரன் முதலான தேவர்கள் புடைசூழ சலந்திரனை வதைக்கச் சென்றார். எதிரில் சலந்திரன் வரவே எங்கே செல்கிறாய் என வினவினார். அவன் கர்வத்துடன் சிவனோடு போர்புரியச் செல்கிறேன் என்றான். கிழவடிவில் இருந்த சிவபெருமான் "நான் சிவபெருமானுக்கு நிகரானவன்" எனக்கூறி காலால் நிலத்தைக் கீறி ஒரு சக்கரம் போல் வளையத்தை உண்டாக்கி இதனை உன் தலையில் வைத்துத் தாங்க இயலுமா? என்று வினவினார். ஜலந்திரன் கர்வத்துடன் அதைத் தன் தலையில் தாங்கினான். அந்தச் சக்கரம் அவனை இரண்டாகப் பிளந்து சிவபெருமானிடம் சேர்ந்தது. அவனுடன் வந்த அசுரர்களைத் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்து சாம்பலாக்கினார்.



ஜலந்திரவதை மூர்த்தி

தட்சிணாமூர்த்தி

ஜலந்திரவதைமூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ள தூணின் உள்பக்கம் தட்சிணாமூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ளது. தட்சிணாமூர்த்தி சிற்பம் பற்றி மேலும் விரிவாக அறிந்து கொள்ள சுந்தரேசுவரர் கோயில் அர்த்த மண்டபம் எனும் தலைப்பில் தெற்கு தேவகோட்டம் எனும் பகுதியில் காண்க. இங்கு இடம் பெற்றுள்ள தட்சிணாமூர்த்தி மலையின் மேல் அமர்ந்து சின் முத்திரை காட்டிக் காட்சியளிக்கிறார்.



தக்கனின் மகளாகத் தோன்றியதால் தனக்கு தாட்சாயினி என்ற பெயர் நிலைத்து விட்டது. எனவே அப்பெயர் மாறஏதேனும் வழி செய்யுமாறு சிவபெருமானிடம் உமாதேவி வேண்ட. சிவபெருமான் இமயமலையில் தவம் செய்யும் மலைமன்னனுக்கு மகளாகப் பிறப்பாய் என அருளினார். அதன்படி அம்மையார் தாமரை இலை மேல் குழந்தை வடிவம் கொண்டார். குழந்தையை எடுத்து வளர்த்தான் அம்மன்னன். ஐந்து வயதிலிருந்தே அத்தேவியார் தவம் மேற்கொண்டு இறுதியில் சிவனை மணந்தார். தேவியார் தவம் மேற்கொண்டிருந்த போது பிரமனின் புத்திரர்களாகிய சனகன், சனந்தனன், சனாதனன், சனத்குமாரன் ஆகிய நான்கு முனிவர்களும் வேதங்களை ஆராய்ச்சி செய்தும் எங்களுக்கு மனம் அடங்கவில்லை. எனவே வேதத்தின் பொருள் உணர்த்தி எங்களது மனம் அடங்க செய்ய வேண்டும் என வேண்டினர். அதன்படி ஒரு கணம் சிவபெருமான் முனிவர் போல ஆகித் தியானத்தில் நின்றார். அந்த உருவமே தட்சிணாமூர்த்தியாகும். சிவபெருமான் தட்சிணாமூர்த்தி வடிவில் அந்நால்வருக்கும் ஞானநிலையை அருளினார். ஆதலால் தட்சிணாமூர்த்தி சிற்பத்திற்கு கீழ் இந்நால்வரது உருவங்களும் செதுக்கப்படுவது மரபு.

இதே முனிவர்களுக்கு யோகத்தைப் பற்றி உபதேசம் செய்ய எண்ணித் தாமே சிறிது நேரம் யோகநிலையிலிருந்து உபதேசித்தார். இந்நிலையை யோக தட்சிணாமூர்த்தி என்று அழைப்பர். சிவபெருமான் நாரதர், அகத்தியர் முதலியோருக்கு வீணை இலக்கணத்தை உணர்த்தத் தமது திருக்கரத்தில் வீணையை ஏந்தி வாசித்துக்காட்டிய திருக்கோலம் வீணாதர தட்சிணா மூர்த்தியாகும்.

◄ தட்சிணாமூர்த்தி

கஜசம்ஹாரமூர்த்தி

மூன்றாம் தூணின் வடக்கு பக்கம் இச்சிற்பம் இடம் பெற்றுள்ளது. கஜசம்கார மூர்த்தி சிற்பம் பற்றி இருவேறு கதைகள் நிலவுகின்றன. தாருகாவனத்து ரிஷிகள் ஏவிய விலங்குகளுள் யானையும் ஒன்று. சிவபெருமான் அணிமாசித்து மூலம் அந்த யானையின் உடலில் புகுந்து பின்பு யானையின் வயிற்றைக் கிழித்து வெளியே வந்தார். கொன்றஅந்த யானையின் தோலை ஆடையாக அணிந்து கொண்டார் என்று ஒரு கதை உண்டு.

கஜாசுரன் என்றயானை வடிவ அசுரன் பிரமனை நோக்கித் தவமிருந்து "யாராலும் இறப்பில்லை" என்னும் வரம் கேட்டான். பிரமனும் அவ்வரத்தைத் தந்து சிவபெருமானை மட்டும் நீ எதிர்த்தால் அந்நேரமே நீ பெற்றவரம் அழிந்து விடும் எனக் கூறியருளினார். இதனால் கர்வம் கொண்ட கஜாசுரன் இந்திரன் உள்ளிட்ட தேவர்களுக்குத் துன்பம் கொடுத்தான். துன்பமடைந்த அனைவரும் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களை அழிக்க ஓடி வந்த கஜாசுரன் சிவபெருமான் முன் தோன்றினான். சிவனால் தமக்கு அழிவு வந்து விடும் என்பதை மறந்து எதிர்த்து நின்றான். சிவபெருமான் யானை வடிவ அசுரனைப் பார்வதி தேவியும், தன் குமரனும் அஞ்சும்படியாகக் கொன்று அதன் தோலினை உரித்துத் தன் உடலில் போர்த்திக் கொண்டார்.

இங்கு இடம்பெறும் இக் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பமானது 8 கரங்களுடன் யானையைத் தூக்கிச் சுழற்றி அதன் தோலை அசுர வேகமாகச் சுழன்று உரிப்பதாகவும், அருகே தூணின் பக்கவாட்டுப் பகுதியில் பார்வதி தேவி இடுப்பில் முருகனை ஏந்தியபடி அக்காட்சியைக் கண்டு அஞ்சுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. இத்தகு சிற்பம் புதுமண்டபத்திலும் இடம் பெற்றுள்ளது. மேலும் இக் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பத்தைக் கோயில் தூண்களில் சிறு அளவில் பல இடங்களில் காணலாம்.



கஜசம்ஹாரமூர்த்தி ▸



சண்டேச அனுக்கிரகமூர்த்தி

கஜசம்ஹாரமூர்த்தி சிற்பம் இடம் பெறும் தூணின் உட்புறம் சண்டேச அனுக்கிரகமூர்த்தி சிற்பம் இடம்பெற்றுள்ளது. இதில் சிவபெருமான் உமாதேவியோடு இடப வாகனத்தில் தோன்றி தன் சடையில் உள்ள கொன்றை மாலையை அவருக்குச் சூட்டிச் சண்டேச பதவி அளிக்கிறார்.

சோழவள நாட்டில் வேதியர் குலம், காசிப கோத்திரத்தில் பிறந்த யச்சதத்தன் அவன் மனைவி பத்திரை ஆகிய தம்பதியருக்கு விசாரசருமர் என்பவன் பிறந்தான். அவன் சகல சாத்திரங்களையும் யாரும் கற்று கொடுக்காமலேயே அறிந்து முற்பிறவியில் பெற்றநல்லறிவின் தொடர்ச்சியுடன் விளங்கினான். சிவபெருமான் மீது பக்தி செலுத்தினான். அவன் அந்த ஊர்ப் பசுக்களை மேய்க்கும் பணியை மேற்கொண்டான். அப்பசுக்களை மண்ணி ஆற்றங்கரையில் மேய்க்கும் பொழுது ஆற்றங்கரையில் மணலினால் சிவலிங்கம் செய்து பசுக்களில் பால் கறந்து சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்தான். இதனைக் கண்ணுற்றசிலர் பசுவின் உரிமையாளரிடம் சொல்ல அவர்கள் விசாரசருமனின் தந்தையிடம் கூற, இது உண்மையானால் இனிமேல் அத்தகு தவறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என உறுதி கூறினார். மறுநாள் விசாரசருமனின் நடவடிக்கைகளை மறைந்திருந்து கவனித்தார் விசாரசருமன் பசுவின் உரிமையாளர்கள் சொன்னதைப் போல செய்து கொண்டிருந்ததைத் தடுத்தார். பால் குடங்களைக் காலால் எட்டி உதைத்தார். இதனால் உடனே அங்கிருந்த ஒரு கொம்பை விசாரசருமன் கையில் எடுக்க அது மழுப்படையாக மாறியது. அம்மழுவால் தன் தந்தையின் காலை வெட்டினார். அப்பொழுது சிவபெருமான் பார்வதியுடன் தோன்றித் தனது சடையில் அணிந்திருந்த கொன்றைமாலையை விசாரசருமனது தலையில் சூட்டி "சண்டேசர்" எனும் பட்டம் அளித்தார்.

தமிழகத்தில் பல கோயில்களில் இச்சண்டேச அனுக்கிரகமூர்த்தி சிற்பம் இடம் பெற்றிருப்பினும் கங்கை கொண்ட சோழபுரம் சிவன் கோயிலில் இடம் பெற்றுள்ள சிற்பமே மிக அழகிய, ஈடு இணையற்ற, உலகப்புகழ் பெற்ற பலராலும் பாராட்டப் பெற்ற சிற்பமாகும்.

▲ சண்டேச அனுக்கிரகமூர்த்தி

பிச்சாடனர்

நான்காம் தூணின் வடக்குப்பக்கம் வீரபத்ரரது சிற்பமும், பிச்சாடனர் சிற்பமும் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. இப்பிச்சாடனர் சிற்பம் நான்கு கரங்களுடன் இடம் பெற்றுள்ளது. பின்பக்கம் தோளில் சூலம் தாங்கி பின்னிருகரங்களில் மழுவும், மானும் கொண்டு காணப்படுகிறார். முன்னிரு கைகளில் வலக்கை மான்குட்டிக்கு அபயம் அளிப்பதாயும், இடது கையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தியும் அமைக்கப்பட்டுள்ளார். இடது பக்கம் பூதகணம் ஒன்று தலையில் பாத்திரம் ஏந்தியுள்ளது. பிச்சாடனர் தொடர்பான கதையை முதலிப்பிள்ளை மண்டபம் என்னும் தலைப்பில் காண்க.

வீரபத்ரமூர்த்தி

பிச்சாடனமூர்த்திக்கு அருகில் அமைந்திருப்பது வீரபத்ரமூர்த்தி சிற்பமாகும். இச்சிற்பம் எட்டு கரங்களுடன் ஆயுதங்கள் ஏந்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீரபத்திரர் சிற்பம் முறுக்கிய மீசையுடனும், காலுக்கடியில் கிடக்கும் அசுரனைக் கையில் உள்ள சூலத்தால் குத்திக் கொல்வதாகவும் அமைந்துள்ளது.

திதி, அதிதி என்பவர்கள் காசிப முனிவரின் இருமனைவியர். இவர்களைப் பெற்றவர்கள் தேவர்களும், அசுரர்களும் ஆவர். இவர்கள் எப்பொழுதும் பகை கொண்டும் போர்செய்து கொண்டும் இருந்தனர். அந்நிலையில் இந்திரன் தலைமையில் தேவர்கள் ஒன்றுகூடி அசுரர்களைக் கொன்று குவித்து மிஞ்சியவர்களை விரட்டினர். அவ்வசுரர்கள் தம் குலகுரு சுக்ராச்சாரியாரிடம் இதுபற்றி கூற அவர் வீரமார்த்தாண்டன் எனும் வீரனைத் தேவர்களை வெல்வதற்கான வரம் பெற வேண்டி பிரமனை நினைத்து தவம் இயற்ற செய்தார். அவ்வாறேஅவன் தவம் இயற்றி மூன்று உலகத்திலும் தன்னை வெல்ல யாரும் இல்லாதபடி அரசாளும் வரம் பெற்றான். இதன் காரணமாக அகந்தை கொண்டு தேவர்களைத் துன்புறுத்தி, இந்திரனை வென்று, முனிவர்கள் செய்யும் வேள்விகளை அழித்தும் வந்தான். துன்புற்ற தங்களைக் காக்குமாறு தேவர்கள் சிவபெருமானை வேண்டினர்.

சிவபெருமான் வீரபத்திரனை எழுப்பி வீரமார்த்தாண்டனை அழித்து வரும்படிக் கட்டளையிட்டார். அதன்படி வீரபத்திரன் வீரமார்த்தாண்டனை அழித்தார். இவ்வீரபத்திரன் சிவனது அம்சம் என்பதால் பல கரங்களோடு உக்கிரமாகக் காட்டப்பட்டுள்ளார்.


இவ்வீரபத்ரரைக் கோயிலில் காட்டும் போது அகோர வீரபத்ரர், ஊர்த்துவமுக வீரபத்ரர், நீர்த்துவமுக வீரபத்ரர், அதோமுகவீரபத்ரர் எனப் பல விதங்களில் அமைப்பர்.



வீரபத்ரமூர்த்தி, பிச்சாடனர் ▶

கிராதார்ச்சுனமூர்த்தி (அ) கிராதமூர்த்தி

நான்காம் தூணின் கிழக்குப் பக்கம் கிராதார்ச்சுனமூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ளது. கௌரவர்களால் பாண்டவர்கள் காட்டிற்கு துரத்தப்பட்டனர். காட்டில் எழுந்தருளிய வியாசரை அனைவரும் வணங்க கால வித்தியாசத்தால் துன்பப்பட்ட அரசர்களது கதைகளைச் சொல்லி, நீங்கள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அவனது அருளைப் பெறுங்கள் என அருள்புரிந்தார். அதன்படி அர்ச்சுனன் சிவபெருமான் வீற்றிருக்கும் மலையில் சென்று ஒருகாலில் நின்று, மறுகாலை மடக்கி நின்றகாலின் தொடையில் வைத்து இருகரங்களையும் தலைக்கு மேலே உயர்த்தி, தவம் செய்தான். அப்பொழுது கௌரவர்கள் அவனது தவத்தைக் கெடுக்க அவர்களுக்கு வேண்டிய மூகாசுரனை ஏவினர். பன்றியுருவம் உடைய அவ்வசுரன் அர்ச்சுனனது தவத்தைக் கெடுக்கச் செல்வதை அறிந்த சிவபெருமான் வேடன் உருக்கொண்டு அவனை அழிக்க சென்றார். அப்பொழுது பார்வதி தேவி வேட்டுவச்சி வேடம் கொண்டு தன் மகன் குமரனைக் குழந்தையாக்கிக் கையில் கொண்டு சிவபெருமானைப் பின் தொடர்ந்தாள். வேதங்கள் நான்கும் வேட்டை நாய்களாயின. கணங்கள் வேட்டுவக் கூட்டமாயின. இவ்வாறு வந்த போது மூகாசுரன் அர்ச்சுனனை அழிக்க வேகமாக ஓடினான். இதனை உணர்ந்த அர்ச்சுனன், தவம் அழியுமே எனக் கருதி மூகாசுரனை நோக்கி அம்பினை எய்தான் அதே நேரத்தில் வேடனாக வந்த சிவபெருமானும் பன்றியின் மேல் அம்பை ஏவ இருவரும் ஏவிய அம்புகள் பட்டுப் பன்றி இறந்து, இதனால் அர்ச்சுனனுக்கும், சிவபிரானுக்கும் சொற்போர் நடந்தது. இறுதியில் அர்ச்சுனனது வில்லின் நாணை சிவபெருமான் அறுத்தார். கோபம் கொண்ட அர்ச்சுனன் வில்லால் வேடனின் தலையில் அடிக்க அவ்வலி அனைத்துயிர்களுக்கும் வலிக்க அர்ச்சுனன், சிவபெருமானே வேடன் என்பதை உணர்ந்து வணங்கினார். அர்ச்சுனன் கேட்ட வரத்தின்படி அவனுக்கு எல்லாம் வல்ல பாசுபதம் எனும் அஸ்திரம் அளித்து அருள்புரிந்தார்.



அர்ச்சுனன் ▸
பாசுபதாஸ்திர மூர்த்தி ▸
ரிசபாந்திகமூர்த்தி ▸


ரிசபாந்திகமூர்த்தி

சிவபெருமான் தனது வாகனமான ரிசபத்தில் சாய்ந்தபடி உமையுடன் காட்டப்பட்டுள்ளது. ரிசபத்தின் மேல் சாய்ந்திருப்பதால் இச்சிற்பம் ரிசபாந்திகர் என அழைக்கப்படுகிறது. இச்சிற்பம் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் அருகில் விஷ்ணு தன் கண்ணைத் தோண்டுவது போன்றசிற்பம் இடம் பெற்றுள்ளது. இச்சிற்பம் பற்றிய கதையினை சக்கரதானமூர்த்தி சிற்பப்பகுதியில் காண்க. இவ்விரு சிற்பத்திற்கும் ஒரே கதையே இருவேறு சூழலில் கூறப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் திருமால் சங்கு, சக்கரத்துடன் காட்டப்பட்டுள்ளார்.



சோமாஸ்கந்தர்

இத்தூணின் உள்பக்கம் சோமாஸ்கந்தர் சிற்பம் இடம் பெற்றுள்ளது. சோமாஸ்கந்தர் என்பது சிவபெருமானும் பார்வதிதேவியும் அமர்ந்திருக்க இருவருக்கும் இடையில் முருகப்பெருமான் சிறுகுழந்தை வடிவில் இடம் பெறுவதாகும். தமிழகக்கோயில்களில் இத்தகைய சோமாஸ்கந்தர் சிற்பம் பல்லவர் காலத்திலேயே இடம்பெறத் துவங்கிவிட்டது. பல்லவரது குடைவரைக் கோயில்களில் இத்தகு சிற்பம் தவறாமல் இடம்பெறும். பாண்டியர்களால் வெட்டப்பட்ட குடைவரைகளில் மதுரை, திருப்பரங்குன்றம் கோயிலில் மட்டும் சிவபெருமானது கருவறையில் உள்ள இலிங்க உருவத்தின் பின்புறம் அமைந்துள்ள மேற்குப் பக்கசுவரில் இத்தகு சோமாஸ்கந்தர் சிற்பம் இடம் பெறுகிறது. சூரபத்மன் எனும் அசுரன் தேவர்களுக்குத் துன்பங்கள் செய்யவே தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். வல்லமையுடைய ஒரு மகனைப் பெற்று எங்கள் துயர் துடைக்க வேண்டும் என வேண்டினர். அவர்களது வேண்டுகோளுக்கு மனம் இரங்கிச் சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிருந்து வெளியான தீப்பொறிகளை வாயு தேவரும் அக்னி தேவரும் ஏந்தி கங்கையிடம் ஒப்படைத்தனர். கங்காதேவி அதனைச் சரவணப் பொய்கையில் இட்டாள். அப்பொறிகள் ஆறு குழந்தைகளாகத் தோன்றின. இதனையறிந்த சிவனும், பார்வதி தேவியும் இடபவாகனம் ஏறிச் சரவணப்பொய்கை அடைந்தனர். பார்வதி ஆறு குழந்தைகளையும் அணைக்க அக்குழந்தைகள் ஒன்று சேர்ந்து ஆறு தலைகள், பன்னிரெண்டு கைகளுடைய குழந்தையானது. பின்னர் அக்குழந்தையை இருவருக்கும் இடையில் இடப வாகனத்தில்



▶ சோமாஸ்கந்தர்



இடம் பெறச் செய்து கைலாயம் அடைந்தனர். இந்த உருவமே சோமாஸ்கந்தமூர்த்தி எனப்படுகிறது. சோமாஸ்கந்தர் சிற்பத்தில் முருகப்பெருமான் ஒருதலை, இருகரங்களுடன் மட்டுமே காட்டப்படுகிறார்.

குமாரசம்பவம் எனும் வடமொழி நூலில் கந்தனது பிறப்பைக் கூறும் போது சிவபெருமானும் பார்வதியும் முயங்கிக் கூடிய போது தேவர்கள் பார்த்துவிட அதைக் கண்டு பார்வதிதேவி வெட்கத்தால் ஓடிஒளிந்து கொள்கிறாள். அப்பொழுது சிவபெருமானிடமிருந்து வெளியான இந்திரியத்தை அக்னிதேவன் கையில் தாங்கி சரவணப்பொய்கையில் விட்டதாக எழுதப்பட்டுள்ளது. கம்பத்தடி மண்டபத்தில் இடம் பெற்றுள்ள சோமாஸ்கந்தர் சிற்பத்தின் கீழ் நரியைப் பரியாக்கிய கதைச்சிற்பம் இடம் பெற்றுள்ளது. இக்கதையை ஆயிரக்கால் மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் குதிரைச் சேவகன் எனும் தலைப்பில் காண்க.

சுகாசனர்

நான்காம் தூணுக்கு எதிராகத் தெற்குப் பக்கம் அமைந்துள்ள 5-வது தூணின் உள்பக்கமான வடக்குப்பக்கம் இடம் பெற்றிருப்பது சுகாசனமூர்த்தி சிற்பமாகும். சுகாசனமூர்த்தி சிற்பம் என்பது கைலாய மலையில் சிவபெருமான் நான்கு கரங்களுடன் மானும், மழுவும் ஏந்தியவராய் ஒருகாலை மடக்கி, ஒருகாலைத் தொங்க விட்ட நிலையில் அமர்ந்திருக்கக் கூடிய காட்சியாகும்.

சுகாசனத்தில் அமர்ந்திருக்கக்கூடிய சிவபெருமானிடம் பார்வதிதேவி ஆகமங்களின் உண்மைப் பொருளை விளக்குமாறு கேட்க, சிவபெருமான் வேத சிவாகமத்தின் தோற்றம் பற்றியும் பொருள் பற்றியும் விளக்கினார். ஆசனங்களில் சிறந்த சுகாசனத்தில் அமர்ந்து, சிவபெருமான் உமாதேவிக்கு ஆகமத்தின் பொருளுரைத்த இவ்வமைப்பே சுகாசனமூர்த்தி என அழைக்கப்படுகிறது.

◂ சுகாசனர் (அ) உமாசகித மூர்த்தி


கல்யாணசுந்தரேசுவரர்

இத்தூணில் சுகாசனருக்கு அருகில் அமைந்திருப்பது கல்யாணசுந்தரேசர் சிற்பமாகும். இச்சிற்பமானது மலையரசனது மகளாகப் பிறந்த பார்வதி தேவியைச் சிவபெருமான் மணக்கும் போது தோன்றிய கோலத்தைக் குறிப்பதாகும். மேலும் மதுரைத் திருவிளையாடலில் பார்வதிதேவி மதுரையை ஆண்ட மலையத்துவச பாண்டியன் எனும் மன்னனுக்குத் தடாதகை எனும் மகளாகப் பிறக்க, பின் சிவபெருமான் திருமணம் செய்து கொள்கிறார். இக்கதையை விளக்கும் சிற்பமாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம். இனி இவ்விரண்டு கதைகளையும் காணலாம்.

பார்வதி தேவி ஒருமுறை சிவபெருமானிடம்; "தாட்சாயினி என்று பெயர் பெற்ற நான் அந்த அவப்பெயரை மாற்ற அருள வேண்டும்" என வேண்டினார். அதன் காரணமாக சிவபெருமான் அளித்த வரத்தின்படி, பார்வதி தேவி மலையரசன் பர்வதராசன் என்பவனின் மகளாகப் பிறக்கிறாள். ஐந்து வயதானவுடன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினாள். பார்வதியைப் பிரிந்த சிவபெருமான் தவத்தில் ஈடுபட, உலகம் முழுவதும் கலவி இன்றிப் படைப்பே இல்லாமல் போனது. இதனால் சிவபெருமானது தவத்தைக் கலைக்கத் தேவர்கள் மன்மதனை அனுப்புகின்றனர். மன்மதன் சிவபெருமான் மீது மலர் அம்புகளைத் தொடுக்க, கோபம் கொண்ட சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தார். பின் மன்மதனின் மனைவி ரதியின் வேண்டுகோளினை ஏற்று, எனது திருமணத்திற்குப் பின் மன்மதன் உயிர்பெற்று எழுந்து உனது கண்களுக்கு மட்டும் தோன்றுவான் என்று, வரம் அளித்துவிட்டுப் பார்வதி தேவியை நோக்கிப் பயணமானார். மலையரசனான பர்வதராசனிடம் முறையாக சிவபெருமானுக்காக சப்தரிசிகள் சென்று பெண் கேட்டு நாள் குறித்தனர். உரிய நாளில் யாவரும் கைலாயம் அடையவே வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இந்நிலையைச் சமப்படுத்தவே, அகத்தியரைப் பொதிகை மலைக்குச் சிவபெருமான் அனுப்பினார். உலகம் மீண்டும் சமமானது. பர்வதராசன் தனது மகளின் கையைச் சிவபெருமானது திருக்கரத்தில் கொடுத்தார். சிவபெருமான் மாங்கல்யம் கட்டித் திருமணம் முடித்தார். மன்மதன் உயிர் பெற்று எழுந்தான்.

இங்கு தூணில் காணப்படும் இச்சிற்பம் கல்யாணசுந்தரர் என்றாலும் சிவபுராணத்தில் வரும் கதையை அடிப்படையாக வைத்து செதுக்கப்படாமல் திருவிளையாடற்புராணத்தை அடிப்படையாகக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. (இக்கதையை மீனாட்சியம்மை சிற்ப அமைப்பு எனும் பகுதியில் காண்க). இச்சிற்பத்தில் மீனாட்சியின் அண்ணனான, திருமால் தங்கையின் கையை சிவபெருமானின் திருக்கரத்தில் வைத்து, தாரை வார்ப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. கீழே பிரமன் வேள்வி செய்து கொண்டிருப்பதாக செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பமே மதுரையைக் குறிப்பால் உணர்த்தும் அழகிய சிற்பமாகும்.

▸ திருக்கல்யாண சுந்தரேசுவரர்


ஸ்ரீ கல்யாண சுந்தரர்
SRI KALYANA SUNDARAR

திரிபுராந்தக மூர்த்தி

இத்தூணின் தென்பகுதியில் இடம் பெற்றுள்ளது திரிபுராந்தகமூர்த்தி சிற்பமாகும். இதில் சிவபெருமான் நான்கு கரங்களுடன் கையில் வில்லும், அம்பும் ஏந்திச் சிரித்த முகத்துடன் காணப்படுகிறார். தேரில் நின்றநிலையில் இடம் பெற்றுள்ள இச்சிற்பத்தில் பிரமன் தேரினைச் செலுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தூணின் எதிரில் தெற்கே இடம் பெறும் தூணில் மூன்று அசுரர்கள் எதிர்த்து நிற்பது போல் மிகப் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

தாருகாசுரனுக்கு மூன்று ஆண்குழந்தைகள் இருந்தனர். அவர்கள் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்றமூன்று ஆண்குழந்தைகள் ஆவர். இவர்கள் பிரமனை நோக்கித் தவம் இருந்து பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான கோட்டைகளைப் பெற்றனர். சிவபெருமான் தவிர ஏனையோரால் தங்களுக்கு இறப்பு இல்லை என வரம் பெற்றனர். பறக்கும் அம்மூன்று கோட்டைகளுடன் சென்று தேவர்களுக்குக் கொடுமைகள் பல செய்தனர். தேவர்கள் இதனை சிவபெருமானிடம் முறையிட சிவன் போருக்குத் தயாரானார்.

மந்திரகேசரி மலைகள் தேரின் அச்சாக, சந்திர–சூரியன் தேரின் சக்கரங்களாக என உலகப் பொருட்களில் இன்றியமையாதன எல்லாம் தேரின் ஒவ்வொரு பாகங்களாக அமைந்தன. வேதங்கள் நான்கினையும் நான்கு குதிரைகளாகப் பூட்டி பிரமன் தேரோட்டினார். இத்தேரில் ஏறி சென்ற சிவபெருமான் தன் திருக்கரத்தில் மேருமலையை வில்லாகவும், வாசுகி எனும் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும், அக்னியை அம்பின் நுனியாகவும், வாயுவை அம்பில் கட்டிய இறகாகவும் கொண்டு அம்பை எய்ய ஆயத்தமானார். அதற்குள், இவ்வாறு நாம் செய்தால் தேவர்கள் மமதை கொள்வார்கள் என எண்ணித் தனது சிரிப்பால் மூன்று கோட்டைகளையும் எரித்தார். இதனால் இவருக்குத் திரிபுராந்தகமூர்த்தி எனப் பெயர் வந்தது. சைவ சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களே இக்கதையில் கோட்டைகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன. சிவபெருமான் ஒருவரே மலங்களைக் கடந்து நிற்பவரும், நம்மிடமுள்ள மலங்களை அழிக்கும் வல்லமை படைத்தவரும் ஆவார். இக்கருத்தையே இச்சிற்பம் உணர்த்தி நிற்கிறது. இச்சிற்பத்தில் சிவபெருமானது வலக்கையில் மேற்கண்ட கதையை அடிப்படையாகக் கொண்டு அம்பில் மிகச்சிறிய விஷ்ணுவின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது சிற்பியின் கலைத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- திரிபுர சம்ஹாரர்
- தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி


திரிபுர சம்ஹாரர்
SAMHARAR



காலசம்ஹாரமூர்த்தி

ஆறாவது தூணின் தெற்குப் பக்கம் காலசம்ஹாரமூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ளது. காலன் என்பது எமன் ஆவான். எமனை சிவபெருமான் வதைக்கும் கதையை அடிப்படையாகக் கொண்டு இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் காலசம்ஹார சிற்பத்தில் சிவபெருமான் சிவலிங்கத்தைப் பிளந்து கொண்டு தோன்றுவதாக அமைப்பர். இங்கு சிவலிங்கத்திற்கு அருகில் நின்று கொண்டு காலனை வதைப்பதாக அமைகிறது. காலசம்ஹார சிற்பத்தை வைணவத்தில் நரசிம்மரோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். வைணவத்தில் பிரகலாதன் எனும் பாலகனைக் காக்கத் திருமால் தூணைப் பிளந்து கொண்டு தோன்றி அவனைக் காக்கிறார். சைவத்தில் மார்க்கண்டேயன் எனும் பாலகனைக் காக்கச் சிவபெருமான் சிவலிங்கத்தைப் பிளந்து கொண்டு தோன்றி அவனைக் காக்கிறார். இனி இது தொடர்பான கதையைக் காணலாம்.



மிருகண்டு முனிவர் என்பவருக்கும் அவரது மனைவி மருத்துவதிக்கும் நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லாததால் காசிக்குச் சென்று இறைவனை வேண்டினார்கள். இறைவன் நூறு வயது வரை வாழும் தீயகுணம் உடைய குழந்தை வேண்டுமா? அல்லது அழகும், அறிவும் அமையப்பெற்று 16 வயது வரை மட்டுமே வாழும் மகன் வேண்டுமா? எனக் கேட்க முனிவர் 16–வயது வரை வாழும் மகன் போதும் என்றார். சிவபெருமானும் வரம் தந்தார். குழந்தைக்கு மார்க்கண்டேயன் எனப் பெயரிட்டனர். அக்குழந்தை சிவ பூசையில் சிறந்து விளங்கிற்று. உரிய காலமும் வந்தது.

ஒருநாள் மார்க்கண்டேயன் சிவ பூசையில் இருந்தபோது எமன் தன் கடமையைச் செய்ய பாசக் கயிற்றை மார்க்கண்டேயன் மீது வீசினார். இதனால் பயந்த மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டான். எமன் வீசிய பாசக்கயிறு இலிங்கத்தில் விழ சிவபெருமான் இலிங்கத்திலிருந்து தோன்றித் தன் இடது காலால் எமனை உதைத்து அழித்தார். பின் எமனது தொழில் நின்றால் என்னால் பாரம் தாங்க இயலாது. எனவே எமனை மீண்டும் எழுப்ப வேண்டும் என பூமித் தாய் கேட்டதற்கு இணங்க மீண்டும் எமனை உயிர்ப்பித்தார்.



▶ காலசம்ஹாரமூர்த்தி
▶ மார்க்கண்டேயன்

பாசுபதமூர்த்தி

இத்தூணின் உள்பக்கம் அமைந்திருப்பது பாசுபத மூர்த்தி எனப்படும் சிற்பமாகும். பாசுபதம் மிகவும் பலம் பொருந்திய அஸ்திரம் அது சிவபெருமானால் அர்ச்சுனனுக்கு வழங்கப்பட்டது.

பாரதப்போர் நடைபெற்றபோது அர்ச்சுனன் மகனான அபிமன்யுவை சயத்ரதன் என்பவன் கொன்றுவிடுகிறான். இதைக் கண்டு மனம் பொறுக்க இயலாத அர்ச்சுனன் அச்சயத்திரதனை நாளைப் போரில் அழிப்பேன். இல்லையேல் தீயில் விழுந்து இறப்பேன் எனச் சபதம் செய்கிறான். இரவில் காட்டில் கண்ணனோடு தங்குகிறான் அர்ச்சுனன். இரவில் கண்ணன் அர்ச்சுனனது உயிரை மட்டும் எழுப்பி தன்னுடன் கயிலாய மலைக்கு அழைத்து சென்றார். இருவரும் சிவபெருமானை வணங்கினர். சிவன் யாது வரம் வேண்டுமெனக் கேட்க முன்னர் ஒரு முறை நிவாதகவசர், காலகேயர்களை அழிக்கப் பாசுபத அஸ்திரம் அளித்தது போல் இப்பொழுதும் பாசுபதம் அளிக்க வேண்டும் என வேண்டினர். சிவபெருமானும் போரில் வெற்றி உண்டாகுக என வாழ்த்தி பாசுபதத்தை அளித்தார். கண்ணனும் அர்ச்சுனனும் திரும்பினர். இவ்வாறு கனவு கண்டு காலையில் விழித்துப் பார்த்தால் தன் அம்பறாவில் பாசுபத அஸ்திரம் இருப்பதைக் கண்டு சிவபெருமானை மனத்தால் மீண்டும் வணங்கி அன்றைய போரில் சயத்திரதன் தலையைக் கொய்து சபதத்தை நிறைவேற்றினான். இவ்வாறு அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அருளிய நிலையிலுள்ள உருவமே பாசுபத மூர்த்தி எனப்படுகிறது. இச்சிற்பத்தின் பக்கவாட்டில் அர்ச்சுனன் சிற்பம் வில்லுடன் காணப்படுகிறது.



பாசுபதமூர்த்தி

நடராசர் (சதாநிருத்த மூர்த்தி)

ஏழாவது தூணில் தெற்கு பக்கம் செதுக்கப்பட்டுள்ள சிற்பமே நடராசர் சிற்பம். இவரை நிருத்த மூர்த்தி என்றும், கூத்தபிரான் என்றும் அம்பலத்தரசன் என்றும் அழைப்பர். நடராசர் சிற்பம் வலது காலை ஊன்றி இடதுகாலைத் தூக்கியபடி அமைக்கப்படும். கூத்துகளுக்கெல்லாம் இவரே தலைவர் என்பதால் நாட்டியக்கலை பயில்வோருக்கு இவரே தலைமைக்கடவுள். நடராசப்பெருமானது சிற்பத்தை அமைக்கும் போது அவ்வினிய நடனத்தைப் பார்வதிதேவி அருகில் இருந்து ரசிப்பது போல் அமைப்பர். இங்கும் அவ்வாறே இச்சிற்பம் அமைந்துள்ளது. சிவபெருமான் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் (அழித்தல்), மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். தமருகத்தைத் தாங்கிய தம் கையினால் தமருகத்திலிருந்து வரும் ஓசையை வைத்து உலக உயிர்களைப் படைக்கிறார். அபயமுத்திரையில் இருக்கும் கையினால் காத்தல் தொழிலையும், பின்பக்க இடது கையில் உள்ள அக்னியால் அழித்தல் தொழிலையும், வலப்பக்கம் நீண்டுள்ள கையினால் அருளல் தொழிலையும், முயலகன் எனும் ஆணவ மலத்தின் மீது ஊன்றியுள்ள திருவடியின் திருப்பாதத்தின் வாயிலாக மறைத்தல் தொழிலையும் செய்து வருவதாகக் கருதப்படுகிறது. சிவனது கோயில்களில் இந்நடராசருக்கு என தனியே கோயில்கள் அமைப்பர். மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலிலும் தனிக்கோயில் இவருக்கு உண்டு என்பதையும், திருவிளையாடற்புராணத்தை அடிப்படையாக வைத்து இங்கு மட்டுமே இவர் கால் மாறி ஆடிய செய்தியையும் முன்னரே கண்டோம்.



▸ நடராசர், (சதாநிருத்த மூர்த்தி)

▸ காமதகன மூர்த்தி

காமதகனமூர்த்தி

நடராசர் இடம் பெற்றுள்ள தூணின் உள்பக்கம் அமைந்துள்ள சிற்பமே காமதகன மூர்த்தியாகும். சிவபெருமானின் மனைவி உமையாள் ஒருமுறை தக்கனுக்கு மகளாகப் பிறந்ததால் தாட்சாயினி எனப்பெயர் பெற்றாள். அப்பெயர் மாறவும், வேறு ஒரு நல்ல பெயர் விளங்கவும் இன்னொரு பிறவி எடுக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டினாள். சிவபெருமானின் அனுக்கிரகத்தால் மலையரசனான பர்வதராசனின் மகளாகப் பார்வதி எனும் பெயருடன் பிறந்து ஐந்தாவது வயதில் சிவபெருமானை நோக்கி தவம் செய்யத் தொடங்கினாள். தன் மனைவியைப் பிரிந்த சிவபெருமானும் யோகத்தில் அமர்ந்ததால் உலகில் உயிர்களின் உற்பத்தி இல்லாமல் போனது. இதனால் தேவர்கள், பிரம்மா மற்றும் திருமாலிடம் ஆலோசனை கேட்க அவர்கள் காமனை அனுப்பி வைக்க ஆலோசனை கூறினர். அதன்படி மன்மதன் தன் மனைவியோடு சிவபெருமான் உள்ள இடத்திற்குச் சென்று, காதலர் நினைவாக இருத்தல், அவரை எண்ணிப் புலம்பல், சோகம், மோகம், மரணம் எனும் பஞ்ச அவஸ்தைகளைத் தரக்கூடிய தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் எனும் ஐந்து மலர்களையும் கொண்டு அம்புகளாக சிவபெருமான் மீது தொடுத்தான். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துக் கொன்றார். அருகிலிருந்த மன்மதனின் மனைவியாகிய ரதி சிவபெருமானிடம் மன்றாடி தனது கணவன் மீண்டும் உயிர்பெற வேண்டினாள். சிவபெருமானும் நான் பார்வதி தேவியை மணம் முடித்ததும் உனது கணவர் உயிர்பெற்று எழுவார். ஆனால் உனது கண்களுக்கு மட்டுமே தெரிவார்; பிறர் கண்களுக்குத் தெரியமாட்டார் என வரம் தந்தார். இந்த நிகழ்ச்சியைச் சித்தரிப்பதாக இச்சிற்பம் அமைகிறது.



இக்கதை தவிர காமதகனமூர்த்தி பற்றிய வேறு ஒரு கதை வடமொழியில் இயற்றப்பட்டுள்ள குமார சம்பவம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. அதன்படி சூரன் எனும் அசுரனை அழிப்பதற்காக ஒரு குழந்தையைப் பெறவேண்டிய சூழல் பார்வதிக்கு ஏற்படுகிறது. அந்நிலையில் சிவபெருமான் யோகநிலையில் இருந்ததால் தேவர்கள் மன்மதன் என்று அழைக்கப்படும் காமனை சிவபெருமானிடத்தில் அனுப்பிக் காமஉணர்வுகளைத் தூண்டும்படிச் செய்கின்றனர். இந்நிலையில் காமன் மலர்க்கணைகளைச் சிவபெருமான் மீது தொடுக்க சிவன் நெற்றிக்கண்ணால் காமனை எரித்து விடுகின்றார் எனக் கந்தனது பிறப்பு தொடர்பான கதையில் இக்காமதகனமூர்த்தி பற்றிய செய்தி இடம் பெறுகிறது. இச்சிற்பமானது இதன் எதிரே உள்ளே தட்சிணாமூர்த்தி சிற்பம் போல் மலைமேல் ஒருகாலைத் தொங்கவிட்டு மறுகாலை மடக்கி அமர்ந்து தியான கோலத்தில் காட்டப்பட்டுள்ளது.

சந்திரசேகர மூர்த்தி

எட்டாவது தூணின் தென்பகுதியில் நின்றகோலத்தில் சிவபெருமான் உமையுடன் உள்ள காட்சியே சந்திரசேகர மூர்த்தி சிற்பமாகும். இதில் சிவபெருமானது முடியில் பிறைச்சந்திரன் இடம் பெற்றுள்ளது. சந்திரசேகரர் சிற்பமானது மூன்று நிலைகளில் காணப்படும். அவை சிவ பெருமான் மட்டும் தனித்திருக்கும் கேவலமூர்த்தி (கேவலம்–தனிமை) உமையோடு சேர்ந்திருக்கும் உமாசகிதமூர்த்தி, உமையைத் தழுவியபடி இருக்கும் ஆலிங்கனமூர்த்தி என்பன. இங்கு இடம் பெறும் சிற்பத்தில் சிவபெருமான் உமையுடன் செதுக்கப்பட்டுள்ளார். எனவே இது உமாசகித சந்திரசேகரமூர்த்தியாகும். இச்சிற்பமானது நான்கு கரங்களுடன் நின்றகோலத்தில், மேற்கரங்களில் மழுவும், மானும் தாங்கியும், கீழ்க்கரங்கள் அபயவரத முத்திரை காட்டியும் உமையுடன் காணப்படுகிறது.

இது தொடர்பாக ஒரு கதை வழங்கப்படுகிறது. பிரமனது மகன்களில் ஒருவனான தட்சனுக்கு 27 பெண்கள். இவர்கள்தான் ஜாதக அலங்காரத்தில் 27 நட்சத்திரங்களாகக் கருதப்படுகின்றனர். இந்த 27 பேரையும் சந்திரனுக்கு மணம் முடித்து கொடுத்தார் தட்சன். அனைவரிடத்திலும் அன்புடனிருந்த சந்திரன் நாட்கள் செல்லச் செல்ல கார்த்திகை, உரோகிணி ஆகிய இருவரிடம் மட்டுமே அன்பு செய்தான். இதனால் மனவருத்தம் கொண்ட பிற பெண்கள் தன் தந்தை தட்சனிடம் முறையிட்டனர். அவர் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு கலையாகத் தேய்ந்து இறுதியில் காணாமல் போய் இறப்பாய் என்று சாபமிட்டார். இதனால் தேய்ந்து வந்த சந்திரன் அதிலிருந்து விடுபட சிவபெருமானைத் தஞ்சம் அடைந்தான். ஒரு கலையுடன் காணப்பட்ட சந்திரனைத் தன் தலையில் எடுத்துச் சூடிக் கொண்டு "நீ என்னை அடைந்ததனால் நாளுக்கொரு கலையாக வளர்ந்தும், தட்சன் சாபத்தால் நாளுக்கொரு கலையாகத் தேய்ந்தும் வாழ்வாய்" என அருள்பாலித்தார். சந்திரனை தன் தலையில் சூடியதால் சந்திரசேகரமூர்த்தி என அழைக்கப் படுகிறார். இக்கதை சிவபராக்ரமத்திலும், பத்மபுராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.




உமாமகேசமூர்த்தி

எட்டாவது தூணின் மேற்குப்பக்கம் இச்சிற்பம் அமைந்துள்ளது. உமாதேவியே உலக உயிர்களுக்கு அன்னையாக விளங்குகிறாள். இவ்வுமை சிவபெருமானுடன் சேர்ந்து இருக்கும் காட்சியே உமாமகேசுவர மூர்த்தி எனப்படும். உலக உயிர்களின் உற்பத்திக்கு அடிப்படையாக சக்தியை, சிவத்தோடு இணைந்த நிலையில் காட்டப்படுவதே உமா மகேஸ்வரமூர்த்தி சிற்பமாகும். சிவபெருமானை விட்டு உமை பிரியும் போதெல்லாம் உலகில் உயிர் உற்பத்தி நின்று விடுவதாக புராணங்கள் கூறுகின்றன.

இலிங்கோத்பவர்

உமாமகேசுவரமூர்த்தி சிற்பத்திற்கு அருகில் அமைந்திருப்பது இலிங்கோத்பவ மூர்த்தி சிற்பமாகும். (இதன் தொடர்பான கதையை சுவாமி கோயில் கருவறைத் தேவகோட்டங்களில் மேற்குப் புறதேவகோட்டம் எனும் தலைப்பில் காண்க.) இலிங்கோத்பவர் சிற்பத்திற்கு கீழ் அதிகாரநந்தி நான்கு கரங்களுடன் வணங்கிய நிலையில் காணப்படுகிறார். கையில் கோல் வைத்துள்ளார். இதே போன்ற சிற்பம் புதுமண்டபத்திலும் இடம் பெற்றுள்ளது. கைலாயத்தில் சிவபெருமானுக்குக் காவலாக இருப்பவர் அதிகார நந்தியாவார். இவர் கையில் கோல் வைத்திருப்பார். சிவபெருமான் உறையும் கோயிலும் கைலாயம் என்பதால் அதிகார நந்தியை இடம்பெற செய்துள்ளனர்.



கணேச, இராவண அனுக்கிரகமூர்த்தி

தூணின் உள்பகுதியில் அமைந்துள்ள சிற்பமே அனுக்கிரக மூர்த்தி சிற்பம். இங்கு இரண்டு அனுக்கிரக மூர்த்திகளின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று இராவண அனுக்கிரகமூர்த்தி. மற்றொன்று கணேச அனுக்கிரக மூர்த்தி என்பன. இந்த இரண்டு பேருக்கும் அனுக்கிரகம் செய்வதை ஒரே அமைப்பில் சிற்பி வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு அருமையாக உள்ளது. இராவண அனுக்கிரகமூர்த்தி சிற்பத்தில் கைலாய மலையை இராவணன் பெயர்க்கும் காட்சியில் மலைக்கு மேலே சிவபெருமான் உமையோடு எழுந்தருளி இராவணனது ஆணவத்தை அழித்து அவனுக்கு அனுக்கிரகம் செய்யும் காட்சி காணப்படுகிறது. ஆனால் அக்காட்சிக்குக் கீழே கணேசருக்கு அனுக்கிரகம் செய்யும் காட்சியில் சிவபெருமானும் உமையம்மையும் இடம் பெறவில்லை. மாறாக இராவண அனுக்கிரக மூர்த்தி சிற்பத்தில் உள்ள இறைவனே கணேசருக்கும் அனுக்கிரகம் செய்வதால் ஓரிடத்தில் மட்டும் இறையுருவை அமைத்துள்ளான் சிற்பி. இவை தொடர்பான கதைகளை இனிக் காணலாம்.

இராவணன் ஒருமுறைக் குபேரனை வென்றுவிட்டுத் திரும்புகையில் கைலாய மலையின் மேல் பறந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனது புட்பக விமானம் கைலாய மலையைக் கடந்து செல்ல இயலவில்லை. உடனே கீழே வந்து தனது 20 கைகளால் கைலாய மலையைத் தூக்கினான். இதனால் மலையே லேசாக அதிரப் பார்வதிதேவி கலக்கமுற்றாள். அதனால் சிவபெருமான் தனது இடதுகைப் பெருவிரலால் மலையை லேசாக அழுத்தினார். அழுத்தியவுடன் இராவணனது கரங்கள் இருபதும் மலைக்குள் சிக்கிக் கொண்டன. இதனால் துயருற்ற இராவணன் சிவபெருமானை வேண்ட இறைவன் அவனை விடுவித்தார். பின்னர் வீணை மீட்டுவதில் வல்லவனான இராவணன் சாமகானம் பாடி சிவபெருமானை மகிழ்வித்தான். இக்கதையை விளக்கும் சிற்பம்தான் இராவண அனுக்கிரகமூர்த்தி.

கணேச அனுக்கிரக மூர்த்தி சிற்பத்தில் சிவபெருமானும், உமாதேவியும் ஒரே பீடத்தில் அமர்ந்திருப்பார். சிவபெருமானுக்கு இடதுபுறம் கணேசர் காட்டப்படுவார். கணேசரது தலையில் கை வைத்து சிவபெருமான் ஆசீர்வதிப்பதாக அமைந்திருக்கும்.



▲ கணேச, இராவண அனுக்கிரகமூர்த்தி

நந்தி அனுக்கிரக மூர்த்தி என்பது நந்தியை கணங்களுக்கு தலைவராக்கும் காட்சியாகும். இதில் நந்தி இருகரங்களுடனும் சாந்தமான முகத்துடனும் காட்டப்பட்டுள்ளார்.

கம்பத்தடி மண்டபத்தில் மேலே பார்த்த தூண் சிற்பங்களைச் சுற்றி இரும்புக் கம்பியால் அடைக்கப்பட்டுள்ளது. இந்த சிற்ப மண்டபத்தில் மேலும் நான்கு சிற்பங்கள் உள்ளன. மேற்கண்ட இம்மண்டபத்திலிருந்து கிழக்கே கோபுரத்தை நோக்கிச் செல்லும் வழியில் வடக்குப் பக்கம் அக்னி வீரபத்ரர் சிற்பமும், அகோரவீரபத்ரர் சிற்பமும், தென்பக்கம் ஊர்த்துவதாண்டவமூர்த்தியும், அதனையடுத்துக் காளியின் சிற்பமும் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் விசயநகர–நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டதாகும். மேலும் இவை நாயக்கரது சிற்பக்கலை அமைப்பில் செதுக்கப் பட்டுள்ளன. இவற்றின் சிற்ப அமைப்பையும் அவை தொடர்பான புராணக் கதைகளையும் இனிக் காணலாம்.

அக்னி வீரபத்ரர்

வீரபத்ரர் தொடர்பான கதையை ஏற்கெனவே கண்டோம். இங்கு அக்னி வீரபத்ரரது சிற்பம் 8 கரங்களுடன் தன் கையில் உள்ள திரிசூலத்தால் அசுரனை வதம் செய்வதாக அமைந்துள்ளது. முகம் உக்ரமாகக் காட்டப்பட்டுள்ளது. தலையில் அனல் மகுடம் இடம் பெற்றுள்ளது. இதனால் தான் இவர் அக்னி வீரபத்ரர் என அழைக்கப்படுகிறார்.



▶ அக்னி வீரபத்ரர்

அகோர வீரபத்ரர்

இச்சிற்பம் 10 கரங்களுடன் செதுக்கப்பட்டுள்ளது. சூலத்தால் அசுரனைக் கொள்வதாக அமைந்துள்ளது. முகம் கோபத்துடன் காட்டப்பட்டுள்ளது. தலையில் ஜடாமகுடம் இடம் பெற்றுள்ளது. பல்வேறு அணிகலன்களுடனும் ஆயுதங்களுடனும் இச்சிற்பம் கோபமான தோற்றத்தில் காணப்படுவதால் இது அகோர வீரபத்ரர் என வழங்கப்படுகிறது.

ஊர்த்துவதாண்டவரும், காளியும்

சுனந்தர் எனும் முனிவர் சிவபெருமானது திருநடனம் காண ஆசை கொண்டுள்ளதாக சிவபெருமானிடம் வேண்ட, திருவாலங்காடு என்னும் இடத்தில் போய் தவம் செய். தக்கசமயத்தில் எனது ஆடலைக் காண்பாய் என சிவபெருமான் கூறினார். இதனால் முனிவர் அங்கு தவம் செய்தார். சிவபெருமான் திருக்கரத்தில் கங்கணமாக இருக்கும் கார்க்கோடகன் எனும் பாம்பு சிவனது திருக்கரத்தில் மமதையால் விசத்தைக் கக்கியது.

இதனால் கைலாயத்தை விட்டு நீங்கி சுகந்த முனிவர் உள்ள இடத்தில் போய் தவம் செய்து மீண்டும் என்னை அடைவாயாக எனச் சிவபெருமான் கூறியபடி அங்கு சென்று தவம் செய்தது. இந்தச் சூழலில் சும்பன், நிசும்பன் எனும் இரு அசுரர்கள் தேவர்களுக்குத் தீங்கு விளைவிக்க, தேவர்கள் பார்வதிதேவியிடம் முறையிட்டனர். இதனால் பார்வதிதேவி அசுரர்களை நான் அழிப்பேன் என உறுதி கூறிக் கடும்தவம் புரிந்து வந்தாள். அச்சயமம் சண்டன், முண்டன் எனும் இரு அசுரர்கள் தேவியின் அழகில் மயக்கம் கொண்டு அடைய நினைத்து முடியாததால் தேவியுடன் போருக்கு நின்றனர். அப்பொழுது தேவியின் தோளிலிருந்து ஒரு சக்தி பிறந்து அவ்வசுரர்கள் இருவரையும் அழித்தது. அந்த சக்தி சண்டன், முண்டனை அழித்ததால் சாமுண்டி என அழைக்கப்படுகிறாள். சண்டன், முண்டன் இறந்ததை அறிந்து சும்பனும் நிசும்பனும் தனது படையோடு தேவியுடன் சண்டைக்கு வந்தனர். தேவி சப்தமாதர்களைத் தோற்றுவிக்க அவர்கள் அசுரர்படையை அழித்தனர். தேவி சும்பனையும், நிசும்பனையும் வதம் செய்தாள். இதனைக் கேள்வியுற்ற சும்ப, நிசும்பனின் தங்கை மகனான இரத்தபீசன் போருக்கு வந்தான். இவன் யாருடன் போர் செய்தாலும் அப்பொழுது தன் உடம்பிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு இரத்தத் துளியிலிருந்தும் அவனைப் போலவே அசுரர்கள் தோன்றுவர் என்று வரம் பெற்றவன். இவனை அழிக்க சப்தமாதர்கள் இவனுடன் போர் செய்தனர்.





இவனது உடம்பில் இருந்து வெளிவந்த இரத்தத்திலிருந்து புதிய அசுரர்கள் தோன்ற இதனைத் தேவியிடம் முறையிட்டனர் சப்தமாதர்கள். இதனால் தேவி, காளியைத் தன் தோளிலிருந்து தோன்றுவித்தாள். மீண்டும் போர் துவங்கியது. இரத்தபீசன் உடலிருந்து தோன்றிய இரத்தத்தைக் குடித்தாள் காளி. பார்வதி தேவி இரத்தபீசனைக் கொன்றாள் இரத்தபீசன் இறந்தபின் காளிதேவி அனைவரையும் துன்புறுத்தினாள். இதனால் அனைவரும் சிவபெருமானிடத்தில் முறையிட்டனர். சிவபெருமானும் காளிதேவியின் வன்மையைக் குறைப்பதாக கூறியருளினார். அதன்படி காளிதேவியின் முன்னர் சிவபெருமான் தோன்ற காளி பயந்து, சண்டையிட மறுத்து, அதற்கு மாறாக நடனப் போட்டிக்கு அழைத்தாள். இருவருக்கும் நடந்த போட்டியில் சிவபெருமான் வலது காலை மேலே தூக்கியாடியதால் பெண்ணான காளிதேவி அவ்வாறு ஆட இயலாது தோல்வியுற்றாள். இத்தகைய சிவபெருமானது உருவம் ஊர்த்துவதாண்டவ மூர்த்தி எனப்படுகிறது.

இக்கதையை அடிப்படையாக வைத்தே இங்கு ஊர்த்துவதாண்டவ மூர்த்தி சிற்பமும், காளியின் சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளன. ஊர்த்துவதாண்டவமூர்த்தி சிற்பத்திற்குக் கீழ் காரைக்காலம்மையார் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இவ்வம்மையார் பற்றிய கதை "பெரியபுராணம்" எனும் 63 நாயன்மார்களது புராணத்தில் இடம் பெறுகிறது. சிவபெருமானைக் காண இவ்வம்மையார் பேயுருக் கொண்டதாலும், பிறவாமை வேண்டும், பிறந்தால் உன்னை மறவாமை வேண்டும்; நினது திருவடியின் கீழிருந்து என்றும் உனது நடனத்தைக் காணும் வரம் வேண்டும்; என்று சிவபெருமானிடம் இவர் வரம் பெற்றதற்கு இணங்க ஊர்த்துவதாண்டவமூர்த்தி சிற்பத்தில் மெலிந்த உருவத்துடன் காரைக்காலம்மையார் சிற்பம் இடம் பெற்றுள்ளது. அருகே நந்திதேவர் குடமுழா எனும் இசைக்கருவியை மீட்ட அதற்கேற்ப சிவபெருமான் நடனமாடுகிறார். மேலும் முயலகன் சிவபெருமானது காலுக்கடியில் இடம் பெற்றுள்ளார். காளியின் சிற்பம் நடனக்கோலத்தில் இடது காலை ஊன்றியும் வலது கால்பாதத்தின் பின்பகுதியை இலேசாகத் தூக்கியபடியும் செதுக்கப்பட்டுள்ளது.

கம்பத்தடி மண்டபத்தில் இடம் பெறும் தூண்களில் சிறுசிறு அளவிலான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவைகளில் அனுமனது சிற்பமும், தாயுமானவர் சிற்பமும் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. வைணவக் கோயில்கள் எனில் அனுமனுக்குத் தனிக்கோயில் அமைக்கப்பட்டிருக்கும். சைவக்கோயில்களில் அனுமனுக்குத் தனிக்கோயில் இடம் பெறாது. எனவே தூண்களில் எங்கேனும் அனுமனது சிற்பம் இடம் பெற்றிருப்பின் அச்சிற்பம் பக்தர்களது வழிபாட்டில் இருக்கும். அதுபோலவே இங்கும் தெற்கு நோக்கிய அனுமனது தூண் சிற்பம் வழிபடப்படுகிறது.




◄ அகோர வீரபத்ரர்
◄ ஊர்த்துவதாண்டவர்
◄ காளி


தாயுமானவர்

இதனை அடுத்ததாக ஒரு தூணில் வடக்கு நோக்கிய கருவுற்ற பெண் சிற்பத்தைக் காணலாம். அதற்குக்கீழ் தாய் உருவத்தில், சிவபெருமான் நிற்கிறார். சிவபெருமானுக்குத் தாயுமானவர் என்ற பெயருண்டு. அக்கதையை இங்குக் காணலாம். ஒரு தாயும், மகளும் காவிரிக்கரையின் தென்பகுதியில் இருந்த ஓர் ஊரில் வசித்து வந்தனர். மகளுக்குத் திருமணமாகி கருவுற்றநிலையில் குழந்தை பெற்றுக் கொள்வதற்காகத் தாய்வீட்டில் தங்கி இருந்தாள். அப்போது அந்தத்தாய் காவிரியின் வடக்குக்கரையில் உள்ள ஊருக்கு அவசர வேலையாக சென்றுவிடுகிறாள். அன்று கடுமையான மழை பெய்து காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்படவே அந்தத்தாய் காவிரிக்கு வடக்கேயே தங்கும் சூழல் ஏற்பட்டு விடுகிறது. தன் மகளது பேறுகாலத்தை நினைத்துக் கவலை கொண்டு இறைவனை வணங்கியபடி இருந்தாள். அந்நேரத்தில் மகளுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. அப்போது இறைவனான சிவபெருமான் அத்தாய் உருவில் வந்து பிரசவம் பார்த்தார். மறுநாள் அம்மகளது தாய் வந்தபோது இறைவன் மறைந்தருளினார். இதனால் முதல்நாள் பிரசவம் பார்த்தது இறைவனே என்பதை உணர்ந்து இறைவனது கருணையை எண்ணி வியந்து இருவரும் வணங்கினர். ஆகவேதான் சிவபெருமான் தாயுமானவர் என அழைக்கப்படுகிறார்.

இக்கதையை ஒட்டியே திருச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயில் செல்லும் வழியில் மலைமேல் தாயுமானவர் சுவாமி கோயில் கட்டப்பட்டுள்ளது. இதேபோல் பல இடங்களில் இக்கதை கோயில்களோடு தொடர்புபடுத்தப்பட்டு இருக்கும். உதாரணமாக, மதுரையிலிருந்து இராசபாளையம் செல்லும் வழியில் இராசபாளையம் நகரின் எல்லையில் காணப்படும் மாயூரநாத சுவாமிகோயிற்பகுதி பெத்தவநல்லூர்என்று அழைக்கப்படுகிறது. அங்கும் இதேபோன்ற கதை கூறப்படுகிறது.

கம்பத்தடி மண்டபத்தில் இடம்பெற்றுள்ள சிற்பத்தில் ஒரு பெண் நின்றநிலையில் குழந்தை பெற்றுக் கொள்வது போலவும் அப்பெண்ணிற்கு அருகில் சிறிய உருவில் சிவபெருமான் தாயாகவும் காட்டப்பட்டுள்ளனர். இச்சிற்பத்தைக் கருவுற்றிருக்கும் பெண்கள் வணங்கிவர சுகப்பிரசவம் நிகழும் என மக்கள் நம்புகின்றனர். இதே போன்றசிற்பம் மதுரைக் கூடலழகர் கோயிலிலும் இடம் பெற்றுள்ளது. சிறிய தூண் சிற்பமானாலும் கதையமைப்பிலும், வழிபாட்டு நோக்கிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இச்சிற்பம் விளங்குகிறது.





▲ கருவுற்ற பெண்
▲ அனுமன்



அனுமன் சிற்பம்

இங்கு இடம்பெற்றுள்ள அனுமனது சிற்பமும் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இச்சிற்பம் தாயுமானவர் சிற்பத்திற்கு அடுத்த தூண் வரிசையில் இடம் பெற்றுள்ளது. தினமும் பக்தர்கள் அனுமனுக்கு வெண்ணெய் சாற்றி வடைமாலை அணிவித்து வணங்குகின்றனர்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

அனுமனது சிற்பத்திற்கு எதிரே பிட்டுக்கு மண் சுமந்த அண்ணலின் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதில் சிவபெருமான் கூலியாளாக தலையில் மண் சுமப்பது போன்றும், அரசன் கைப்பிரம்பால் கூலியாளை அடிப்பது போன்றும் அருகே வந்தி எனும் மூதாட்டியுடன் அமைக்கப்பட்டுள்ளது. புட்டு அமுதை வாங்கித் தின்றுவிட்டு மரத்தடியில் படுத்து உறங்குவதாகவே பல சிற்ப ஓவியங்களில் காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக சுந்தரேசரது தேர் சிற்பங்களிலும், ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள ஓவியங்களிலும் காணலாம். இங்குப் பிட்டுக்கு மண் சுமந்த கதை எனும் தலைப்பை ஒட்டிச் சிவபெருமான் மண் சுமப்பதாய் அமைந்துள்ளது.



நாரைக்கு முக்தி கொடுத்தது

கம்பத்தடி மண்டபத்தூண் சிற்பங்களில் அடுத்து முக்கியத்துவம் வாய்ந்த திருவிளையாடற் புராணச் சிற்பம் இதுவாகும். இச்சிற்பம் வீரபத்ரமூர்த்தி சிற்பத்திற்கருகில் இடம் பெற்றுள்ளது.

▲ பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

▲ நாரைக்கு முக்தி கொடுத்தது

43. நவக்கிரகங்கள்

கம்பத்தடிமண்டபத்தில் வடக்குப் பக்கம் அமைந்திருப்பது நவக்கிரக கோயிலாகும். இங்கு தினமும் பக்தர்கள் தமது குறைகள் தீர விளக்கேற்றி வழிபடுவர். தமிழகத்தில் இன்று நவக்கிரக வழிபாடு மிகுந்துள்ளது. மனிதர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க இறைவனை நாடாது நவக்கிரகங்களை நாடுவதற்கு காரணங்கள் உண்டு. இறைவனையே இந்த கிரகங்கள் பீடிப்தாகக் கதைகள் புனையப்பட்டதாலும், நவக்கிரகங்களுக்குப் பரிகாரம் செய்வதால் சிக்கல்களிலிருந்து விடுபடலாம் என்று சோதிடர்கள் கூறுவதாலும் இத்தகு வழிபாடுகள் மிகுந்துள்ளன. தமிழகத்தில் கும்பகோணத்தை ஒட்டிய பகுதியில் நவக்கிரகக் கோயில்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. சோழ நாட்டில் கும்பகோணத்திற்கருகில் திருமங்கலக்குடி எனும் இடத்தில் சூரியனது வழிபாட்டிற்கென்றே கி.பி.1070–ஆம் ஆண்டு முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட கோயில் சூரியனார் கோயிலாகும். ‘சன்மதம்’ எனப்படும் அறுசமயக் கடவுளர் வணக்கம் தமிழகத்தில் பரவத் தொடங்கியபோது சூரிய வழிபாடு மிகுந்தது. இதன் காரணமாகவே சூரியனுக்குத் தனிக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது.

நவக்கிரகங்களுள் சூரியனே பிறகிரகங்களுக்குத் தலைவன் என்பதால் பிற்காலத்தில் சூரியனைச் சுற்றி பிற கிரகங்களுக்குத் தனித்தனிக்கோயில்களை அமைத்துள்ளனர். சூரியனார் கோயில் தவிரப் பிறகிரகங்களுக்கான கோயில்கள் இங்கு நாயக்கர் காலத்தில் எழுப்பப்பட்டன. இக்கோயிலில் சூரியனது உக்ரமான தன்மையைக் குறைப்பதற்காக குருபகவானைச் சூரியனுக்கு நேர் எதிரே அமைத்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வாறு தொடங்கிய நவக்கிரக வழிபாடு தமிழகம் முழுவதும் பரவி இன்று பெரும்பான்மையான சிவன் கோயில்களில் நவக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. இவை தவிர ஒவ்வொரு கிரகத்திற்கும் சிறப்பான கோயில்களாக பல கோயில்கள் விளங்குகின்றன. இவை மக்களது நம்பிக்கையின் அடிப்படையில் பிற்காலத்தில் எழுந்த கருத்தாகும். உதாரணமாக இராகுஸ்தலம் என்று அழைக்கப்படும் திருநாகேசுவரர் கோயில் உண்மையில் சிவன் கோயிலாகும்.

சிவன் கோயிலில் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் இராகு பகவான்தான் இன்றைய நிலையில் பக்தர்களின் செல்வாக்குப் பெற்றவராக உள்ளார். அதேபோல் சனீசுவரனுக்கு உரிய தலமாகக் கருதப்படும் திருநள்ளாற்றுக் கோயில் சிவபெருமானது கோயிலாகும். அதில் நுழைவு வாயிலில் இடம் பெறும் கணபதி, முருகனது சிற்பங்களில் முருகனது சிற்பத்தில் மயில் தோகையின்றி சரியாகச் செதுக்கப்படாமல் போகவே நாளடைவில் அம்மயில் காகம் என்றும் முருகன் சனீசுவரர் என்றும் சொல்லித் தலபுராணங்கள் புனைந்து விட்டனர். இதனால் சிவன் கோயிலில் சனீசுவரனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறாக நவக்கிரக வழிபாட்டு வளர்ச்சியால் பல கோயில்களில்


நவக்கிரகங்கள் வைத்து பூசை செய்யப்படுகிறது. மேலும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நவக்கிரகத் தலங்கள் என ஒவ்வொரு கோயிலும் கருதப்படும் வழக்கம் இன்று மிகுந்துள்ளது. உதாரணமாக சைவத்திலும் வைணவத்திலும் நவக்கிரகங்களுக்கும் உரிய கோயில்களாகக் கருதப்படும் கோயில்களைக் காணலாம். சைவ சமய நவகிரகக் கோயில்கள் கும்பகோணத்தை ஒட்டியும், வைணவ சமய நவகிரகக் கோயில்கள் திருநெல்வேலிக்கருகில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தை ஒட்டியும் அமைந்துள்ளன.

நவக்கிரகங்களை ஒரே இடத்தில் வைத்து வழிபடுவதால் அத்தனை துன்பங்களும் நீங்கி இன்பம் அடையலாம் என்றநம்பிக்கை மக்களிடம் மிகுந்துள்ளது. இதன் காரணமாகவே நவகிரகக் கோயில்கள் பெருகிவிட்டன. வைணவத்தில் விஷ்ணு ஒருவரைத்தான் வணங்க வேண்டும். அவனை யாரொருவர் சரணடைகிறார்களோ, அவர்களுக்கே அவனருள் கிடைக்கும் என்பதுவே வைணவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. ஆனால் இன்று வைணவக் கோயில்களில் கூட நவக்கிரகங்கள் சமீப காலத்தில் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடப்படுகிறது (உதாரணம்: மதுரை கூடலழகர் கோயில்) எனில் இதன் மூலம் நவக்கிரக நம்பிக்கையை அறியலாம்.

நவக்கிரகம்	சைவக் கோயில்கள்	வைணவக் கோயில்கள்
சூரியன்	சூரியனார் கோயில்	ஸ்ரீவைகுண்டம்
சந்திரன்	திங்களூர்	வரகுணமங்கை (நத்தம்)
செவ்வாய்	வைத்தீஸ்வரன் கோயில்	திருக்கோளூர்
புதன்	திருவெண்காடு	திருப்புளியங்குடி
குரு	ஆலங்குடி	ஆழ்வார்திருநகரி
சுக்கிரன்	கஞ்சனூர்	தென்திருப்பேரை
சனி	திருநள்ளாறு	பெருங்குளம்
இராகு	திருநாகேசுவரம்	இரட்டைத் திருப்பதி எனும்
கேது	கீழப்பெரும்பள்ளம்	திருத்தொலைவில்லி மங்கலம்

44. மூன்று நிலைக் கோபுரம்


கம்பத்தடி மண்டபத்திலிருந்து முதற்பிரகாரத்திற்குள் நுழையும் இடத்தில் மூன்று நிலைகளுடனான கோபுரம் அமைந்துள்ளது. இக்கோபுரம் 41 அடி உயரமும் அடித்தளம் 31 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இக்கோபுரத்தில் 36 சுதையினாலான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோபுரத்தை கி.பி.1168–ஆம் ஆண்டு குலசேகர பாண்டியன் கட்டினான். கோபுர வாயிலின் உட்புறம் அதிகார நந்தியும், சாமுண்டியும் உள்ளனர். வெளிப்பகுதியில், இரண்டு வாயிற்காவலர்களது கல்லினாலான சிற்பங்கள் 12 அடி உயரத்தில் 4 அடி உயரமுள்ள பீடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை பிரமிக்கும்படியாக உள்ளன. இவ்வாயிற் காவலர்களுக்கு ஆட்கொண்டார், உய்யக்கொண்டார் எனப் பெயர். வாயிற்காவலர்களுக்கு அருகிலுள்ள இருபக்கத் தூண்களில் ஐந்து தலைகளையுடைய சிவபெருமான், ஐந்து தலைகளையுடைய அம்மனுடன் வீற்றிருக்கும் காட்சியைக் காணலாம். சதாசிவமூர்த்தி என்பது ஐந்து தலைகளுடன் விளங்குவதாகும்.



▶ சதாசிவ மூர்த்தி,
▶ (வலது) பஞ்ச சக்தி



சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட ஐந்து சக்திகளான பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி ஆகியவை சேர்ந்து ஐந்து முகங்களைக் கொண்ட சக்தியின் வடிவமாகக் காட்டப்படுவதுண்டு. எனவே ஐந்து சக்திகளும் இயங்குகின்றபோது சிவபெருமான் ஐந்து முகம் கொண்ட சதாசிவமூர்த்தியாக மாறுகிறார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே இங்கு ஐந்து முக சதாசிவனது சிற்பமும், ஐந்துமுகங்களுடன் கூடிய சக்தியின் சிற்பமும் அமைந்துள்ளன. இங்கு இடம்பெறும் சதாசிவமூர்த்தி மற்றும் ஐந்துமுகங்களுடன் கூடிய சக்தியின் சிற்பம் ஆகியன மலைமேல் அமர்ந்துள்ளதுபோல் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு சுவாமியின் கருவறை கைலாயமாகக் கருதப்பட்டு அதற்கேற்ப கற்பனை செய்து இங்கு வாயிற்காவலர் சிற்பங்கள் மிக உயரமாக அமைக்கப்பட்டுள்ளன என்று கருதலாம். நுழையும் இடத்தில் நால்வருடைய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.



45. முதற்பிரகாரமும், கோயில்களும்

இந்த முதல் பிரகாரத்தின் இடப்புறம் சூரியன் தன் தேவியரான உஷா, பிரத்யுஷாவுடன் பரிவார தேவதையாக அமைக்கப்பட்டுள்ளார். வலதுபுறம் சந்திரன் தன் மனைவியரான கார்த்திகை, ரோகிணியுடன் இடம் பெற்றுள்ளார். இப்பிரகாரத்தின் தெற்குப்பக்கம் 63 நாயன்மார்களது சிலைகள் மற்றும் சந்தனாச்சாரியர்களது சிலைகள் வரிசையாக இடம் பெறுகிறது. அதனையடுத்து நாமகள் கோயில் இடம் பெறுகிறது. சப்தமாதர் சிலைகளும் இங்கே உள்ளன. தென்மேற்கு மூலையில் உற்சவர் கோயில், முத்துக் குமாரர் சன்னதி, மேதாதக்ஷிணாமூர்த்தி, வடமேற்கு மூலையில் காசிவிஸ்வநாதர் கோயில், பைரவர் கோயில் என அமைந்துள்ளன.



▼ யாளி வாகனத்தில் அம்மன் உலா
▶ அம்மையப்பர் உலா



அறுபத்துமூன்று நாயன்மார்கள்

பக்தி இலக்கிய காலமான கி.பி.6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தமிழகத்தில் சைவ சமயத்தை வளர்த்தவர்கள் நாயன்மார்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தொகைக்காக அறுபத்து மூவர் என்று கணக்கிடப்பட்டுள்ளனர். சுந்தரரின் திருத்தொண்டர் தொகை எனும் நூலில் வரும் இவர்களது வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி எனும்நூலின் அடிப்படையிலும் பிற்காலத்தில் சேக்கிழார் என்பவர் “பெரிய புராணம்” எனும் நூலை விரிவாக எழுதினார். இது 63-நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாக கூறுவது. சைவ சமயத்திற்குத் தொண்டு செய்த இவ்வடியவர்களது சிற்பங்கள் சிவன் கோயில்களில் பெரும்பாலும் இடம்பெறும். எனவே மதுரைக்கோயிலிலும் முதற்பிரகாரத்தின் நுழைவு வாயிலிருந்து தெற்கே வரிசையாக இடம் பெற்றுள்ளது. மேலும் மகாமண்டபத்தில் இதே போல் இவர்களது உருவங்கள் படிமங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த நாயன்மாரது பிறந்த நட்சத்திர நாளன்று அவ்வுருவத்தைப் பல்லக்கில் வைத்து கோயிலில் ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

சந்தனாச்சாரியார்

சைவ சமயம் தொடர்பாக வந்த இலக்கியங்களில் மிக முக்கியமானவற்றைஇரண்டாகப் பிரித்து வழங்குவது வழக்கம் அவை தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள் என்றழைக்கப்படுகின்றன. 63 நாயன்மார்களால் பாடப்பட்டவை தோத்திர நூல்களாகும். சாத்திர நூல்கள் என்பவை பதினான்கு ஆகும். இவை சைவ சித்தாந்த கருத்துக்களை விளக்கும் நூல்களாகும். இவற்றைஇயற்றியவர்களே சந்தனாச்சாரியர் என்றழைக்கப்படுவர். அதாவது தோத்திர நூல்கள் பாடிய நாயன்மார்களது கருத்துக்களை ஒட்டி நூல்கள் படைத்ததனால் இவர்கள் நாயன்மார்களது வழித்தோன்றல்கள் என்னும் பொருளில் சந்தனாச்சாரியர் என்று அழைக்கப்படுகின்றனர். இச்சந்தனாச்சாரியார் என்பவர்கள் மறைஞான சம்பந்தர், மெய்கண்டதேவர், உமாபதிசிவாச்சாரியார், அருணந்தி சிவனார் எனும் நால்வராவர். இவர்களது உருவங்களே இங்கு இடம் பெற்றுள்ளன.

நாமகள்

கல்விக்குரிய கடவுள் என்று கருதப்படும் நாமகளின் சிற்பம் சந்தனாச்சாரியர்களது சிற்பங்களுக்கு அடுத்து அமைந்துள்ளது. கலைமகள் என்று அழைக்கப்படும் நாமகள் வெள்ளைத்தாமரையில் வீற்றிருப்பாள். நான்கு கரங்களுடன் அமைக்கப்படும் கலைமகளது திருஉருவம் பின் இருகரங்களில் அக்கமாலையும், இடக்கரத்தில் ஏடும் கொண்டிருக்கும் முன்னிருகைகளால் வீணைவாசிப்பது போலவோ, அபய வரத முத்திரைகளிலோ அமைக்கப்படும். நாமகள் பிரமனது சக்தியாகக் கருதப்படுவதால் பிரமனுக்குரிய அக்கமாலையும் ஏடும் நாமகளுக்கு இடம் பெறுகிறது. இங்கு இடம் பெற்றுள்ள இந்நாமகள் கல்விக்குரிய கடவுள் என்பதால் வியாழக்கிழமை பக்தர்கூட்டம் அதிக அளவில் இருக்கும்.



▲ கலைமகள்
(கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில்)

சப்தமாதர் கோயில்

சிவனது கோயில்களில் சப்தமாதர்களது உருவங்கள் கண்டிப்பாக இடம்பெறும். ஏனெனில் இவை சிவனது கோயிலில் பரிவார தேவதைகளாகும். சிவன் கோயிலில் இன்னின்ன திசைக்கு எனப் பரிவாரதேவதைகள் உண்டு. பிரம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர் சப்தமாதர்கள் ஆவர். இவர்களுடன் சிவபெருமானது சிற்பமும் கணபதியின் சிற்பமும் இங்கு அமைந்துள்ளன. சப்தமாதர்கள் பற்றிய கதையை ஏற்கெனவே கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தி–காளி எனும் தலைப்பில் கண்டோம். சப்தமாதர்கள் எனும் 7 பெண் தெய்வங்கள் பிரம்மா, மகேஸ்வரர், குமரன், விஷ்ணு, வராஹர், இந்திரன், யமன் ஆகியோரின் பெண் சக்திகள் எனப் புராணங்கள் கூறுகின்றன. இவ்வேழு அன்னையரும் பண்புகளைக் குறிக்கும் குறியீடுகளாவர். அவை காமம் அல்லது இச்சையின் குறியீடாக யோகேஸ்வரி, குரோதம் அல்லது கோபத்தின் குறியீடாக மகேசுவரியும், லோபம் அல்லது பேராவலின் குறியீடாக வைஷ்ணவியும், மதம் அல்லது ஆணவத்தின் குறியீடாக பிரம்மியும், மோகம் அல்லது மாயையின் குறியீடாக கௌமாரியும், மாச்சர்யம் அல்லது குற்றங்காணலின் குறியீடாக இந்திராணியும் ஆர்ப்பரித்தலின் குறியீடாக சாமுண்டியும், அசூயை அல்லது எரிச்சலின் குறியீடாக வராகியும் கொள்ளப்படுகின்றனர். (T.A.Gopinatha rao, Elements of Hindu Iconography-Vol II, pt.I, p.17)

சித்தர் கோயில்

மதுரையில் நடந்ததாக அல்லது சிவபெருமானால் நடத்தப்பட்ட 63 திருவிளையாடல்களில் பல கதைகளில் சிவபெருமான் எல்லாம் வல்ல சித்தராகத் தோன்றுவார். உதாரணமாக கடல் சுவறவேல்விட்ட கதை, எல்லாம் வல்ல சித்தரானது, கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது, விடை இலச்சினையிட்டது, இரசவாதம் செய்தது, திருவாலவாயானது போன்றகதைகளில் எல்லாம் வல்ல சித்தராகத் தோன்றுகிறார். எனவே இறைவன் இக்கோயிலில் சித்தராக உள்ளார் என்பதை நினைவுறுத்தும்படியாக இப்பிரகாரத்தின் வடக்கே சித்தர் கோயில் கட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் மக்கள் பதினெட்டு சித்தர்களைப் பற்றி அறிந்திருப்பதால் இங்குள்ள சித்தரை அப்பதினெட்டு சித்தர்களில் ஒருவராகவே கருதுகின்றனர். இங்கு எல்லாம் வல்ல சித்தராக உள்ளவர் சிவபெருமானே. இக்கோயிலை விக்ரமபாண்டியன் (கி.பி.1258–1268) கி.பி.13–ஆம் நூற்றாண்டில் கட்டினார். இச்சித்தர் கோயிலும் உள்ளே உள்ள சித்தர் திருஉருவமும் சிதைந்திருந்தபடியால் 1960–63ஆம் ஆண்டுகளில் நடைபெற்றதிருப்பணிகளின் போது சீரமைத்துள்ளனர். மேலும் 1990–களின் போது நடந்த திருப்பணியில் சித்தர் கோயில் வழவழப்பான செம்மை நிறமுடைய கருங்கல்லினால் ஒட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இச்சித்தரது உற்சவமூர்த்தத்தை சுவாமிகோயில் வெள்ளியம்பலத்து நடராசருக்கு எதிரேயுள்ள நால்வர் சன்னதிக்கு அருகே காணலாம்.



▲ எல்லாம் வல்ல சித்தர் செப்புப் படிமம்

ஆதி கடம்பமரம்

மதுரை மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயில் முதல்முதலில் தோன்றிய பொழுது அப்பகுதி முழுவதும் கடம்பமரங்கள் நிறைந்த வனமாக இருந்ததாக திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் சாபம் தீர்த்தது, வெள்ளையானை சாபம் தீர்த்தது, திருநகரங்கண்டது முதலான கதைகளில் கூறப்பட்டுள்ளது. இக்கடம்ப மரங்களை அழித்துதான் நகரம் உருவாக்கப்பட்டதாக திருவிளையாடற்புராணம் கூறுவதால் கடம்ப மரங்களின் நினைவாக வடக்குப்பிரகாரத்தில் காய்ந்து போன மிகப்பழமையான கடம்பமரம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனை பக்தர்கள் தொட்டுத் தொட்டு வணங்குவதால் மரத்தைப் பாதுகாப்பதற்காக, சுற்றிலும் கம்பி அரண் போடப்பட்டுள்ளது. கோயில் என்றாலே மூர்த்தி தலம், தீர்த்தம் என்ற மூன்றையும் சிறப்பித்து கூறுவார்கள். இவை போலவே அத்தலத்திற்கே உரிய தல விருட்சம் சிறப்புக்குரியதாகும். அக்காலத்தில் பெரும்பாலான கோயில்களில் மருத்துவ குணமுடைய செடிகள், மற்றும் மரங்களையே தலவிருட்சங்களாக வைத்து பாதுகாத்தும் உள்ளனர்.

அதேபோல் வைணவக் கோயில்களில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் துளசித் தீர்த்தமும், சைவக் கோயில்களில் இந்திரியங்களை வலுப்படுத்தும் வில்வ இலையும் பிரசாதமாகத் தரப்படுவது பொருளுடையதாகும்.

மதுரைக் கோயிலுக்குத் தலவிருட்சம் கடம்பமரமாகும். இதில் காலத்தால் முந்திய கடம்பமரம் இங்கு பாதுகாக்கப்பட்டுள்ளது. இம்மரம் அமைந்துள்ள வடக்குப்பகுதியில் சிவலிங்கங்களை பாப்பு செட்டியார் என்பவர் அமைத்துள்ளார்.

கனகசபை

இதில் சிவபெருமானது நடனக்கோலத்திற்கு அருகில் பார்வதிதேவி உள்ள காட்சி மூன்று செப்புத்திருமேனிகளாக இடம் பெற்றுள்ளன. மதுரைக் கோயிலில் வெள்ளியம்பல நடராசர் தவிர ஏனைய நான்கு சபைக்குரிய நான்கு நடராசர் சிவகாமி இறைஉருவங்கள் செப்புத்திருமேனிகளாக சுவாமி கோயில் முதற்சுற்றின் வடக்குத் திருமாளிகைப் பகுதியில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

திருமகள் கோயில்

சைவ சமயக் கோயில்களில் வைணவ சமயத் தெய்வங்கள் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. சிதம்பரம் நடராசர் கோயிலில் கோவிந்தராசப் பெருமாள் கோயிலும், திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயிலுக்குள் ஒரு சிவன் கோயிலும் இடம் பெற்றுள்ளன. இவையெல்லாம் சமயப்பொறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாகும். அதேபோல் நாயக்கரது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் சைவ கோயில்களில் வைணவசமயம் சார்ந்த சிற்பங்களையும் வைணவக் கோயில்களில் சைவ சமயம் சார்ந்த சிற்பங்களையும் காணலாம். உதாரணமாக மதுரைக் கூடலழகர் கோயில் விமானத்தின் மேற்பகுதியில் சிவபெருமானது கோலங்கள் இடம் பெற்றுள்ளன. அதுபோலவே சைவக் கோயிலான மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் இலக்குமி கோயில் இடம் பெற்றுள்ளது. மேலும் இங்கு கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய மூவருக்கும் ஒரே பிரகாரத்தில் சிறுகோயில்கள் கட்டப்பட்டுள்ளது அரிதான காட்சியாகும்.

இரத்தினசபை


இச்சபையில் சிவபெருமான் நடராசராக நடனக் கோலத்திலும், அருகே சிவகாமியும் படிமங்களாக காட்சியளிக்கின்றனர். இவ்விரு படிமங்களும் மிக அழகுடனும், கருணை பொங்கும் முகத்துடனும் காணப்படுகின்றன.

வன்னியும், கிணறும், லிங்கமும்

இவ்விடத்தில் மூடப்பட்ட சிறுகிணறு உள்ளது. கல்லினால் ஆன வன்னி மரமும், இலிங்கமும் உண்டு. இவை திருவிளையாடற்புராணத்தில் 64-வது கதையான "வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது" எனும் கதையை விளக்குவதாகும். இக்கதையை இங்கு காணலாம்.

கடற்கரைப் பட்டணத்தில் வசித்த ஒரு வணிகனுக்கு நீண்ட நாள் கழித்து ஒரு மகள் பிறந்தாள். அவளை மதுரையில் உள்ள தன் மருமகனுக்கு மணந்து தர உறுதிப்படுத்தியிருந்தான் அவ்வணிகன். அந்நிலையில் திருமணம் முடித்து வைக்கும் முன்னரே வணிகனும், மனைவியும் இறந்தனர். இதனால் மதுரையிலிருந்த மருமகன் வந்து பொருள்களை எடுத்து கொண்டு வணிகன் மகளையும் அழைத்து கொண்டு இருவரும் மதுரை நோக்கி சென்றனர். செல்லும் வழியில் இருட்டிவிடவே திருப்புறம்பியம் எனும் ஊரின் கோயிலில் தங்கினர். அன்று இரவு வணிகனின் மருமகன் பாம்பு தீண்டி இறந்தான். அவள் அழுது புலம்பிய நேரம் பல கோயில்களுக்கு சென்று கொண்டிருந்த சம்பந்தர் அங்கு வந்தார். அந்நங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க இறந்தவனை உயிர்ப்பித்தார். இருவரும் சம்பந்தரை வணங்கினர். இருவரையும் மணம் புரிந்து கொள்ளுமாறு சம்பந்தர் கூற எங்கள் இனத்தவர் சான்று இன்றி மணம் முடித்தால் பின்னர் சிக்கல்வரின் சான்று யார்? எனக் கேட்டான் அவன்.

அதற்குச் சம்பந்தர் இந்த வன்னிமரமும், கிணறும், லிங்கமும் சான்றாகும் என்றார். அவர் சொல்படி இருவரும் மணம் முடித்து மதுரை வந்து அவன் ஏற்கெனவே மணம் முடித்தவனாதலால் மூத்தகுடியுடன் சேர்ந்து வாழலாயினர். இளையாளுக்கு ஒரு மகன் பிறந்தான். ஒருநாள் மூத்தாளின் குழந்தைகளுக்கும், இளையாள் குழந்தைக்கும் சண்டை வர மூத்தாள், இளையாளை நீ யார்? உனக்குத் திருமணம் நடந்ததற்கு என்ன சாட்சி என்று கூறி வசைமாரி பொழிந்தாள். இளையவள் கோயிலுக்கு சென்று இறைவனை வேண்ட அங்கே "வன்னியும் கிணறும் இலிங்கமும்" தோன்றிச் சான்று காட்டின. பின்னர் அனைவரும் மகிழ்ந்து இறைவனை வணங்கினர். இக்கதையை அடிப்படையாக வைத்தே இங்கு இவை அமைக்கப்பட்டுள்ளன.



▲ வன்னி, லிங்கம், கிணறு மூன்றையும் சாட்சிக்கு அழைத்த கதைக் காட்சி.
சுவாமி சன்னதி மகா மண்டப சுதை சிற்பம்

சுரங்கப்பாதை

இங்கு அமைந்துள்ள கிணறு சுரங்கப்பாதை என நம்பப்படுகிறது. இப்பாதை திருமலை நாயக்கர் மகால் வரை செல்வதாகவும் மன்னன் கோயிலுக்கு சென்று வழிபட அவ்வழியாகத்தான் வந்தார் என்றும் கூறப்படுகிறது. இச்சுரங்கப்பாதை சமீபத்தில் தோண்டிப் பார்க்கப்பட்டது. படிகள் கீழே இறங்கி செல்கின்றன. ஆனால் பாதை சற்று தூரம் தான் சென்றது. பின்னர் இடிபாடுகள் இருந்ததால் மீண்டும் மூடப்பட்டது.

இதே போல் புதுமண்டபத்தின் கிழக்கே மொட்டைக் கோபுரத்திற்கும், புதுமண்டபத்திற்கும் இடையில் ஒரு அறுபக்கத் தொட்டியுள்ளது. அதை ஒருநாள் தோண்டியபோது அதனிலும் ஒரு சுரங்கப்பாதை சென்றது. ஆனால் உள்ளே இடிபாடுகள் காணப்பட்டதால் மூடி வைத்துள்ளனர். கோயில் நிர்வாகம் அதன்மேல் நந்தியின் உருவத்தைப் பெரிய அளவில் அமைத்துள்ளது. மதுரை கூடலழகர் கோயிலின் மகாமண்டபப் பகுதியின் கீழே மிகப்பெரிய நிலவறை ஒன்று உள்ளதாம். இதற்குக் கருவறையின் உள்ளிருந்து வழி உள்ளதாம் (தகவல்– பேரா.அரங்கராசன்) தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலிலும் இத்தகு சுரங்கப்பாதை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகு சுரங்கப்பாதைகள் அக்காலத்தில் போர்க்காலங்களில் தப்பிச் செல்லவும் இறைஉரு மற்றும் போர்க்கருவிகள் ஆகியவற்றினை மறைத்துப் பாதுகாக்கவும் பயன்பட்டுள்ளன. இச்சுரங்கப்பாதைகள் கோயிலுக்கு அருகிலோ அல்லது கோட்டைக்கு அருகிலோதான் முற்றுப் பெறும். ஒரு ஊரிலிருந்து வெகுதூரம் உள்ள மற்றொரு ஊர் வரை சுரங்கம் உள்ளதாக மக்களிடையே பல கதைகள் நிலவி வருகின்றன. இவை நம்பத்தகுந்தவை அல்ல.

46. முக மண்டபம் எனும் ஆறுகால் மண்டபம்

முதற்பிரகாரம் முடிந்து சுவாமி கருவறையை நோக்கிச் செல்லும் போது இந்த ஆறுகால் மண்டபம் என்று வழங்கப்படும் முகமண்டபத்தின் வழியாகவே செல்லவேண்டும். இம்முகமண்டபத்தில்தான் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் அரங்கேற்றப்பட்டது.

இம்முகமண்டபத்தைக் குலசேகரபாண்டியன் (கி.பி.1168–1175) கி.பி.12–ஆம் நூற்றாண்டில் கட்டினார். ஆனால் தற்பொழுதுள்ள இம்முகமண்டபம் நாயக்கர் காலத்துக் கட்டடக்கலைப் பாணியில் அமைந்துள்ளது. எனவே குலசேகர பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் பின்னர் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம். இதே போல் ஒரு ஆறுகால் மண்டபம் அம்மன் சன்னதியிலும் உள்ளது. அதனைப் பற்றி முன்னரே கண்டோம். அங்கு அம்மனைப் பற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எனும் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டதும், சுவாமி கோயில் ஆறுகால் மண்டபத்தில் சுவாமியைப் பற்றிய திருவிளையாடற்புராணம் அரங்கேற்றப்பட்டதும் சாலப்பொருத்தமாக அமைகிறது. இம்முக மண்டபத்திலிருந்து மகாமண்டபம் செல்லும் நுழைவு வாயிலின் இருபுறமும் செம்பினாலான இரண்டு துவாரபாலகரது சிற்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை மன்னர் திருமலைநாயக்கர் அளித்த நன்கொடையாகும். அம்மன் கோயில் முகமண்டபத்திலும் இதே போன்ற துவாரபாலகியரது சிற்பங்களை அமைத்துள்ளார் குலசேகர பாண்டியன்.




47. மகாமண்டபம்

இம்மண்டபத்தில் 63 நாயன்மார்களது செப்புத் திருமேனிகள் இடம் பெற்றுள்ளன. இவர்களது மூலத்திருவுருவங்களை முதல் பிரகாரத்தின் தெற்குப் பகுதியில் காணலாம். இம்மகாமண்டபத்திலிருந்துதான் இறைவனைப் பக்தர்கள் தரிசித்து விட்டு மண்டபத்தின் தெற்கே இருக்கும் படிகளின் வழியாக இறங்கிக் கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தை வலம் வர வேண்டும். இம் மகாமண்டபத்தைக் கட்டியவர் குலசேகர பாண்டியன் (கி.பி.1168–1175) ஆவார். ஆனால் இன்றைய மகாமண்டபம் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த கட்டடக் கலையமைப்பில் திகழ்கின்றது.

இம்மகா மண்டபத்தின் தெற்கே இறங்கும் படிகளைக் கட்டியவர் வீரப்ப நாயக்கர் (கி.பி.1572–1595) ஆவார். இம்மகாமண்டபத்தின் தெற்கு மற்றும் வடக்குச் சுவர்களில் சுதையாலான சிவபெருமானது 64 திருவிளையாடற் புராணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்களின் கீழ் அக்கதை பற்றிய தலைப்புகளும் இடம் பெற்றுள்ளன. திருவிளையாடற்புராணம் தெரிந்த பக்தர்களுக்கு இச்சிற்பங்கள் ஒரு நல்ல கலை விருந்தாகும்.



◀ சுவாமி பட்டாபிஷேக அலங்கார காட்சி



◄ கால் மாறி ஆடிய திருக்கோலம்
வெள்ளியம்பலம்

48. வெள்ளியம்பலம்

நடனத்திற்குரிய கடவுளான சிவபெருமான் பலவிதமான நடனங்களை ஆடுவார். காளியோடு ஆடும் போது ஊர்த்துவதாண்டவமூர்த்தியாகவும், உலகை அழிக்கும் போது ருத்ரதாண்டவராகவும் விளங்குவார். அதேபோல் சதுர தாண்டவம் ஆடும் நிலையிலும் சிற்பங்கள் உண்டு, பொதுவாக சிவபெருமான் நடனக் கோலத்தில் இருக்கும் நிலையை நடராசன் என்பர். இவரது நடனங்களில் அனைவரையும் மகிழச் செய்து ஆனந்தப்படுத்துவதற்காக ஆடும் ஆட்டமான ஆனந்த தாண்டவமே சிறந்த நடனமாகக் கருதப்படுகிறது. பெரும்பாலான நடராசர் சிற்பங்கள் ஆனந்த தாண்டவத்தில் வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி ஆடுவதாக அமையும். இங்கு இடம்பெறும் வெள்ளியம்பல நடராசர் பத்து கரங்களுடன் நடனக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இச்சிற்பத்திற்கு அருகே உமாதேவி சிற்பம் அவரது நடனத்தைக் கண்டுகளிப்பதாக அமைந்துள்ளது.

சிவபெருமான் ஆடுகின்ற அம்பலங்கள் ஐந்து ஆகும். அவை பஞ்சசபைகள் எனப்படுகின்றன. அவை 1. இரத்தினசபை – திருவாலங்காடு, 2. பொன்னம்பலம் – சிதம்பரம், 3. வெள்ளியம்பலம்–மதுரை. 4.தாமிரசபை–திருநெல்வேலி, 5.சித்திர சபை – திருக்குற்றாலம் ஆகிய இடங்களாகும், இவற்றில் மதுரையில் உள்ள சபைக்கும் திருவிளையாடற்புராணத்திற்கும் தொடர்பு உண்டு. இப்புராணத்தில் 6–ஆம் கதை “வெள்ளியம்பலத்திருக்கூத்து ஆடியது” எனும் கதையாகும். இக்கதையைச் சுருக்கமாக இங்குக் காணலாம்.

தடாதகைப்பிராட்டிக்கும், சுந்தரேசப் பெருமானுக்கும் திருமணம் முடிந்ததும் வந்திருந்த அனைவரையும் விருந்துக்கு அழைத்தனர். அவர்களுள் பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாதரும். இறைவன் திருநடனம் கண்டால் அன்றி நாங்கள் உண்ணமாட்டோம் என்றனர். சிவபெருமான் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கூறினார். கூடியிருந்த அனைவரும் கோயிலுக்கு சென்றனர். அங்கே வெள்ளியம்பலம் தோன்றியது. அவ்வம்பலத்தில் திருநடனம் ஆடினார் இறைவன், அவ்வாடலைக் கண்ட பதஞ்சலியும், வியாக்ரபாதரும் இறைவனே என்றும் நினது நடனம் இவ்வெள்ளியம்பலத்திலே நிகழ்தல் வேண்டும் என வேண்டிக் கொண்டனர். இறைவன் அவ்வாறே அருள் செய்தார்.


கி.பி.7–ஆம் நூற்றாண்டில் கூன்பாண்டியன் எனப்படும் அரிகேசரி மாறவர்மன் (கி.பி.640–670) காலத்தில் அவனது மனைவியான மங்கையர்க்கரசியார் மற்றும் அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் அழைப்பை ஏற்று மதுரை வந்த திருஞானசம்பந்தர் மதுரையில் உள்ள இறைவன் மேல் பதிகம் பாடியுள்ளார். இவரது பாடலில் வெள்ளியம்பலத் திருக்கூத்து ஆடியதைப் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. எனவே 7–ஆம் நூற்றாண்டிலேயே வெள்ளியம்பலம் இருக்கும்

இடத்தில் நடராசர் கோயில் இருந்து பின்னர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் இடித்துவிட்டுப் புதிதாக நடராசருக்குக் கோயில் எழுப்பியிருக்கலாம். தற்பொழுதுள்ள வெள்ளியம்பலம், இக்கோயில் கட்டிய குலசேகர பாண்டியனால் (கி.பி.1168–1175) 12–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. இன்றைய நிலையில் காணப்படும் வெள்ளியம்பலம் நாயக்கர் காலத்துக் கட்டடக் கலைப்பாணியைச் சேர்ந்ததாகக் காணப்படுகிறது. வெள்ளியம்பலத்தினுள் இடம்பெறும் தூண்களின் மேல் இடம் பெறும் போதிகைகளது அமைப்பு வெட்டுப் போதிகை அமைப்பாக உள்ளதால் இவை பாண்டியர் காலத்துக் கலைப்பாணித் தூண்களை நாயக்கர் காலத்தில் புதுப்பித்த போது அப்படியே வைத்துக் கட்டியதாக அமைந்துள்ளது எனக் கொள்ளலாம்.



இவ்வெள்ளியம்பலத்துடன் தொடர்புடைய இன்னுமொரு திருவிளையாடற்புராணக்கதையை இங்குகாண்பது பொருத்தமாகும். இராசசேகர பாண்டியன் என்பவன் ஆடற்கலையில் தேர்ச்சியுடையவன். எனவே தொடர்ந்து அதிகநேரம் ஆடியபோது தமக்குக் காலில் வலி ஏற்படவே இடைவிடாது ஆடிக் கொண்டிருக்கும் ஆடவல்லானுக்கு கால்களில் வலியுண்டாகுமே என்று எண்ணி இறைவன் கால் மாறியாடினால் இறைவனுக்குச் சோர்வு நீங்கும் எனத் தீர்மானித்தான். எனவே சிவராத்திரியன்று கோயிலுக்கு சென்று நான்காம் யாமப்பூசை முடிந்த பின்னர் இறைவனிடம் "ஊன்றியுள்ள காலைத் தூக்கியும், தூக்கியுள்ள காலை ஊன்றியும் நீ மாறியாட வேண்டும். இல்லையேல் இவ்விடத்திலேயே என் உயிரை மாய்த்துக் கொள்வேன்." என்று வேண்டினான். அவனது வேண்டுதலுக்கு செவி சாய்த்த இறைவன் இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடினார். இக்காட்சிதான் இறைவன் கால் மாறி ஆடிய காட்சி எனும், இன்று நாம் வெள்ளியம்பலத்தில் காணும் காட்சியாகும். இறைவன் கால் மாறி ஆடிய தலம் எனும் சிறப்பு மதுரைக்கு உரியதாகும். கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ள இவ்வெள்ளியம்பலமும் நடராசரும் பெயருக்கு ஏற்ப வெள்ளியில் திகழவேண்டும் என இக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவரான கருமுத்து கண்ணன் அவர்களது மனதில் எழுந்த எண்ணத்தாலும் அவர் திருஉள்ளத்தாலும் இன்று வெள்ளியம்பலம் நடராசர் திருமேனி முழுவதும் வெள்ளித் தகடு பதித்து அழகுடன் காட்சியளிக்கிறது.

▲ கால் மாறி ஆடிய திருக்கோலம்
செப்புப்படிமம் வெள்ளியம்பலம்



49. கருவறை விமானமும், அர்த்த மண்டபமும்

கி.பி.12–ஆம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியன் கருவறை, அர்த்த மண்டபம் முதலிய பகுதிகளைக் கட்டினான் என்றாலும் அவை நமக்கு கிடைக்கவில்லை. இன்றைய நிலையில் காணப்படும் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவை நாயக்கரது கட்டடக் கலைப்பாணியில் அமைந்துள்ளன. கட்டியவர் விசுவநாத நாயக்கர் எனக் கருதப்படுகிறது. கருவறையின் நான்குபுறமும், பக்கத்திற்கு இரண்டு என எட்டு யானைகள் இவ்விமானத்தைத் தாங்குவதாகவும், இவ்விமானம் இந்திரனால் தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்றும் திருவிளையாடற் புராணத்தின் முதற்கதையான இந்திரன் சாபம் தீர்த்தது எனும் கதையின் அடிப்படையில் யானைகளின் பெரிய உருவங்கள் கருவறையின் நான்குபுறமும் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையின் சுவர்ப்பகுதியில் காணப்படும் சிங்கங்கள் பூதகணங்கள் ஆகியவற்றின் கதைக்கும் அல்லது கோயில் கருவறைஅமைப்பிற்கும் யானைகளைப் போன்று தொடர்பில்லை. அவை நாயக்கர் காலத்துக் கட்டடக் கலைப்பாணியில் இடம் பெறுவனவாகும். இவ்விமானம் இந்திரவிமானம் என அழைக்கப்படுகிறது. இவ்விமானத்திற்கு பொன் பூசியவர் கி.பி.16–ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கராவார். சுவாமிகோயில் கருவறைஉபபீடத்துடன் அமைந்துள்ளது. இந்த உபபீடமானது உபானம், பத்மஜகதி, கண்டம், கபோதம் என்ற உறுப்புகளைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. அதிட்டானம் ஜகதி, சலங்கையால் அலங்கரிக்கப்பட்ட விருத்த குமுதம், கண்டம், கபோதம் எனும் உறுப்புகளுடன் திகழ்கிறது. தேவகோட்டங்கள் மூன்றிலும் முறையே தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே துர்க்கை எனும் அமைப்பு காணப்படுகிறது. சுவர்ப்பகுதியில் தூண்களின் சதுரப்பகுதிகளில் இராஜசிம்மன் பாணியில் பாயும் நிலையிலான சிம்மங்கள் இடம் பெற்றுள்ளன.




கபோதம் வளைந்த கட்டை அமைப்பில் இடம் பெற்றுள்ளது. கருவறைபத்ரம், அகாரை, கர்ணம், என ஒவ்வொரு பக்கமும் கொண்டு சதுர கருவறையாக அமைந்துள்ளது. சுவாமி கோயில் கருவறையைச் சுற்றி அம்மன் கோயில் கருவறையைச் சுற்றிப் பள்ளம் அமைந்திருப்பது போல் அமைக்கப்படவில்லை. கருவறையின் கூரையின் மேற்பகுதியில் திரிதளவிமானம் அமைந்துள்ளது. இம்மேற்பகுதியில் ஸ்தூபி சிகரம் ஆகிய பகுதிகள் தங்கத்தினாலான தகடு பரவப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.


இங்கு கருவறையில் இறையுருவம் இலிங்கவடிவமாக உள்ளது. இந்த இலிங்கம் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய கோயில்களில் உள்ள சிவலிங்கங்களைப் போல மிகப்பெரிய சிவலிங்கமாக இல்லாது சராசரி அளவில் படைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் துவக்க காலத்தில் சிவலிங்கமானது மரத்தில் செய்யப்பட்டே வணங்கப்பட்டு வந்துள்ளது. கோயில்களும், மரம், செங்கல், சுண்ணாம்பு முதலான பொருள்களால் கட்டப்பட்டு வந்துள்ளது. பல்லவர்காலத்தில் தான் முதன்முதலாக கல்லில் குடைவரைக் கோயில்களை (மகேந்திரவர்மன் கி.பி.600-630) குடைவித்தனர். அக்குடைவரைகளில் கூட இறையுருவமான இலிங்கம் வைப்பதற்கான பள்ளத்தைக் கருவறைகளில் இன்றும் காணலாம். எனவே குடைவரைகளிலும் மரத்தினாலான இலிங்கத்தை வைத்தே வழிபட்டு வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதலே கட்டுமானக் கோயில்கள் உருவாயின. அதன் பின்னரே சிவலிங்கம் கல்லில் செய்யப்பட்டது. அதன் பிறகுதான் கோயில்களில் கும்பாபிஷேகம் செய்து இறைவனுக்கு அபிடேகம் செய்யப்பட்டது. குடைவரைக் கோயில்களில் மரத்தினாலான சிவலிங்கம் வைத்து வழிபடப்பட்டதால் நீரினால் அபிஷேகம் செய்யப்படவில்லை. எனவேதான் குடைவரைக் கோயில்களின் கருவறைகளில் அபிடேக நீர் வெளிவருவதற்கான பிரநாளம் இடம் பெறவில்லை.

கருவறைகளில் சிவபெருமானது உருவம் இலிங்க வடிவில் மட்டுமே வைத்து வழிபடப்படுவது வழக்கம், இதற்கு ஒரு கதை உண்டு. ஒரு சமயம் பிருகு முனிவர் சத்யலோகத்தில் பிரமதேவனைக் காண சென்றுள்ளார். பிரமதேவன் கலைவாணியுடன் உறவாடி கொண்டு பிருகு முனிவர் வந்ததைக் கண்டு கொள்ளாது இருக்கவே பிரமனுக்கு பூலோகத்தில் இனி வழிபாடு இருக்காமல் போகட்டும் எனச் சபித்தார். இதனால் பூலோகத்தில் பிரமனுக்கு தனிக்கோயில்களும் அதிக அளவில் வழிபாடுகளும் இன்றளவும் இல்லாமல் போனது.


◂ சுவாமி சன்னதி தங்க விமானம்

அடுத்ததாகப் பிருகு முனிவர் சிவபெருமானைக் காண கைலாயம் சென்றார். சிவபெருமானும் பார்வதியுடன் உறவாடிக் கொண்டு முனிவரைக் கவனிக்காததால் சிவபெருமானுக்கு இனி பூலோகத்தில் ஆண் பெண் சேர்க்கையைக் குறிப்பால் உணர்த்தும் இலிங்க வடிவத்தில் மட்டும்தான் வழிபாடு இருக்கும் எனச் சாபமிட்டார். அதனால்தான் இலிங்க வழிபாடு இன்றும் நிலவி வருகிறது என்பர். அம்முனிவர் பின் விஷ்ணுவைக் காண வைகுண்டம் சென்றார். முனிவரின் வருகையை அறிந்தும் அறியாதவர் போல் இலக்குமியுடன் விஷ்ணு உறவாடிக் கொண்டிருந்ததால் கோபமடைந்த முனிவர் மும்மூர்த்திகளும் நம்மைக் கவனிக்கவில்லையே என எண்ணி விஷ்ணுவின் நெஞ்சில் காலால் உதைத்தார். விஷ்ணு தன் தவறைஉணர்ந்தவர் போல் இப்படி உதைத்ததனால் தங்களுக்குக் கால் எப்படி வலிக்குமோ என்று முனிவரின் காலைப் பிடித்து பாதத்தில் உள்ள கண்ணை அழுத்தி அதன் மூலம் முனிவரின் கர்வத்தை அடக்கினார். எனவே விஷ்ணுவைப் பல உருவங்களில் வழிபடுகின்றனர்.






இறைவனை உருவமாக வழிபடுவர்; அருவமாகவும் வழிபடுவர். இந்த உருவமும் இல்லாத அருவமும் இல்லாத ஒரு அரு உருவம் தான் சிவலிங்கம், இச்சிவலிங்கமானது நாதம் எனப்படும் நீண்ட பகுதியையும் பிருதம் எனப்படும் வட்ட வடிவ அமைப்பையும் கொண்டு விளங்குகிறது. மேலும் சிவலிங்கத்தை மூன்று பகுதிகளாகப் பிரிப்பர். லிங்கத்தின் அடிப்பாகம் சதுரமாக இருக்கும். பிரம்மனுக்கு நான்குதலைகள், அவர் கையில் இருப்பது நான்கு வேதங்கள் என்பதால் சதுரம் பிரம்மனோடு தொடர்புபடுத்தப்படுகிறது. அடுத்து வட்ட வடிவிலிருப்பது ருத்ரம் எனப்படும். இது சிவனைக் குறிப்பதாகும். மேல்பாகம் எட்டுப்பட்டைகளை உடையதாக இருக்கும் இது விஷ்ணுவுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. விஷ்ணு “ஓம் நமோ நாராயணா” எனும் அஷ்டாச்சர மந்திரம் எனும் எட்டெழுத்து மந்திரத்துக்குரியவர் என்பதால் எண்பட்டையுடைய இப்பகுதி விஷ்ணுவுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. அடுத்ததாக மும்மூர்த்திகளின் இணைவாகவும், இச்சிவலிங்கம் பேசப்படுகிறது. மேலும் சிவலிங்கத்தில் வட்டவடிவில் இடம்பெறும் ஆவுடை எனும் பகுதி சக்தியைக் குறிப்பதாகவும், மேலே நீண்டிருக்கும் பகுதி சிவத்தைக் குறிப்பதாகவும் கொள்வதுண்டு. இவ்வுலகம் வாழ வேண்டுமெனில் ஆண், பெண் ஒற்றுமை மிக அவசியம். மேலும் ஆண், பெண் ஒற்றுமையின் தேவையை வலியுறுத்தும் குறியீட்டுப் பொருளே சிவலிங்கம் என்றகருத்தும் நிலவுகிறது. இவ்வாறு சிவலிங்கத்தின் அமைப்பு பற்றிப் பல செய்திகள் உள்ளன.



சுந்தரேசுவரர் கோயிலில் உள்ள இந்தச் சிவலிங்கம் இந்திரன் வழிபட்டதாகக் கருதப்படுகிறது. இந்திரனது வெள்ளையானை சாபம் தீர்த்தது இந்த சிவலிங்கத்தைப் பூசை செய்துதான். எனவே இந்திரன் பழி தீர்த்தது, வெள்ளையானை சாபம் தீர்த்தது ஆகிய இவ்விரண்டு திருவிளையாடற் புராணக் கதைகளும் இவ்விறைவுருவுடன் தொடர்புடையதாக அமைகின்றன. நாமும் நினைத்ததை அருளும் சோமசுந்தரப் பெருமானை வணங்கி எல்லா வளங்களையும் பெற்று வாழ்வோமாக.

▼ கருவறை தரைப்படம்



சுவாமி கோயில் கருவறைத் தரைப்படம்

விசுவநாத நாயக்கர்

தக்காணத்தில் இஸ்லாமிய அரசு ஆண்டு கொண்டிருந்த பகுதிகளான பீடார், பீரார், பீஜப்பூர், அகமத்நகர், கோல்கொண்டா ஆகிய பகுதிகளை வென்று இந்து சாம்ராஜ்யத்தை ஹரிஹரர் புக்கர் எனும் இருவர் தம் குருவான வித்யாரண்யரின் ஆலோசனைப்படி தோற்றுவித்தனர். இவர்களது பேரரசின் தலைமை இடமாக வெற்றியின் நகரம் என்று பொருள்படும்படி "விஜயநகரம்" என்று ஒரு நகரத்தைத் தோற்றுவித்தனர். இவர்களால் நிறுவப்பட்ட பேரரசு "விஜயநகரப்பேரரசு" எனப்படும். இவ்விஜயநகர பேரரசின் அரசருள் ஒருவரே கிருஷ்ணதேவராயர் ஆவார். விஜய நகரில் கிருஷ்ணதேவராயர் ஆட்சி செய்த காலத்தில் மதுரையில் நடந்த உள்நாட்டுக் கலவரங்களை அடக்கிவரும்படி நாகம நாயக்கரை படையுடன் அனுப்பினார். மதுரை வந்து கலவரத்தை கட்டுக்குள் கொண்டுவந்த நாகமநாயக்கர் தாமே அரசாளத் தொடங்கினார். இதனையறிந்த கிருஷ்ணதேவராயர் தனது ஆணையை மதிக்காத நாகமநாயக்கரைக் கைது செய்து கொண்டுவர அவரது மகனான விசுவநாத நாயக்கரையும் அவருக்குத் துணையாக அரியநாத முதலியாரையும் படையுடன் அனுப்பி வைத்தார். விசுவநாத நாயக்கர் நாகம நாயக்கரை வென்று கைது செய்து கிருஷ்ணதேவராயர் முன் நிறுத்தினார். கிருஷ்ணதேவராயர் விசுவநாத நாயக்கரின் ராஜவிசுவாசத்தைப் பாராட்டி அவரையே மதுரைக்கு அரசராக நியமித்தார். மேலும் அவருடைய அமைச்சராகவும், படைத் தளபதியாவும் அரியநாத முதலியார் பொறுப்பேற்றார். விசுவநாத நாயக்கர் தனது ஆட்சிக் காலத்தில் கோயிலுக்கு செய்த திருப்பணிகள் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளது.



▲ விசுவநாத நாயக்கர்



▲ தேவகோட்டம் (மாதிரி)

தேவகோட்டங்கள்

பொதுவாக சிவனது கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய தேவ கோட்டங்களில் முறையே தெட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை ஆகிய சிற்பங்களை அமைப்பர். இத்தேவகோட்டங்களில் சிற்பங்களை அமைக்கும் மரபு பல்லவர் காலத்திலேயே துவங்கி விட்டது. சோழர் காலத்தில் தான் இன்னின்ன திசைக்கு சிவன் மற்றும் விஷ்ணு கோயில்களில் இன்னின்ன இறையுருக்களை வைக்க வேண்டும் என்று வரைமுறைப்படுத்தப்பட்டது. பாண்டியர்கள் சோழர்களின் கட்டடக் கலையமைப்பிலிருந்து தமது கலையமைப்பை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, தேவக் கோட்டங்களில் சிற்பங்களை வைக்கவில்லை. அடுத்து வந்த விசயநகர–நாயக்கர்கள் தேவ கோட்டத்தில் சிற்பங்களை வைப்பதில் பாண்டியர்களையே பின்பற்றியுள்ளனர். ஆனால் பெரும்பாலான கோயில்களின் தேவகோட்டங்களில் தெய்வ உரு வைப்பதற்கான பள்ளமும் பீடமும் வைத்துள்ளனர். சில கோயில் தேவகோட்டங்களில் இறையுருவை இடம் பெற செய்துள்ளனர்.

இங்கு கருவறையின் தெற்கு தேவகோட்டத்தில் இடம் பெறும் தட்சிணாமூர்த்திக்கு முன்னும் மேற்கே லிங்கோத்பவருக்கு முன்னும் வடக்கே துர்க்கைக்கு முன்னும் சிறுமண்டபங்களை கம்பலராயர் என்பவர் கட்டுவித்துள்ளார். இவரது காலம் எது என்பது சரிவரத் தெரியவில்லை. என்றாலும் 17,18–ஆம் நூற்றாண்டுகளாக இருக்கலாம் என கொள்வதில் தவறில்லை.

தெற்கு தேவகோட்டம்

தெற்குப்புற தேவகோட்டத்தில் நான்கு கரங்களுடன் காணப்படும் தட்சிணாமூர்த்தியின் பின் இரு கரங்களில் சூலமும், தமருகமும் காணப்படுகின்றன. வலது கரத்தில் சின் முத்திரையுடன் ருத்ராக்கம் கொண்டு இடது கரத்தைத் தொடையில் வைத்தபடி ஒரு காலைத் தொங்கவிட்டு, மறுகாலை மடக்கி சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். ஞானத்தின் திருவுருவமாக இத்தட்சிணா மூர்த்தி சைவ சமயத்தில் சிவபெருமானது வடிவங்களில் ஞானத்தின் வடிவமாகக் கருதப்படுகிறது. தட்சிணாமூர்த்தி சிற்பத்தைச் சில கோயில்களில் யோக தட்சிணாமூர்த்தியாகவும் அமைப்பதுண்டு. வைணவக் கோயில் எனில் தெற்கு தேவகோட்டத்தில் யோகநரசிம்மர் சிற்பம் இடம் பெறும்.

தட்சிணாமூர்த்தி யோகத்தில் அமர்ந்தமைக்கான கதை உண்டு. அதன்படி தக்கன் மகளாகப் பார்வதி தேவி தாட்சாயினி எனும் பெயருடன் பிறந்து வளர்ந்தாள். தக்கனின் அனுமதியின்றித் தாட்சாயினியை சிவன் மணந்தார். அதன்பின் பெரிய யாகம் ஒன்றை நடத்திய தக்கன் அந்த யாகத்திற்கு முறையாக சிவபெருமானை அழைக்கவில்லை. எனினும் தாட்சாயனி மட்டும் சிவனது விருப்பத்திற்கு மாறாக யாகத்தில் கலந்து கொள்ளச் சென்றாள். அங்கே உரிய மரியாதை தரப்படாமல் போகவே தக்கனால் கிடைத்த அந்த உடம்பை அங்கே விடுத்துச் செல்வதற்காக யாக குண்டத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். இதனைக் கேள்வியுற்ற சிவன் தன் முடியிலிருந்து வீரபத்ரனை ஏவித் தக்கனை கொன்று வரும்படி செய்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின் மீண்டும் திருமணம் செய்யாமல் காட்டிற்குச் சென்று ஒரு ஆலமரத்தின் கீழ் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். யோகநிலையில் உள்ள அவ்வுருவமே தட்சிணா மூர்த்தியாவார் எனச் சிவபராக்ரமம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த தட்சிணாமூர்த்தியே யோகம், இசை, ஞானம் ஆகியவற்றிற்கு குருவாக விளங்குபவர்.

மாணிக்கவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளி ஞான உபதேசம் செய்ததும் இவரே. வியாழக்கிழமை குருவுக்குரிய நாளாகலின் ஒவ்வொரு வியாழக் கிழமையும் இங்கு குருவாகிய தட்சிணாமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்கின்றது. தட்சிணாமூர்த்திக்கு நேர் எதிரே கல்விக்குரிய கடவுளான சரசுவதியின் கோயில் இருப்பதால் கல்விக் கடவுளையும், ஞானக் கடவுளையும் வியாழக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வழிபடுகின்றனர். வெள்ளிக்கிழமைதோறும் கலைகளுக்குமுன் வீணை வழிபாடு 2003-ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது.



▲ தெற்கு தேவகோட்டம் (மாதிரி)



▲ மேற்கு தேவகோட்டம் (மாதிரி)

மேற்கு தேவகோட்டம்

மேற்கு பக்க தேவகோட்டத்தில் சிவபெருமானின் 25 வடிவங்களில் ஒன்றான இலிங்கோத்பவர் காணப்படுகிறார். ஒரு முறை பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் தங்களில் யார் உயர்ந்தவர் என்ற வாதம் துவங்கியது. இதில் நல்ல முடிவைப் பெறுவதற்காக இருவரும் சிவபெருமானிடம் சென்றனர். சிவபெருமான் இருவருக்கும் ஒரு போட்டி வைத்தார். அதன்படி எனது அடி, முடி இதில் ஏதேனும் ஒன்றையார் முதலில் தொடுகிறார்களோ அவரே உங்களில் உயர்ந்தவர் என்று கூறினார். பிரமன் உடனே முடியைத் தொட்டு வருவதாகக் கூறி தனது அன்ன வாகனத்தில் ஏறி முடியை நோக்கிச் சென்றார். விஷ்ணு சிவபெருமானின் அடியைத் (பாதத்தைத்) தொடுவதற்காக பூமியைத் தோண்ட ஏதுவாக அதிக பலம் கொண்ட பன்றி உருவம் எடுத்து அடியை நோக்கி சென்றார். சிவபெருமானோ வளர்ந்து கொண்டே சென்றதினால் அவரது பாதங்கள் பூமிக்கு அடியில் பதிந்து கொண்டே சென்றது. முடியோ வானத்தை நோக்கி சென்றது. பிரமனும், விஷ்ணுவும் தங்களது முயற்சியில் தோல்வியடைந்தனர். ஆனாலும் பிரம்மன் சிவபெருமானது தலையிலிருந்து வந்து கொண்டிருந்த தாழம்பூ மலரைக் கண்டதும் முடியிலிருந்து வரும் உன்னைக் கண்டது முடியை கண்டதற்குச் சமம்தானே என்று கூறிச் சிவபெருமானிடம் தாழம்பூவைப் பொய்சாட்சி சொல்ல வைத்தார். அனைத்தையும் அறிந்த சிவபெருமானோ நடந்ததை அறிந்து கொண்டதால் பொய் சொன்ன பிரமனைப் பூவுலகில் இனி யாரும் வணங்கமாட்டார்கள் என்றும் சிவபூசையில் இனிமேல் தாழம்பூ இடம் பெறாது என்றும் சாபமிட்டார். எனவே பிரம்மாவும், விஷ்ணுவும் சிவபெருமானது அடியையும், முடியையும் காண இயலாததால் இம்மும்மூர்த்திகளில் உயர்ந்தவர் சிவபெருமானே என்பதை இலிங்க புராணத்தில் இடம்பெறும் இக்கதை நமக்கு உணர்த்துகின்றது.

இலிங்கோத்பவர் சிற்பத்தில் இலிங்கமும் அதன் நடுவில் சிவ பெருமானது உருவமும் அவருக்கு மேற்பக்கம் அன்னத்தையும், கீழே வராகத்தையும் குறியீடாகக் காட்டுவர். மேலும் பிரமனும், விஷ்ணுவும் மேலும் கீழும் சிறிய உருவில் சிவபெருமானை வணங்குவது போலவும் காட்டப்படுவதுண்டு. இங்கு இடம் பெறும் இலிங்கோத்பவரும் அவ்வாறே காணப்படுகிறார்.

பஞ்ச பூதங்களில் கீழே உள்ள நீர், நிலம் என இரண்டாக நாராயணன் விளங்குகிறார். ஆகாயம், காற்று என மேலே விளங்கும் இவ்விரண்டாக பிரம்மன் விளங்குகிறார். இவைகளுக்கு இடையே

இருக்கும் நெருப்பாக சிவபெருமான் விளங்குகிறார். இத்தத்துவத்தையே மேற்கண்ட கதை நமக்கு விளக்குவதாக அமைகிறது. மேலும் இலிங்கோத்பவர் கதை நடந்த இடமாகக் கூறப்படுவது திருவண்ணாமலை எனும் தலமாகும். இங்கு மலையாகவே இறைவன் வழிபடப்படுகிறான். அடிமுடி காணா அண்ணாமலையாய் இங்கு சிவபெருமான் விளங்குகிறார். திருவண்ணாமலையிலுள்ள இறைவனைச் சென்று வணங்க இயலாதவர்கள் ஏதேனும் ஒரு சிவன் கோயிலில் இலிங்கோத்பவரை வணங்கலாம். அதுவும் பௌர்ணமி நாளன்று வணங்கினால் நினைத்த காரியங்களெல்லாம் நடக்கும் என்பது பெரியோர் வாக்கு.

வடக்குத் தேவகோட்டம்

வடக்குத் தேவகோட்டத்தில் முற்காலப் பாண்டியர் கோயில் என்றால் நான்முகனது சிற்பம் இடம் பெறும். ஆனால் இக்கருவறை நாயக்கர் காலத்துக் கட்டடக்கலையைக் கொண்டு விளங்குவதால் துர்க்கையின் சிற்பம் இடம் பெறுகின்றது. இங்கு துர்க்கை சிற்பம் எருமைத்தலையின் மீது நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேவி மகாத்மியத்தில் ஒரு கதை உண்டு. எருமைத்தலையையுடைய அசுரன் ஒருவன் தேவர்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தான். தேவர்கள் அனைவரும் மகிஷனை அழித்துத் தங்களைக் காக்கும்படி அன்னை பராசக்தியிடம் வேண்டினர். பராசக்தி உடனே கோபம் கொண்டு துர்க்கை வடிவமெடுத்துத் தனது வாகனமான சிங்கத்தின் மேல் அமர்ந்து மகிஷனை வதம் செய்யக் கிளம்பினாள். இருவருக்கும் நடந்த போரில் துர்க்கை தன கையில் உள்ள சூலத்தால் மகிஷனைக் குத்த அவனது உடம்பிலிருந்து இரத்தம் கொட்ட அந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒரு அசுரன் தோன்றினான். இதனால் துர்க்கை அவனது இரத்தம் முழுவதையும் கீழே விழாதவாறு குடிப்பதற்காக தணியாத தாகத்தோடு காளியைப் படைத்து அனுப்பினாள். காளிதேவி அசுரனது உடலில் உள்ள இரத்தத்தைக் குடித்த பின்னர் துர்க்கை அவனைக் கொன்றாள். இவ்வாறு துர்க்கை மகிஷனைக் கொன்றகதையை நினைவுபடுத்தும் விதமாக எருமைத்தலையின் மேல் (மகிஷம் எனில் எருமை, மகிஷாசுரன்=எருமைத்தலையன்) நின்றகோலத்தில் துர்க்கையின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.



▲ வடக்கு தேவகோட்டம் (மாதிரி)

இங்கு துர்க்கைக்கு வெள்ளி தோறும் சந்தன அலங்காரம் செய்யப்படுகிறது. அன்று பெண்கள் கூட்டம் அதிக அளவில் இருக்கும். விசேஷ நாட்களில் விளக்கு பூஜைகளும் நடைபெறுகின்றன.

50. கம்பத்தடி மண்டபக் கோபுரம்

கம்பத்தடி மண்டபத்திலிருந்து கிழக்குப்பக்கம் வரும்பொழுது அங்கே ஒரு ஐந்து நிலைக்கோபுரம் உள்ளது. இது கோயிலின் நேர்கிழக்கேயுள்ள சுந்தரபாண்டியன் கோபுரத்திற்கு நேரே உள்ளதாகும். இக்கோபுரம் 66 அடி உயரம் கொண்டது. இதன் அடித்தளம் 42 அடி நீளமும், 33 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் 280 சுதையினால் ஆன சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோபுரம் கி.பி.14ஆம் நூற்றாண்டில் வசுவப்பர் என்பவரால் கி.பி.1372–இல் கட்டப்பட்டதாகும்.

51. வீரவசந்தராயர் மண்டபமும் சிற்பங்களும்

ஐந்துநிலைக் கோபுரத்தை அடுத்து அதன் கிழக்கே பெரிய மண்டபமாக இந்த வீரவசந்தராயர் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கே இடம் பெற்றுள்ளது. 46 தூண்களைக் கொண்ட இம்மண்டபத்தில் இன்று கடைகள் நிறைந்துள்ளன. இதனைக் கட்டியவர் திருமலை நாயக்கரின் தமையனான முத்துவீரப்ப நாயக்கராவார். இவர் இதனைக் கி.பி.1611–ஆம் ஆண்டில் கட்டினார். ஆயிரக்கால் மண்டபம் கட்டியதன் பின்னரே இம்மண்டபம் சுவாமியின் கருவறைக்கு நேரே கட்டப்பட்டது. இவ்வீரவசந்தராயர் மண்டபத்தில் நாடகச்சட்டத்தில் சிறு அளவிலான பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் தூண் சிற்பங்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன. அவை காலசம்கார மூர்த்தி சிற்பம், நாடோடி இளவரசியைத் தூக்கி செல்லும் சிற்பம், சிவனது சிற்பம், காளி மற்றும் வாயிற்காவலர் சிற்பங்கள் ஆகும். இம்மண்டபத்தில் சுவாமி சன்னதியை நோக்கி நந்தி அமைக்கப்பட்டுள்ளது. இந்நந்தியைச் சுற்றி தொட்டி கட்டப்பட்டுள்ளது. இந்தத் தொட்டியானது மழைச் சடங்கினொடு தொடர்புடையதாகும். நாட்டில் மிகவும் வறட்சி ஏற்படும் காலங்களில் மழை வேண்டி ஜபம் செய்வதும் கூட்டு வழிபாடு செய்தல், ஹோமம் செய்தல் என்பன பிரசித்தம். அது போலவே இந்த நந்தி இடம் பெறும் தொட்டியில் நந்தி மூழ்கும் அளவிற்கு நீரினை நிரப்புவர். அன்று முழுவதும் மழைக்காகப் பிரார்த்திக்கப்படும். இதனால் நந்திக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மழைபொழியச் செய்வார் என்பது நம்பிக்கை. இத்தகைய நந்தித் தொட்டியை மதுரைக்கருகிலுள்ள நத்தம் கோவில்பட்டியில் காணலாம். இன்னும் பல சிவன் கோயில்களிலும் இத்தகு அமைப்பினைக் காண இயலும். இம்மண்டபத்திலிருந்து கம்பத்தடி மண்டபம் செல்லும்வழியில் உள்ள நுழைவு வாயிலில் திருவாட்சி இடம் பெற்றுள்ளது. அம்மன் கோயிலிலும் இதேபோல் திருவாட்சி இடம் பெற்றிருந்ததை ஏற்கனவே கண்டோம். இவ்விரு திருவாட்சிகளையும் அமைத்தவர்கள் மருது சகோதரர்கள் ஆவார்.

இம்மண்டபம் போல் அம்மன் சன்னதியிலும் ஒரு மண்டபம் இருக்க வேண்டும் என்பதற்காக 18–ஆம் நூற்றாண்டில் அங்கு மீனாட்சி நாயக்கர் மண்டபம் அமைக்கப்பட்டது. வீரவசந்தராயர் மண்டபத்திலிருந்து மீனாட்சி நாயக்கர் மண்டபம் செல்ல வழியுண்டு. மேலும் அவ்வழியில்தான் திறந்தவெளியில் மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம், திருக்கல்யாண மண்டபம் ஆகிய மண்டபங்கள் இடம் பெற்றுள்ளன.

இம்மண்டப நுழைவாயிலின் முதல்வரிசையில் தெற்கே காளியின் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இங்கு காளிதேவி நின்றநிலையில் எட்டு கரங்களுடன் ஆயுதங்கள் தாங்கி தலையில் நெருப்புமகுடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தலைக்கு மேலே ஐந்து தலை நாகம் குடைபிடிப்பது போன்று செதுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக இடம் பெறுவது சிவனது சிற்பமாகும். இதில் சிவபெருமான் நான்கு கரங்களுடனும் ஜடாமகுடத்துடனும் காட்டப்பட்டுள்ளார். பின் கைகளில் மழு, மான் இடம் பெற்றுள்ளன. முன் கைகளில் ஒன்றில் கேடயமும் மற்றொரு கரத்தில் கத்தியும் (சிதைந்துள்ளது) காட்டப்பட்டுள்ளது. காலுக்கடியில் அசுரன் வீழ்ந்து கிடக்கிறான். இளவரசியைத் தூக்கி செல்லும் நாடோடி சிற்பம் ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ளது போன்றே இடம் பெற்றுள்ளது. (செய்தியை ஆயிரக்கால் மண்டபச் சிற்பங்களில் காண்க.) இம் மண்டபத்தில் சிவபெருமான் ஆறுகரங்களுடன், ஜடாமகுடத்துடன் காணப்படுகிறார். கையில் சூலம், கபாலம் முதலான ஆயுதங்கள் இடம் பெற்றுள்ளன. இடுப்புக்குக் கீழே சிற்பம் சிதைந்து உள்ளது. கடைகள் வரிசையாக இடம் பெற்றுள்ளதால் இச்சிற்பத்தை முழுமையாகப் பார்க்க இயலாது. நுழைவாயிலின் அடுத்த தூண் வரிசையில் பாதைக்கு இருபுறமும் துவாரபாலகர்களது சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.




52. ஆயிரக்கால் மண்டபமும் சிற்பங்களும்




வீரவசந்தராயர் மண்டபத்தின் வடக்கே நல்ல உயரமான அடித்தளத்துடன் அமைக்கப்பெற்றுள்ள மண்டபம் ஆயிரக்கால் மண்டபம் ஆகும். நாயக்கர். காலத்தில் கட்டப்பட்ட கோயில் மண்டபங்களில் ஆயிரக்கால் மண்டபம் பிரசித்தி பெற்றதாகும். மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலிலும் ஆயிரக்கால் மண்டபம் இன்றளவும் சிறப்புடன் விளங்கி வருகின்றது. அதற்குக் காரணம் அதில் இன்று இயங்கிவரும் அருங்காட்சியகம் (மியூசியம்) மட்டுமல்ல, உள்ளபடியே இம்மண்டபத்தில் 26 சிற்பங்கள் சுமார் ஆறு அடி உயரத்துடன் அழகுறஅமைக்கப்பட்டு சிற்பக் கலைக்கூடமாகத் திகழ்வதுதான். இம்மண்டபம் ஆயிரக்கால் மண்டபம் என்று பெயர் பெற்றிருந்தாலும் உண்மையில் இம்மண்படத்தில் இடம் பெற்றுள்ள தூண்கள் 985 மட்டுமே ஆகும். எஞ்சிய 15 தூண்கள் இருக்க வேண்டிய இடத்தில் விஸ்வநாதர் ஆலயம் அமைந்துள்ளது. மண்டப விதானத்தில் தமிழ் வருடங்கள் 60ஐக் குறிக்கும் சக்கரம் ஒன்று நுழைவாயிலுக்கருகில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தைக் கட்டுவித்தவர் மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கர், கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் என நான்கு அரசர்களுக்குக் கீழ் தளவாயாகவும், அமைச்சராகவும் கி.பி.1529 முதல் 1600 வரையில் 71 ஆண்டுகள் பணியாற்றிய அரியநாத முதலியார் ஆவார்.

▲ ஆடல் வல்லான் (நடராசர்)

◀ நந்தி (பிற்காலப் பாண்டியர் காலம்)




▼ ஆயிரக்கால் மண்டபம் பழையபடம் ஜூலை - 1792





▼ ஆயிரக்கால் மண்டபம் எழில்மிகு தோற்றம்


பொற்றாமரை
75



ஆயிரக்கால் மண்டபம் - வரைபடம்

ஆயிரக்கால் மண்டபச் சிற்பங்கள்

I. வெளிவரிசைச் சிற்பங்கள்

1. சிவபெருமான்
2. கண்ணப்பர்
3. பிச்சாடனர்
4. குதிரைச் சேவகன்
5,6. அரிச்சந்திரன், சந்திரமதி
7. குறத்தி
8. குறவன்


II. உள்வரிசைச் சிற்பங்கள்

1. அரசன்
2. திரிபுராந்தகர்
3. நர்த்தன கணபதி
4,5. வாயிற்காவலர்
6. முருகன்
7. பாணன்
8. விறலி

III. உள் மண்டபச் சிற்பங்கள்

1. அர்ச்சுனன்
2. உத்தரை
3. வேடன்
4. இளவரசியைத் தூக்கிச் செல்லும் பணியாள்
5. தக்கன்
6. தக்கன்வதை
7,8. இரதி, மன்மதன்
9,10. வீமன், புருசாமிருகம்
11,12. அர்ச்சுனன், கர்ணன்
13,14. பிச்சாடனர், மோகினி
15,16. பதஞ்சலி, வியாக்ரபாதர்
17. நடராசர்

◂ ஆயிரக்கால் மண்டபம் தரைப்படம்
▾ ஆயிரக்கால் மண்டபம் எழில்மிகு தோற்றம்



அரியநாத முதலியார்

இந்த அரியநாத முதலியாரைப் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும். காஞ்சிபுரத்திற்கருகில் மெய்ப்பேடு என்னும் ஊரில் பிறந்த இவர் விசயநகரம் சென்று அங்கு நாகமநாயக்கரிடம் கணக்கராக இருந்தார். பின்னர் படிப்படியாக அரண்மனைக் கணக்கராகி கிருஷ்ணதேவராயரின் படைத்தலைவர்களுள் ஒருவரானார்.

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் மதுரையில் சுந்தர பாண்டியனும் – அவனது சகோதரன் வீரபாண்டியனும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டு அமைதியில்லாத சூழ்நிலை இருந்ததினால் அவர்களில் ஒருவன் கிருஷ்ண தேவராயரது உதவியை நாடினான். கிருஷ்ணதேவராயர் நாகமநாயக்கரை அனுப்பித் தமது ஆட்சியை மதுரையில் நிறுவினார். பின்னர் முதல் அரசுப் பிரதிநிதியாக விசுவநாத நாயக்கரை அனுப்பும் போது அரியநாத முதலியாரையும் உடன் அனுப்பி வைத்தார். 72 பாளையப்பட்டுக்களை இவர்தான் உருவாக்கியவர். அக்காலத்தில் மதுரைக்கருகே சோழவந்தான் எனும் ஊரில் தன் இனத்தவரான தொண்டை மண்டல வேளாளர் குடும்பங்களைக் குடியேற்றினார். இவரது அரசுப்பணியும், சமூகப்பணியும், கோயிற்பணியும் பாராட்டத்தக்கன. இவரது சிற்பம் ஆயிரங்கால் மண்டபத்தின் நுழைவு வாயிலின் இடது பக்கம் உள்ளது. இதில் குதிரை மீது அமர்ந்திருக்கிறார் இவர். இச்சிற்பம் சொக்கராவுத்தர் என்றும் அழைக்கப்படும். அதுபற்றி சொக்கராவுத்தர் எனும் உட்தலைப்பில் காணலாம்.

இம்மண்டபத்தின் முகப்பில் இரண்டு வரிசைகளில் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. வெளிவரிசையில் எட்டுச்சிற்பங்களும், உள்வரிசையில் எட்டுச் சிற்பங்களும் அமைந்துள்ளன. மண்டபத்தினுள் மையத்தில் சிவபெருமானது நடராசர் சிற்பம் பெரிய அளவில் அமைந்துள்ளது. இச்சிற்பத்தின் முன் இருவரிசைகளில் வலது, இடது புறங்களில் எதிரெதிராகத் தூண் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் இசைத்தூண்கள் அமைந்துள்ளன. இவற்றைத் தட்டினால் ஒவ்வொரு தூணிலும் வேறு வேறுவிதமான ஒலி எழும்புமே தவிர உண்மையில் இவற்றில் இசைக்கு அடிப்படையான சரிகமபதநி எனும் ஏழு ஸ்வரங்கள் வெளிப்படுவதில்லை. எனவே இத்தூண்களைத் தட்டி இசைக் கச்சேரி செய்ய இயலாது. இதுபோலவே தமிழகத்தில் பல கோயில்களிலும் இசைத்தூண்கள் அமைந்துள்ளன. எனினும் இவை பலவித ஒலிகளைத் தருவதால் மக்கள் இதற்கு இசைத்தூண்கள் என்று பெயர் வைத்து அழைப்பது பொருத்தமே. மேலும் கற்களில் இப்படிப் பலவிதமான ஓசைகள் எழுப்பும்படி அமைத்திருப்பது சிற்பியின் திறமையே, அத்தகு சிற்பிகளை உண்மையில் பாராட்டத்தான் வேண்டும். இன்றைய நிலையில் இங்கு உள்ள இசைத்தூண்கள் பொதுமக்கள் ஒலியெழுப்புவதற்காகத் தட்டித்தட்டி கற்கள் தேய்ந்து போய்விட்டன. எனவே இந்த இசைத்தூண்களைச் சுற்றிப் பாதுகாப்புக்காக கம்பித்தடுப்பு போடப்பட்டுள்ளது. இசைத்தூண்கள் பற்றி மேலும் அறிந்து கொள்ள இந்நூலாசிரியரின் மற்றொரு நூலான “கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்” எனும் நூலில் காண்க.

ஆயிரக்கால் மண்டபம் ▶
இசைத்தூண்



ஆயிரக்கால் மண்டப வெளி வரிசை சிற்பங்கள்

ஆயிரக்கால் மண்டபத்தின் முன்பகுதியில் எட்டு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இடமிருந்து வலமாக 1. சிவபெருமான், 2. கண்ணப்பர், 3. பிச்சாடனர், 4. குதிரைச் சேவகன், 5. அரிச்சந்திரன், 6. சந்திரமதி, 7. குறத்தி, 8. குறவன் ஆகிய சிற்பங்கள் அமைந்துள்ளன.



சிவபெருமான்

சிவபெருமானது வடிவங்கள் 64 எனச் சிவபராக்கிரமம் போன்றநூல்கள் கூறும். அவற்றில் 25 வடிவங்கள் இன்றியமையாத வடிவங்களாகும். அந்த 25 வடிவங்களை அனுக்கிரக வடிவங்கள், சாந்த வடிவங்கள், ருத்ர வடிவங்கள் என மூன்று வகைகளில் பிரிக்கலாம். இவற்றில் அனுக்கிரக வடிவங்கள் பக்தர்களுக்கு அருள்செய்யும் வடிவங்களாகும். சாந்த வடிவங்கள் என்பவை உமையுடன் சிவபெருமான் இடம் பெறும் வடிவங்கள் எனலாம். ருத்ரவடிவங்கள் என்பவை அசுரர்களை சம்ஹாரம் செய்வதாக அமையும். இம்மூன்று வடிவங்களைத் தவிர நிருத்த வடிவம் எனும் ஆடல் வகையும் உண்டு. இதில் பலவிதமான தாண்டவங்கள் அடங்கும். உதாரணமாக ஆனந்ததாண்டவம், ருத்ர தாண்டவம், ஊர்த்துவதாண்டவம் எனக் கூறலாம்.

இங்கு, இடம்பெற்றுள்ள சிற்பம் திருவிளையாடற்புராணத்தில் “அங்கம் வெட்டியது” எனும் கதையின் அடிப்படையில் செதுக்கப்பட்டுள்ளது. குலோத்துங்க பாண்டியன் ஆட்சியின் போது வேற்று நாட்டில் இருந்து ஒரு முதிய வாளாசிரியன் மதுரைக்கு வந்து வாட்பயிற்சி அளித்துக் கொண்டிருந்தான். அவரிடம் பயிற்சி பெற்ற பலரில் சித்தன் என்னும் மாணவன் அவரைப் பகைத்துக் கொண்டு தனியாக ஒரு வாட்பயிற்சி மையத்த நடத்திவந்தான். அத்துடன் தன் ஆசிரியரின் இளமையான மனைவியின் மீது ஆசை கொண்டு அவளைக் கவர விரும்பினான். இவனது நோக்கத்தை அறிந்த அவ்வம்மையார் தன்னைக் காக்கும்படி இறைவனை வேண்டினார். இறைவனும் முதிய வாளாசிரியன் வடிவில் வந்து அம்மாணவனை வாட்ச் சண்டைக்கு அழைத்து அவனது அங்கங்களை எல்லாம் தனித்தனியாக வெட்டித் துண்டித்து மறைத்தார். இக்கதையைச் சித்தரிப்பதுபோல் இச்சிற்பத்தில் சித்தன் எனும் மாணவன் கீழே கையில் கேடயத்துடன் கிடக்கிறான். சிவபெருமான் கத்தியை அவனது உடலில் பாய்ச்சியபடி உள்ளார்.

◂ சிவபெருமான் அங்கம் வெட்டிய திருவிளையாடல்

கண்ணப்பர்

கண்ணப்பர் என்பவர் இறைவனுக்காகத் தன் கண்ணையே தோண்டி அர்ப்பணித்ததால் கண்ணப்பர் என அழைக்கப்படுகிறார். இவரது இயற்பெயர் திண்ணன் என்பதாகும். பெரியபுராணம் எனப்படும் சைவ இலக்கியத்தில் கூறப்படும் 63 நாயன்மார்களில் இவரும் ஒருவர். கண்ணப்பநாயனார் சிற்பமானது பொதுவாக சிவலிங்கத்தில் ஒரு காலை வைத்துக் கொண்டு தன் வலது கையில் உள்ள அம்பால் தன் கண்ணைத் தோண்டுவதாக அமையும். இங்கும் அப்படியே இச்சிற்பம் அமைந்துள்ளது. அருகில் சிவகோசரியார் மறைந்திருந்து கவனிப்பதும் காட்டப்பட்டுள்ளது.

மலையில் வாழும் வேட்டுவ குலத் தலைவனது மகன் திண்ணன். காட்டில் வேட்டையாடும் பொழுது அங்கு ஒரு சிவலிங்கத்தைக் காண்கிறான். சிவபெருமான் திண்ணனுக்கு அனுக்கிரகம் செய்வதற்காகச் சிவலிங்கத்தின் ஒரு கண்ணிலிருந்து இரத்தம் வரவழைக்கிறார். அதைக் கண்ட திண்ணன் இரக்கம் கொண்டு தன் ஒரு கண்ணைத் தோண்டி இரத்தம் வரும் இடத்தில் அப்புகிறான். இலிங்கத்தின் அடுத்த கண்ணிலிருந்து இரத்தம் வருகிறது. தன் அடுத்த கண்ணையும் தோண்டி அப்ப வேண்டுமென நினைத்து இரண்டாம் கண்ணையும் தோண்டிவிட்டால் சிவலிங்கத்தில் இரத்தம் வரும் இடம் தெரியாமல் போய்விடுமே என்பதனால் தன் செருப்புடன் கூடிய காலை சிவலிங்கத்தில் வைக்கிறார். திண்ணனின் முரட்டுத்தனமான பக்தியை எண்ணிப் பாராட்டி சிவபெருமான் காட்சிதந்து அருள் பாலித்துக் கண்ணைத் தோண்டி அப்பியதால் இன்றுமுதல் நீ “கண்ணப்பர்” என்று அழைக்கப்படுவாய் என்று கூறி அருளினார்.



கண்ணப்பர் ▸

பிச்சாடனர்

கண்ணப்பநாயனார் சிற்பத்தை அடுத்து அமைந்திருப்பது பிச்சாடனர் சிற்பம் ஆகும். தாருகாவனத்து ரிசிகளின் ஆணவமலத்தை அழிப்பதற்காகச் சிவபெருமான் கொண்ட வடிவமே இது. சிவ வடிவங்கள் அறுபத்து நான்கினுள் இதுவும் ஒன்று இச்சிற்பம் இங்கு நான்கு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளது. வலது கரத்தினால் மான் குட்டிக்கு அபயம் அளிக்கிறார். இடது கரத்தில் பிச்சைப் பாத்திரம் இடம் பெற்றுள்ளது. மேலிரு கரங்களில் மானும், மழுவும் இடம்பெற்றுள்ளன. இச்சிற்பம் தொடர்பான கதையைக் கம்பத்தடிமண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் பிச்சாடனர் எனும் தலைப்பின் கீழ் ஏற்கெனவே கண்டோம்.

குதிரைச் சேவகன்

பிச்சாடனர் சிற்பத்திற்கு அடுத்து நுழைவாயிலின் இடதுபுறம் அமைந்திருக்கும் சிற்பம் குதிரைச் சேவகன் சிற்பம் ஆகும். இச்சிற்பம் குதிரையின் மேல் ஒருவர் அமர்ந்த நிலையில் இருக்கக் குதிரைத் தன் முன்னங்கால்களைத் தூக்கிப் பாய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் இம்மண்டபத்தைக் கட்டிய அரியநாத முதலியார் சிற்பம் என்றும் அழைக்கப்படுகிறது. அது தவிர இச்சிற்பத்தைச் சிவபெருமான் என்றும் கொள்ளவும் இச்சிற்பம் இடமளிக்கிறது. அதாவது திருவிளையாடற் புராணத்தில் மாணிக்கவாசகப் பெருமானுக்காக நரியைப் பரியாக்கிய கதையில் வரும் குதிரைச்சேவகன் இவர் எனவும் கொள்ளலாம். மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டியன் எனும் மன்னனிடம் கி.பி.9–ஆம் நூற்றாண்டில் மதுரைக்கருகில் திருவாதவூர் எனுமிடத்தில் பிறந்த வாதவூரர் என்பவர் அமைச்சராகப் பணியாற்றினார். இவர் அரசனது ஆணைக்கு இணங்கக் குதிரைகள் வாங்கிவரச் சென்றார். வழியில் திருப்பெருந்துறை எனுமிடத்தில் இறைவன் குருவாக அமர்ந்து வாதவூரடிகளுக்கு உபதேசித்தார். இதனால் வந்த வேலையை மறந்து கொண்டுவந்த பணத்தைக் கோயில் திருப்பணிக்கே செலவிட்டுவிட்டார். நெடுநாட்களாகியும் குதிரைகள் வராததைக் கண்ட மன்னன் வாதவூராரை அழைத்து வந்து ஏன்? குதிரைகள் வரவில்லை என வினவி வாதவூரடிகளுக்குத் தண்டனை வழங்கினார். வாதவூரடிகளும் குதிரைகள் வரும் என்று கூறினார்.



பிச்சாடனர் ▶



இதனால் இவரைக் காப்பதற்காக இறைவன் நரிகளைக் குதிரைகளாக்கிக் குதிரை விற்பவன் வடிவில் வந்து மன்னனிடம் குதிரைகளை ஒப்படைத்து, இன்று நாம் கயிறு மாற்றிக் கொண்டோம். நாளை குதிரைகளுக்கு என்னவானாலும் எமக்குப் பொறுப்பில்லை என்று சொல்லிச் சென்றார். வாதவூரடிகள் விடுதலை செய்யப்பட்டார். அன்று இரவு அக்குதிரைகள் அனைத்தும் நரிகளாக மாறி ஊளையிட்டு ஓடின. இதனால் வாதவூராருக்கு மீண்டும் மன்னன் தண்டனை அளிக்க இறைவனை இறைஞ்சினார் வாதவூரர். இறைவன் கருணையால் வைகையில் வெள்ளப்பெருக்கு எடுத்தது. கரைகள் உடைந்தன. உடைந்த கரைகளை அடைக்க வீட்டிற்கொருவர் வரவேண்டும் என அரசன் கட்டளையிட்டான். வயதான வந்தியம்மை எனும் கிழவி கூலியாள் இல்லையே என எண்ணிய போது இறைவன் கூலியாளாக வந்து பிட்டு கொடுத்தால் கூலி வேலை செய்வதாக வந்தியிடம் கூறி பிட்டு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மரத்தடியில் சென்று தூங்கினார். இதனைக் கண்ட மன்னன் கூலியாளின் முதுகில் பிரம்பால் அடித்தான். இவ்வடி அரசன் உட்பட அனைத்து உயிர்களுக்கும் வலித்தது. கூலியாள் திடீரென மறையவும் அரசன் திகைத்து நின்றான். அப்பொழுது வான் ஒலியாக (அசரீரி) வாதவூரடிகளை விடுவிக்க அவருக்காகவே திருவிளையாடல் செய்தோம் என்று கூறியது. மன்னனும் இறைவனை வணங்கி வாதவூரடிகளை விடுவித்தான்.

இச்சிற்பத்தின் கீழ்த் தூணின் சதுரப்பகுதியில் மேற்குப்புறம் சிற்பி ஒரு நரியைச் செதுக்கியுள்ளார். அதன்மூலம் குதிரை மேல் இருப்பவர் நரியைப் பரியாக்கிய சிவபெருமான் எனவும் கொள்ளலாம். எனவே இச்சிற்பத்தை நாயக்கமன்னர்கள் நான்கு பேருடைய அமைச்சனாகவும், படைத்தலவனாகவும் இருந்து இம்மண்டபத்தையும் கட்டிய அரியநாத முதலியார் என்றும் சிவபெருமானின் குதிரைச்சேவகன் வடிவம் என்றும் இரண்டு விதமாகக் கருதிப் பார்க்கலாம். ஒரு சிற்பத்தினுள் இரண்டு கதைகளையும் வைத்துப் படைத்த அக்காலச் சிற்பியின் கலைநுணுக்கம் பாராட்டுதற்குரியதாகும்.

◀ சொக்க ராவுத்தர்


அரிச்சந்திரன்? சந்திரமதி?

குதிரைசேவகன் சிற்பத்திற்கு அடுத்ததாக நுழைவாயிலின் வலதுபுறம் இடம் பெற்றிருக்கும் சிற்பம் அரிச்சந்திரன் சிற்பம் என்று கருதப்படுகிறது. இச்சிற்பம் அரிச்சந்திரன்தான் என்பதற்குரிய அகச்சான்றுகளோ, புறச்சான்றுகளோ இல்லை. ஒரு குதிரை பாய்ந்து ஓடும் நிலையில் உள்ளது. அதன்மேல் ஒருவர் நின்றநிலையில் இருக்கிறார். இச்சிற்பத்தை அரிச்சந்திரன் என்று கூறுவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. இதனை அடுத்ததாக உள்ள சிற்பத்தில் ஒரு பெண் கையில் சிறு குழந்தையுடன் காணப்படுகிறாள். அவளது முகம் கவலை தோய்ந்ததாக உள்ளது. எனவே இச்சிற்பம் இறந்த தன் குழந்தையான லோகிதாசனைக் கைகளில் ஏந்தியிருக்கும் சந்திரமதியாகக் கொள்ளப்படுகிறது. இச்சிற்பத்தைச் சந்திரமதி என்று கொண்டால் அருகில் உள்ள சிற்பத்தை அரிச்சந்திரன் எனக் கொள்ளலாம். எனினும் நாயக்கமன்னர்களால் கட்டப்பட்ட பெரும்பான்மையான கோயில்களில் அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்கள் காணப்படாததால் இவை மேலும் ஆய்விற்குரியன. அரிச்சந்திரன் என்று கருதப்படும் சிற்பத்தின் பக்கவாட்டில் ஒருவர் மான் ஒன்றைத் தோளில் சுமந்தபடி காட்டப்பட்டுள்ளார். விசயநகர–நாயக்கர் காலத்தில் கோயில்கட்டும் கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள் ஆகியோர் அந்நாட்டிலிருந்து வர வழைக்கப்பட்டதால் அந்நாட்டுக் கதைகளை மையமாக்கிக் கூடப் பல சிற்பங்களைச் செய்திருக்கலாம். ஆகவே நாயக்கர் காலத்தில் செதுக்கப்பட்ட மேற்கண்ட சிற்பங்களுடன் புதுமண்டபத்தில் இடம் பெற்றுள்ள ஒரு பெண்ணைத் தூக்கிச் செல்லும் நாடோடி முதலான சிற்பங்கள் இன்னும் சரியாக அடையாளம் காண இயலாது உள்ளன. எனவே இச்சிற்பங்கள் மேலும் ஆய்விற்குரியன.





▲ அரிச்சந்திரன்
◀ சந்திரமதி



குறவன், குறத்தி

விசயநகர–நாயக்க மன்னர்கள் தாம் கட்டிய கோயில் மண்டபங்கள் பெரும்பாலானவற்றில் குறவன்–குறத்தி சிற்பங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத கூறாக உள்ளது. அக்காலம் முதல் இன்றுவரை குறவர்கள் சமுதாயத்தில் ஒரு மாறுபட்ட கலாச்சாரத்திற்கு உரியவர்களாக உள்ளனர்.

இக்குறவன் சிற்பம் பல்வேறு விதமான அணிகலன்களுடன் இடம் பெற்றுள்ளது. ஒரு கையில் வலையை வைத்துக் கொண்டு குரங்கை கட்டி இழுத்துச் செல்வது போன்றும் அக்குரங்கு தன் குழந்தையைக் கையில் இடுக்கிக் கொண்டிருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளது. குறவனின் மற்றொரு கையில் ஈட்டி காணப்படுகிறது. குறவனின் உடம்பில் விலா எலும்புகள் தெரிவது போன்று அமைத்த சிற்பியின் கலைத்திறன் பாராட்டுதற்குரியதாகும்.

இங்கு இடம் பெற்றுள்ள குறத்திக்கு மூன்று குழந்தைகள், ஒரு குழந்தையின் கையைப் பற்றிக் கொண்டு நிற்கிறாள் குறத்தி, தோளில் ஒரு குழந்தை அமர்ந்து கொண்டு கூடையில் உள்ள உணவை அள்ளிச் சாப்பிடுவது போலும் காட்டப்பட்டுள்ளது. கைக்குழந்தை ஒன்று குறத்தியின் மார்போடு கட்டியிருக்கும் துணியில் தொட்டிலில் படுத்திருப்பது போலும் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருப்பது போலும் அமைந்துள்ளது. குறத்தியின் கையிலுள்ள கூடை நன்கு முடையப்பட்ட கூடை போலக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இக்கூடை சிற்பியின் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.



குறவன் ▲
குறத்தி ▶

உள்வரிசை சிற்பங்கள்

வெளிவரிசை சிற்பங்களுக்கு இணையாக உள்வரிசையிலும், எட்டு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவை இடப்பக்கமிருந்து வலப்பக்கமாக அரசன், திரிபுராந்தகர், நர்த்தன கணபதி, வாயிற்காவலர், முருகன், பாணன், விறலி என்பனவாகும். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் இனிக் காணலாம்.

அரசன்

இச்சிற்பத்தை எந்த அரசர் எனக் கூறுவதற்கான அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. அருகில் உள்ள திரிபுராந்தகர் எனும் சிவபெருமானது சிற்பத்தோடு தொடர்புபடுத்திப் பார்த்தாலும் திரிபுராந்தகருக்கும், மன்னனுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. அரச உருவத்தின் அமைப்பு நாயக்க மன்னர்களது உருவம் போல சரிந்த வயிற்றுடன் இல்லை. தலையில் கிரீட அமைப்பு இருக்கிறது. எனவே இச்சிற்பம் பாண்டிய மன்னனது சிற்பமாக இருக்கலாம்.



திரிபுராந்தகர்

திரிபுராந்தகர் சிற்பத்தைத் தேரில் அமர்ந்த கோலத்தில் அல்லது நின்றகோலத்தில் வில்லில் நாண் பூட்டியபடி, எதிரிகளைத் தாக்கியபடிக் காட்டுவது வழக்கம். விசயநகர நாயக்கர் காலத்துத் திரிபுராந்தகர் சிற்பம் பெரும்பாலும் தேரில் நின்று வில்லால் எதிரிகளைத் தாக்குவது போன்றோ, வில்லை ஊன்றிய நிலையிலோ அமைந்திருக்கும்.

முப்புரம் எரித்த விரிசடைக்கடவுள் என அழைக்கப்படும் திரிபுராந்தகர் பற்றிய செய்தி மகாபாரதத்திலும் இடம் பெற்றுள்ளது. சிவபெருமானது வடிவங்களுள் ருத்ர வடிவங்களில் இன்றியமையாத வடிவமாக விளங்குவது திரிபுராந்தகர் வடிவமே. சைவசித்தாந்தத்தில் கூறப்படும் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் தங்கம், வெள்ளி, இரும்பு எனும் கோட்டைகளாக உருவகப்படுத்தப் பட்டுள்ளன. மனிதர்களிடம் காணப்படும் இம்மூன்றுமலங்களை விட்டு உயிர் எப்பொழுது நீங்கி மலபரிபாகம் அடைகின்றதோ அப்பொழுதுதான் அந்த ஆன்மாவானது சுத்த ஆன்மாவாகிறது. சுத்த ஆன்மா அதன் பின்னரே இறைவனை அடையமுடியும். அப்பொழுதும் இறைவன் அருளினாலன்றி உயிர் இறைவனை அடைய முடியாது. மேலும் வேதாந்தம் இறைவனோடு உயிர் கலப்பதாகக் கூறும்.

ஆனால் சிந்தாந்தத்தில் உயிர் என்றும் இறைவனைக் கலக்க முடியாது. மாறாக இறைவனது திருவடிகளை அடையலாம் எனப்பகரும். எனவே நம்மிடம் உள்ள மும்மலங்களை அழித்து உயிர்க்கு மோட்சம் கொடுப்பவன் சிவபெருமான் என்ற சித்தாந்த தத்துவத்தை விளக்குவதே திரிபுராந்தக மூர்த்தி சிற்பமாகும்.

இங்கு திரிபுராந்தகர் சிற்பமானது தேரின் மேல் அமையாது, தேரின்றி நின்ற நிலையில் படைக்கப்பட்டுள்ளது. ஆனால் தேரோட்டியாகப் பிரம்மன் கீழே இடம் பெற்றிருப்பதால் சிவபெருமான் தேரில் வருவதாக நாம் கற்பனை செய்யும்படிச் சிற்பி படைத்துள்ளார். இச்சிற்பம் சிவபெருமான்தான் அதிலும் இவர் திரிபுராந்தகர் என்பதற்கு வேறு என்ன சான்றுகள் இச்சிற்பத்தில் உள்ளன என நோக்கினால் சான்றுகள் மிகக்குறைவுதான். எனினும் சிற்பத்தைக் கண்டுபிடிக்க சிற்பி ஏதேனும் ஒரு உத்தியை அச்சிற்பத்தில் வைத்துப் படைத்திருப்பான். உதாரணமாக முப்புரங்களையும் சிவபெருமான் எரிக்கச் செல்லும் போது பூமியே தேராகவும், திருமால் அம்பாகவும், அக்னிதேவன் அம்பின் நுனியாகவும், வாசுகி எனும் பாம்பு வில்லாகவும் இருந்ததாகப் புராணம் கூறும். அதன்படி இங்கு சிவபெருமான் கையில் உள்ள அம்பின் நடுவில் விஷ்ணுவின் சிறு சிற்பத்தை உருவாக்கியுள்ளார் சிற்பி. மேலும் அம்பின் நுனியில் அக்னி இடம் பெற்றுள்ளது. எனவே அம்பும் அதன் நுனியும், கீழே பிரம்மன் அமர்ந்திருப்பதும், வில்லின் நுனியில் பாம்பு காட்டப்பட்டிருப்பதும், இது திரிபுராந்தகர் என்பதற்கான ஆதாரங்களாக அமைகின்றன. இச்சிற்பம் தொடர்பான கதையைக் கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் திரிபுராந்தகர் எனும் தலைப்பில் காண்போம்.



◀ பாண்டியன்
▲ திரிபுராந்தகர்

நர்த்தன கணபதி

இங்கு திரிபுராந்தகர் சிற்பத்திற்கு அடுத்ததாக நர்த்தன கணபதி சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதில் கணபதி இடது காலைத் தூக்கி வலது காலை ஊன்றி நடனமாடுவதாகச் செதுக்கியுள்ளனர். தன் இடது பக்கம் தூக்கிய காலில் தன் மனைவி வல்லபையைத் தாங்கியபடி



உள்ளார். இவ்வல்லபை மரீசி முனிவருக்கு சிவனருளால் பிறந்த மகளாவாள். பொதுவாக கணபதி பிரம்மச்சாரி என்றுதான் பெரும்பாலான புராணங்கள் கூறும். ஆனால் கணபதிக்கு சித்தி, புத்தி என்றஇரு மனைவியர் இருப்பதாக வட இந்தியாவில் புராணங்கள் உண்டு. இவர்கள் இருவரும் பிரமனது மகள்களாவர். இவர்கள் இருவரும் முறையே ஞானம் மற்றும் அறிவின் குறியீடுகளாவர். இங்கு இடம் பெறுவது வல்லபை கணபதியாகும். இவர் பத்து கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளார்.

வாயிற்காவலர்

◂ (இடது) நர்த்தன கணபதி
▸ (வலது) வாயிற்காவலர்
▸ வாயிற்காவலர்

நர்த்தன கணபதியை அடுத்து நுழைவாயிலை ஒட்டி இரண்டு வாயிற்காவலர் சிற்பங்கள் அமைந்துள்ளன. இதன்மூலம் சிற்பி ஆயிரக்கால் மண்டபத்தையே ஒரு கோயிலாகக் கற்பனை செய்து செதுக்கியுள்ளார் என்பதை அறியலாம். மேலும் ஆயிரக்கால் மண்டபத்தின் உள்ளே சிவபெருமானது நடராசர் சிற்பம் இருப்பதும் இம்மண்டபமே ஒரு கோயில் என்பதற்கு பொருத்தமாக அமைகின்றது.





வாயிற்காவலர்
முருகன்
பாணன்
விறலி



முருகன்

வாயிற்காவலர் சிற்பங்களுக்கு அடுத்ததாக அமைந்திருப்பது முருகனது சிற்பமாகும். இதில் முருகன் மயில்மேல் அமர்ந்து மேலுலகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வருவதாக கற்பனையுடன் சிற்பி இச்சிற்பத்தை அமைத்துள்ளார். முருகன் நான்கு கரங்களுடன் கையில் வேல் ஏந்தியபடி இடம் பெறுகிறார். காதுகளில் மகர குண்டலங்கள் தொங்குகின்றன. ஒரு காலை மடக்கி மறுகாலைத் தொங்கவிட்ட நிலையில் அமைந்திருக்கும் காட்சி மிக அருமை. வாயிற்காவலர்களுக்கு இடதுபுறம் அண்ணனான கணபதியையும், வலதுபுறம் தம்பியான முருகனையும் அமைத்திருப்பது பொருத்தமாக அமைகின்றது.

பாணர்

இச்சிற்பம் நின்றநிலையில் முருகனது சிற்பத்திற்கு அடுத்து அமைந்துள்ளது. பாணனது உருவம் இரண்டு கரங்களுடன் தலையின் மேல் ஐந்துதலை நாகம் காட்டப்பட்டுள்ளது. முருகனுக்கு அருகில் உள்ளதால் இச்சிற்பம் முருகக் கடவுளோடு தொடர்புடையதாக இருக்கலாம். அல்லது இதனை அடுத்து அமைக்கப்பட்டுள்ள விறலி சிற்பத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். அவ்வகையில் பார்க்கின்றபோது பாணனும் விறலியும் இசைக்கருவியை மீட்கும் இசைக்கலைஞர்களாவர். அந்த வகையில் இவற்றை தொடர்புபடுத்திக் காணலாம். ஆனால் பாணனது தலைக்கு மேல் நாகம் காட்டப்பட்டுள்ளதற்கு காரணம் என்ன என்பது தெரியவில்லை. சிவபெருமானாக இச்சிற்பத்தை கருதுவோமானால் சிவபெருமானோடு பாம்பு தொடர்புடையது என்பது பொருந்தி வருகிறது. பாணனது இடது தோளில் கிளி செதுக்கப்பட்டுள்ளது. மேலும் இடது பக்கம் கணபதி சிற்பத்திற்கு அடுத்ததாக சிவபெருமானது திரிபுராந்தகர் சிற்பம் அமைந்திருப்பதால் இங்கு முருகனது சிற்பத்திற்கு அடுத்தாக இடம்பெறும் சிற்பமும் பெரும்பாலும் சிவபெருமானுடன் தொடர்புடைய சிற்பமாகவே இருக்க வேண்டும். பொதுவாக அக்காலத்தில் சிற்பங்களைக் கோயில்களில் அமைக்கும்பொழுது தொடர்புடைய சிற்பங்களை அருகருகிலோ அல்லது எதிரெதிரிலோ அமைப்பது வழக்கம். அவ்வகையில் நோக்கும்போது இங்கு மேற்கண்ட அமைப்பு பொருந்தி வருவதால் இப்பாணனது சிற்பத்தைச் சிவனது வடிவமாகவே கொள்ளலாம். ஆனால் எக்கதையை அடிப்படையாக வைத்து இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது? என்பதை அறிய இயலவில்லை.

விறலி

பாணன் சிற்பத்துக்கு அடுத்து அமைந்துள்ள விறலி சிற்பம் மிக அழகுற கையில் இசைக்கருவியுடன் செதுக்கப்பட்டுள்ளது. அவளது உடை கூட நடனத்துடன் தொடர்புடைய உடையாக காட்டப்பட்டுள்ளது. விறலியின் வலது தோளில் கிளி அமர்ந்துள்ளது. இச்சிற்பம் தேரில் நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. சங்ககாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களில் பாணரும், விறலியரும் அடங்குவர். இவர்கள் அக்காலத்தில் இசைக்கருவிகளைக் கொண்டு மக்களையும் மன்னரையும் மகிழ்விப்பர். வைகறையில் மன்னனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடித் துயிலெழுப்புவது இவர்களது கடமையாக இருந்துள்ளது. அத்தகைய பாணன், விறலி சிற்பங்களே இங்கு அருகருகே இடம் பெற்றுள்ளதாகவும் கருதலாம்.

உள்மண்டப சிற்பங்கள்

உள்மண்டபத்தில் உள்ள நடராசர் சிற்பத்திற்கு முன்னர், இரண்டு வரிசையாக யாளிகளும் தூண் சிற்பங்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. ஆயிரக்கால் மண்டபத்தினுள் நுழைந்து நடராசரை நோக்கி, இருபுறமும் மாறிமாறித் தொடர்புடைய சிற்பங்களை அமைத்துள்ளனர். அவற்றை இனி காணலாம். அவை 1. அர்ச்சுனன், 2. உத்தரை, 3. வேடன், 4. இளவரசியைத் தூக்கிச் செல்லும் பணியாள், 5. தக்கன், 6. தக்கன் வதை, 7. ரதி, 8. மன்மதன், 9. வீமன், 10. புருசாமிருகம், 11. அர்ச்சுனன், 12. கர்ணன், 13. பிச்சாடனர், 14. மோகினி என அமைந்துள்ளன.

அர்ச்சுனன்

மகாபாரதத்தில் அர்ச்சுனனுக்கு ஒரு சாபம் உண்டு. அதன்படி ஒரு முனிவர் அர்ச்சுனனை ஓராண்டு காலம் பேடியாகப் போகும்படி சபித்துவிடுவார். அர்ச்சுனன் அந்த சாபத்தைத் தேவையான பொழுது பயன்படுத்திக் கொள்வதாக மாற்றியளிக்குமாறு கேட்டுப் பெற்றுக் கொள்கிறான். அந்த சாபத்தின்படி விராடனது அரண்மனையில் பேடியுருவில் விராடனின் மகள் உத்தரைக்கு நடனம் சொல்லித் தரும் பணியை மேற்கொள்கிறான். அந்தக் காட்சியே இங்கு பேடியுருவ அர்ச்சுனனாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இதே போன்ற சிற்பத்தைத் திருநெல்வேலிக்கருகில் உள்ள கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயிலிலும் காணலாம்.



◂ அர்ச்சுனன்

உத்தரை

அர்ச்சுனனுக்கு நேர்எதிரே உள்ள சிற்பம் உத்தரையாகும். இச்சிற்பத்தை திரௌபதி என்று சொல்வாரும் உண்டு. வேறு நிலையில் அர்ச்சுனனது சிற்பம் இருப்பின் இதனைத் திரௌபதி சிற்பம் எனக் கொள்ளலாம். ஆனால் இங்கு இடம் பெற்றுள்ள சிற்பத்தில் பேடியுருவில் அர்ச்சுனன் இருப்பதால் அந்தக் கதையுடன் தொடர்புடைய உத்தரை என்ற சிற்பமாகவே இதனைக் கருத இயலுகிறது. மேலும் சிற்பியானவர் தொடர்புடைய சிற்பங்களை பெரும்பாலும் அருகருகிலோ அல்லது எதிரெதிரிலோ அமைப்பது வழக்கம். இச்சிற்பத்தைத் திரௌபதி என்று கூறுவதற்கான அகச்சான்றுகள் அச்சிற்பத்தில் இல்லை. எனவே இதனை உத்தரை எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.



◂ உத்தரை

வேடன்

நாயக்கர் கால மண்டபங்களில் இத்தகு வேடன் சிற்பத்தைப் பெரும்பாலும் காணலாம். இங்கு வேடன் தனது தோளில் ஒரு வில்லினை மாட்டிக் கொண்டு காணப்படுகிறான்.

இளவரசியைத் தூக்கிச் செல்லும் பணியாள்

இந்த சிற்பத்தை இன்னும் சரியாக அடையாளம் காண இயலவில்லை. ஒரு பெண்ணை ஒரு ஆண் தூக்கிச்செல்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் பல கோயில்களில் இச்சிற்பத்தில் பணியாளனது தோளில் இருக்கும் பெண் கிரீடத்துடன் அவனை வேகமாகச் செல் என்று கட்டளை இடுவது போன்றும் இவர்களைக் குதிரை வீரர்கள் துரத்திக் கொண்டு வருவது போலவும் காணலாம். எனவே இத்தகு சிற்பம் ஏதோ ஒரு கதையுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது எனக் கருத வேண்டியுள்ளது. ஏற்கெனவே கூறியபடி நாயக்கர் காலத்து மண்டபங்களில் கண்டுபிடிக்கப்பட வேண்டிய சிற்பங்கள் பல உள்ளன. பெரும்பாலும் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான சிற்பங்களாக உள்ளன. அவையும் ஒரு வேளை தெலுங்கு இலக்கியத்தையோ கதைப்பாடலையோ அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கலாம். கோயிலைப்பற்றி இனிமேல் ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் இத்தகு சிற்பங்களை அடையாளம் காண முயற்சிக்க வேண்டும்.





▸ (இடது) வேடன்
▸ (இடது) இளவரசியை தூக்கிச்செல்லும் பணியாள்

தக்கன்

தக்கன் சிற்பம் இரண்டு கரங்களுடன் நின்றகோலத்தில் அமைந்துள்ளது. கையில் ஒரு வாள் ஏந்திய நிலையில் உள்ளதால் இது சிவபெருமானை எதிர்த்துப் போரிடுவதற்குத் தயாராக நிற்பதை உணர்த்துகிறது.

வீரபத்ரர்

இச்சிற்பத்தில் தக்கனை வதைக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. இதில் தக்கன் வீரபத்திரனது காலடியில் வீழ்ந்து கிடக்கிறார். அவனது தலையில் வீரபத்திரர் கால் வைத்துள்ளார். அதாவது தக்கன் ஆணவம் தலைக்கேறியவனாய் இருந்ததால் அவனது ஆணவத்தை அழிக்க வந்த வீரபத்திரன் தக்கனது தலையில் காலால் மிதிப்பதாக அமைந்துள்ளது. இச்சிற்பத்தின் பக்கவாட்டில் நந்திதேவர் சிவபெருமானின் கீர்த்தியைக் கண்டு வணங்குகிறார். இடதுபக்கத்தில் சிவபெருமான் ஒருவனது தலையைக் கத்தியால் அரிவது போல் ஒரு சிற்பக்காட்சி இடம் பெற்றுள்ளது.



◀ வீரபத்ரர்
◀ தக்கன்





இரதி, மன்மதன்

இரதி என்பவள் மன்மதனின் மனைவி. அழகுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுபவர்கள் ரதி, மன்மதன் எனும் இத்தம்பதியர் ஆவர். ரதியின் வாகனம் அன்னப்பறவை. எனவே ரதியின் சிற்பம் எப்பொழுதும் அன்னத்தின் மீது அமர்ந்த நிலையில் காட்டப்படும். மன்மதன் தேரில் வருவதுபோல் அமைக்கப்படும். கையில் கரும்பு வில் இருக்கும். இங்கு இரதி மட்டும் அன்னத்தின் மீது காட்டப்பட்டுள்ளாள். மன்மதனுக்குத் தேர் இடம் பெறவில்லை. மலர் அம்புகளை இருவரும் முறையே இரதி பெண்கள் மீதும், மன்மதன் ஆண்கள் மீதும் தொடுப்பர். இதன்மூலம் காதல் உணர்வுகளைத் தூண்டி அவ்வுந்துதலினால் ஆணும், பெண்ணும் இணைந்து அதன் மூலம் உயிர்களை உற்பத்தி செய்து இவ்வுலகம் நிலைத்து வாழ வகை செய்கின்றனர். எனவே ரதி மன்மதன் இருவரும் காதல் கடவுளர் என்று அழைக்கப்படுகின்றனர். இங்கு ரதி அன்னத்தில் அமர்ந்த நிலையில் கையில் மலர்ச்செண்டுடன் இடம் பெறுகிறாள். ரதியின் இருபுறமும் சாமரதாரிகள் சாமரம் வீசுவது போல் அமைக்கப்பட்டுள்ளனர். மன்மதன் கையில் இருந்த வில்லும், அம்பும் சிதைந்துள்ளன.

நாயக்க மன்னர்களது மண்டபச் சிற்பங்களில் தவறாது இடம் பெறுவது ரதி, மன்மதன் சிற்பங்களாகும். மன்மதன் தொடர்பான கதையை கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் காமதகனமூர்த்தி எனும் தலைப்பில் மேலும் காண்க.


◂ இரதி
◂ மன்மதன்

வீமன், புருசா மிருகம்

வீமன், புருசா மிருகம் கதையினைக் கிளிக்கூடு மண்டபச்சிற்பங்கள் எனும் பகுதியில் ஏற்கெனவே கண்டோம். இங்கு ஒரு தூணில் வீமன் முறுக்கிய மீசையுடன் கையில் கதை எனும் ஆயுதத்தை உயர்த்தியபடி காட்டப்பட்டுள்ளான். எதிர்த்தூணில் புருசாமிருகம் கதையை உயர்த்தியபடி இடம் பெற்றுள்ளார். இச்சிற்பத்திற்குப் பக்கவாட்டில் அதேதூணில் தருமரது சிற்பம் அமைந்துள்ளது.



▲ பீமன்



▲ புருசா மிருகம்

அர்ச்சுனன், கர்ணன்

அடுத்ததாக அர்ச்சுனன் மற்றும் கர்ணன் சிற்பங்கள் எதிரெதிர் தூண்களில் அமைந்துள்ளன. நாயக்கரது மண்டபச் சிற்பங்களில் அர்ச்சுனன், கர்ணன் சிற்பங்களும் தவறாது இடம் பெறுபவையே. இச்சிற்பங்களில் எது கர்ணன், எது அர்ச்சுனன் எனப் பகுத்தறிவது சற்று கடினமாக இருக்கும். கர்ணனது கையில் நாகக்கணை இருக்கும். பாரதப்போரில் கர்ணனால் அர்ச்சுனனது உயிருக்குத் தீங்கு ஏதும் ஏற்படாது இருக்க குந்திதேவி கர்ணனிடம் அர்ச்சுனன் மேல் நாகக்கணையை ஒருமுறைக்கு மேல் தொடுக்கக்கூடாது என கேட்டுக்கொண்டதற்கு இணங்க நாகக்கணையைப் போரில் ஒருமுறைமட்டுமே கர்ணன் பயன்படுத்தினான். அப்பொழுது கண்ணனது சூழ்ச்சியால் அர்ச்சுனன் உயிர் தப்பினான். இந்தக் கதையை ஒட்டியே அர்ச்சுனன், கர்ணன் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.



▲ அர்ச்சுனன்



▲ கர்ணன்

பிச்சாடனர், மோகினி

அர்ச்சுனன், கர்ணன் சிற்பங்களை அடுத்து பிச்சாடனர், மோகினி சிற்பங்கள் எதிரெதிரே இடம் பெறுகின்றன. இவற்றில் பிச்சாடனர் சிற்பம் நின்றநிலையில் அமைந்திருக்கத் தூணின் பக்கவாட்டில் ரிசிபத்தினியர் காட்டப்பட்டுள்ளனர். மோகினி சிற்பத்தில் மோகினியின் உருவம் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. மோகினியின் அழகில் மோகித்து ரிசிகள் மயக்கநிலையில் காமஉணர்வுடன் அத்தூணின் பக்கவாட்டுப் பகுதியில் காட்டப்பட்டுள்ளனர். பிச்சாடனர் தொடர்பான கதையை முதலிப்பிள்ளை மண்டபம் எனும் பகுதியில் ஏற்கெனவே கண்டோம். இவ்வாறாக ஆயிரக்கால் மண்டபத்தில் புராணம் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான சிற்பங்களை அமைத்து மக்கள் மனதைக் கவரும் வண்ணமும் கோயிலுக்கே அழகு சேர்ப்பதாகவும் திகழச் செய்துள்ளனர். மேலும் இந்த ஆயிரக்கால் மண்டபத்தில் கோயில்களின் அமைப்பு, சிற்பங்களின் அமைப்பு, இறைவடிவங்கள் பற்றிய விவரங்கள் முதலியன முன்னர் சிறப்பான நிலையில் ஓவியங்களாக இடம் பெற்றிருந்தன. ஆனால் தேவையான அளவுக்கு அவற்றைப் பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படாததால் அவையாவும் அழிந்துவிட்டன. இன்று மிஞ்சியிருப்பவை கல்லினாலான சிற்பங்களும், செப்புப் படிமங்களும் திருவிளையாடற் புராணம் பற்றிய ஓவியத் தொகுதிகளும்தான்.



▲ பிச்சாடனர்



▲ மோகினி



கற்சிற்பங்கள்

இம்மண்டபத்தின் இடதுபுறம் பல கற்சிற்பங்களை சிறுமேடைகள் அமைத்து அவற்றின் மேல் இடம் பெறச் செய்துள்ளனர். இவைகள் பல இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் இச்சிற்பங்கள் பற்றிய குறிப்புகள் அதனருகில் இடம் பெறவில்லை. இதனால் பொதுமக்களுக்கு அக்கற்சிற்பம் யாருடைய சிற்பம், அதன் காலம், கிடைத்த இடம் முதலான செய்திகளை அறிய இயலாமல் போகின்றது. இக் கற்சிற்பங்கள் அழகு குன்றியவையாகும்.

செப்புப் படிமங்கள்

கோயில்களில் இடம் பெறும் சிற்பங்களில் செப்புத் திருமேனிகள் தனிச்சிறப்பு மிக்கவை. ஏனெனில் பிறசிற்பங்கள் கல்லில் செதுக்கப்படும். அல்லது சுதையில் உருவாக்கப்படும். ஆனால் செப்புத்திருமேனிகளோ ஐம்பொன்னில் வார்க்கப்படுகின்றன. ஐம்பொன்னில் செம்பு அதிக அளவில் இடம் பெறுவதால் இவை செப்புத் திருமேனிகள் என்றழைக்கப்படுகின்றன. துவக்க காலத்தில் பெரும்பாலும் இறைவனது உருவங்களே வார்க்கப்பட்டதால் அவை திருமேனிகள் என்றஅடைமொழி சேர்த்து அழைக்கப்பட்டன. நாளடைவில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் அரசர்கள் வரை இறைவனல்லாத திருமேனிகளும் வார்க்கப்பட்டன.

இறைவனது இத்திருமேனிகள் பின்னர் திருவிழாக்களோடு தொடர்புபடுத்தப்பட்டு திருவீதியுலா வரத்தொடங்கின. இச்செப்புத் திருமேனி அல்லது படிமமானது வடமொழியில் பிரதிமா என்றழைக்கப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் கூட கண்ணகியின் தெய்வ வடிவைப் பற்றி இளங்கோவடிகள் கூறும் போது "கைவினை முற்றிய தெய்வப்படிமத்து" என்கிறார்.



இந்தியாவைப் பொறுத்தவரை சிந்து சமவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடன நங்கையின் சிறிய உருவமே இந்தியாவில் காணப்பெறும் வெண்கல உருவங்களுள் காலத்தால் முற்பட்டதாகும். இதனையடுத்து பார்சுவநாதரின் செப்புருவம் கிடைத்துள்ளது. தமிழகத்தில் நமக்கு கிடைத்த படிமங்களில் காலத்தால் முந்திய படிவம் பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகும். அதேபோல் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று சொன்னால் அது சோழர்காலமே. கி.பி.10ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து, கி.பி.12–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலான காலத்தில் வார்க்கப்பட்ட செப்புத் திருமேனிகளை நிறுவி அது தொடர்பாகக் கல்லில் பொறித்து வைத்துள்ள செய்திகளை முதலாம் பராந்தகன் காலத்திலிருந்தே காண முடிகின்றது. இத்தகு சோழர் காலத்துப் படிமங்களின் முகம் உருண்டு திரண்டு விளங்கும். அதே சமயம் பாண்டிய நாட்டுச் செப்புத் திருமேனிகளின் முகமானது நீண்டும் ஒடுங்கியும் இருக்கும். விசயநகர–நாயக்கர் காலத்திலும் இத்தகு படிமக்கலை தொடர்ந்து நிலை பெற்றிருந்தது. இன்றும் தமிழகத்தில் பல இடங்களில் படிமங்கள் செய்யப்படுகின்றன.



ஆயிரக்கால் மண்டபத்தில் சுமார் நாற்பத்தைந்திற்கும் மேற்பட்ட படிமங்கள் காணப்படுகின்றன. இப்படிமங்களில் இறைவனது திருமேனி தனித்த நிலையிலும் இறைவியருடன் கூடிய நிலையிலும் அமைக்கப்பட்டு அவை தூசு படியாமலிருப்பதற்காக நல்ல முறையில் கண்ணாடிப் பெட்டகத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. இப்படிமங்களில் சமய வேற்றுமை இன்றி சைவ, வைணவ சமயங்கள் சார்ந்த படிமங்கள் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீதேவி, பூதேவியுடனான மகாவிஷ்ணு, ஸ்ரீவேணுகோபாலன், ரெங்கமன்னார், லெட்சுமி நரசிம்மர், காளிங்க நர்த்தனர், இராமர் குழுச்சிற்பம் முதலான படிமங்கள் இடம் பெற்றுள்ளன. இவை தவிர நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஆழ்வார்களது சிற்பங்களும் காணக் கிடைக்கின்றன. சைவம் தொடர்பான சிற்பங்களில் சிவபெருமானது நடராசர் படிமம் தனித்தும், பார்வதியுடன் சேர்ந்தும் உள்ளது. சுகாசன மூர்த்தி, இடபாரூடர், ரிஷபாந்திகர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், அட்டபுஜபைரவர் ஆகிய படிமங்களும், விநாயகர் மற்றும் சுப்பிரமணியர் படிமங்களும் இடம் பெற்றுள்ளன. சம்பந்தரின் படிமம் இடம் பெற்றுள்ளது.

▲ பிச்சாடனர்

▶ நடராசர்

ஓவியங்கள்

இங்கு பெரிய பலகைகளில் திருவிளையாடற்புராணம் தொடர்பான ஓவியங்கள் வரையப்பட்டு வரிசையாக நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. மீனாட்சி–சுந்தரசுவரர் திருக்கோயிலில் சுவாமிகோயில் மகாமண்டபத்திலோ, கல்யாண மண்டபத்திலோ, கிளிக்கூடு மண்டபத்திலோ, சுவாமி தேரிலோ இடம் பெறும் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களில் 64–திருவிளையாடற்புராணத்தில் ஒரு கதையை விளக்க ஒரு சிற்பமோ, ஓவியமோதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு மட்டும்தான் ஒரு கதையை விளக்க நான்கு, ஐந்து ஓவியக்காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இவ்வோவியத் தொகுதியில் ஒரு வரிசைக்கு ஒரு கதை என வரையப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரிசையிலும் நான்கு ஐந்து எனக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இவ்வோவியங்கள் நாயக்கரது ஓவியப்பாணி என அழைக்கப்படும் “லெபாக்சிபாணி”யில் வரையப்பட்டுள்ளன. அழிந்த இடங்களில் மீண்டும் அவ்வோவியங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாயிரக்கால் மண்டபத்தின் மையப்பகுதியில் நடராசரது மிகப்பெரிய உருவம் இடம் பெற்றிருப்பதைப் பார்த்தால் அக்காலத்தில் பல்வேறு நடன நிகழ்ச்சிகள் இம்மண்டபத்தில்தான் நடைபெற்றிருக்கும் என்பதை யூகிக்க முடிகிறது. ஆயிரக்கால் மண்டப அருங்காட்சியகத்தை உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகமாக மாற்றியமைக்கும் பணி தற்பொழுது நடந்து வருகிறது.

▲ திருவிளையாடற்புராண ஓவியம்



53. மங்கையர்க்கரசி மண்டபம்

வீரவசந்தராயர் மண்டபத்திலிருந்து தெற்குப் பக்கம் சென்றால் அங்கே திறந்த வெளியில் கிழக்கே அமைந்திருப்பது மங்கையர்க்கரசி மண்டபமாகும். இம்மண்டபம் கி.பி.1963ஆம் ஆண்டு நடைபெற்ற திருப்பணியின் போது கட்டப்பட்டதாகும். இம்மண்டபத்தின் நடுவில் சிவலிங்கம், மங்கையர்க்கரசி, குலச்சிறையார், கூன்பாண்டியன், ஞானசம்பந்தர் ஆகியோரது சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

54. சேர்வைகாரர் மண்டபம்


மங்கையர்க்கரசி மண்டபத்திற்குத் தென்புறம் அமைந்துள்ள சேர்வைகார மண்டபம் மருது சகோதரர்களால் கட்டப்பட்டது. இம்மண்டபத்தின் இடதுபுறத்தூணில் பெரிய மருதுவின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இது கி.பி.1795–ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ▸


55. திருக்கல்யாண மண்டபம்

மங்கையர்க்கரசி மண்டபத்துக்கு நேர் எதிரே மேற்குப்பக்கம் அமைந்திருப்பது திருக்கல்யாண மண்டபமாகும். இங்குதான் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் மீனாட்சி–சுந்தரேசுவரர் திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறும். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண விழா என்பது ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியின் தோற்றம், பின்னணி, முக்கியத்துவம் முதலியவற்றைப் பற்றி திருவிழாக்கள் எனும் தலைப்பில் காணலாம். இது ஒரு நல்ல அரங்கமாக இருப்பதால் கோயில் தொடர்பான சில நிகழ்ச்சிகளும் இங்குதான் நடைபெறுகின்றன. இந்த அரங்கமும் முன்னர் உள்ள கருங்கல் மண்டபம் விசயரங்க சொக்கநாத நாயக்கரால் (கி.பி.1711–ஆம் ஆண்டு) கட்டப்பட்டவையாகும். இவரது திருஉருவச்சிலையானது மேடையின் தெற்குப் பக்கம் உள்ள தூணில் வடக்கே பார்த்த நிலையில் காணப்படுகின்றது. இம்மேடையின் தெற்கு மற்றும் வடக்குச்சுவர்களில் மிகப்பெரிய வட்ட வடிவங்களில் ககோளம், பூகோளம் எனும் இரு ஓவியங்கள் வட்டவடிவில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் அண்டங்களின் தோற்றம், உயிரினங்களின் தோற்றம், கோள்களின் நிலை போன்றவை கற்பனையாக தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியம் இம்மண்டபம் கட்டப்பட்ட அதே காலத்தில் தீட்டப்பட்டதாகும். 2008ம் ஆண்டு வரை இது முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டு, தற்போது இக்கல்யாண மண்டபம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் முன்னர் 97 அடி நீளம், 47 அடி அகலமுடன் பெரியதொரு கூடமானது செட்டிநாட்டுக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. இதனைக் கட்டியவர்கள் வயிநாகரம் வேங்கடாசலஞ் செட்டியார் மற்றும் நாகப்பச் செட்டியார் ஆவர். இவர்களது உருவங்கள் இங்கு வரையப்பட்டுள்ளன. இக்கூடத்தின் விதானம் பார்ப்பவர்கள் மனம்மகிழும் வகையில் அழகாக அமைத்துள்ளது.





ககோளம்


பூகோளம்

இம்மண்டபத்தில் வருடந்தோறும் சித்திரை மாதம் நடைபெற்று வந்த மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் தற்பொழுது மேற்கு வடக்கு ஆடிவீதிகளின் சந்திப்பில் உள்ள திருப்புகழ் மண்டபத்தில் நடைபெறுகிறது. திருமண நிகழ்வு முடிந்த பின் அம்மனும் சுவாமியும் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருள்வர்.

கல்யாண மண்டப விதானத்தின் பக்கவாட்டில் 64 திருவிளையாடற் புராணக் கதைகளை விளக்கும் ஓவியங்களும், சிவபெருமானது வடிவங்களும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் சுமார் 1.5 X 1.5 அடி அளவில் வரையப்பட்டு அவை சிதைவுறாத வண்ணம் கண்ணாடியால் மூடப்பட்டுள்ளன. இம்மண்டபத்தை அமைத்த இருசெட்டியார்களது உருவங்களும் தென்மேற்கு மூலையில் சிவபெருமானது வடிவங்களுக்கு அருகில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் 2008ஆம் ஆண்டு முற்றிலும் தூய்மை செய்யப்பட்டு மீண்டும் அதே இடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

விசயநகர நாயக்கரது காலத்தில் கோயில்களில் திருவிழாக்கள் மிகுதியாகக் கொண்டாடப்பட்டது. அதன் காரணமாகவே இத்தகைய மண்டபங்கள் கட்டப்பட்டன. கல்யாண மண்டபங்களில் அந்தந்தக் கோயில் இறைவன் இறைவியரது உருவங்களை குறிப்பிட்ட காலத்தில் வருடந்தோறும் எழுந்தருளச் செய்து வழிபடுவர். இத்தகு மண்டபங்களில் உள்ள தூண்களை அழகுபடுத்துவதற்காக தூண் சிற்பங்களை அமைப்பதுண்டு. அத்தகைய சிற்பங்களை அழகர் கோயில் கல்யாண மண்டபத்தில் காணலாம்.



திருக்கல்யாண மண்டபம் ▸



56. முத்துராமையர் மண்டபம்



சேர்வைகாரர் மண்டபத்துக்கு அடுத்து இருப்பது முத்துராமையர் மண்டபமாகும். இவரது சிற்பம் இம்மண்டபத்தூணில் இடம் பெற்றுள்ளது. இது சிறிய மண்டபம். இம்மண்டபத் தூணில் சரபேசர் சிற்பம் இடம் பெற்றுள்ளது. இச்சரபமூர்த்தியைத் தினமும் வணங்குகின்றனர். சரபமூர்த்தி பற்றிய கதையை இங்கு அறிந்து கொள்வது அவசியமாகும்.

திருமாலது அவதாரங்கள் 10 ஆகும். அவற்றில் நான்காம் அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். முன்பொரு காலத்தில் இரணியகசிபு எனும் அசுரன் சிவபெருமானை எண்ணித் தவமிருந்து இரவிலும், பகலிலும், மனிதராலும் பிறஉயிர்களாலும், பூமியிலும், ஆகாயத்திலும், வீட்டின் உள்ளும், வெளியிலும் எவ்வித ஆயுதங்களாலும் தனக்குச் சாவு இல்லை என்ற வரம் பெற்றான். இதனால் தேவலோகம் முதலான அனைத்து இடங்களையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தான். அனைவரையும் தன் பெயரையே மந்திரமாக உச்சரிக்கச் செய்தான். இதனால் கவலையுற்றதேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். திருமாலும் இரணிய கசிபுவை அழித்துத் தேவர்களைக் காப்பதாக வரமளித்தார்.

இரணியனது மகன் பிரகலாதன் என்பவன் சிறுபாலகன். அவன் கருவினுள் இருந்த போதே விஷ்ணுவின் நாமம் அறிந்தவனாக விளங்கியதால் "ஓம் நமோ நாராயணா" எனும் மந்திரத்தைத் தான் கூறினான். தன் தந்தையின் பெயரை உச்சரிக்கவே மறுத்தான். இதனால் கோபமுற்ற இரணியகசிபு பிரகலாதனுக்குப் பலவிதமான தண்டனைகள் தந்தான். இறுதியில் நீ வணங்கும் இறைவன்

எங்கிருக்கிறான் காட்டு? என்றான். பிரகலாதன் திருமாலை வேண்ட அவர் இரணியன் பெற்றவரத்தின் காரணமாக, மனித உடலும் சிங்கத்தின் தலையும் கொண்ட நரசிங்கமாகத் தூணைப்பிளந்து கொண்டு வெளியே வந்தார். நரசிம்மர் இரணியனை ஆயுதங்கள் இன்றித் தன் கை நகங்களால், வீட்டின் உள்ளும் வெளியிலும் இல்லாது வாசலில் வைத்து ஆகாயத்திலும் பூமியிலும் இன்றித் தன் மடிமேல் கிடத்தி, பகல், இரவு இரண்டும் அற்ற அந்திமாலைப் பொழுதில், இரணியனது வயிற்றைக் கிழித்துக் கொன்று அவனது குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொண்டார்.

இரணிய வதை முடிந்த பின்னர் பிரகலாதன் அருகே வர அவரது சினம் தணிந்ததாக வைணவ நூல்களில் கூறப்படுகிறது. மேலும் யோக நரசிம்மர் கோயில்களில் கூட அவர் சினம் தணியவே இவ்வாறு யோகத்தில் அமர்ந்திருப்பதாகக் கூறுவர். நரசிம்மர் கோயில்களில் தாயார் சந்நிதி அமைக்கப்படுவது கூட அவரது சினத்தைத் தணிவிக்கவே என்பர். மதுரைக்கருகில் ஒத்தக்கடை யானைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலில் கூட இது போன்று தாயார் சந்நிதி தனியாக அமைக்கப்பட்டுள்ளது.



சைவ நூல்களில் வேறுவிதமாகக் கதை புனையப்பட்டுள்ளது. அதன்படி நரசிம்மன் இரணியவதை முடிந்த பின்னர் அசுரனது இரத்தத்தைக் குடித்ததால் வெறி கொண்டு சினம் தணியாது மனிதர்கள், தேவர்கள் என அனைவரையும் கொன்று குவித்தார். இதனால் தங்களைக் காக்க வேண்டும் என தேவர்கள் சிவபெருமானிடம் வேண்டினர். சிவபெருமான் தேவர்களைக் காப்பதற்காக சரபவடிவம் எடுத்து நரசிம்மரைக் கொன்றதாகக் கூறும்.

இச்சரபமூர்த்தியின் வடிவம் பற்றிக் காஞ்சிப்புராணம் கூறும் போது எட்டு கால்களும் இரண்டு சிங்கத்தலைகளும், நான்கு கரங்களும், இரண்டு இறக்கைகளும், குதிரை வடிவமும் கொண்டிருக்கும் எனவும் கூறுகிறது. இவ்வடிவத்தை சிம்ஹக்னமூர்த்தி என்றும் இவ்வடிவம் சிவனது 64 வடிவங்களுள் ஒன்று எனவும் சிவபராக்கிரமம் எனும் நூல் கூறுகிறது. இங்கு இடம்பெறும் சரபேசர் சிற்பம் நான்கு கரங்களுடன் இரண்டு கால்களுடன் இடுப்புக்குக் கீழ் குதிரை வடிவும், இடுப்புக்கு மேலே கழுத்து வரை மனித உடலும், சிம்ம முகமும் கொண்டு காணப்படுகிறது.

◂ இடது சரபேசர்
◂ முத்துராமய்யர்

57. வன்னி மரத்தடி விநாயகர் கோயில்

இக்கோயில் 20-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக இருக்கலாம். இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் சிவன் கோயிலுக்கே உரிய பல தலவிருட்சங்கள் இடம் பெற்றுள்ளன.


58. யானைக்கட்டு மண்டபம்

வன்னி மரத்தடி விநாயகர் கோயிலுக்குத் தென்கிழக்கே உள்ள இடம் யானைக்கட்டு மண்டபம் எனப்படுகிறது. இங்கு கோயில் யானை, ஒட்டகங்கள் முதலியன கட்டப்படுகின்றன.

59. ஆடி வீதிகள்

மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கோயிலைச் சுற்றி மிகப்பெரிய மதில் எடுக்கப்பட்டுள்ளது. அதில் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகள் அம்மதிலை ஒட்டி மிகப்பெரிய மண்டபங்களாகவே அமைந்து விட்டன என்றாலும் கல்யாண மண்டபத்தினுள் நுழைந்து சுற்றிவரும் படியாக ஒருவழி உண்டு.

இந்நீண்ட மதிலானது 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டுள்ளது. இம்மதிலில்மிகப்பெரிய கோபுரங்கள் அமைந்துள்ளன. மதில்களுக்கு உள்ளே உள்ள பிரகாரத்தை ஆடிவீதி என்றும், வெளியில் உள்ள பகுதியைச் சித்திரை வீதி என்றும் அழைப்பர். இந்த ஆடிவீதிகளில் சிறு மண்டபங்கள் உள்ளன. இராணி மங்கம்மாள் (கி.பி.1689-1706) கட்டிய மண்டபங்களே இவை. தற்பொழுது அம்மண்டபங்களில் கோயில் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இந்த ஆடிவீதியில் தங்கத் தேர் சுற்றி வருவது வழக்கம்.



▼ இசைத்தூண்கள் - வடக்காடி வீதி

தெற்கு ஆடி வீதி

இவ்வீதியில் கோயில் நூல்நிலையம், தேவாரப் பாடசாலை, திருப்புகழ்சபை, கோயில் ஊழியர் சங்கம், தெய்வநெறிக்கழகம், பன்னிரு திருமுறைமன்றம், தண்டபாணித் திருப்புகழ் சபை, கோயில் இறைப்பணியாளர் அலுவலகம், கோயில் நிர்வாக அலுவலகம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

மேற்கு ஆடி வீதி

இவ்வீதியில் பசுமடமும் சிவகங்கை தேவஸ்தானமும் இயங்கி வருகின்றன.

வடக்காடி வீதி

இவ்வீதியில் வடமேற்கு மூலையில் திருப்புகழ் மண்டபம் ஒன்று உண்டு. இதில் சமயச் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்கின்றன. இம்மண்டபம் 1952-இல் கட்டப்பட்டது. அடுத்ததாகக் காணப்படுவது மதுரைத் திருவள்ளுவர் கழகம் ஆகும். இக்கழகம் கி.பி.1941-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இங்கு சைவசித்தாந்த சொற்பொழிவுகள் மற்றும் சமயச் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

இசைத் தூண்கள்


இவ்வீதியில் வடக்குக் கோபுரத்திற்கு இருபக்கமும் இசைத்தூண்கள் அமைந்துள்ளன. இச்சிறிய தூண்களைத் தட்டினால் பல ஓசைகள் எழுகின்றன. இசைத்தூண்கள் பற்றிய பிறசெய்திகளை ஏற்கெனவே ஆயிரக்கால் மண்டபம் பகுதியில் பார்த்தோம். இந்த இசைத் தூண்கள் பாதுகாக்கப்பட வேண்டும். என்பதற்காக தற்பொழுது இரும்புக் கம்பித் தடுப்பிடப்பட்டுள்ளன.



கிழக்கு ஆடி வீதி

கிழக்கு ஆடிவீதியில் 16 கால் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. இதனைத் தட்டுச்சுற்று மண்டபம் என்பர். இம்மண்டபம் கி.பி.1772-ஆம் ஆண்டு வேங்கடேசுவர முதலியாரால் கட்டப்பெற்றது. இம்மண்டபத்தின் விதானத்தில் நரி பரியாக்கிய கதை, பரி நரியான கதை முதலிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆவணி மாதம் இக்கோயிலில் நடைபெறும் விழா நிகழ்ச்சியில் எட்டாம் நாள் இம்மண்டபத்தில் மேற்கண்ட திருவிளையாடற் புராணக்கதை நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சியின் போது திருவாதவூரில் இருந்து மாணிக்க வாசகரும் இங்கு எழுந்தருளுவார்.

௬0. கோபுரங்கள்



தமிழகக் கோயில்களில் சோழர்காலம் முடியும்வரை விமானங்கள் உயரமாகவும் கோபுரங்கள் உயரமின்றியும் கட்டப்பட்டன. இக்கோபுரங்கள் விமானங்களைவிடக் குறைந்த உயரத்தைப் பெற்று விளங்கின. பெரும்பாலும் கல்லினாலேயே இவை கட்டப்பட்டன. பிற்காலப் பாண்டியர் காலத்தில் விமானங்களின் உயரத்தைச் சுருக்கி, கோபுரங்களின் உயரத்தைப் பெருக்கும் வழக்கம் துவங்கியது. இதற்கு உதாரணமாக மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் சுவாமி கோயிலுக்கு நேரே கிழக்கில் இடம் பெற்றுள்ள சுந்தரபாண்டியன் கோபுரத்தைக் கூறலாம். பாண்டியர்களுக்கு அடுத்துவந்த விசயநகர–நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட கோபுரங்கள் அனைத்தும் உயர்ந்த கோபுரங்களாகவே கட்டப்பட்டுள்ளன. அதேபோல் சோழர்காலத்தில் முழுவதும் கல்லினால் கட்டப்பட்ட கோபுரங்கள், அவர்களது காலத்திற்குப்பின் குறிப்பாகக் கி.பி.12–ஆம் நூற்றாண்டுக்குப்பின்னர் கீழ்த்தளம் கல்லினாலும் பிறதளங்கள் செங்கல் மற்றும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்டன.

கோபுரங்கள் கோயில்களின் நுழைவு வாயில்களாகும். தூரத்திலிருந்தே கோயில் இருக்கும் இடங்களை அடையாளம் காணவும், தொலைவில் உள்ளபடியே கோயிலை நோக்கித் தொழவும் இக்கோபுரங்கள் பயன்படுகின்றன. இத்தகைய கோபுரங்களை உயரமாக அமைக்கும் பொழுது அவற்றைச் சுதைச் சிற்பங்களைக் கொண்டு அழகுபடுத்துவதுண்டு. அவ்வாறு இடம்பெறும் சுதையாலான சிற்பங்கள் அந்தந்த கோயில் தல இறைவனுடன் தொடர்புடையனவாக அமையும். உதாரணமாக மதுரை மீனாட்சி சுந்தரேசுவரரது கோயில் கோபுரங்களில் சிவமகாபுராணம், திருவிளையாடற்புராணம், இலிங்கபுராணம், தேவிமகாத்மியம் முதலிய புராணங்கள் தொடர்பான சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழகக் கோயில்களில் மிக உயரமான கோபுரம் திருச்சி–திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் அமைந்துள்ளது. தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயி–ஆண்டாள் கோயிலின் கோபுரம் விளங்குகிறது. என்றாலும் கூட இவ்விரு கோபுரங்களில் சுதையினாலான சிற்பங்கள் இடம்பெறாததால் மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயில் கோபுரங்களைப் போல அழகைப் பெறவில்லை.


மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் அமைந்துள்ள சிறு கோபுரங்களை ஏற்கெனவே கண்டோம். இனி ஆடிவீதிகளில் பக்கத்திற்கு ஒன்று என நான்கு பக்கங்களிலும் அமைந்துள்ள கோபுரங்களைப் பற்றிக் காணலாம்.

தெற்குக் கோபுரம்

இக்கோயிலில் அமைந்துள்ள கோபுரங்களிலேயே தெற்குக் கோபுரம்தான் உயரமானது. இதன் உயரம் 160 அடி. அடித்தளத்தின் நீளம் 108 அடி, அகலம் 67 அடி இக்கோபுரத்தில் 1511 சுதையினாலான சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கோபுரத்தை விசுவநாத நாயக்கர் ஆட்சிக்காலத்தில் சிராமலை செவ்வந்திமூர்த்தி செட்டியார் அவர்கள் கி.பி.1559-ஆம் ஆண்டில் கட்டினார்.




- சுதை சிற்பங்கள்
- தெற்குக் கோபுரம்


219
சிவ சிவ
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

மேற்குக் கோபுரம்

மேற்கு ஆடிவீதியில் அமைந்துள்ள இம்மேற்குக் கோபுரம் 154-அடி உயரமுடையது. இதன் அடித்தளம் 101 அடி நீளமும், 63 அடி அகலமும் கொண்டுள்ளது. இக்கோபுரத்தில் 1124 சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன. இக்கோபுரத்தை கி.பி.14-ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியன் (கி.பி.1315-47) கட்டுவித்தான். சித்திரை வீதியிலிருந்து வாகனங்கள் முதலானவற்றில் பொருள்களை கோயிலுக்குள் கொண்டுவர ஏதுவாகப் படிகள் கீழே இல்லாதபடி இக்கோபுர நுழைவுவாயில் அமைக்கப்பட்டுள்ளது.



▸ சுதை சிற்பங்கள்
▸ மேற்குக் கோபுரம்




வடக்குக் கோபுரம்

இக்கோபுரம் ஒன்பது நிலைகளைக் கொண்டு விளங்குகிறது. இது 152 அடி உயரம் கொண்டதாகும். அடித்தளத்தின் நீளம் 111 அடி அகலம் 66 அடி. இக்கோபுரத்தில் 404 சுதைச் சிற்பங்கள் உள்ளன. இக்கோபுரத்தை கட்டியவர் கிருஷ்ண வீரப்பநாயக்கர் (கி.பி.1564-72) ஆவார். இக்கட்டுமானம் மேற்பூச்சு வேலை முடியாமலிருந்த படியால் மக்கள் இதனை மொட்டைக் கோபுரம் என்று அழைத்தனர். பின்னர் நகரத்தாரும், அபிஷேக பண்டாரமும் கோயில் திருப்பணியை மேற்கொண்ட போது இக்கோபுரம் முழுவதையும் பூசி முடித்தனர் என்றாலும் இன்றுவரை மொட்டைக் கோபுரம் எனும் பெயர் மாறாமல் இருந்து வருகிறது. இக்கோபுரவாயிலின் மேற்குப் பக்கம் முனியாண்டி கோயில் உள்ளது. இது நாட்டுப்புறத் தெய்வமாகும். மக்கள் இம்முனியாண்டி தெய்வத்தையும் நாள்தோறும் வணங்கிச் செல்கின்றனர்.



▸ சுதை சிற்பங்கள்

▸ வடக்குக் கோபுரம்



கிழக்குக் கோபுரம்

இக்கோபுரம்தான் நான்கு கோபுரங்களில் பழமை வாய்ந்தது. இது பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தது. இக்கோபுரத்தை மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216–38) கட்டினான். எனவே இதற்குச் சுந்தரபாண்டியன் கோபுரம் என்ற பெயருமுண்டு. இதன் உயரம் 153 அடி. அடித்தளமானது 111 அடி நீளமும், 65 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் 1011 சுதைச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கோபுரம் ஒன்பது நிலைகளையுடையது.




மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலின் கிழக்குப் பக்கத்தில் இரண்டு வாயில்கள் உண்டு. அம்மன் கோவிலுக்கு நேரே நுழைவுவாயிலும், சுவாமி கோயிலுக்கு நேரே சுந்தரபாண்டியன் கோபுரமும் அமைந்துள்ளது. இக்கோயிலைப் பொறுத்த அளவில் சுந்தரேசரை விட அம்மனுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் கிழக்குப் பக்கமாகக் கோயிலுக்குள் நுழையும் பக்தர்கள் பெரும்பாலும் அம்மன் கோயில் நுழைவுவாயில் வழியாகவே வருகின்றனர். சுவாமி கோயில் வழியாக அதிக அளவில் வராமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று சித்திரை வீதியிலிருந்து நுழைவுவாயில் பல படிகளைக் கொண்டு இருந்தது. மற்றொன்று விசயரங்க சொக்கநாதர் (கி.பி.1706–32) காலத்தில் கோயில் ஊழியர் ஒருவர் கோபுரத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டது. தற்பொழுது நுழைவுவாயிலின் தளம் 1960–63இல் நடைபெற்ற திருப்பணியின் போது உயர்த்தப்பட்டுவிட்டது. மேற்கண்ட இவ்விரண்டு காரணங்களைக் காட்டிலும் அம்மனுக்கே முக்கியத்துவம் வாய்ந்த கோயில் என்பதால் முதலில் அம்மனை தரிசித்துவிட்டுப் பின் சிவபெருமானைத் தரிசிக்க ஏதுவாய் அம்மன் கோயில் நுழைவு வாயில் வழியாகப் பக்தர்கள் அதிக அளவில் வருகின்றனர்.



இக்கோபுரத்தின் தெற்குப்பக்கம் மதுரைவீரன் சுவாமி கோயில் உள்ளது. இவ்விறைவனும் நாட்டுப்புறத் தெய்வமாகும். வடக்கே முனியாண்டியும், கிழக்கே மதுரை வீரனும் கோயிலின் காவல் தெய்வங்களாக விளங்குவதாக மக்கள் நம்புகின்றனர்.


▲ சுதை சிற்பங்கள்

▶ கிழக்குக் கோபுரம்



மொட்டைக் கோபுரம்

மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலின் நான்குபுறக் கோபுரங்கள் தவிர இத்துடன் தொடர்புடைய கோபுரம் புதுமண்டபத்திற்குக் கிழக்கே ஒன்றுண்டு. இக்கோபுரம் கட்டும்பணி திருமலைநாயக்கரால் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்டது. இதன் அடித்தளம் 174 அடி நீளமும், 117 அடி அகலமும் கொண்டது. மற்றைய நான்கு கோபுரங்களின் அடித்தளங்களுடன் ஒப்பிடும்போது இக்கோபுரத்தின் அடித்தளம் மிக நீளமானதும் அகலமானதும் ஆகும். இக்கோபுரம் இராய கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. ஏதோ சில காரணங்களால் இக்கோபுரம் முதல் தளத்துடன் நின்றுவிட்டது. முதல்தளத்தின் உயரம் 57 அடியாகும். இக்கோபுரம் கட்டி முடிக்கப்பட்டிருந்தால் ஏனைய நான்கு கோபுரங்களைவிட உயர்ந்த கோபுரமாகத் திகழ்ந்திருக்கும். இக்கோபுரம் மட்டுமல்லாது மதுரையிலும், பிறஇடங்களிலும் நாயக்க மன்னர்களால் துவங்கப்பட்டு பல கோபுரங்கள் நிறைவுறா வண்ணம் காணப்படுகின்றன. உதாரணமாக அழகர்கோயிலில் உள்ள கோபுரத்தைக் கூறலாம். ஏன் அவ்வாறு கட்டி முடிக்கப்படாமல் விடப்பட்டன என்பதற்குச் சரியான காரணங்கள் தெரியவில்லை.



▸ நந்தி
▸ மொட்டைக் கோபுரம்





61. புதுமண்டபமும் சிற்பங்களும்

விசயநகர–நாயக்க மன்னர்கள் கோடை காலத்து விழாக்களைக் கொண்டாடுவதற்குரிய வகையில் வசந்த மண்டபங்களைக் கோயில்களில் ஏற்படுத்தினர். இம்மண்டபம் நடுவே மேடாகவும் சுற்றிலும் பள்ளமாகவும் அமைக்கப்பட்டிருக்கும். மண்டபத்தில் கோடைகாலத்தில் விழா நடக்கும்போது இப்பள்ளத்தில் நீரை நிரப்புவர். அப்பொழுது உள்ளே வரும் காற்று குளிர்ச்சியாக வரும். இத்தகைய காற்றோட்டமும் குளிர்காற்று வசதியும் கொண்ட கோடைகாலத்திற்கு ஏற்றமண்டபங்களே வசந்த மண்டபங்கள் என அழைக்கப்பட்டன. எனவே புதுமண்டபம் எனப்படும் மண்டபம் வசந்த மண்டபமே!

இம்மண்டபத்தில் புராணச் சிற்பங்கள், நாயக்க மன்னர்களில் திருமலைநாயக்கர் வரையிலான மதுரையை ஆண்ட நாயக்க அரச பரம்பரையினரது சிற்பங்கள், நாயக்கரது சிற்பக் கலைப் பாணியிலமைந்துள்ள குதிரை வீரர்களது சிற்பங்கள் எனப் பலவிதமான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.


இம்மண்டபம் கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில், கீழச் சித்திரை வீதிக்கும் அதன் கிழக்கே அமைந்துள்ள கீழ ஆவணிமூல வீதிக்கும் இடையே அமைந்துள்ளது. இம்மண்டபம் 333 அடி நீளமும் 105 அடி அகலமும் கொண்டுள்ளது. 25 அடி உயரமுள்ள 125 தூண்கள் 4 வரிசைகளாக அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் நடுப்பகுதியில் கருங் கல்லினாலான மண்டப மேடை அமைந்துள்ளது.




புதுமண்டபம் இறைவனும், இறைவியும் எழுந்தருளும் இடம் ▸








► கி.பி. 1792-இல் புதுமண்டபம்





புதுமண்டபம் புதிய தோற்றம்




நீர் நிரப்புவதற்கான பள்ளம்
22
24
24
17
23
18
23
19
24
20
21
24
16
15
14
13
14
13
24
24
24
24
12
9
11
10
8
3
24
2
7
23
6
23
5
23
4
23
24
1
நீர் நிரப்புவதற்கான பள்ளம்
நீர் நிரப்புவதற்கான பள்ளம்
நீர் நிரப்புவதற்கான பள்ளம்
(தோராயமான அளவுகளில்)

புதுமண்டபமும், சிற்பங்களும்

1. இராவண அனுக்கிரகமூர்த்தி
2. திரிபுராந்தகர்
3. காளி
4. கல்யாண சுந்தரேசுவரர்
5. பிரமன்
6. இந்திரன்
7. அர்த்தநாரீசுவரர்
8. ஊர்த்துவதாண்டவர்
9. சங்கரநாராயணன்
10. அதிகாரநந்தி
11. கரிக்குருவிக்கு உபதேசித்தது
12. கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது
13. வியாக்ரபாதரும், பதஞ்சலியும்
14. வாயிற்காவலர்
15. தடாதகைப்பிராட்டி
16. சுந்தரேசுவரர்
17. சந்திரன்
18. பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த பெருமான்
19. புலியை மான் குட்டிகளுக்குப் பால் கொடுக்கச் செய்த பெருமான்
20. சூரியன்
21. ஏகபாததிரிமூர்த்தி
22. கஜசம்காரமூர்த்தி
23. குதிரைவீரர்கள்
24. யாளிகள்

அ. விசுவநாத நாயக்கர்
ஆ. குமார கிருஷ்ணப்ப நாயக்கர்
இ. பெரிய வீரப்ப நாயக்கர்
ஈ. கிருஷ்ணப்ப நாயக்கர்
உ. இலிங்கம நாயக்கர்
ஊ. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
எ. கஸ்தூரி இரங்கப்ப நாயக்கர்
ஏ. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர்
ஐ. முத்து வீரப்ப நாயக்கர்
ஒ. திருமலை நாயக்கர்



▲ விசுவநாத நாயக்கர்

▼ குமார கிருஷ்ணப்ப நாயக்கர்



▼ பெரிய வீரப்ப நாயக்கர்





▲ கிருஷ்ணப்ப நாயக்கர்



▲ இலிங்கம நாயக்கர்

▼ இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்



▼ கஸ்தூரி இரங்கப்ப நாயக்கர்





▲ முத்து கிருஷ்ணப்ப நாயக்கர்



▲ முத்து வீரப்ப நாயக்கர்

திருவிழாக்காலத்தில் சுவாமியை அம்மேடையில்தான் எழுந்தருளச் செய்வர். மண்டபத்தின் நடுவில் உள்ள தூண்களில் பத்து நாயக்க மன்னர்களது உருவச் சிலைகள் வரிசையாக மிக அழகுபடச் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வுருவங்கள் 1. விசுவநாத நாயக்கர் 2. குமார கிருஷ்ணப்ப நாயக்கர், 3. பெரிய வீரப்ப நாயக்கர், 4. கிருஷ்ணப்ப நாயக்கர், 5.லிங்கம நாயக்கர், 6. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், 7. கஸ்தூரி இரங்கப்ப நாயக்கர், 8. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர், 9. முத்து வீரப்ப நாயக்கர், 10. திருமலை நாயக்கர் ஆகியோரது உருவங்களாகும்.

இச்சிற்பங்களில் கஸ்தூரி ரெங்கப்ப நாயக்கர் தவிர அனைவரும் இரு மனைவியருடன் காட்டப்பட்டுள்ளனர். திருமலைநாயக்கர் 4 மனைவியருடன் இடம் பெற்றுள்ளார். மதுரையில் விசுவநாத நாயக்கரிலிருந்து திருமலை நாயக்கர் வரை ஏழு பேர்தான் ஆட்சியாளர்கள். மற்ற மூன்று பேர் நாயக்கர்களது உடன்பிறப்புகள் ஆவர்.

இப்புதுமண்டபத்தை கி.பி.1635–ஆம் ஆண்டு திருமலை நாயக்கர் கட்டி முடித்தார். அந்த ஆண்டே இம்மண்டபத்தில் 10 நாட்கள் வசந்தோற்சவத்தை நடத்தினாராம். மேலும் அவ்விழாவில் தாம் நேரடியாகப் பரிவட்டம் கட்டிக் கொண்டாராம். இன்றும் வசந்த விழாவின் போது திருமலை நாயக்கரது திருஉருவச்சிலைக்குப் பரிவட்டம் கட்டப்படுவதைப் பார்க்கலாம்.

இம்மண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் தூண்களில் பெரிய அளவிலான சிற்பங்கள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.



▸ திருமலை நாயக்கர்

சிற்பங்கள்

இன்றைய புதுமண்டபம் புத்தகக்கடைகள், உலோகக் கடைகள், தையல் கடைகள் என கடைகள் நிறைந்த மண்டபமாக இருக்கிறது. கலையழகு மிக்க புராணச் சிற்பங்களை இம்மண்டபத்தில் அமைத்த திருமலை நாயக்கர் இன்று பார்த்தால் கண்ணீர் விட்டுத் அழுவார். நம் நாட்டவருக்குக் கலைகளின் அருமையும், பழமையின் பெருமையும் தெரிவதில்லை. மேலும் அவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வும் நம்மிடையே இல்லை. எனவேதான் பழம்பெரும் கலைகளெல்லாம் மறைந்து கொண்டே வருகின்றன. இதற்கு உதாரணமாக மீனாட்சி – சுந்தரேசுவரர் கோயில் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றியிருந்த ஓவியங்கள் அழிந்து போனவை போக மீதமிருந்தவை கூட அழிக்கப்பட்டுவிட்ட செய்தியைக் கூறலாம். அதேபோல் புதுமண்டபத்தில் உள்ள சிற்பங்கள் தெரியாத அளவுக்கு கடைகள் மலிந்து விட்டன.

இங்கு இடம்பெறும் புராணச் சிற்பங்களில் பெரும்பாலானவை சிவனது 64 வடிவங்களில் இருந்தும், திருவிளையாடற்புராணத்திலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன. இவை தவிரப் பரிவார தேவதைகளான சந்திரன், சூரியன் மற்றும் பிரமன் முதலியோரது சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

இராவண அனுக்கிரகமூர்த்தி

புது மண்டபத்தின் மேற்குப்பகுதியில் மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலை நோக்கி அமைந்துள்ள தூண்களில் தெற்குப்பக்கம் இச்சிற்பம் அமைந்துள்ளது. இதில் இரவாணன் கைலாய மலையைத் தூக்குவது போன்று அமைந்துள்ளது. சிவபெருமானும் பார்வதி தேவியும் இடப வாகனத்தில் வந்து அனுக்கிரகம் செய்வதாக செதுக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி வழங்கப்படும் கதையினைகம்பத்தடி மண்டபச்சிற்பங்கள் எனும் பகுதியில் காண்க.

திரிபுராந்தகர்

இவ்வரிசையில் வடக்குப்பக்கம் இறுதியில் உள்ள தூணில் இடம் பெறுவது தமிழ் இலக்கியங்களில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்று கூறப்படும் திரிபுராந்தகர் சிற்பமாகும். இங்கு இடம் பெற்றுள்ள திரிபுராந்தகர் சிற்பத்தில் சிவபெருமான் தேரில் நின்றநிலையில் முப்புரங்களையும் நோக்கி அம்பினை விடுவதுபோல் அமைந்துள்ளது. இது தொடர்பான கதையைக் கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் பகுதியில் இடம்பெறும் திரிபுராந்தகர் சிற்பம் எனும் தலைப்பில் பார்க்கவும். இங்கே திரிபுராந்தகர் நான்கு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளார். முன் இருகரங்களில் வில் மற்றும் அம்புடன் காட்டப்பட்டுள்ளார், இவை இரண்டும் சிதைந்துள்ளன. பின் இருகரங்களில் மான், மழுவேந்தி உள்ளார்.





◀ இராவண அனுக்கிரகமூர்த்தி
▶ திரிபுராந்தகர்



காளி

இராவண அனுக்கிரக மூர்த்தி சிற்பத்திற்குப் பின்பக்கம் உள்ள தூணில் வடக்குப் பக்கம் பார்த்த நிலையில் ஊர்த்துவதாண்டவமூர்த்திக்கு நேர் எதிரே அமைந்திருக்கும் சிற்பமே காளியின் சிற்பமாகும். இக்காளி 8–கைகளுடன் உக்ர முகத்துடன் காட்டப்பட்டுள்ளாள்.

காளியின் பிறப்பு தொடர்பான கதையைக் கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் காண்க. கைகளில் சக்கரம், சங்கு, வில், சூலம், கட்கம், கபாலம், கத்தி, செண்டு முதலானவற்றை ஏந்திய நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

கல்யாண சுந்தரர்

கம்பத்தடி மண்டபத்தில் அமைந்துள்ள கல்யாண சுந்தரேசர் சிற்பம் போல் இங்கும் அதே சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கதையை முன்னரே கண்டோம். இச்சிற்பத்திற்குக் கீழ் பிரமன் யாகம் வளர்ப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

◂ மகா காளி





பிரமன்

கல்யாண சுந்தரர் சிற்பத்தை அடுத்த வடக்குத்தூணில் பிரமனது சிற்பம் தனித்து நின்ற நிலையில், மூன்று முகங்களுடன், நான்கு கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. பிரமனுக்கு நான்கு முகங்கள் என்றாலும் சிற்பத்தில் மூன்று முகங்களே காட்டப்படுவதால் பின்பக்கம் ஒருமுகம் இருப்பதாகக் கருதவேண்டும். இதில் மேலிருகைகளில் வலது கரத்தில் அக்கமாலையும் இடதுகரத்தில் கமண்டலமும் வைத்துள்ளார். முன்னிரு கரங்களில் வலக்கை அபயத்துடன், அக்கமாலையும், இடக்கையில் ஏடும் கொண்டு விளங்குகிறார். சிவபெருமானது திருக்கல்யாணத்திற்குப் பிரமனே யாகம் வளர்த்துச் சடங்குகளைச் செய்வதாகப் புராணம் கூறும். ஆகவே இங்கு பிரம்மன் சிற்பம் திருமணக்காட்சிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரன்

பிரமனது சிற்பத்திற்கு அடுத்த துணில் வடக்குப்பக்கம் தேவேந்திரன் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இச்சிற்பத்தில் இந்திரன் நான்கு கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளார். பின்னிரு கரங்களில் இடதுகரத்தில் சூலமும் வலதுகரத்தில் வஜ்ராயுதமும் கொண்டுள்ளார். முன்னிருகரங்களில் வலதுகரம் அபய முத்திரையுடன் காணப்படுகிறது. இடதுகரம் தங்கத்தாமரைப் பூக்களை ஒரு தட்டில் ஏந்தியபடி இருக்கிறது. இது கோயிலில் உள்ள இறைவனை இந்திரன் தங்கமலர்களால் பூசித்த கதையை அடிப்படையாக வைத்து இடம் பெறுவதாகக் கொள்ளலாம். மேலும், மீனாட்சி – சுந்தரேசரது திருக்கல்யாணச் சிற்பம் இங்கு இடம் பெற்றுள்ளதால் அத்திருமணத்தில் கலந்து கொள்ள இந்திரன் முதலான தேவர்கள் வந்திருந்ததாக திருவிளையாடற் புராணம் கூறுவதால் அக்கதையின் அடிப்படையில் இங்கு இந்திரன் சிற்பத்தை அமைத்துள்ளனர் எனலாம். மேலும் மதுரைக் கோயிலுக்கும் இந்திரனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்திரன் தன் சாபம் தீர்த்ததே இங்குதான். சுவாமி கோயிலின் விமானமே இந்திரனால் கட்டப்பட்டதால் இந்திரவிமானம் என்று அழைக்கப்படுவதாகத் திருவிளையாடற் புராணம் கூறுவதால் இந்திரனுக்கு இங்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

▲ பிரமன்

◀ கல்யாண சுந்தரேசுவரர்

இந்த இந்திரன் சிற்பத்தைச் சுப்ரமண்யர் சிற்பம் என்று கூறுவாரும் உளர். ஏனெனில் இந்திரனும், சுப்ரமண்யரும் போர்க்கடவுளர் என்பதால் இருவருக்குமே ஒரே விதமான ஆயுதங்களே சிற்பங்களில் பெரும்பாலும் இடம்பெறுகின்றன. எனவே இச்சிற்பம் சுப்பிரமண்யர் சிற்பம் என்றும் கூறுகின்றனர். சுப்ரமண்யர் சிற்பம் பெரும்பாலும் அவரது வாகனமான மயில், யானை, ஆட்டுக்கிடா என இவைகளில் ஏதேனும் ஒன்றுடன் படைக்கப்படும். இங்கு அத்தகு வாகனம் எதுவும் இடம் பெறாததால் இச்சிற்பத்தினை இந்திரன் எனவும் பக்கவாட்டில் யானை இடம் பெற்றுள்ளதால் அது அவரது ஐராவதம் எனக் கொள்ளலாம். இந்திரனது யானை சிவபெருமானை வணங்கிச் சாபவிமோசனம் அடைந்ததால் இங்கு யானையும் செதுக்கப்பட்டுள்ளது.



அர்த்தநாரீசுவரர்

இந்திரனது சிற்பத்திற்கு அடுத்ததாக உமையொருபாகன் என்றழைக்கப்படும் அர்த்தநாரீசுவரர் சிற்பம் இடம்பெற்றுள்ளது. சிற்பத்தின் அமைப்பு பற்றிக் கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் பகுதியில் காண்க. இச்சிற்பத்தின் இடதுபக்கத்தில் உமையின் வடிவம், பின்கையில் செண்டும், முன்கை தொங்கிய நிலையிலும் ஒருமார்பகத்துடனும் அமைந்துள்ளது. தோளில் கிளி இடம் பெற்றுள்ளது. அருகில் ஒரு பெண் சாமரம் வீசுவது போல் அமைந்துள்ளது. வலப்பக்கம் பின்கை மழுவை ஏந்தியும், முன்கை அபயமுத்திரையுடனும் விளங்குகிறது. அருகே பூதகணம் சங்கு ஊதுவது போல அமைந்துள்ளது.

ஊர்த்துவதாண்டவர்

அர்த்தநாரீசுவரர் சிற்பத்திற்கு அடுத்ததாக ஊர்த்துவ தாண்டவமூர்த்தி சிற்பம் இடம்பெற்றுள்ளது. இச்சிற்பம் தெற்குமுகமாக அமைந்துள்ளது. இச்சிற்பத்திற்கு நேர் எதிரே தெற்கே வடக்குமுகமாகக் காளி சிற்பத்தை அமைத்திருப்பது பொருத்தமாக அமைந்துள்ளது. புதுமண்டபத்தில் உள்ள சிற்பங்களிலேயே ஊர்த்துவதாண்டவர் சிற்பமும், காளி சிற்பமும்தான் மிகப் பெரிய அளவில் விளங்குகின்றன.

◄ ஊர்த்துவதாண்டவர்
▼ அர்த்தநாரீசுவரர்
► சங்கரநாராயணன்

ஊர்த்துவதாண்டவர் சிற்பமானது 8 கரங்களுடன் வலது காலை மேல் நோக்கித் தூக்கிய நிலையில் படைக்கப்பட்டுள்ளது. கைகளில் தமருகம், அக்னி, கேடயம், நந்திக்கொடி, மழு, கத்தி, சூலம் போன்றஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. இருபக்கமும் விஷ்ணு மற்றும் பிரம்மன் இருவரும் இசைக்கருவிகளை இசைக்கின்றனர். முனிவர்கள் வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளனர். நந்திதேவர் குடமுழாவை இசைக்கிறார். முயலகன் காலுக்கடியில், பூத கணங்கள் சங்கொலி எழுப்பத் தும்புரு முதலானோர் அருகில் உள்ளனர். காரைக்காலம்மையார் காட்டப்பட்டுள்ளார்.



சங்கர நாராயணன்

புதுமண்டபத்தில் தெற்குவடக்காக உள்ள தூண் வரிசையின் நடுப்பகுதியில் இரண்டு சிற்பங்கள் மேற்கு முகமாக அமைந்துள்ளன. அவை அரிஹரன் எனப்படும் சங்க நாராயணன் சிற்பமும், அதிகார நந்தியின் சிற்பமும் ஆகும். அரிஹரன் பற்றிய செய்திகள் மஹாபாரதத்திலும், மச்ச புராணத்திலும் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் இச்சிற்பம் கி.பி.6–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பிள்ளையார்பட்டி கோயிலில் காணப்படுகிறது. மேலும் சங்க காலத்திலேயே இக்கருத்து மக்களிடையே பரவியிருந்ததைச் சங்க இலக்கியமான அகநானூறு பாடல் 360–ல் “வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து உருவுடன் இயைந்த தோற்றம் போல” என்றவரிகளால் அறியலாம். இச்சிற்பம் பற்றிய செய்தியைக் கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் அரிஹரன் எனும் தலைப்பில் காண்க.



அதிகாரநந்தி

சங்கரநாராயணன் சிற்பத்திற்கு அடுத்ததாக இடம் பெற்றுள்ள சிற்பம் அதிகாரநந்தியின் சிற்பமாகும். இச்சிற்பம் 4 கரங்களுடன் நின்ற நிலையில் அமைந்துள்ளது. இதில் சிவபெருமான் வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளார். இச்சிற்பம் கையில் கோலினை இடுக்கியபடி அமைக்கப்பட்டுள்ளது.

கரிக்குருவிக்கு உபதேசித்தது



சங்கரநாராயணன் மற்றும் சிவபெருமான் சிற்பங்களுக்கு உள்பக்கம் அடுத்த வரிசைத் தூண்களில் திருவிளையாடற்புராணம் தொடர்பான இரண்டு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவை கரிக்குருவிக்கு உபதேசித்த கதை தொடர்பான சிற்பமும் கல்யானைக்குக் கரும்பு கொடுத்த கதைச் சிற்பமும் ஆகும். இக்கதைகள் இரண்டும் மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் நடைபெற்றதாகத் திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இச்சிற்பம் நின்றநிலையில் நான்கு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளது. இதில் பின்னிருகரங்கள் மான் மழுவுடன் அமைகின்றன. முன் இருகரங்களில் இடக்கையில் கரிக்குருவியை ஏந்தியபடியும் வலக்கை ஞானமுத்திரை (ஆள்கட்டி விரல் சிதைந்துள்ளது) காட்டி "மிருத்யுஞ்சயம்" எனும் மந்திரத்தை உபதேசிப்பது போன்றும் அமைக்கப்பட்டுள்ளன. தலை ஜடாபாரத்துடன் காட்டப்பட்டுள்ளது. சிற்பத்தின் கீழ் முனிவர்கள் வணங்கிய நிலையில் இடம் பெறுகின்றனர். சிவபெருமான் அரசர்களுக்கும், பக்தர்களுக்கும், புலவர்களுக்கும், தேவர்களுக்கும் உதவுவதோடு விலங்குகளுக்கும் பறவைகளுக்குமெல்லாம் அருள்புரிவதாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதில் பறவைகளுக்கருளியதாக நாரைக்கு முத்தி கொடுத்தது, கரிக்குருவிக்கு உபதேசித்தது ஆகிய இரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன.

தன் வாழ்வில் அறம் பல செய்திருந்தாலும் சிறிது பாவம் செய்ததினால் ஒருவன் கரிக்குருவியாகப் பிறந்திருந்தான். அக்கரிக்குருவி பிற பறவைகளால் தாக்கப்பட்டு துன்பம் தாங்காமல் காட்டிற்குப் பறந்து சென்று ஒரு மரத்தில் தங்கியது. அம்மரத்தின் கீழ் ஒருநாள் முனிவர் ஒருவர் தம்மை நாடிவந்த சிவனடியார்களிடம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறந்த மதுரையம்பதியில் உறையும் இறைவனை வழிபட்டால் இப்பிறவியிலேயே அனைத்துப் பேறுகளையும்

◀ கரிக்குருவிக்கு உபதேசித்த காட்சி
▼ கல்யானைக்கு கரும்பு கொடுத்த காட்சி



பெறலாம் என உபதேசித்துக் கொண்டிருந்தார். இதனைக் கேட்ட கரிக்குருவி மதுரைக்கு வந்து தொடர்ந்து மூன்று நாட்கள் கோயிலை வலம் வந்து வழிபட்டது. கரிக்குருவியின் பக்தியைப் பாராட்டி சிவபெருமான் நேரில் தோன்றி மிருத்யுஞ்சயம் எனப்படும் மந்திரத்தை அருளினார். இதனால் கரிக்குருவி சிற்றறிவு நீங்கி பேரறிவு பெற்றது. மேலும் பறவைகளுக்குத் தலைமையான தன்மையை கரிக்குருவிக்கு இறைவன் அளித்தார். அதனால் கரிக்குருவி வலியான் என்னும் பெயரைத் தானும் தன்னினமும் பெற்று விளங்கும் பேறு பெற்றது. இக்கதையை ஒட்டியே இச்சிற்பத்தில் சிவபெருமானது இடது கரத்தில் கரிக்குருவி இடம் பெற்றுள்ளது.

கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது

கரிக்குருவிக்கு உபதேசித்த சிற்பத்தை அடுத்து இடம் பெற்றுள்ள சிற்பம் கல் யானைக்குக் கரும்பு கொடுத்த சிற்பம் ஆகும். இதில் சிவபெருமானது கையில் உள்ள கரும்பைப் பக்கவாட்டில் இடம் பெற்றுள்ள யானை தின்பதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் சிவபெருமான் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளார். பொதுவாகச் சிவபெருமானைச் சிற்பத்தில் காட்டும் பொழுது நான்கு கரங்களுடன் காட்டுவர். ஆனால் இங்கு எல்லாம் வல்ல சித்தராக சிவபெருமான் வந்ததால் இரண்டு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளார். மேலும் தலையில் வழக்கமாக இடம் பெறும் ஜடாபாரம் இன்றிக் கிரீடம் காட்டப்பட்டுள்ளது. இத்திருவிளையாடலுக்குப் பின்னர் அவர் சித்தராக அமர்ந்திருக்கும் காட்சி அருகில் செதுக்கப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணத்தில் பல கதைகளில் சிவபெருமான் சித்தராக வருவார். எல்லாம் வல்ல சித்தரானது எனும் கதையும் கல்யானைக்குக் கரும்பு கொடுத்த கதையுடன் தொடர்புடைய கதையே.

மக்களுக்கு அருள்புரிய விரும்பிய இறைவன் ஒரு சித்தராகத் தோன்றி பல சித்து வேலைகளை மதுரையில் செய்து வந்தார். இதனைக் கேள்வியுற்றபாண்டிய மன்னன் சித்தரை அரண்மனைக்கு அழைத்துவரத் தன் அமைச்சரை அனுப்பினார். சித்தர் வரமறுக்கவே அரசனே நேரில் வந்து சித்தரைச் சந்தித்து ஊர் பெயர் வினவினார். பின்னர் நீர் எல்லாம் வல்ல சித்தராயின் இக்கல்யானையை நான் கொடுக்கும் இக்கரும்பை உண்ணச்செய்ய இயலுமா? எனக் கேட்டார். சித்தர் அக்கரும்பைக் கல்யானைக்கு அளிக்க யானை உயிர்பெற்றுக் கரும்பைத் தின்றதோடு அரசனின் கழுத்தில் இருந்த மாலையைப்

பறித்ததும், காவலர்கள் யானையை அடிக்கக் கையை உயர்த்தினர். சித்தர் நிற்க என்றவுடன் அவர்களது கைகள் அசையாமல் நின்றன. சித்தரது பெருமையை அறிந்த பாண்டியன் சித்தரிடம் பொறுத்தருள வேண்டினான். மீண்டும் சித்தர் கடைக்கண் நோக்க அவர்களது கைகள் இயங்கின. யானை அரசனது மாலையை மீண்டும் அரசனிடமே அளித்துவிட்டுக் கல்லானது. இவ்வாறு பல திருவிளையாடற்புராணக் கதைகளில் சிவபெருமான் சித்தராக வருவதால் அவருக்கு சுவாமி கோயிலில் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.



வியாக்ரபாதரும், பதஞ்சலியும்

புதுமண்டபத்தில் வசந்தவிழாவின் போது இறைவனது உற்சவமூர்த்தியை வைத்து வழிபடுவதால் மண்டபத்தின் கிழக்கு நுழைவாயிலில் வாயிற்காவலருக்குப் பின்பக்கம் மண்டபத்தின் நடை நோக்கி இரண்டு தூண்களில் வியாக்ரபாதரது சிற்பமும், பதஞ்சலி முனிவரது சிற்பமும் இடம் பெற்றுள்ளன.



சிவபெருமான் இருக்குமிடத்தில் தாங்களும் எழுந்தருளி எப்பொழுதும் இறைவனை தரிசிக்கும் வரம் பெற்றவர்கள் இவர்கள். எனவே சிவபெருமானது கருவறைகளுக்கு முன்னால் இவர்கள் இடம் பெறுவது வழக்கம். இங்கு உற்சவ மூர்த்தியை எழுந்தருளச் செய்வதால் அவரை வணங்கும் பொருட்டு வியாக்ரபாதர் சிற்பமும் பதஞ்சலி முனிவரது சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளன.

திருவிளையாடற் புராணத்தில் இவர்களைப் பற்றிய கதை ஒன்று உண்டு. அதனை வெள்ளியம்பலம் எனும் தலைப்பில் ஏற்கெனவே கண்டோம். இதில் வியாக்ரபாதர் சிற்பத்தில் கால் விரல்கள் மட்டுமே புலி நகங்களாகக் காட்டப்பட்டுள்ளன. பதஞ்சலி முனிவரது தலையில் நாகம் குடைபிடிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

▲ வியாக்ர பாதர்
▶ பதஞ்சலி முனிவர்
▶ வாயிற் காவலர் (இடது)
▶ வாயிற் காவலர் (வலது)

வாயிற்காவலர்

மண்டபத்தின் கிழக்குப்பக்கம் உள்வரிசையில் துவாரபாலகர்கள் எனப்படும் இரண்டு வாயிற்காவலர்களது சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் ஒருவர் விஸ்மயமுத்திரையுடனும் மற்றொருவர் சூசி முத்திரையிலும் கிழக்குநோக்கி அமைக்கப்பட்டுள்ளனர்.





தடாதகைப் பிராட்டி

வாயிற்காவலரது சிற்பங்களுக்குக் கிழக்கு வரிசையில் இரண்டு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவை தடாதகைப் பிராட்டி மற்றும் சுந்தரேசுவரரது சிற்பங்கள் ஆகும்.

தடாதகைப் பிராட்டியின் பிறப்பு வளர்ப்பு திருமணம் முதலான செய்திகள் பற்றிய கதைகளை முன்னரே கண்டோம். இங்கு அமைந்துள்ள தடாதகையின் சிற்பமானது மூன்று மார்பகங்களுடன் இடம் பெற்றுள்ளது. தடாதகை மதுரைக்கு அரசியாக இருந்து ஆட்சி மேற்கொண்டு திக்விசயம் மேற்கொள்ளும் காட்சியை உணர்த்துவதாக உள்ளது.

தடாதகைச் சிற்பம் தேரின் மேல் நின்றகோலத்தில் தனது கையில் வேல் எனும் சக்திப்படையைத் தாங்கியபடி அமைந்துள்ளது. இடது கை சிதைந்துள்ளது. தேருக்குப் பக்கத்தில் சக்தியின் படைவீரர்கள் அணிவகுத்துள்ளதைச் சித்தரித்துள்ளனர்.

சுந்தரேசுவரர்

தடாதகைப் பிராட்டியின் கணவரே சுந்தரேசர் ஆவார். தடாதகை திக்விசயம் செய்த கதையில் தேவர்களையெல்லாம் வென்று இறுதியில் கைலாயம் அடைந்து சிவபெருமானோடு போருக்காக தயார் நிலையில் நிற்கும்போது தடாதகையுடன் போர்புரிய சிவபெருமான் எதிர்நிற்பதைக் காட்டுவதாக இச்சிற்பம் அமைகிறது. இதில் சிவபெருமானது உடல் திரிபங்க நிலையில், பின்கரங்களில் வழக்கமான மழு, மான் ஏந்தி, முன் இருகரங்களில் வில்லும், அம்பும் (சிதைந்துள்ளன) கொண்டு படைக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் ஆலிடா நிலையில் ஒரு காலை முன்வைத்துக் காட்டியிருப்பது போருக்கு தயாராக இருப்பதைக் காட்டுவதாக அமைகிறது. தடாதகை சுந்தரேசரைக் கண்டு நாணம் கொள்ளும் காட்சிக்கு முந்திய காட்சியாக மேற்கண்ட தடாதகை–சுந்தரேசரது சிற்பங்களைக் கொள்ளலாம்.

◄ தடாதகை
► சுந்தரேசுவரர்
► சந்திரன்



சந்திரன்

சுந்தரேசுவரர் சிற்பத்திற்குக் கிழக்கே அமைந்துள்ள தூண் வரிசையில் வடக்கே அமைந்திருக்கும் சிற்பம் சந்திரன் ஆகும். சிவன் கோயில்களில் கிழக்குப்பக்கம் நுழைவாயிலின் வடக்கே பொதுவாக பரிவார தேவதையாகச் சந்திரன் இடம் பெறுவதுண்டு. அவ்வமைப்பில் இங்கும் வடக்கே முறையாக சந்திரனது சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சந்திரன் சிவபெருமானது திருமுடியை அலங்கரிப்பவன் ஆவான். சந்திரன் சிவனது முடிக்கு வந்த கதையை கம்பத்தடி மண்டபச் சிற்பங்களில் சந்திரசேகர மூர்த்தி எனும் பகுதியில் காண்க.

சந்திரன் தேரின் மேல் நின்றநிலையில் நான்கு கரங்களுடனும், பின்னிரு கரங்களில் மலர் தாங்கியும் முன்னிருகரங்கள் அபயவரத்திலும் இடம் பெற்றுள்ளார். சந்திரனுக்கு இருபுறமும் தேவியரான கார்த்திகையும், உரோகிணியும் அமைக்கப்பெற்றுள் ளனர். சந்திரனது தலைக்குப் – பின் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது.



பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த பெருமான்

சந்திரன் சிற்பத்திற்கு அடுத்தடுத்த தூண்களில் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை தொடர்பான சிற்பமும், மான் குட்டிகளுக்குப் புலியைப் பால் கொடுக்க வைத்த கதை தொடர்புடைய சிற்பமும் அமைந்துள்ளன. இவை இரண்டும் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடற் புராணக் கதைகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. விலங்குகளானாலும் அவற்றின் தாயுருவாகிக் குட்டிகளுக்கு இரங்கியவர் சிவபெருமான் என்பதை உணர்த்துவதாக இவை விளங்குகின்றன. பால் கொடுக்கும் சிற்பங்கள் இரண்டையும் அருகருகேஅமைத்திருப்பது பொருத்தமாக அமைகிறது.



மதுரைக்கு மேற்கே வைகைக்குத் தெற்கே இன்று குருவுக்கு உரிய தலமாக விளங்குவதும், பெருமாளது கோயிலான சித்திரரத — வல்லபப்பெருமாள் கோயில் அமைந்துள்ள இடமுமான குருவித்துறை எனும் ஊரில் அக்காலத்தில் சுகலன், சுகலை என்பார் 12 ஆண் குழந்தைகளைப் பெற்றனர். இக்குழந்தைகள் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர் ஒருவருக்கு விளையாட்டாக எண்ணித் துன்பம் விளைவிக்க அவர் நீங்கள் அனைவரும் பன்றியின் மக்களாகித் தாய் தந்தையரை இழந்து தவிப்பீர்களாக என்று சாபமிட்டார். அதனால் வருந்திய புதல்வர்கள் சாபவிமோசனம் பற்றிக் கேட்க சிவபெருமானே உங்களுக்குத் தாயாக வந்து பாலூட்டுவார் அப்பொழுது சாபம் நீங்கும் என்றார்.

முனிவரது சாபப்படி அவர்கள் காட்டு அரசனான ஒரு பன்றிக்குக் குட்டிகளாகப் பிறந்தனர். ஒருநாள் பாண்டிய மன்னன் அம் மலைப் பகுதியில் வேட்டையாடச் சென்றான். வேட்டையின் போது ஆண்பன்றியும், பெண்பன்றியும் இறந்தன. குட்டிகள் பசியால் துடித்தன. அப்பொழுது சிவபெருமான் தாய்ப்பன்றியின் உருக்கொண்டு குட்டிகளுக்குப் பாலூட்டித் துயர்தீர்த்தார். இதனால் அப்பன்றிக்குட்டிகள் மனித உடலும் பன்றியின் முகமுமாக மாறின. பின்னர் இறைவனது ஆணைக்கிணங்க பாண்டியனின் மந்திரிகளானார்கள் இப்பன்றி முகத்தினர்.

இங்கு இடம் பெற்றுள்ள சிற்பம் சிவபெருமான் தாய்ப் பன்றியாக வந்து பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுப்பதாக அமைந்துள்ளது. இங்கு சிவபெருமான் பெண்பன்றி உருக்கொண்டு நின்றநிலையில் பன்றிக் குட்டிகளைப் பக்கத்திற்கு மூன்று என ஆறு குட்டிகளைக் கைகளில் ஏந்தியுள்ளார். பன்றிக் குட்டிகள் பால்குடித்த வண்ணம்

◀ (இடது) பன்றிக்குட்டிக்கு பால் கொடுத்த காட்சி
▼ புலியை மான்குட்டிகளுக்குப் பால் கொடுக்கச் செய்த காட்சி



காட்டப்பட்டுள்ளன. சிவனது காலுக்கருகில் இரண்டு குட்டிகளும் பக்கவாட்டில் இரண்டு குட்டிகளும் காட்டப்பட்டுள்ளன. பன்றியுருவில் இருப்பது சிவபெருமான்தான் என்பதை அறிந்து கொள்ளும்படி அவருக்கு நான்கு கரங்கள் கொடுக்கப்பட்டு பின்னிருகரங்களில் மழுவும், மானும் (இடப்பக்கக் கை சிதைந்துள்ளது) காட்டப்பட்டுள்ளன. இக்கதையுடன் தொடர்புடைய சிறு சிற்பங்கள் தூணின் கீழ்ப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் வேட்டையாடும் பாண்டிய மன்னன் ஒருவன் ஆண், பெண் பன்றிகளை அம்பு எய்திக் கொல்லும் காட்சி தூணின் இருபக்கங்களிலும், பால் குடித்து வளர்ந்த பன்றி குமாரர்கள் பன்னிரெண்டு பேரும் மனித உடலும் பன்றியின் முகமும் கொண்டு பன்னிரெண்டு மந்திரிகளாகத் தலையில் கிரீடத்துடன் காட்டப்பட்டுள்ளனர்.

புலியை மான் குட்டிகளுக்குப் பால் கொடுக்கச் செய்த பெருமான்

பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த சிற்பத்தை அடுத்துப் புலி, மான்குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் சிற்பம் அமைந்துள்ளது. தமிழில் தோன்றிய திருவிளையாடற் புராணங்களில் சிறப்பு பெற்றவை பெரும்பற்றப் புலியூர்நம்பி என்பவரால் எழுதப்பட்ட திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதி முனிவரால் எழுதப்பெற்றது திருவிளையாடற் புராணமுமாகும். இவற்றில் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் சிவபெருமான் புலியை மான்குட்டிகளுக்குப் பால் கொடுக்கச் செய்த கதை இடம் பெறவில்லை. ஆனால் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் “புலிமுலைப் புல்வாய்க்கருளியது” எனும் இக்கதை உண்டு, அதன் அடிப்படையில் இங்கு இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் சிவபெருமான் நின்றநிலையில் நான்கு கரங்களுடனும் பின் இருகரங்களில் மான், மழுவுடனும் முன் இருகரங்களில் வலக்கரத்தில் மான் குட்டிகளையும் இடக் கரத்தில் புலியையும் தாங்கியபடிக் காட்டப்பட்டுள்ளார். புலிமுலைப் புல்வாய்க்கருளியது எனும் கதைத் தலைப்பைச் சித்தரிப்பதாக இச்சிற்பம் அமைந்துள்ளது. சிவபெருமானது கால்களுக்கருகே மான் குட்டிகள் இடம் பெற்றுள்ளன.

காட்டில் குட்டிகளை ஈன்ற மான் தாகம் எடுக்கவே தண்ணீர் அருந்துவதற்காகப் பல இடங்களுக்கு அலைந்து திரிந்து கடைசியில் ஒரு குட்டையில் நீர் அருந்தும்போது வேடர்களின் அம்புகளுக்குப் பலியாகிவிட்டது. தாயை இழந்த மான்குட்டிகள் பசியால் துடித்தன. அப்பொழுது சிவபெருமான் பெண்புலி ஒன்றை அனுப்பி மான் குட்டிகளுக்குப் பால் கொடுக்கச் செய்து அருளினார். இங்கு புலியாக வந்ததும் சிவபெருமானே. இக்கதையை அடிப்படையாகக் கொண்டு இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.



சூரியன்

திருவிளையாடற்புராணச் சிற்பங்கள் இரண்டினை அடுத்து இடம் பெற்றுள்ள சிற்பம் சூரியனது சிற்பமாகும். இங்கு சூரியன் சிற்பமானது சந்திரன் சிற்பத்தைப் போன்று பரிவார தேவதையாக இடம் பெற்றுள்ளதாகக் கருதலாம். இதில் சூரியனது தலைக்குமேல் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. சூரியன் தேரின் மேல் நின்றநிலையில் நான்கு கரங்களுடன் பின் இருகரங்களில் மலர்ச்செண்டுகள் தாங்கியும் முன்னிருகரங்கள் அபய வரத முத்திரையுடனும் காணப்படுகிறார். சூரியனுக்குப் பக்கவாட்டில் உஷா, பிரத்யுஷா எனும் சூரியனது இரு மனைவியர் காட்டப்பட்டுள்ளனர்.

▲ சூரியன்
◀ ஏக பாத திரிமூர்த்தி
▶ (வலது) கஜ சம்ஹாரர்



ஏகபாத திரிமூர்த்தி

மேற்கண்ட சிற்பங்கள் இடம் பெற்றுள்ள தூண்களின் அடுத்த வரிசையில் முறையே தெற்கிலிருந்து வடக்காக ஏகபாத திரிமூர்த்தி சிற்பமும், இரண்டு யாளிகள், இரண்டு குதிரை வீரர்களது சிற்பங்கள் மற்றும் கஜசம்ஹாரமூர்த்தி ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. ஏகபாததிரிமூர்த்தி சிற்பம் ஒரே பாதத்துடன் இடுப்புக்கு மேல் வலதுபக்கம் பிரம்மாவின் பாதி உருவமும் மையத்தில் சிவபெருமானது உருவமும், இடப்பக்கம் விஷ்ணுவின் பாதி உருவமும் இணைந்து காட்டப்பட்டுள்ளது. மும்மூர்த்திகளில் சிவபெருமானே உயர்ந்தவர் என்றகருத்தை உணர்த்துவது போல் பிரம்மாவும், விஷ்ணுவும் வணங்கிய நிலையிலும் சிவபெருமான் அபய வரத முத்திரையிலும் செதுக்கப்பட்டுள்ளனர். சிற்பத்தின் கீழ் முனிவர் கூட்டம் வணங்கிய நிலையில் அமைந்துள்ளது. ஏகபாத மூர்த்தி என்பது சிவபெருமான் மட்டும் இடம் பெறும் சிற்பமாகும். ஏகபாத திரிமூர்த்தி அல்லது தாணுமாலயன் என்பது மும்மூர்த்திகளின் இணைவுச் சிற்பமாகும்.





குதிரை வீரன் சிற்பம்

கஜசம்ஹாரமூர்த்தி

மதுரை மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பம் பல தூண்களில் பல்வேறுவிதமாக அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கம்பத்தடி மண்டபத்தில் இடம் பெறும் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பத்தை விட புதுமண்டபத்தில் உள்ள சிற்பமே மிக அழகான சிற்பமாகும்.

இச்சிற்பத்தில் கஜசம்ஹாரமூர்த்தி திரிபங்க இயக்கநிலையில் காட்டப்பட்டு அழகுடன் காட்சியளிக்கிறார். இது தொடர்பான கதை கம்பத்தடி மண்டபச் சிற்பங்கள் எனும் பகுதியில் ஏற்கெனவே உள்ளது. இச்சிற்பத்தில் யானையின் தோலையே பிரபையாகக் காட்டி அதனுள் சிவபெருமான் 8 கரங்களுடன் சாந்த முகத்துடன் காட்சியளிக்கிறார். இச்சிற்பத்தில் யானையின் தலை கீழே காட்டப்பட்டு அதில் சிவபெருமான் நிற்பது போல் காட்டப்பட்டதாலும் முகம் உக்ரநிலையில் காட்டப்படாது சாந்தநிலையில் காட்டப்படுவதாலும் இச்சிற்பம் கஜசம்ஹாரம் முடிந்த நிலையினைக் காட்டுவதாகக் கொள்ளலாம். கீழே முனிவர் பலர் வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

குதிரை வீரர்கள்

புதுமண்டபத்தின் மேற்குப்பக்கம் நான்கு குதிரைவீரர்களது சிற்பங்கள், கிழக்குப் பக்கம் இரண்டு குதிரை வீரர்களது சிற்பங்கள் என மொத்தம் 6 சிற்பங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. விசயநகர–நாயக்கர்கால மண்டபங்களில் குதிரை வீரர்களது சிற்பங்கள் பெரும்பாலும் இடம் பெற்றிருக்கும். இச்சிற்பங்களில் வீரனொருவன் குதிரை மீது அமர்ந்து கொண்டு குதிரையை வேகமாகச் செலுத்துவது போலவும் காட்டப்படும். மேலும் குதிரைவீரன் குதிரையிலிருந்து கொண்டு குதிரையை வேகமாகச் செலுத்திக் கொண்டே கீழே ஓடும் புலி ஒன்றைத் தன்கையிலுள்ள வேலினால் குத்தி வேட்டையாடுவது போலவும் இங்கு சிற்பங்கள் அமைந்துள்ளன. குதிரை வீரர் சிற்பங்களில் குதிரைகள் காற்றைக் கிழித்துக்கொண்டு ஓடுவது போல் செதுக்கப்பட்டிருக்கும். இத்தகைய சிற்பங்களில் குதிரையின் கால்குளம்புகள், பிடரி மயிரிழைகள் என அனைத்து உறுப்புக்களும் நல்ல முறையில் செதுக்கப்பட்டிருக்கும். நாயக்க மன்னர்கள் கட்டுவித்த கோபுரத்தளங்களின் உட்பகுதியில் மிகப்பெரிய மரத்தூண்கள் நிறுவப்பட்டிருக்கும். அவற்றில் கூட இந்தக் குதிரை வீரர்களது சிற்பங்கள் செதுக்கப்படுவதுண்டு.

உதாரணமாக திருநெல்வேலிக்கருகில் உள்ள மன்னார்கோயில் இராஜகோபாலசுவாமி கோயில் கோபுரத்திலும் கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயில் கோபுரத்திலும் இத்தகு மரச்சிற்பங்களைக் காணலாம்.


யாளிகள்

நாயக்க மன்னர்களது கலைப்பாணியிலமைந்த மண்டபங்களில் குதிரை வீரர்களது சிற்பங்கள் இடம் பெறுவதுபோல் யாளி உருவங்களும் தவறாது இடம் பெற்றிருக்கும். யாளி என்பது யானை, சிங்கம், முதலை ஆகிய விலங்குகளின் கலவையான கற்பனை உருவம். சீன நாட்டில் டிராகன் (Dragon) எனும் விலங்கு அம்மக்கள் மத்தியில் பிரசித்தமான ஒன்று. அங்கு கொண்டாடப்படும் விழாக்களில் டிராகனின் உருவம் செய்து மக்கள் அதை ஊர்வலமாக நடனமாடிக் கொண்டே எடுத்துச் செல்வர். அதுபோலவே தமிழகத்தில் யாளி உருவம் கோயில்களில் பிரசித்தமாக விளங்குகிறது. யாளிகள் பெரும்பாலும் தூண்களுடன் கூடியதாக அமைக்கப்படும். யாளிகள் அதிக அளவில் இடம்பெறும் மண்டபம் யாளி மண்டபம் என்றே அழைக்கப்படுவதுண்டு. புதுமண்டபத்தில் சுமார் 10 யாளிகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு நாயக்க பரம்பரையினரது உருவங்கள், சமயச் சிற்பங்கள், சிவபெருமானது வடிவங்கள், திருவிளையாடற்புராணச் சிற்பங்கள், குதிரைவீரர் சிற்பங்கள், யாளிகள் என அமைக்கப்பட்டுச் சிற்பக்கலைக் கூடமாகத் திகழ்ந்த, திகழ்கின்ற புதுமண்டபம் காண்போரின் மனம் கொள்ளை கொள்ளும் அழகுக் கூடமாகும். ஆனால் இன்று பல்வேறு கடைகளால் பெரும்பாலான சிற்பங்கள் மறைக்கப்பட்டு புதுமண்டபமே ஒரு கலை "கடை கூடமாகத்" திகழ்கிறது. பக்தர்களுக்கு விரைந்து வந்து அருளும் சோமசுந்தரேசுவரப் பெருமான் கடைக்காரர்களுக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் போலும். விரைவில் புது மண்டபத்தைப் பார்வையிடும், பார்வையாளர்களுக்கும் கலை ஆய்வாளர்கள் மற்றும் கலை ரசிகர்களுக்கும் இறைவன் அருள்புரிவார் என நம்புவோமாக. கடைகளற்ற கலைக்கூடமாகப் புதுமண்டபம் மாறினால், இம்மண்டபம் தமிழகத்து கோயில்களில் இடம் பெற்றுள்ள மண்டபங்களில் மிகப்பெரியதும், அழகு வாய்ந்ததுமான வசந்த மண்டபமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.




யாளி








K.R.





62. திருவிழாக்கள்

கோயில்களில் திருவிழாக்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. நாளெல்லாம் உழைக்கும் மனிதனுக்கு ஓய்வு நாள்தான் திருவிழா. எவ்வளவு வேலைகள் இருப்பினும், கவலைகள் இருப்பினும் அவற்றையெல்லாம் தவிர்த்தும் மறந்தும் மகிழ்ச்சியாக மக்கள் கொண்டாடுவது திருவிழாக்களையே. தமிழகத்தில் விசயநகர–நாயக்கரது காலத்தில்தான் திருவிழாக்கள் அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் காரணமாகவே கோயில்களில் பல மண்டபங்கள் புதிதாகக் கட்டப்பட்டன என்பதை முன்னரே கண்டோம். மீனாட்சி–சுந்தரேசுவரர் கோயிலில் பலவிதமான திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை நாள்விழா, வாரவிழா, பச்சவிழா (15 நாட்களுக்கொரு முறை), மாதவிழா, ஆண்டுவிழா எனக் கூறுவர். இவற்றில் இக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்களிலேயே முக்கியமான திருவிழாவாகச் சித்திரைமாதம் நடைபெறும் “சித்திரைத் திருவிழா”வைக் குறிப்பிடலாம். இவ்விழாவானது சைவ, வைணவ ஒற்றுமையை உருவாக்கும் விழாவாக அமைந்துள்ளது. இவ்விழாவின் போது, சுமார் 10,00,000 பேர் மதுரையில் கூடுகின்றனர். சித்திரைத் திருவிழா என்பது மீனாட்சி சொக்கநாதர் திருக்கல்யாணம், திருத்தேர், கள்ளழகர் வைகையில் எழுந்தருளல் ஆகிய முப்பெருவிழாக்களின் இணைவு விழா எனலாம். இதில் மீனாட்சி திருக்கல்யாண விழாவும், திருத்தேர் விழாவும் மாசிமாதம் நடைபெற்ற விழாக்களாகும். இவ்விழா பின்னர் சித்திரை மாதத்துக்கு மாற்றப்பட்டது. விழா அக்காலத்தில் மாசி மாதம் நடைபெற்றது என்பதனைப் பல நாட்டுப்புறப் பாடல்களின் மூலம் அறியலாம். உதாரணமாக “மண்சுமந்த சொக்கருக்கு மாசித் தேரோடுது” (நாட்டுப்புறப்பாட்டு – தொகுப்பு – அன்னக்காமு) எனும் வரி இதனையே விளக்குகிறது. மாசிமாதம் அறுவடைக் காலமாதலின் மக்கள் அனைவரும் கிராமப் புறங்களிலிருந்து வந்து மீனாட்சி–சுந்தரேசரது திருமண விழாவிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் தேர்த் திருவிழாவிலும் கலந்து கொள்ள முடியாத சூழல் இருந்ததினால் அனைவரும் கலந்து கொண்டு இன்புறும் வண்ணம் மாசிமாத விழா சித்திரை மாதத்திற்கு மாற்றப்பட்டது. மீனாட்சி–சுந்தரேசுவரர் திருமணம் என்பது சைவ சமய விழா. கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளல் என்பது வைணவ சமய விழா. இவை இரண்டும் ஒருகாலத்தில் முறையே மாசிமாதமும், சித்திரைமாதமும் நடந்துவந்த விழாக்களாகும். திருமலை நாயக்கர் தம் ஆட்சிக் காலத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை இரண்டு சமய விழாக்களிலும் ஏற்படுத்தினார். மாசிமாதம் நடைபெற்ற மீனாட்சிசுந்தரேசுவரர் திருமணவிழாவைச் சித்திரை மாதத்திற்கு மாற்றினார். அதேபோல் கள்ளழகர் அழகர் கோயிலில் இருந்து மதுரைக்குப் புறத்தே தேனூர் எனும் ஊரில் வைகையாற்றில் எழுந்தருளுவதை மாற்றி மதுரையில் வைகையாற்றில் எழுந்தருளுமாறு செய்தார். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் மாதந்தோறும் பல விழாக்கள் நடைபெற்று வந்தாலும் முக்கியமான திருவிழாக்கள் சித்திரைத் திருவிழா, வைகாசி மாதம் நடைபெறும் வசந்தவிழா, ஆவணி மாதம் நடைபெறும் நவராத்திரிவிழா, தை மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழா ஆகியவையே.


63. மீனாட்சி திருக்கல்யாணம்

இத்திருவிழாவானது பன்னிரெண்டு நாட்கள் நடைபெறுகிறது. இதில் முதல்நாள் கொடியேற்று விழாவுடன் துவங்கும் இவ்விழாவில் ஐந்தாம் நாள் மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் திருவிளையாடற் புராணக் கதையை அடிப்படையாக வைத்து வேடர் பரி நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆறாம் நாள் ஞானசம்பந்தர் சைவசமயத்தை நிலைநாட்டிச் சமணர்களைக் கழுவேற்றிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. எட்டாம் நாள் மீனாட்சியம்மனுக்குப் பட்டாபிஷேக நிகழ்ச்சி அம்மன் சன்னதியில் உள்ள ஆறுகால் மண்டபத்தில் நடைபெறுகிறது. நிகழ்ச்சியின் போது அம்மனுக்கு மச்ச முத்திரை, இடப முத்திரை முதலிய அணிகலன்களால் அலங்காரம் செய்யப்படுகிறது. கழுத்தில் பாண்டிய மன்னர்களுக்கே உரிய வேப்பம் பூமாலை இப்பட்டாபிஷேக விழாவில் அணிவிக்கப்பட்டு கையில் இரத்தினச் செங்கோல் அளிக்கப்படுகிறது.

சித்திரை மாதம் முடிசூட்டப்பட்டு தொடர்ந்து, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய நான்கு மாதங்கள் அம்மன் ஆட்சி செய்வதாகக் கருதப்படுகிறது. பின்னர், ஆவணி மாதம் சுவாமிக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டு ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என எட்டு மாதங்கள் சுந்தரேசுவரர் ஆட்சி செய்வதாகக் கருதப்படுகிறது. இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே இப்பட்டாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒன்பதாம் நாள் மீனாட்சியம்மன் திக்குவிசயம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் மீனாட்சியம்மை திக்கு பாலகர்கள் எட்டுப் பேரையும் போரில் வெற்றி கொள்ளும் நிகழ்ச்சி நிகழ்த்திக் காட்டப்படுகிறது. அதன்படி கீழமாசி வீதியில் இந்திரனை வென்று கீழமாசி, தெற்குமாசி வீதிகளின் சந்திப்பில் (விளக்குத்தூண் அருகில்) அக்னியையும், தெற்குமாசி வீதியில் எமனையும், தெற்குமாசி வீதி-மேலமாசிவீதி சந்திப்பில் நிருதியையும், மேலமாசி வீதியில் வருணனையும் வென்று, மேலமாசி, வடக்குமாசி வீதி சந்திப்பில் வாயுவையும், வடக்குமாசி வீதியில் குபேரனையும், வடக்குமாசி-கிழக்குமாசி வீதி சந்திப்பில் ஈசானனையும் வெற்றி கொண்டு பின் நந்தி தேவரையும், மீனாட்சி வெற்றி கொள்கிறாள். நந்திதேவர் மீனாட்சியிடம் தோற்றபின் சொக்கநாதர் போருக்கு வருகிறார்.












அருள்மிகு மீனா
கரேஸ்வரர்









அவரைக் கண்டவுடன் அம்மன் நாணம் கொள்ள, மூன்றாவது மார்பகம் மறைய லாலா ஸ்ரீரெங்கசத்திரத் திருக்கல்யாண மண்டகப்படியில் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியை விளக்கும் ஓவியங்கள் ஊஞ்சல் மண்டபத்தில் உள்ளன.

பத்தாம் நாள்தான் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெறும். இவ்விழா கோயிலில் இடம் பெற்றுள்ள திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்று வந்தது. கி.பி.1980-ஆம் ஆண்டு முதல் பக்தர்களது கூட்டம் காரணமாக, மேற்கு ஆடிவீதி, வடக்காடிவீதி சந்திப்பில் உள்ள திருப்புகழ் மண்டபம் அருகில் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் திருப்பரங்குன்றம் சுப்ரமணியரும், பவளக்கனிவாய்ப் பெருமாளும் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்ச்சியில் குலசேகர பட்டர் வழிச் சிவாச்சாரியார் சுந்தரேசுவரராகவும், உக்கிரபாண்டிய பட்டர் வழிச் சிவாச்சாரியார் மீனாட்சியாகவும் வேடம் பூண்டு மாலை மாற்றித் திருக்கல்யாண நிகழ்ச்சியை நடத்திக் காட்டுகின்றனர். மாலை மாற்றிக் கொண்டபின் மீனாட்சிக்கு மங்கல நாண் அணிவிக்கப்படுகிறது. அதன்பின்னர் பிரியாவிடை அம்மனுக்குப் பொட்டும், மாங்கல்யமும் அணிவிக்கப்படுகிறது. தொடர்ந்து திருமணச்சடங்குகள் நடைபெறுகின்றன. இத்திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மணமக்களுக்குத் திருமாங்கல்யம், பட்டுத்துணிகள், பணம் முதலியவற்றை மொய் செய்கின்றனர். இந்நிகழ்ச்சி முடிந்தபின் இறையுருவங்களைத் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளச் செய்து குண்டோதரனுக்கு அன்னம் வழங்கல் எனும் திருவிளையாடற்புராண நிகழ்ச்சி நடைபெறுகிறது.



பதினொன்றாம் நாள் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. இதில் அம்மனும், சுவாமியும் அவரவர் தேர்களில் பரிவட்டத்துடன் ஊர்வலம் வருகின்றனர். ஊர்வலம் முடிந்தபின் இருவருக்கும் கிரீடம் அணிவிப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. பன்னிரெண்டாம் நாள் இந்திரன் சாபவிமோசனம் எனும் திருவிளையாடற்புராண நிகழ்ச்சி நடைபெறுகிறது. கொடியிறக்கத்துடன் இச் சித்திரை விழா நிறைவுறுகிறது. இவ்விழாவிற்கு அடுத்த நாள் கள்ளழகர் எதிர்சேவையும், அதற்கு அடுத்த நாள் சித்ரா பௌர்ணமியன்று கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் நடைபெறும்.


64. அழகர் திருவிழா

அழகர் ஆற்றில் இறங்குவதற்கு இரண்டு காரணக் கதைகள் கூறப்படுகின்றன. சுதபஸ் என்ற முனிவர் நீராடிக் கொண்டிருந்த போது துர்வாச முனிவர் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கவனிக்காது சுதபஸ் முனிவர் நீராடிப் பூசைகளை முடித்தபின் காலந்தாழ்த்தித் துர்வாசரை வரவேற்றார். இதனால் வழக்கம் போல கோபம் கொண்ட துர்வாச முனிவர் தவளையாகப் (மண்டுகமாக) போவாய் என முனிவரைச் சபித்துத் தவளையாக்கினார். முனிவர் சுந்தரராசப் பெருமாளை நினைத்து வைகையாற்றில் தவம் செய்து அவர் அருளால் மீண்டும் சாப விமோசனம் பெற்றார். இக்கதையை அடிப்படையாகவைத்தேகள்ளழகர் தேனூர் வைகையில் எழுந்தருளினார்.

அழகர் வைகையில் எழுந்தருளும் நிகழ்ச்சி தேனூரிலிருந்து மதுரைக்கு மாற்றப் பட்டவுடன், பழைய கதையான மண்டூக மகரிஷிக்குச் சாப விமோசனம் அளித்து வரும் கதையை மாற்றி புதுக்கதை புனையப்பட்டது. கள்ளழகர் என்பது திருமால் ஆவார். திருமாலின் தங்கை பார்வதி தேவி என்றும் பார்வதியை மணந்த சிவபெருமான் திருமாலது மைத்துனர் என்றும் புராணம் கூறுகிறது. எனவே திருமாலது அர்ச்சாவதாரமாக விளங்கும் சுந்தரராசப் பெருமாள் தன் தங்கையான பார்வதி தேவியின் அம்சமான மீனாட்சியின் திருமணத்தைக் காண்பதற்காகவும் சீதனம் கொடுப்பதற்காகவும் அழகர் கோயிலிலிருந்து கிளம்பி வருகிறார். வைகையாற்றில் வடக்கே வரும்போது தங்கையின் திருமணம் முடிந்துவிட்டதை அறிந்து வைகைக்குத் தெற்கே வராது வடக்கிலிருந்தபடியே திரும்பி விடுகிறார் என அக்கதை கூறுகின்றது.

மதுரைவரும் கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளி பின், வைகையின் வடகரை வழியே வண்டியூர் செல்கிறார். அன்று இரவு அங்கே உள்ள வீரராகவப்பெருமாள் கோயிலில் தங்குகிறார். இதனையே கள்ளழகர் துலுக்க நாச்சியார் வீட்டிற்குச் சென்று வருவதாகக் கூறுகின்றனர். அக்காலத்தில் இசுலாமியர் மதுரையில் அழகர் வரும் வழியான கோரிப்பாளையம் முதலான பகுதிகளில் இருந்து வந்ததால் (இன்றுவரை இருந்து வருவதால்) இந்து முஸ்–லிம்களது ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக இத்தகு கதை பேசப்படுகிறது. மறுநாள் சதாசிவநகரில் அமைந்துள்ள "தாகூர் வித்யாலயம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியின் அருகில் வைகையில் அமைந்துள்ள "தேனூர் மண்டபம்" எனுமிடத்தில் மண்டுக மகரிஷிக்குச் சாபவிமோசனம் அளித்துவிட்டுப் பின் ராமராயர் மண்டபத்தில் இரவு தங்குகிறார். அங்கே தசாவதார நிகழ்ச்சி அன்று இரவு நடக்கிறது. மறுநாள் தல்லாகுளம் கருப்பசாமி கோவிலுக்கு எதிரேயுள்ள சேதுபதி ராஜா மண்டபத்தில் தங்குகிறார்.
















அடுத்த நாள் பூப்பல்லக்கில் அழகர் கோயிலை நோக்கிச் செல்கிறார். எனவே தன் தங்கையின் திருமணத்திற்கு அழகர் வருவதாகக் கதை புனையப்பட்டு இருந்தாலும் மண்டூக முனிவருக்குச் சாபம் நீக்கும் கதை நிகழ்ச்சி முறையாக நடக்கிறது. ஆனால் மக்களுக்கு இவ்விழாவில் நடக்கும் பல நிகழ்ச்சிகள் இன்றளவில் தெரியாமல் போய்விட்டது.

உதாரணமாக சில செய்திகளை இங்கு காணலாம். தேனூர் மண்டபத்தினருகில் மண்டூக மகரிஷிக்குச் சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்ச்சியில் வைகையில் சிறு குழி வெட்டித் தண்ணீர்விட்டு அதில் தவளையை விடுவர். அது நீர்நிலை என்பதைக் காட்டுவதற்காக நிகழ்ச்சியின்போது நாரை ஒன்றைப் பறக்கவிடுகின்றனர். இதனால் பொதுமக்கள் இந்நிகழ்ச்சியை "மண்டூக மகரிஷிக்குச் சாபவிமோசன நிகழ்ச்சி" எனக் கொள்ளாது "நாரைக்கு முக்தி கொடுத்த நிகழ்ச்சி"யாகக் கருதுகின்றனர். உண்மையிலேயே நாரைக்கு முக்தி கொடுத்த கதை திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. இந்நிகழ்ச்சி மண்டூக மகரிக்ஷிக்குச் சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்ச்சியாகும். அடுத்ததாகக் கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளும் போது அவரை வரவேற்பதற்காக திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் இடம் பெற்றுள்ள பவளக்கனிவாய்ப் பெருமாள் (திருமால்) வைகையில் எழுந்தருளுவார். இந்நிகழ்ச்சிக்கு முதல்நாள் நிகழ்ச்சியான எதிர்சேவையின் இறுதியில் கள்ளழகர் தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் தங்குவார். அன்று இரவு சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையானது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு அதனை கள்ளழகர் இக்கோயிலில் வைத்தே ஏற்றுக் கொள்கிறார். இந்நிகழ்ச்சி கோயிலுக்குள் நடைபெறுவதாலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதாலும் பொதுமக்களுக்கு இது என்ன? என்று தெரியாமலேயே போய்விடுகிறது.

இவ்வாறாக மீனாட்சி சுந்தரேசர் திருக்கல்யாண விழாவும் அதனை ஒட்டிய தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து கள்ளழகர் வைகையில் எழுந்தருளும் விழாவும் இணைந்து "சித்திரைத் திருவிழா" என்ற பெயரில் இன்று வரை நடைபெற்று வருகின்றது.

திருக்கல்யாண நிகழ்ச்சி முடிந்த மறுநாள் தேர்த்திருவிழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் மீனாட்சி சுந்தரேசுவரர் தேர்கள் சுத்தம் செய்யப்பட்டதால் அவை புதிய தேர்கள் போலக் காணப்படுகின்றன.

65. தேர்த் திருவிழா

தேர்த்திருவிழா கொண்டாடுவதற்குப் பொதுவான காரணங்கள் சில உண்டு. உதாரணமாக, தேர் சுற்றிவரும் பொழுது அவ்விடங்களை அனைத்துச் சாதியினரும் சேர்ந்தோ அல்லது ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு சாதியினரோ வடம் பிடித்துத் தேர் இழுப்பர். கோயில்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்ல முடியாத அக்காலத்தில் தேர்த்திருவிழா என்பது சாதி, சமய ஒற்றுமைக்கு வழி வகுத்தது எனில் மிகையாகா. இறைவன் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதோடு தான் பக்தர்களை நாடிச் சென்றும் அருள்புரிவார் என்பதை குறிப்பாக உணர்த்துவதுதான் இத்தேர்த் திருவிழா.

மனிதன் தன் வாழ்வியற்கூறுகளில் பெரும்பாலானவற்றை அப்படியே இறைவனுக்கும் ஏற்றிக் கூறியதால் தான் பயன்படுத்தி வந்த தேரின் அமைப்பையும் இறைவனது திருவீதிவுலாவிற்குப் பயன்படுத்தினான். தான் பயன்படுத்தும் தேரைவிட இறைவனுக்காகப் படைக்கப்படும், தேரை பல்வேறுவிதமான மரச்சிற்பங்களால் அழகுபடுத்தினான். ஒரு கோயிலைச் சேர்ந்த தேரில் அக்கோயிலின் தலபுராணம் தொடர்புடைய சிற்பங்களையோ அல்லது அந்த இறைவனது புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களையோ செதுக்குவது வழக்கம்.

மீனாட்சி – சுந்தரேசுவரரது திருமண நாளுக்கு அடுத்த நாள் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. இரண்டு தேர்கள், ஒரு தேர் மீனாட்சிக்கெனவும், மற்றொன்று சுந்தரேசப் பெருமானுக்கெனவும் அமைந்துள்ளன. இவற்றில் தேர்த்திருவிழாவின் போது மீனாட்சியும், சுந்தரேசுவரரும் அவரவர் தேர்களில் தனித்தனியாக ஊர்வலம் வருவர். இந்தத் தேர்த்திருவிழா எப்பொழுது துவங்கப்பட்டது என்பதை அறிய முடியாவிட்டாலும் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பிருந்தே நடைபெற்று வந்துள்ளது என்பதனைத் திருப்பணி மாலை எனும் நூலின் மூலம் அறியமுடிகிறது. கி.பி.16–ஆம் நூற்றாண்டில் அரியநாத முதலியார் எனும் அமைச்சர் அம்மனுக்குரிய தேருக்கான மண்டபத்தைக் கட்டியுள்ளதாகத் திருப்பணிமாலை எனும் நூலில், குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்னரே திருவிழா நடைபெற்று வந்திருக்கிறது என்பதை இதன் மூலம் உறுதி செய்யலாம். மாசி வீதிகளில் தேர் சுற்றி வருவதால் இவ்விரு நிகழ்ச்சிகளும் மாசிமாதத்தில்தான் நடைபெற்றது என்பது உறுதி. இன்றைய தேர்கள் இரண்டும் இராணி மங்கம்மாளின் பேரனாகிய விஜயரெங்க சொக்கநாத நாயக்கரால் (கி.பி.1706–1732) செய்தளிக்கப்பட்டவை எனக் கருதப்படுகின்றன. அக்காலத்தில் தொடங்கிய இவ்விழா இன்றும் வழக்கம் போல் நடைபெற்று வருகிறது.

சுந்தரேசுவரர் தேரானது சிவபெருமானது திருவிளையாடல்களையும், சிவமகாபுராணம் தொடர்பான சிற்பங்களையும் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள இரண்டு தேர்களில் சுந்தரேசர் தேர்ச் சிற்பங்கள் மட்டுமே இங்கு விளக்கப்படுகிறது.





சுந்தரேசுவரர் தேரின் அமைப்பு


பொதுவாகத் தேரானது அதன் அளவுக்கேற்ப இரண்டு சக்கரங்கள் முதல் ஒன்பது சக்கரங்கள் வரை கொண்டதாக அமைக்கப்படும். சுந்தரேசரது தேரினை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றில் கீழ் உள்ள வரிசை, இரண்டாம் வரிசை ஆகியவை மேலும் மும்மூன்று பிரிவுகளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

முதல் வரிசையின் முதல் பிரிவில் பூத கணங்களும் இரண்டாம் பிரிவில் சிறு அளவில் தெய்வ உருவங்களும் யாளி உருவங்களும் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் பிரிவில்தான் சுமார் 1 X 1 1/2 அடி அளவில் சிவமகாபுராணச் சிற்பங்களும் இறையுருவங்களும் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பிரிவிலும் முதல் மற்றும் இரண்டாம் வரிசைகள் அலங்கார வேலைப்பாட்டிற்காகவே சிற்சில சிற்பங்களையும் யாளிகளையும் கொண்டு சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பிரிவின் மூன்றாம் வரிசையில்தான் திருவிளையாடல் புராணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. மூன்று, நான்கு, ஐந்து முதலிய பிரிவுகள் நடனக்காட்சிகளையும், கோலாட்டம் முதலான காட்சிகளையும் கொண்டு செதுக்கப்பட்டுள்ளன. இவை தேரோட்டத்தின் போது தேருக்கு முன்னால் அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாக இருக்கலாம்.











சிவமகாபுராணச் சிற்பங்கள்

தேரின் முகப்புப் பகுதியில் இருபுறமும் குதிரை வீரர்களது சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. இவை நாயக்கர் காலத்துக் கலைப்பாணியைச் சேர்ந்தவையாகும். இதனையடுத்ததாக வாயிற்காவலர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. மையப்பகுதியில் திருமால் தன் தங்கை மீனாட்சியைத் தாரை வார்க்க, சிவபெருமான் மீனாட்சியின் திருக்கரம் பற்றும் காட்சி இடம் பெற்றுள்ளது.

மன்மதனும் இரதியும் அன்ன வாகனங்களில் அமர்ந்து மலர்க்கணைகளைத் தொடுக்கும் காட்சி, முகப்பின் இருபுறமும் அமைந்துள்ளமை திருமணம் முடிந்த தம்பதியினரான மீனாட்சி – சுந்தரேசுவரரின் காதல் உணர்வுகளைத் தூண்டும்படி அமைந்துள்ளமை கலைநயத்தைக் காட்டுவதாக அமைகின்றது எனலாம்.

இத்தேரானது சைவ சமயத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் ஆங்காங்கே குழலூதும் வேணுகோபால், வஸ்திர அபகர்ணக் கண்ணன், காளிங்க நர்த்தனன், ஸ்ரீதேவி, பூதேவி சமேத விக்ஷ்ணு, கஜலட்சுமி, இரணிய வதை முதலான சிற்பங்களும் இடம் பெற்றிருப்பது அக்காலச் சமயப்பொறையைக் காட்டுவதாக அமைகின்றது.

எனினும் இவ்வரிசையில் கிடந்த கோலத்தில் பள்ளி கொண்ட பெருமாளாகக் காட்சிதரும் திருமால், கிடந்த நிலையிலேயே அருகிலுள்ள சிவலிங்கத்திற்குப் பூக்களால் பூசை செய்வதும் மற்றொரு இடத்தில் சிவபெருமான் திருமாலுக்கு சக்கராயுதத்தை வழங்கும் சக்கரதானச் சிற்பமும் இடம் பெற்றிருப்பது மும்மூர்த்திகளில் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்பதைக் காட்டுவதாக அமைகின்றது.

சிவபெருமான் மார்க்கண்டேயனைக் காப்பதற்காக சிவலிங்கம் இரண்டாகப் பிளக்க அதிலிருந்து தோன்றி காலனை உதைத்த கால சம்காரமூர்த்தி சிற்பம் அமைந்துள்ளது. அதற்கருகில் பிரகலாதனைக் காப்பதற்காகத் தூணிலிருந்து நரசிங்கமூர்த்தியாகத் தோன்றி இரணியனை வதைத்த இரணியவதை நரசிம்மரது சிற்பமும் அமைந்துள்ளது. இவ்வாறு இரண்டு சிற்பங்களையும் அருகருகே இடம்பெறச் செய்திருக்கும் சிற்பியின் கற்பனைத் திறமும் கலைத்திறமும் பாராட்டத்தக்கதாகும்.

பிரகலாதனின் பேரனான மாபலிச்சக்கரவர்த்தியிடம் திருமால் மூன்றடி மண் கேட்டான். திருமால் வானளாவி உயர்ந்து மண்ணையும், விண்ணையும் ஈரடியில் அளந்தான். மூன்றாம் அடியை எங்கே வைக்க எனக்கேட்டு மாபலியின் தலையில் வைத்தருளிய வாமன அவதாரச்சிற்பம் பிரகலாதன் கதையுடன் தொடர்புடையதாக இங்கு அமைக்கப்பட்டுள்ளது பொருத்தமாக அமைகின்றது.

தாணு (சிவன்), மால் (விஷ்ணு), அயன் (பிரம்மா) என மும்மூர்த்திகளும் இணைந்த வடிவமாகிய தாணுமாலயன் எனப்படும் ஏகபாததிரிமூர்த்தி சிற்பம் அமைந்துள்ளது. மேலும் சிவனது ஏகபாதமூர்த்தி அதனருகே இடம் பெற்றிருப்பது சாலப் பொருத்தமுடையனவே. இதன் மூலம் சிவபெருமானே ஏகன், அநேகனாக உள்ளார் என்றதத்துவம் விளக்கப்படுவதைப் பார்க்கின்றோம்.

அரியும் சிவனும் ஒன்றுதான் என வைணவ இணக்கத்தை விளக்கும் சிற்பமாகச் சிவனும் விஷ்ணுவும் இணைந்த சங்கரநாராயணன் சிற்பம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது.

சிவபெருமான் அடியவர்களது அன்பை பரிசோதித்து அருள்பாலிப்பதாகவே பெரியபுராணத்தில் நாயன்மார்களது கதைகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இப்பெரியபுராணத்திலிருந்து கண்ணப்ப நாயனார் கதையை விளக்கும் சிற்பக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்ததாகப் பிறவாமை வேண்டும். பிறந்தால் உனை மறவாமை வேண்டும். என்றும் நினது திருவடிக்கீழிருந்து நினது நடனத்தைக் காணும் வரம் வேண்டும் என இறைவனிடம் வேண்டி வரத்தைப் பெற்றவர் காரைக்காலம்மையார். எனவே இங்கு ஊர்த்துவத்தாண்டவ மூர்த்தியாகச் சிவன் நடனமாட அதனைக் காணும் காரைக்காலம்மையார் சிற்பம் அருகே செதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து சண்டேசருக்கு அனுக்கிரஹம் செய்யும் காட்சியும் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு மூன்று காட்சிகள் பெரிய புராணத்திலிருந்து இடம் பெற்றுள்ளன.

சிவமகாபுராணத்திலிருந்து வீணாதர தட்சிணாமூர்த்தி, உமையம்மையோடு ரிஷப வாகனத்தில் அமர்ந்திருக்கும் உமாஷகிதமூர்த்தி, நடராசப்பெருமான், சிவபெருமானின் பைரவர் வடிவம் சக்தியும் சிவமும் இணைந்தால்தான் இவ்வுலகம் செயல்படும் என்னும் தத்துவத்தை உணர்த்தும் அர்த்தநாரீசுவரர், காளியின் நடனம், சிவபெருமான் வீரபத்ரனாக வந்து தக்கனை வதம் செய்தல் எனப் பல காட்சிகள் இடம் பெறுகின்றன.

அடுத்ததாக யானைமேல் முருகன் வீற்றிருக்கும் காட்சி அமைந்துள்ளது. இக்காட்சி சற்று வித்தியாசமாகத் தோன்றலாம். முருகனுக்கு மயில் மட்டும் வாகனம் அல்ல. ஆட்டுக்கிடாயும், யானையும் முருகனுக்கு வாகனங்கள் என்பதால் இங்கு முருகன் யானை மேலிருக்கும் காட்சியாக அமைக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து முருகன் வள்ளி, தெய்வானையுடன் இடம்பெறும் காட்சியும், முருகனது அண்ணன் கணபதி மூஷிக வாகனத்தில் அமர்ந்திருக்கும் காட்சியும் அருகருகே காட்டப்பட்டுள்ளது பொருத்தமாக அமைகின்றது.

இத்தேரில் இறைவனது சிற்பங்களைத் தவிர சமுதாயத்தின் கூறுகளைப் பிரதிபலிக்கும் சிற்பங்களாக பாலியல் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. வேடன் ஒருவன் தன் அன்பிற்குரிய காதலியைக் கொஞ்சுவது போல் காட்டப்பட்டுள்ளது. பாம்பாட்டிச் சிற்பம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இவை நாயக்கர் காலத்து சிற்பங்களில் இடம்பெறும் கூறுகளாகும்.

ஒரு பெண் நின்றநிலையில் குழந்தை பெற்றுக்கொள்ளும் காட்சி இடம்பெற்றுள்ளது. இச்சிற்பத்தைத் தாயுமானவரான சிவபெருமான் சிற்பம் எனவும் கொள்ளலாம். இத்தகைய சிற்பம் அக்கால சமூகத்தில் இருந்த வழக்கத்தைக் கூறுவதாகக் கொள்ளலாம். இது போன்ற சிற்பம் கூடல் அழகர் பெருமாள் கோயில், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் போன்றஇடங்களில் இடம்பெற்றுள்ளது என்பதனை முன்னரே கண்டோம். அழகர்கோயில் வசந்த மண்டபத்தில் இடம்பெற்றுள்ள இராமாயண ஓவியத்தில் இராமன், இலக்குவன், பரதன், சத்ருக்கனன் ஆகியோரது பிறப்பினைக் காட்டும் காட்சியும் நின்றநிலையில் குழந்தை பெற்றுக்கொள்ளும் வழக்கத்திற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன.





















சிவபுராணச் சிற்பங்களும் பிறவும்

1. இடப வாகனத்தில் சிவன் பார்வதி
2. நடராசர்
3. கால்மாறி ஆடும் சிவன்
4. காளி
5. ஊர்த்துவதாண்டவர்
6. வேணுகோபாலன்
7. வஸ்திர அபகர்னன்
8. அனுமன் தோளில் இராமன்
9. மன்மதன்
10. இலிங்கோத்பவர்

திருவிளையாடற் புராணச்சிற்பங்கள்

திருவிளையாடற்புராணத்திலிருந்து சுமார் 47 சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்திரன் பழி தீர்த்தது எனும் கதையிலிருந்து தொடங்கி புலிமுலைப் புல்வாய்க்கருளியது எனும் கதையீறாகப் பல கதைகள் இடம்பெற்றுள்ளன. என்றாலும் கூட 64 கதைகளில் 17 கதைகள் வரை இடம் பெறவில்லை. தேரின் நான்கு பக்கமும் உள்ள இடத்தின் அளவைப் பொறுத்து முக்கியமான கதைகளைமட்டும் சித்தரிப்பதாக மரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களில் புலி முலைப்புல்வாய்க்கருளின கதைச் சிற்பம் இடம் பெற்றுள்ளதால் இங்கு இடம்பெற்றுள்ள சிற்பங்கள் அனைத்தும் பெரும்பற்றப்புலியூர் நம்பியினது திருவிளையாடற் புராணத்தை அடிப்படையாக வைத்துச் செதுக்கப்பட்டுள்ளன என்பதை அறியலாம். ஏனெனில் புலிமுலைப் புல்வாய்க்கருளிய கதை பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறவில்லை.

திருவிளையாடற்புராணச் சிற்பங்கள் இரண்டாம் வரிசையில் தொடர்ச்சியாக இடம் பெற்றுள்ளன. தேரின் முன்பக்கம் மங்களகரமான நிகழ்ச்சியைக் காட்ட வேண்டும் என்பதால் திருவிளையாடற் புராணத்தின் முதல் கதையான இந்திரன் பலி தீர்த்தது எனும் கதைச்சிற்பத்திற்குப் பதிலாக மீனாட்சி – சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் தொடர்பான சிற்பங்களை இடம் பெறச் செய்துள்ளனர். இதில் முதல் சிற்பத்தில் மீனாட்சியம்மைத் திக்விசயம் மேற்கொண்டு கைலாயம் சென்று சிவபெருமானுடன் போர்புரியத் தேரில் நிற்கும் காட்சி இடம் பெறுகிறது. இதனையடுத்துச் சிவபெருமான் மீனாட்சியை எதிர்த்து தேரில் புறப்படுகிறார். அடுத்ததாக மீனாட்சியுடன் போர் செய்வதற்காக வில்லை வளைத்து நிற்கிறார். இவ்விரு காட்சிகளும் ஒரே சிற்பத்தொகுதியில் இடம்பெறச் செய்துள்ளனர். இது தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நாடகம் போல் நமக்குத் தெரிகிறது. இதனை இயக்க உத்தி என்பர். அதைத் தொடர்ந்து பிரம்மாவும் திருமாலும் தோழர்களாக சிவபெருமானைக் கைப்பிடித்து மணவறைக்கு அழைத்துச் செல்லும் காட்சி இடம்பெற்றுள்ளது. அடுத்ததாக திருமால் தன்தங்கையான மீனாட்சியைச் சிவபெருமானுக்குத் தாரை வார்க்கும் காட்சியும் அதனையடுத்து அம்மி மிதிக்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளன. திருமணம் முடிந்து அம்மையும் அப்பனும் இடபவாகனத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாகச் சிற்பி கற்பனை செய்து இடபாரூடர் சிற்பத்தை அமைத்துள்ளார்.

இதையடுத்து மீண்டும் திருவிளையாடற்புராணத்தின் முதல் கதையிலிருந்து காட்சிகள் தொடங்குகின்றன. இந்திரனது ஐராவதம் எனும் யானை சாபம் நீங்குதல், பாண்டிய மன்னர் காட்டை அழித்து நகரை உண்டாக்குதல் ஆகியன இடம் பெற்றுள்ளன. திருமணத்தின் போது மிஞ்சிய உணவைக் குண்டோதரன் சாப்பிடும் காட்சி, உணவு உண்டதால் தாகம் எடுக்கவே அதைத் தணிக்க குண்டோதரன் மதுரையிலுள்ள குளம், கிணறு முதலான இடங்களிலுள்ள நீரையெல்லாம் அருந்தி தாகம் தணியாமல் போகவே இறைவன் தன் தலையிலிருந்து வைகையை உற்பத்தி செய்ய அந்நீரை அருந்தி குண்டோதரன் தாகம் தணிக்கிறான். இச்சிற்பம் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதில் குளம் கிணறு முதலியன காட்டப்பட்டுள்ளன. வைகை நீரைக் குண்டோதரன் அருந்தும் காட்சியில் நீரை சிற்பத்தில் காட்டுவதற்கு அதில் மீன், சங்கு முதலானவற்றைச் சிற்பி காட்டியுள்ளது மிக அருமையாகும்.

சிவபெருமானது மகன் உக்கிரபாண்டியன் தொடர்பான கடற்சுவர வேல் எறிந்தது. இந்திரன் முடிமேல் வளை எறிந்தது. மேருவைச் செண்டால் அடித்தது. வேதத்துக்குப் பொருள் அருளியது, கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது போன்ற கதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து யானையை மலையாய் சமைத்தது எனும் கதைச் சிற்பம் அமைந்துள்ளது. பாண்டியனது எதிரிகளான சமணர்கள் எதிரிகளை அழிக்கும் அபிச்சார யாகம் செய்து அதிலிருந்து தோன்றிய யானை, பசு, பாம்பு முதலான விலங்குகளை மதுரையை அழிக்கும் வண்ணம் ஏவி விடுகின்றனர். இதனால் மதுரையைக் காக்கும்படிப் பாண்டிய மன்னன் சிவபெருமானிடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க சிவன் யானை, நாகம்,

பசு முதலியவற்றை அழித்து அவைகளை மலைகளாகப் போகுமாறு செய்தாராம். அவையே இன்று மதுரை ஒத்தக்கடைக்கு அருகிலுள்ள யானைமலை மதுரையின் மேற்கே இருக்கும் நாகமலை, திருப்பரங்குன்றம் செல்லும் சாலையில் உள்ள பசுமலை முதலியன. மாயப்பசுவை அழிக்கச் சிவபெருமான் தன் வாகனமான காளையை அனுப்புவார். இக்காளையைப் பார்த்த உடன் பசு மயக்கம் கொண்டு மலையாய்ப் போனது. இதுவே இடபமலை என்று அழைக்கப்படும். மதுரை அழகர் கோயில் மலையாகும். இவ்வரிசையில் நரிகளைப் பரிகளாக்கிய கதை, பரிகளை நரிகளாக்கிய கதை முதலியனவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இக்கதைகளை அடிப்படையாக வைத்து சொக்கராவுத்தராக வந்த சிவபெருமான் பாண்டிய மன்னனிடம் குதிரையின் கயிறு மாற்றும் இடம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இக்காட்சியை அடுத்ததாக உலவாக்கிழியருளிய படலம், வளையல் விற்றபடலம் இரசவாதஞ் செய்த படலம், மாமனாக வந்து வழக்குரைத்த படலம், வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம், இசைவாதில் வென்றபடலம் முதலான கதைகள் தொடர்பான சிற்பங்கள் அமைந்துள்ளன.

பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதையைச் சித்தரிக்கும் சிற்பம், நாரைக்கு முக்தி கொடுத்த சிற்பம், கரிக்குருவிக்கு உபதேசம் செய்த கதைச் சிற்பம், புலிமுலைப் புல்வாய்க்கருளிய சிற்பம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. இவைகள் இறைவன் மனிதர்களுக்கு மட்டுமல்லாது பறவை, விலங்குகளுக்கும் அருளும் தன்மையுடையவன் என்பதையும் பசியில் வாடிய மான் குட்டிகளுக்குப் புலியையும் பால்தர வைத்தவன் என்ற சிறப்புக்களை எடுத்தியம்புவனாக இவை அமைகின்றன.

எல்லை காட்டிய படலம் தொடர்பான சிற்பத்தை அழகுறச் செதுக்கியுள்ளனர். இதில் பாம்பு நகர எல்லையைச் காட்டியது தொடர்பான சிற்பம், அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இது தவிர சுந்தரேசர் பேரம்பு எய்த படலம், சங்கப் பலகை தந்தது, சங்கத்தார் கலகம் தீர்ந்தது, வாதவூராருக்கு உபதேசித்தது, பிட்டுக்கு மண் சுமந்தது, பாண்டியன் சுரம் தீர்த்தது, சமணரைக் கழுவேற்றியது முதலான கதைச்சிற்பங்கள் அமைந்துள்ளன. இவற்றில் வாதவூரடிகளுக்கு உபதேசித்தது எனும் கதை மாணிக்கவாசகரோடு தொடர்புடையதாகும். இக்கதையை உணர்த்தும் சிற்பமானது இரண்டு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஒன்றில் வந்தியெனும் வயதான பெண்மணியிடம் பிட்டு வாங்கி உண்பதும் அடுத்த காட்சியில் மரத்தடியில்தான் கொண்டு வந்த மண்வெட்டியை அருகே வைத்துவிட்டுக் கூடைமேல் தலை வைத்துத் தூங்குவதும் அரசன் பிரம்பால் அடிப்பதும் என ஒரு தொடர் சிற்பக் காட்சிகளை ஒரே சிற்பத் தொகுதியில் அமைத்திருப்பது மிக அருமையான காட்சி.

திருஞானசம்பந்தர் சைவ சமயத்தின் பெருமையினை உலகெங்கும் பரப்புவதைக் கேள்வியுற்று அக்காலத்தில் மதுரையை ஆண்ட கூன் பாண்டியனின் மனைவியான மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறைநாயனாரும் திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்தனர். அவரும் அவர்களது அழைப்பை ஏற்று மதுரை வந்து சமண சமயத்தைச் சார்ந்த கூன்பாண்டியனின் வெப்பு நோயைத் திருநீற்றுப்பதிகம் பாடித் தீர்த்தார். அதனால் அம் மன்னனுக்குப் கூன் நிமிரவே நின்ற சீர்நெடுமாறன் என்று அழைக்கப்பட்டான். இக்காட்சியை விளக்கும் சிற்பம் நன்கு செதுக்கப்பட்டுள்ளது. மேலும் திருஞான சம்பந்தர் சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் செய்து அவர்களைத் தாமாகவே கழுவேறச் செய்தார் என்ற செய்தியை அடிப்படையாகக் கொண்ட சிற்பமும் இடம் பெற்றுள்ளது. இதில் சமணர் கழுவேறியது போலவும் அவர்களது இறந்த உடலை நரிகளும், பறவைகளும் சாப்பிடுவது போலவும் செதுக்கியுள்ளனர்.

இவ்வாறாக சுவாமி தேரின் இரண்டாம் பாகத்தில் திருவிளையாடற் புராணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. தேரானது தற்பொழுது பாதுகாப்பு கருதி மூடிவைக்கப்பட்டுள்ளது. தேர்த் திருவிழாவின்போது விழாவினைக் காண்பதோடு இத்தகைய அருமையான சிற்பங்களையும் கண்டு இன்புறலாம்.





















திருவிளையாடற் புராணச் சிற்பங்கள்

1. சுந்தரேசுவரர் தேர்
2. தேரின் முகப்புத் தோற்றம்
3. வெள்ளை யானை சாபம் தீர்ந்தது
4. திருநகரங்கண்டது
5. தடாதகைத் திருவவதாரம்
6. தடாதகை போர்க்கோலம்
7. சுந்தரேசுவரர் போர்க்கோலம்
8. மாப்பிள்ளை கோலத்தில் சுந்தரேசுவரர்
9. மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம்
10. தம்பதியர் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்





















திருவிளையாடற் புராணச் சிற்பங்கள்

1. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்
2. குண்டோதரன் தாகம் தீர்த்தது
3. மீனாட்சி சுந்தரேசுவரர்
4. உக்கிரகுமாரர் திருஅவதாரம்
5. உக்கிரகுமாரனுக்கு முடிசூட்டல்
6. கடல் சுவற வேல் விட்டது
7. இந்திரன் முடிமேல் வளை எறிந்தது
8. மேருவைச் செண்டால் அடித்தது
9. வேதத்திற்குப் பொருளுரைத்தது
10. கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது





















திருவிளையாடற் புராணச் சிற்பங்கள்

1. யானை எய்த படலம்
2. நாகமெய்த படலம்
3. மாயப் பசுவை வதைத்த படலம்
4. அட்டமாசித்தி உபதேசித்த படலம்
5. இரசவாதம் செய்த படலம்
6. மாமனாக வந்து வழக்குரைத்தது
7. பழியஞ்சிய படலம்
8. விறகுவிற்ற படலம்
9. நரியைப் பரியாக்கியது
10. உலவாக்கிழி அருளியது












திருவிளையாடற் புராணச் சிற்பங்கள்

1. வளையலிட்ட படலம்
2. சங்கத்தார் கலகம் தீர்த்தது
3. திருமுகம் கொடுத்தது
4. பாண்டியன் சுரந் தீர்த்தது
5. பாண்டியன் பன்றியை வேட்டையாடியது
6. பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது
7. பன்றிக் குட்டிகளை மந்திரியாக்கியது
8. நாரைக்கு முக்தி கொடுத்தது
9. பிட்டுக்கு மண் சுமந்தது
10. அனல்வாதமும் புனல்வாதமும் செய்தது

66. வைகாசி – வசந்த விழா

இவ்வசந்தவிழா என்பது வைகாசி மாதம் திருவாதிரை நட்சத்திரம் முதல் விசாக நட்சத்திரம் வரை பத்து நாட்கள் நடைபெறுகிறது. இவ்விழா மன்னர் திருமலை நாயக்கரால் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புதுமண்டபம் எனப்படும் வசந்த மண்டபத்தில் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் அம்மனும், சுவாமியும் புதுமண்டபத்தில் எழுந்தருளுவர். இவ்விழாவினை திருமலை நாயக்கர் முதன் முதலாகத் துவங்கிய போது நேரில் பரிவட்டம் கட்டிக் கொண்டார். அவரது காலத்திற்குப்பின் இன்றும் புதுமண்டபத்தில் இடம்பெற்றுள்ள திருமலைநாயக்கரது சிற்பத்திற்குப் பரிவட்டம் கட்டப்படுகிறது. அக்காலத்தில் இவ்வசந்த விழாவின்போது புதுமண்டபத்தின் நாற்புறமும் உள்ள பள்ளத்தில் நீர் நிரப்பி குளிர்ந்த காற்று வருமாறு ஏற்பாடு செய்வர். ஆனால் தற்பொழுது. கடைகள் மலிந்து விட்டதால் விழாவும் நலிந்து விட்டது.

67. ஆவணி மாத விழா

வைகாசி மாத வசந்தவிழாவிற்கு அடுத்த முக்கியத் திருவிழா ஆவணி மாதம் நடைபெறும் புட்டுத் திருவிழா நிகழ்ச்சியாகும். இவ்விழா 12 நாட்கள் நடைபெறும். முதல்நாள் விழாவில் திருவிளையாடற்புராணத்தில் இடம் பெறும் கரிக்குருவிக்கு உபதேசித்தல் எனும் நிகழ்ச்சியும், இரண்டாம்நாள் நாரைக்கு முக்தி கொடுத்தல், மூன்றாம் நாள் மாணிக்கம் விற்ற திருவிளையாடல், நான்காம் நாள் சங்கத்தாருக்குப் பலகை கொடுத்தல், தருமிக்குப் பொற் கிழியளித்தல் ஆகிய நிகழ்ச்சிகளும், ஐந்தாம் நாள் உலவாக் கோட்டை அருளிய நிகழ்ச்சியும் ஆறாம் நாள் அங்கம் வெட்டிய நிகழ்ச்சியும் அன்று இரவு ஞானசம்பந்தர் சைவ சமயத்தை நிலை நாட்டிய நிகழ்ச்சியும், எட்டாம் நாள் ஆடி வீதியில் இடம் பெற்றுள்ள 16 கால் மண்டபத்தில் குதிரை கயிறு மாற்றிய நிகழ்ச்சியும், நரியைப் பரியாக்கிய கதை நிகழ்ச்சியும், நடைபெறுகின்றன. இப்புராணக் கதையுடன் திருவாதவூரில் பிறந்த மாணிக்கவாசகர் தொடர்புடையவராக இருப்பதனால் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மாணிக்கவாசகரது திருமேனி அன்று திருவாதவூரிலிருந்து மதுரைக் கோயிலுக்கு கொண்டுவரப்படுகிறது. ஒன்பதாம் நாள் புட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்விழா மதுரை மக்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் விறகு விற்றநிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த பத்தாம் நாளோடு திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகள் நடந்து முடிவடைகின்றன. இதன் மூலம் ஆவணி மாதத் திருவிழாவில் 10 திருவிளையாடல்கள் நிகழ்த்தப்படுகின்றன என்பதை அறிய முடிகிறது.

68. புரட்டாசித் திருவிழா

இம்மாதம் நடைபெறும் விழாக்களில் மிக இன்றியமையாத விழாவானது நவராத்திரி விழாவாகும். நவராத்திரி விழா என்பது இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி எனும் மூன்று சக்திகளில் ஒவ்வொரு சக்திக்கும் மூன்று நாட்கள் என மொத்தம் ஒன்பது நாட்கள் நடைபெறும். இவ்விழாவினைத் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் மட்டுமல்லாது அவரவர் இல்லங்களில் கூடக் கொலு வைத்து வழிபடுகின்றனர். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் நவராத்திரி விழாவினைத் துவக்கியவர் திருமலை நாயக்கர் எனக் கருதப்படுகிறது. இக்கோயிலில் அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத்தில் இடம் பெற்றுள்ள கொலு மண்டபத்தில் இந்நிகழ்ச்சி ஒன்பது நாள் நடைபெறும். இதில் ஒன்பது நாட்களும் அம்மனது பல்வேறு விதமான அலங்காரங்கள் இடம் பெறும். முதல் நாள் இராஜ ராஜேசுவரி, இரண்டாம் நாள் மீனாட்சி திருக்கல்யாணம், மூன்றாம் நாள் முருகனுக்கு வேல் கொடுத்தல், நான்காம் நாள் பிட்டுக்கு மண் சுமத்தல், ஐந்தாம் நாள் உலவாக்கோட்டை அருளிய நிகழ்ச்சியும் ஆறாம் நாள் ஊஞ்சல், ஏழாம் நாள் பட்டாபிஷேகம், எட்டாம் நாள் மகிஷாசுரமர்த்தினி, ஒன்பதாம் நாள் சிவபூசையுடன் முடிவடைகிறது. மகிஷனை அம்மன் கொன்ற வெற்றி நாளே 10-ஆம் நாளான விசயதசமித் திருவிழாவாகும். தற்பொழுது விஜயதசமியன்று 108 வீணை வழிபாடு வெகுவிமரிசையாக நடத்தப்படுகிறது. தமிழகத்தில் நவராத்திரி என்று ஒன்பது நாட்கள் கொண்டாடும் விழா வட இந்தியாவில் பத்தாம் நாளையும் சேர்த்து தசரா திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

69. தெப்பத் திருவிழா

தை மாதம் நடைபெறும் திருவிழாக்களில் மிக முக்கியமான திருவிழா தெப்பத் திருவிழாவாகும். தைமாதத் திருவிழாவானது பன்னிரெண்டு நாட்கள் நடைபெறுகிறது. இதில் பத்தாம் நாளன்று அம்மனும், சுவாமியும் வண்டியூர் மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்திற்கருகில் உள்ள முக்தீசுவரர் கோயிலில் எழுந்தருளி அன்று இரவு மீண்டும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை அடைகின்றனர்.

பன்னிரெண்டாம் நாள் காலை மீண்டும் கோயிலுக்கு அம்மனும், சுவாமியும் எழுந்தருளி தெப்பம் ஏறி தெப்பக்குளத்தைச் சுற்றியபின் மைய மண்டபத்தை அடைந்து அங்கே இடம் பெற்றுள்ள திருமலை நாயக்கருக்குப் பரிவட்டம் கட்டியபின் மீண்டும் தெப்பத்தில் எழுந்தருளி இரவு ஒருமுறை குளத்தை வலம் வருவர். பின் முக்தீசுவர் கோயில் அடைந்து அங்கிருந்து மீண்டும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கு இறைவனும், இறைவியும் செல்கின்றனர்.

தெப்பக்குளத்தின் அமைப்பு




இத்தெப்பக்குளமானது மேற்கே முக்தீசுவரர் கோயிலுக்கும், வடக்கே மாரியம்மன் கோயிலுக்கும் அருகே அமைந்துள்ளது. இது 304.8 மீட்டர் நீள அகலம் கொண்ட சதுர அமைப்புடைய குளமாகும். இதன் நாற்புறமும் சுமார் 15 அடி உயரமுடைய கல்லினாலான சுவர் அமைக்கப்பட்டுள்ளது. குளத்தைச் சுற்றி குளத்தின் உட்புறம் இரண்டு மீட்டர் அகலத்தில் நடைமேடை விளங்குவதோடு குளத்தைச் சுற்றிலும் மூன்று அடி உயரத்திற்குச் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. கல்லினாலான இச்சுவரின் உட்புறம் திருவிழாக் காலத்தில் விளக்கேற்றுவதற்கான தீபம் வைப்பதற்குரிய இடங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. தெப்பத்தின் நடுவே நீராளி மண்டபம் இடம் பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறு விமானப்பகுதிகளும், மைய மண்டபத்தின் நடுவே உயரமான விமானமும் அமைந்துள்ளன. அக்காலத்தில் குளம் வெட்டப்பட்டபோது வைகையாற்றிலிருந்து குளத்திற்குத் தண்ணீர் வருவதற்கான வழிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை பழுதடைந்துவிட்டதால் தற்பொழுது இத்தெப்பகுளம் பலமாதங்கள் தண்ணீர் இன்றி பள்ளிச் சிறுவர்கள் விளையாடும் மைதானமாகவே காட்சியளிக்கின்றது.

தெப்பத்திருவிழாவிற்காக இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே மின் இயந்திரங்களின் மூலம் வைகையாற்றிலிருந்து தொடர்ச்சியாகத் தண்ணீர் ஏற்றி தேவையான அளவிற்குத் திருவிழா முடியும் வரை தெப்பத்தில் தண்ணீர் நிலைநிறுத்தப்படுகிறது. இக்குளத்தை வெட்டியவர் மன்னர் திருமலை நாயக்கராவார். ஒவ்வொரு வருடமும் தைமாதம் அவரது பிறந்த நாளான பூச நட்சத்திரத் தினத்தன்று இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருவிழாக்கள் அன்று தொடங்கி இன்று வரை முறையாக ஆகம விதிமுறைப்படி நடைபெற்று வருகின்றன. இவை சமய ஒற்றுமைக்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளன. பிறகோயில்களைப் போல் இங்கு இறைவனுக்கு முடியெடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்கள் நடைபெறுவதில்லை. காரணம் இக்கோயிலுக்கு வந்து இறைவனை தரிசித்தாலே தேவையான வரங்களை இறைவன் அருள்வார் என்பதால்தான்







அத்தகைய வேண்டுதல்கள் இங்கு நடைபெறுவதில்லை. இன்றைய நாட்டின் சூழலில் வேற்றுமையில் ஒற்றுமை காண திருவிழாக்கள் தம் பங்களிப்பைச் செய்து வருவது நினைந்து நினைந்து போற்றத் தக்கதாகும். உள்ளும், புறமுமாக ஒன்பது திருச்சுற்றுகளுடன் கூடிய இம்மாபெரும் கோயிலானது மதுரை நகருக்கு பெருமை சேர்ப்பது போல நாமும் கோயிலுக்குப் பெருமை சேர்க்க அக்கோயில் தொடர்பான கலைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு, நம்மால் இயன்றளவில் கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்து, கோயிலைப் பேணிகாத்து ஆலவாய் உறையும், அங்கயற்கண்ணியின் அருளையும், ஆலவாய் அண்ணலின் அருளையும் பெற்று உய்வோமாக!.



வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



நூலாக்கத்திற்குத் துணை செய்த நூல்கள்

இராமசுவாமி, மெ.சு.,	தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1976.
இளங்குமரன், இரா.,	மதுரைத் திருக்கோயில், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1999.
சாம்பசிவம், எஸ்.,	மாநகர் மதுரை, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, 1960.
சாமிநாதய்யர், உ.வே.,	திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், சென்னை, 1932.
சுப்பராயசெட்டியார், டி.கே.	பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம், சென்னை, 1887.
பஞ்சநாதம் பிள்ளை, ஆர்.,	மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் தலவரலாறு, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், மதுரை, 2000.
பலராம் ஐயர், டி.ஜி.எஸ்.	ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீ கார்த்திக் ஏஜென்ஸி, மதுரை, 1999.
பழநியப்பன், இ.,	கோயில் மாநகர், திருப்பணிக்குழு, மதுரை மீனாட்சி திருக்கோயில், மதுரை, 1963.
பாண்டித்துரைத்தேவர், பி.,	திருவாலவாயுடையார் கோயில் திருப்பணி மாலை, தலவரலாறு திருப்பணி விபரம், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.
மெய்யப்பன், ச.,	மதுரை மீனாட்சி, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை, 1990
வரதராசன், மு.,	தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடமி, புதுதில்லி, 2001.

ஆங்கில நூல்கள்


Devakunjari, D.,	Madurai Through the ages, Society of Archaeological, Historical and Epigraphical Research, Madras, 1979.
Gopinatha Rao, T.A.,	Elements of Hindu Iconography, Vol. I and II, Indological Book House, Varanasi, 1971.
Jeyachandran, A.V.,	Madurai Temple Complex, Publication Division, Madurai Kamaraj University, Madurai, 1985.
Ramachandra Rao, S.K.,	Siva Kosha, Vol. I and II, Kalipatharu Research, Academy Publication, Bangalore, 1998.

பதிப்புரை

உங்கள் அழகிய திருக்கரங்களில் எழுந்தருளியுள்ள பொற்றாமரை என்னும் இந்நூல், எமது AR. பப்ளிகேஷன்ஸ் பதிப்பில் ஓர் அழகிய, ஆதர்சமான கல்வெட்டு. "ஆலால சுந்தரருக்கு யாரால் வந்தது யோகம்! அம்பிகை மீனாட்சியால் வந்தது யோகம்" என்று ஆரவாரத்தோடு ஆசுகவி காளமேகப் புலவரால் புகழப்பெற்ற நான்மாடக்கூடல் மாநகர் மதுரையில் பொலிவுடன் எழுந்துள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலைப் பற்றிய வரலாற்றுச் செய்தி மலர்கள் இதில் வளமுடன் பூத்துக் குலுங்குகின்றன.

இமைச் சிறகுகளை விரித்து இந்நூலுக்குள் பறக்கிறபொழுது, ஒவ்வொரு சுதையும், சிற்பமும், ஓவியமும், உயிர் பெற்று எழுந்து, நமது அந்தராத்மாவுக்குள், மந்தகாச நிலையை ஊட்டுவதை அனுபவித்துத்தான் உணர முடியும். பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை பாரத நாட்டின் சொத்து. புராதன சொத்து பொறுப்புடன் அடுத்த தலைமுறையினருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற முனைப்பில் முழுமூச்சுடன் செயல்படும் எமது A.R. பப்ளிகேஷன் நிறுவனர் பொற்றாமரை கொண்டான் மருத்துவர் M. சீனிவாசன், M.D., அவர்கள், எண்ணியதன் விளைவு இந்நூல் பதிப்பிடப்பட்டு, பிறந்திருக்கிறது. பேராசிரியர் அம்பை மணிவண்ணன் அவர்களால் அறிவார்ந்த முயற்சியுடன் எழுதப்பட்ட இந்நூல் வாசிக்கமட்டும் அல்ல; நேசிக்க; பூசிக்க; பரிசளிக்கப் பாத்திரமான நூல். A.R. பப்ளிகேஷன் மிகவும் பெருமையோடும், அருளோடும் வெளியிட்டுள்ள இந்நூலைப் பெற்றுள்ள அனைவரும், குதிரை விற்க வந்த கொலுமகனைக் கூடிய குலமகள், கொற்றவை, அங்கையற்கண்ணியின் இமையாத விழிகளால், என்றென்றும் அருள் பாலிக்கப்படுவர் என்பது நிச்சயம்; இது சத்தியம்.

மேலாளர்
A.R. பப்ளிகேஷன்ஸ்



இந்நூல்

- மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் அமைப்பை, கலைச் சிறப்பை, இக்கோயிலின் மாண்பினை, இறையின் நற்கருணைத் தன்மையை எடுத்துக் கூறுகிறது.
- மீனாட்சி சுந்தரேசுவர் கோயில் பழமையையும், வரலாற்றையும் கூறுகிறது.
- கோயிலைக் கட்டுவித்தோர் பற்றிய செய்திகளைத் தருகிறது.
- மண்டபங்கள், சிற்பங்கள் அவை தொடர்பான புராணச் செய்திகளை விவரிக்கிறது.
- கோயிலில் நடைபெறும் முக்கிய விழாக்களையும், அவைகளுக்கிடையேயான தொடர்புகளையும் விரிவாக விளக்குகிறது.
- சுமார் 300க்கும் மேற்பட்ட வண்ண நிழற்படங்கள் மற்றும் வரைபடங்கள் கொண்டு இக்கோயிலை அறிய விரும்புபவர்கள் அனைவருக்காகவும் எழுதப்பட்டதாகும்.

டாக்டர் அம்பை மணிவண்ணன்



- தேனி மாவட்டம் அம்பாசமுத்திரம் எனும் ஊரைச் சேர்ந்தவர்.
- மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் M.A. (தமிழ்), M.A. (வரலாறு), M.Phil., Ph.D., B.Ed., D.G.T. ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.
- கோயிற்கலை தொடர்பாக இதுவரை 48 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.
- "தென்தமிழகக் கோயில் சிற்பங்கள் – ஓர் ஊடு பிரதி ஆய்வு" என்னும் பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் ஆய்வுத்திட்ட முதன்மையர், 2009–2011.
- தற்பொழுது மேலூர் அரசு கலைக் கல்லூரி தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

ஆசிரியரின் படைப்புகள் :

- பாண்டிய நாட்டு வைணவக் கோயில்களின் கலையும், கட்டடக் கலையும்
  முதற் பதிப்பு 1999, இரண்டாம் பதிப்பு 2000.
  இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பரிசு பெற்ற நூல்
- கோயில் ஆய்வும் நெறி முறைகளும்
  முதற் பதிப்பு 2000, இரண்டாம் பதிப்பு 2005
  இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பரிசு பெற்ற நூல்
- மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் அமைப்பும் சிறப்பும்
  முதற் பதிப்பு 2001, இரண்டாம் பதிப்பு 2003.
- தமிழகக் கலை வரலாறு
  தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடநூல் – 2004
- தமிழகக் கோயிற் கலை வரலாறு
  முதற் பதிப்பு 2005
- சமய இலக்கியமும் கோயிற் கலையும்
  முதற் பதிப்பு 2006
- திருக்கோயில் அமைப்பும் திருவுருவ அமைதியும்
  முதற் பதிப்பு 2009
- பொற்றாமரை
  முதற் பதிப்பு 2010

பதிப்பாசிரியருள் ஒருவர்
மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா மலர், ஏப்ரல் 2009.


SREE VINAYAGA | +91 452 2800300